
கம்பன் மணி மலர்



கம்பன் கழகம் - காரைக்குடி

25.3/75

கம்பன் மணி மலர்

ஆனந்தா—பங்குனி—11 முதல் 14 வரை

1975—மார்ச்—25 முதல் 28 வரை நிகழ்ந்த

37 ஆவது கம்பன் திருநாள் வெளியீடு.

கம்பன் கழகம், கம்பன் மணி மண்டபம், காரைக்குடி-2.

உள்ளுறை

முன்னுரை

கம்பன் ஓர் உலக மகாகவி; கவிச்சக்கரவர்த்தி. காப்பிய வானில் கதிரவனாய் நின்று ஒளிர்பவன். இவன் கல்லாத கலையும் வேதக்கடலும் உலகில் இல்லை என்னலாம். ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவன் எந்தை பிரான் கம்பன்.

முத்தரையரிடமிருந்து தஞ்சைப் பகுதியை மீட்டுச் சோழப் பேரரசை நிறுவிய விஜயாலயன் காலத்தில் மிளிர்ந்தவன் கம்பன். விஜயாலயன் மகன், கோதண்டராமன் எனப் பெயர் சூடிக்கொண்ட ஆதித்தன் (கி. பி. 871–907) காலத்தில், அவனால் பெரிதும் மதிக்கப் பெற்றவனாய் விளங்கியவன் கவிச்சக்கரவர்த்தி.

கம்பனைப் பெற்ற தந்தையினும் பேணிக் காத்து நின்றவர் சடையப்ப வள்ளல். இன்று கதிராமங்கலம் என விளங்கும் வெண்ணெய் நல்லூர்தான் சடையப்பர் வாழ்ந்த வளநகர். கம்பனின் பல்துறைப் புலமையும், எல்லையிலாக் கவிதாசன்னதமும் கற்றோரையெல்லாம் ஈர்த்து நின்றன. முடியுடைத் தார்வேந்தர்களும் ரசிகப் பெருமக்களும், கம்பனைப் பெரிதும் மதித்துப் போற்றுவாராயினர்.

கம்பனின் பேராற்றற் பெரும்புலமைக்கு என்றும் கட்டியங் கூறிக்கொண்டு விளங்குவது அவன் அருளிய இராமாவதாரம் என்னும் இராம காதை! தமிழ் மொழியின் வளத்திற்கும், தமிழர் தலை நிமிர்வுக்கும் ஒப்பற்ற உதவியாய் நின்று நிலவுவது கம்பராமாயணம். தமிழ் மொழியின் தனிப்பெரும் காப்பியத்தை, என்னப்பன் கம்பன், சடையன் பதியாம் வெண்ணெய் நல்லூரில், அரங்கேற்றினான். மன்னர்களும், மறையோர்களும், ரசிகப் பெருமக்களும், அறம் பேணும் பொது மக்களுமாக நிறைந்திருந்த கண்ணியம் நிறைந்த அவைக்களத்திலே அரங்கேற்றம் நடைபெற்றது. பவித்திரமான அக்காப்பியம் அரங்கேறிய புனித விழா ஒரு பெருந்திருவிழாவாக, ''நாவலோ, நாவல்!'' என்று நடந்திருக்க வேண்டும்.

சகாப்தம் 807; கலியாண்டு 3986;க்குச் சரியான விசுவாவசு—பங்குனி 4ஆந் தேதி, (கி.பி.886—பெப்ருவரி—23) புதன் கிழமை அஸ்த நட்சத்திரமே இராமாவதாரம் அரங்கேறிய பெருநாள். அன்றுதான் என்னுடையன் கம்பனை, ''கவிச்சக்கரவர்த்தி'' என்று அறிவுடையுலகம் மனமாரப் பாராட்டி விருதளித்து மகிழ்ந்தது.

கம்பன் பிறந்த நாளை நாமறிய எவ்வகைச் சான்றுகளுமில்லை. ஆனால் ''கவிச்சக்கரவர்த்தி'' பிறந்தநாளை நாம் நன்கறிவோம். பங்குனி-அத்த நாளில் தானே ''கவிச்சக்கரவர்த்தி'' பிறந்தான்! எனவே, இராமாவதாரம் அரங்கேறியதும் ''கவிச்சக்கரவர்த்தி' என்ற விருதுப் பெயரைக் கம்பன் ஏற்றருளியதுமான அந்தப் பங்குனி அத்த நாளையே கம்பன் திருநாளாக-ஜன்ம நட்சத்திரமாக-ஏற்று விழா எடுத்து வருகிறோம். மகம், பூரம், உத்தரம் ஆகிய முதல் மூன்று நாட்களில் காரைக்குடியில் உள்ள கம்பன் மணிமண்டபத்திலும், பங்குனி அத்த நாளில் நாட்டரசன் கோட்டையில் கவிச்சக்கரவர்த்தி சமாதி கொண்டு எழுந்தருளி அருள் சுரக்கும் கம்பன் பள்ளிபடைத் திருக்கோயிலிலும், தூய இலக்கியப் பெருவிழாவாகக் கொண்டாடி மகிழ்கிறது கம்பன் கழகம்.

இவ்விழா, எவ்விதமான, சாதி, சமய, மொழி வேறுபாடின்றி யாவரும் கலந்து மகிழும் அருமையுடையதாகும். புலவர்களும், கலைஞர்களும், கவிஞர்களும், திறனாய்வாளர்களும், ரசிகர்களுமாக ஆயிரக்கணக்கானவர்கள் ஆண்டுதோறும் வந்து கலந்து கம்பன் புகழ் பாடியும், கம்பன் புகழ் பருகியும், பெருமை செய்கின்றனர்.

பல்வேறு துறையறிஞர்களும் அளிக்கும் அறிவுச் செல்வங்கள் காற்ருேடு கரைந்து விடாமல் ஏட்டில் பதிவு செய்ய வேண்டுமென்று நல்லன்பர் பலர் பல்லாண்டு களாகவே வற்புறுத்தி வந்தனர், வருகின்றனர். கம்பன் கழகமும் அதை நன் குணர்கிறது.

கம்பன் திருநாட்செலவு ஆண்டுக்காண்டு கூடிக்கொண்டே வருகிறது. முந் நூற்றைம்பது ரூபாய் அளவில் தொடங்கிய கம்பன் திருநாளின் செலவு, ஆண்டு தோறும் உயர்ந்து, எத்துணைச் சிக்கனமாக நடத்தினும், ரூபாய் பதினுயிரத்திற்கு மேலே வளர்ந்துவிட்டது. விழாச்செலவுக்காக இதுவரை யாரையும் நன்கொடை கேட்டு அணுகியதில்லே. நிலேயறியும் உடனுறை நல்லன்பர்கள் தாங்களாகவே உவந்தளிக்கும் நன்கொடை, செலவின் ஒரு சிறு பகுதியையே ஈடு செய்கிறது. எனவே, கவிதை—உரை முதலியவற்றை அச்சிட இயலாத நிலேயில் இருந்து வந்தோம்.

நாளுக்கு நாள் அன்பர்களின் வற்புறுத்தல் வலுக்கத் தொடங்கியது. அத் தகைய வற்புறுத்தலேயும், அதனுல் எய்தும் பயனேயும் நினேந்து சென்ற ஆண்டில் கவியரங்கேறிய கவிதைகளே முன்னதாகவே பெற்று, ''கம்பன் கவிதை மலர்'' என்ற பெயரில் வெளியிட்டோம். இவ்வாண்டு சொற்பொழிவுக் கட்டுரைகளில் ஒரு பகுதியைத் தொகுத்து வெளியிடுகிருேம். காகித விலே, அச்சுக்கூலி, முதலியவற் றைக் கணித்துப் பார்த்தால் நெஞ்சம் திடுக்கிடுகிறது.

இந்நிலேயில் கம்பன்பால் அன்பும் அடியேன்பால் பரிவுமுள்ள அன்பர்கள் பலர் சென்ற ஆண்டைப் போலவே விளம்பரங்கள் உதவி இப்புனிதப் பணிக்கு ஆக்கம் தர முன்வந்தனர். கோவை நகர் திரு. ஜி. கே. சுந்தரம் அவர்கள், சென்னே நகர் திரு. அ.மு.மு.அருணுசலம் அவர்கள், காரைக்குடி திரு. அழ. அழகப்பன் (சக்தி) அவர்கள் மற்றும் பல்வேறு திருக்கோயில்கள், தொழில்—வாணிக நிறு வனங்கள் ஆகியோர் விளம்பரங்கள் தந்து கம்பன் கழக முயற்சிக்கு ஊக்க மளித்துள்ளனர். இவர்கட்கெல்லாம் எளியேன் என்ன கைம்மாறு இயற்ற வல்லேன்? என்னப்பன் கம்பனும், அவன் பரவிடும் முழுமுதற் பரம்பொருளும், இவ் அறவோர்கட்கும், இவர்களின் தொழில்துறை, வாணிகத் தொண்டுகட்கும், எல்லா நலன்களேயும் வளங்களேயும், அருளிக் காத்தருள வேண்டுமென்று மன— மொழி—மெய்களால் வணங்கி வேண்டி வாழ்த்தி நிற்கிறேன்.

எல்லா வகையிலும், முன்னரும், பின்னரும், கம்பன் திருநாளுக்கும், கம்பன் திருப்பணிகட்கும், உதவிய—உதவிவருகிற அறவுள்ளம் படைத்த பெரியோர்— அன்பர் யாவர்க்கும் என்றும் மறவா நன்றியுடன் பணிவார்ந்த வணக்கம் செலுத்தி மகிழ்கிறேன்.

கம்பன் மணிமண்டபம்
காரைக்குடி —623002.
25, மார்ச், 1975

அன்பும் பணிவுமுள்ள,

கம்பன் அடிப்பொடி,
செயலாளன், கம்பன் கழகம்.

கம்பர் கவிப் பெருமை*

வித்துவான் சு. கிருஷ்ணஸ்வாமி முதலியார்

தமிழ்ப் புலவர்களிற் சிறந்தவரான கம்பர், ராம சரித்திரத்தைச் சில வட மொழி நூல்களைப் பின்பற்றி அழியாததொரு காவியமாகச் செய்திருக்கிறுர். அவரது முத னூல்களோடு மிகவும் ஜாக்கிரதையாக ஒத்திட்டுப் பார்த்தாலும், நடையிலும் கட்டுரையிலும் கம்பரது காவியம் அவைகளோடு சிறிதும் ஒத்திருக்கவில்லை. அந்த வடநூல்களின் உயர்ந்த நேர்ப்போக்காகத் கதை சொல்லும் முறை கம்பர் காவியத்தில் தோற்றுவிடினும், அதில் தோன்றும் உயர்ந்த காவிய கதியின் நிறைந்த சித்திரப் போக்கு அம் முதனூல்களிலும் கிடையாதென்றே சொல்லிவிடலாம்.

மேற்றிசைப் புலவராகிய ஹோமரது காவியத்தில் தோன்றுவது போல், கம்பர் காவியத்திலும், காவியத்தை எடுத்து முடிக்கும் —படிப்பவர் மனத்தி னுழத்தில் பதியத் தகுந்த—அழுத்தமான நடையி னெற்றுமையும், கவியின் உயர்ந்த லட்சியத்தைக் கௌரவமாகத் தெரிவிக்கக்கூடிய சொற்பொழிவுகளும் இருக்கின்றன. காவியத்தில் பிரசித்தமாக வெளிப்படுத்தப்பெற்றிருக்கிற எண்ணங்களும், சொற்களாலெழுதப் பெற்றிருக்கும் சித்திர உருவங்களும், அந்தச் சித்திர ரூபங்களின் உண்மைத் தன்மைகளும் சரளமாகவும் நிறைவாகவும் இருக்கின்றன. உணர்ச்சிகளின் உண்மைத் தத்துவங்களைக் கம்பரது கவிப்போக்கு நன்ருய் எடுத்துக் காட்டுகின்றது. அவரது கவிப்போக்கின் வன்மையினுல் படிப்பவர்களது, கேட்பவர்களது இதயங்கள் மெதுவாகவும் வேகமாகவும் துடிக்கக் காணலாம். மனோசலனம் தாழ்ந்தும் உயர்ந்தும் செல்லக் காணலாம்; எண்ணத்தைக் காட்டிலும் உயர்வாகக் கம்பரது கற்பனைகள் செல்லுகின்றன; அவரது காவியத்தில் கொடுக்கப்பட்டிருக்கிற—துக்க சம்பவங்களைக் குறிக்கிற நடையின் வேகமானது கம்பீரத்துடன் மனத்தின் ஆழத்தில் பதிந்துவிடுகிறது. அவரது களிப்பைக் குறிக்கும் வர்ணனைகளும் அச்சத்தைக் குறிக்கும் வர்ணனைகளும் உயிரினூடே புகுந்து மனத்துக்கு வியப்பையும் கண்கட்கு இடுக்கத்தையும் தந்து நிற்கின்றன. அவரது நடைப்போக்கின் ஆகர்ஷண சக்தியாலும், அவர் எடுத்துக்காட்டும் நிகழ்ச்சிகளின் ஒழுங்கு முறையாலும் சில சமயங்களில் அவரது புலமையின் ஒளியானது இணையில்லாததாக மிளிருகின்றது. இயற்கைத் தத்துவம், கடவுட்டன்மை, அறநெறி இவற்றைச் சொல்லுமிடங்களில், கம்பரது பத்திப் பெருக்கமானது ஹோமரை மீறிச் சென்று மில்டனேடு தோள் தட்டி நிற்கின்றது.

---

* 1861-ஆம் வருஷத்தில் பதிப்பித்த இராமாயண பால காண்டத்திலுள்ள ஆங்கில முகவுரையின் மொழி பெயர்ப்பு.

சொல்லும் கதைகளின் போக்கானது எளிமையின் பெருமையும், தெளிந்த சொல் ஒட்டமும் தூய்மையும் கொண்டு பொலி கின்றது. அவர் எடுத்துக் காட்டும் உபாக்கியா னங்களி லெல்லாம் நிறைந்த உபதேசங்களும் ஆறுதல்களும் ஜெருஸலத்தில் டாஸோசொல்லி யிருக்குமவற்றைக் காட்டிலும் அதிகப்பட்டிருக் கின்றன. அவரது சம்பாஷணைப் பாகங்களிற் காட்டப் பெற்றிருக்கும் வி ரி வு ரை க ளு ம் இயற்கை வருணனை விஸ்தரிப்புக்களும் அவரது உயர்ந்த கவிசாதுரியத்தால் பிரகாசித்து, வர்ஜிலைவிடப் பூர்ண பக்குவத்தைக் காட்டி நிற்கின்றன. நாயகர், நாயகி, உப நாயகர், உப நாயகி முதலான பாத்திரங்களின் குணங்களை எடுத்துச் சொல்லும் பாகங்கள், ஷேக்ஸ்பியர் அல்லாத மற்றைப் புலவர்களது கவனத்தைக் காட்டிலும் அதிகமான கவனத்துடன் உண் மைக் குறிப்பாக எடுத்துக் காட்டப்பெற் றிருக்கின்றன. நகர சம்பந்தமான வர்ணனை களில் கம்பர், 'ஒதீஸிய' த்தில் ஹோமர் சொல்லி யிருப்பதைக் காட்டிலும் அழகாகவும் சுலப நடையாகவும் சொல்லிப் போகிறுர்; அன்றி யும், வீரத்தைக் குறித்து நிற்கும் இடங் களில் ஹோமரைத் தூரத்தில் நிறுத்திச் செல்கிருர். கம்பரது காவிய நடையிலாவது எடுத்துக்காட்டுகளிலாவது பாரஸீகப் புலவ ராகிய பெர்டுஸீயின் காவிய கதி முதலிய வற்றை எடுத்துக் காட்டுவது சிறிதும் தகுதியாகாது. எல்லா விஷயங்களையும் நன்கு அறிந்து தேர்ச்சிபெற்ற கற்பஞ சக்தி யுடைய எந்தப் புலவராலும், எந்த விவேகி யாலும், எந்த ஞானியாலும் செல்ல முடி யாத பிரதேசங்களிற் சென்று, ஆராய முடி யாதவற்றை யாராய்ந்து, எடுக்க முடியாத புதையல்களையெடுத்து உலகோர்க்குத் தந்து, பலவேறுபட்ட பக்குவமுடைய எல்லாருடைய இதயங்களையும் விரிவுறச் செய்து, அவர்க்கு முன்னேற்றத்தை யளிப்பதற்காகச் சிறந்த தொரு வரத்துடன் தோன்றினவராகவே கம்பர் காணப்படுகிருர்.

கவிமணி

தேசிக விநாயகம் பிள்ளை அவர்களின்

வாழ்த்துப் பாக்கள்

வையத்து நல்வாழ்வு வாழும் வழிகளெலாம்
ஐயமறக் காட்டும் அரும்புலவன்—செய்யதமிழ்ப்
பாக்கடலில் இன்னமுதம் பாலித்த கம்பன்சீர்
நாக்கமழப் பாடுவோம் நாம்.

கங்கை பெருகி அலைமோதிக் கரைபு ரண்டு வருவதெனக்
தங்கு தடையில் லாதொழுகும் தமிழின் அமுதம் ததும்பியெழப்
பொங்கு புகழ்சேர் இராமகதை புகன்ற கம்ப நாடன்சீர்
எங்கும் பரவி இவ்வுலகில் என்றும் வளர்க வளர்கவே.

ஆரி யத்தோ டரியதமிழ் ஆழம் கண்ட பேரறிஞன்
தேரும் பிரமன் படைப்பெல்லாம் திருத்தி அழகு செயவல்லோன்
யாரும் புகழக் கவியுலகில் இராஜ ராஜன் எனத்திகழ்வோன்
பாரில் எங்கள் கம்பனெனப் பாடிப் பாடி மகிழ்வோமே.

இனிய தமிழில் செந்தமிழில் என்றும் தழைத்து வளர்தமிழில்
கனியும் பாலும் தேனும்கற் கண்டும் அனைய கவிபுனைந்து
புனித ராமன் கதைசொன்ன புலவர் பெருமான் புகழ்போற்றி
நனியிக் காரைத் திருநகரெந் நாளும் வாழ்க வாழ்கவே.

வாழி தமிழ்மொழி வாழி தமிழ்நாடு
வாழிதமிழ்த் தொண்டர் மகிழ்ந்து.

கம்ப ராமாயண ரசனை

திரு வ. வெ. சு. ஐயர்

உபோற்காதம்

கம்ப நாட்டாழ்வார் எழுதிய திவ்ய கிரந்தமானது முப்பத்தைந்து தலைமுறைகளாகத் தமிழருக்கு ஆனந்தத்தைத் தந்து வருகிறது. இந்த ஆயிரத்தைம்பது வருஷங்களில் எத்தனை மேதாவிகள் கம்பனுடைய ராமாயணத்தை ஆராய்ந்திருப்பார்கள், எத்தனை பேர் பிரசங்கித்திருப்பார்கள், எத்தனை பேர் தமக்குள் தாமே படித்து ஆனந்த பரவசர்களாகி யிருப்பார்கள்! ஒவ்வொரு தலைமுறையிலும் கம்ப ராமாயணம் பிரசங்கிப்பதில் சிறந்தவர் என்று கீர்த்தி பெற்றவர் அனேகர் இருந்திருக்கிறார்கள். வேறெந்தக் காவியத்தையும் பற்றி இத்தகைய தனிப் பெயரை வித்துவான்கள் பெற்றதாகவாவது விரும்பியதாகவாவது நாம் கேட்டதில்லை. இப்பொழுதுகூட, சிலப்பதிகாரம் பிரசங்கிப்பதில் சிறந்தவர் என்றாவது, மணிமேகலை சொல்லுவதில் சாமர்த்தியம் நிறைந்தவர் என்றாவது வித்துவான்களைப் பற்றிப் புகழுவதில்லை. ஆனால், கம்பனுடைய ராமாயணத்தைப் பிரசங்கிப்பதையே ஒருவர் தமது காரியமாக வைத்துக்கொண்டால் மனிதர் அவர்களுக்கு, அவர்களுடைய புலமைக்கும் சொற்பொழிவுக்கும் தக்கபடி, தனி மரியாதை செலுத்துகிறார்கள். அவர்களும் கம்ப ராமாயணப் பிரசங்கி என்கிற பெயரை ஆசையோடே விரும்புகிறார்கள்.

ராமாயணம் புண்ணிய கதையாகையால் கதையை உத்தேசித்துப் பக்தர்கள் அதற்குத் தனி மரியாதை செலுத்துகிறார்கள் என்று சொல்லப்படலாம். ஆனால், வில்லிபுத்தூரார் பாரதத்தைப் பிரசங்கிக்கிறவர்கள் என்றாவது, ஆரியப்ப புலவர் என்னப்படுகிற அனதாரிப் புலவரின் பாகவதத்தைப் பிரசங்கிக்கிறவர்கள் என்றாவது, கச்சியப்பருடைய ஸ்கந்த புராணத்தைப் பிரசங்கிக்கிறவர்கள் என்றாவது யாருக்கும் கியாதி வந்து நாம் கேட்டதில்லை. ஆகவே, இந்தப் புகழும் புகழிலுள்ள விருப்பமும் கம்பன் எழுதிய காவியத்தின் சிறப்பைத்தான் காட்டுகின்றனவே ஒழியக் கதையின் சிறப்பைக் காட்டவில்லை. கம்பனுடைய ராமாயணமானது மற்றக் கவிகள் எழுதிய ராம சரிதைகளையும் தமிழில் எழுதப்பட்ட இதர காவியங்களிற் பெரும்பாலனவற்றையும்கூட 'வெயிலிடைத் தந்த விளக்'கொளி போலாக்கிவிட்டது.

இது மாத்திரமில்லை. கம்ப ராமாயணமானது ஹோமர் எழுதிய இலியாதையும், விர்க்கிலியன் எழுதிய ஏனயிதையும், மில்டனுடைய சுவர்க்க நஷ்டம் என்ற காவியத்தையும், வியாஸ பாரதத்தையும், தனக்கே முதனூலாக இருந்த வால்மீகி ராமாயணத்தையும்கூடப் பெருங் காப்பிய லட்சணத்தின் அம்சங்களுள் அனேகமாய் எல்லாவற்றிலும் வென்றுவிட்டது என்று சொல்லுவோம். இவ்விமரிசனத்தைத் தொடர்ந்து வாசிப்போருக்கு எமது இவ்வபிப்பிராயத்தை மெய்ப்பிக்க முயலுவோம்.

ரசனைச் சுவை

காவிய இலக்கணத்தை நிர்ணயிப்பதில், பாரத தேசத்து இலக்கண ஆசிரியர், நமக்

குத் தெரிந்தமட்டில், விவரியாமல் விட்டு விட்ட சில அமிசங்களை மேனாட்டு இலக்கண ஆசிரியர் விஸ்தாரமாக விவரித்திருக்கிறார்கள். நம் நாட்டு இலக்கண ஆசிரியர் பொருள், யாப்பு, அணிகளைப் பற்றி நன்றாக ஆராய்ந்திருக்கிறார்கள் என்பதை ஒப்புக்கொள்ளுகிறோம். அலங்கார சாஸ்திரத்தை நம் நூலாசிரியர் ஆழமாக ஆய்ந்திருக்கிறார்கள் என்பதிலும் ஐயமில்லை. ஆனால், காவிய சமக்ரத்தைப் பற்றின ஆராய்ச்சிகள் இதுவரை வெளிவந்திருக்கும் நூல்களில் விஸ்தாரமாகக் காணப்படவில்லை. பெருங் காப்பியத்தில் என்ன என்ன விஷயங்களைப் பற்றிப் பேச வேண்டும் என்று இலக்கணங்களில் ஓர் பெரிய ஜாபிதா காணப்படும். ஆனால், காவியம் எவ்வாறு அமைக்கப்பட வேண்டும், என்ன என்ன இலக்கணங்கள் பெருங்காப்பியத்துக்கு இன்றியமையாதவை, பெருங் காப்பியங்களின் போக்குக்கும் ஏனைய காவியங்களின் போக்குக்கும் என்ன வித்தியாசம், என்ற விஷயங்கள் நம் இலக்கணங்களில் விசாரிக்கப்படவில்லை. மேனாடுகளில் அரிஸ்தோத்தலன் காலம் முதற்கொண்டு இலக்கண நூலாசிரியர் காவிய அமைப்பைப் பற்றிப் பெரிய பெரிய ஆராய்ச்சிகள் வெளியிட்டிருக்கிறார்கள். நம்மவர் காட்டிலுள்ள மரங்களைத் தனித் தனியே கவனித்துக் கொண்டு வந்து அரணியத்தை மறந்துவிட்டார்கள்; மேனாட்டவர் மரங்களைக் கவனித்ததோடுகூட அரணியத்தைப் பற்றியும் விசேஷமான ஆராய்ச்சிகள் செய்துளார்கள்.

காவிய சமக்ர இலக்கணத்தைத் தண்டி கவி தனது அலங்கார இலக்கணத்தில் பாவிக அணியை வர்ணிக்கும்போது சில வார்த்தைகளில் சொல்லி முடித்துவிடுகிறான். அரிஸ்தோத்தலன், ஒராஸியன், புவாலோ, வீதா, பெயின் முதலிய மேனாட்டு இலக்கண ஆசிரியர்கள் விரிவாகச் செய்துள்ள ஆராய்ச்சியைப் பற்றி இங்கு ஓரிரண்டு வார்த்தைகள் சொல்லுவது பொருந்தும். அவ்விலக்கணக்காரர்களுடைய பிரதான அபிப்பிராயம் என்னவென்றால், ஓர் பெருங்காப்பியம் அனேக அவயவங்கள் சேர்ந்ததாயிருப்பினும் ஒரு ஜீவப் பிராணியைப்போல ஓர் தனிப் பிண்டமாயிருத்தல் வேண்டும். தலை, இடை, கடை என்ற பாகுபாடும், அனைத்தையும் சேர்த்துப் பார்க்கும்போது **ஏகம்** என்கிற உணர்ச்சியும் அக்காவியத்தில் தோன்ற வேண்டும். ஒவ்வோர் அவயவமும் தன்தனக்கு முன்னேயுள்ள அவயவத்தோடும், பின்னேயுள்ள அவயவத்தோடும் பிணைக்கப்பெற்று ஒன்று என்கிற உணர்ச்சியை வளர்க்கவேண்டும்.

பஞ்ச தந்திரக் கதை, விக்கிரமாதித்தன் கதை, மதன காமராஜன் கதை, அராபியக் கதை முதலிய கதைகளை ஓர் பக்கமும், அரிச்சந்திர புராணம், கந்த புராணம், ராமாயணம் முதலிய காவியங்களை ஓர் பக்கமும் வைத்துச் சீர்தூக்கிப் பார்த்தால் நாம் மேற்காட்டிய இலக்கணத்தின் கருத்து விளங்கும். பின் சொல்லிய மூன்றிலும் ஒரே ஒரு **வஸ்து**தான் காவியமாக எழுதப்படுகிறது. இவற்றுள் அனேக உப கதைகள், வர்ணனைகள் உபாக்கியானங்கள் வருகின்றன என்பது வாஸ்தவம். ஆனால், இவை அனைத்தும் கதையின் மத்திய சம்பவத்துக்குத் துணையாக நிற்கின்றன—மத்திய சம்பவத்திற்கு அலங்காரமாகவோ, மத்திய சம்பவத்திற்கு வித்தாகவோ, மத்திய சம்பவத்தினின்று இயற்கையாக விளைந்த விளைவாகவோ விளங்குகின்றன. முன் சொல்லப்பட்ட நூல்களோ, அவை செய்யுள் நூல்கள் அல்ல என்பது ஓர் பக்கமிருக்க, தனிக் கதைகளின் கேவலம் சேர்க்கையே யாகும். அவைகளில் மத்திய சம்பவத்திற்கும் கதைகளுக்கும் உள்ள சம்பந்தம் மிகமிக லேசானது. அதைச் சம்பந்தம் என்று கூடச் சொல்லத் தகாது. மகா காவியத்தின் பகுதிகளுக்கோ இத்தகைய ஒட்டின்மை இராது. அவற்றின் சம்பந்தம் ஜீவ சம்பந்தம். உபாக்கியானங்கள் முதலிய புற அணிகள் பெருங் காப்பியத்தினுள் அளவுக்கு மீறி இரா. மற்ற உறுப்புக்களெல்லாம் காவியத்துக்கு அகத்துறுப்புக்களாகவே விளங்கும். அவ் உறுப்புக்களில் எதை எடுத்துவிட்டாலும் கதை ஊனமாகிவிடும்.

பாவிக அணி என்று நாம் கூறுவதை மேனாட்டவர் 'ஆர்க்கிதெக்தோனிக்ஸ்' (Architectonics) என்கிறார்கள். இப் பதத்துக்கு ரசனை அல்லது காவிய நிர்மாணம் என்று பொருள் சொல்லலாம். இது மனைச் சிற்ப நூலினின்று எடுத்துக்கொண்ட பெயராகும். ஓர் அரண்மனையையோ கட்டடத்தையோ கட்டுவதற்கு அனந்த கோடி ரீதிகள் உண்டு. ஆனால், சில ரீதிகள்தாம் கட்டடத்துக்கு அழகு தரும். பெரும் பாலவை வானத்தையும் சூரிய ஒளியையும் மூடுமே ஒழிய நமது சௌந்தரிய உணர்ச்சியைத் திருப்தி செய்யியா. அப்படியே ஓர் காவியத்தைப் பல மாதிரி எழுதலாம். நள சரித்திரம், ராமாயணம், பாரதம், அரிச்சந்திர புராணம் முதலிய காவியங்களெல்லாம் அவ் அவ் ஆசிரியர்களின் மனோதர்மத்துக் கேற்றபடி எழுதப்பட்டுள்ளன. சில சம்பவங்களைச் சிலர் விரிக்கிறார்கள், மற்றவற்றைச் சுருக்கிவிடுகிறார்கள். வேறு சிலர் முற்சொல்லியவர்க்கு மாறாகச் செய்கிறார்கள். சிலர் சில சம்பவங்களை எடுத்து

விட்டுப் புதிய சம்பவங்களைப் புகுத்து கிறார்கள். ரஸிகனுடைய மனத்திற்குத் திருப்தி உண்டாகும்படி எந்தக் கவியின் அமைப்பு அமைந்திருக்கிறதோ அவனைத்தான் ரசனை யில் சிறந்தவன் என்று சொல்லலாகும். உண்மையாகப் பார்க்கையில் பெருங் காப்பி யங்களுக்கு ரசனையே இன்றியமையாதது. ரசனை சுகம் இல்லாமல் வேறு எந்த சுகம் இருப்பினும் பெருங் காவியங்கள் பெருமையுள்ளனவாகா.

காவிய ரசனையை மகா வித்துவான் ஒருவனுடைய ராக விஸ்தாரத்துக்கு ஒப்பிடு வோம். எல்லா வித்துவான்களும் ஏழு ஸ்வரங்களைத்தான்—அல்லது அர்த்த ஸ்வரங் களையும் சேர்த்துக் கொண்டால் இருபத் திரண்டு ஸ்வரங்களைத்தான்—கையாளுகிறார் கள். இந்த ஸ்வரங்கள் துவாரா நவ ரஸங்களைத்தான் ஊட்டுகிறார்கள். ஆனால், ஒரு வித்துவானுடைய ஆலாபனத்துக்கும் இன்னொரு வித்துவானுடைய ஆலாபனத் துக்கும், ஒரு பாடகன் ஓர் கீர்த்தனை யைப் பாடுவதற்கும் இன்னொருவன் அதே கீர்த்தனையைப் பாடுவதற்கும் எத்தனை பேதம்! ஒருவன் ராகத்தின் ஸ்வரங்களில் யாதொரு அபஸ்வரத்தையும் கொண்டு வந்து கலக்காமல் பாடி விடுகிறான். ராகம் பிழையின்றி சாஸ்திரோக்தமாகப் பாடப் பட்டிருக்கும். லயத்தில் யாதொரு பிச கும் இராது. கேட்போர் 'சபாஷ்' என்று சொல்லிக் கொண்டும் சிரக் கம்பம் செய்து கொண்டும் கேட்பார்கள். ஆனால், அவர் களுடைய இருதயத்தில் யாதொரு சலன மும் ஏற்பட்டிராது. அலை வந்து மோதி யும் அசையாத பாறை போல அவர் களுடைய இருதயம் அப்படியே இருந்து விடும். இன்னொருவன் வருகிறான். அதே ராகத்தைப் பாடுகிறான். ஆனால், எல்லோ ரும் அமுத மழையில் அகப்பட்டவர்கள் போல் ஆகிவிடுகிறார்கள். அவரவர்களுடைய சம்ஸ்காரத்திற் கேற்றபடி அவரவர்க ளுடைய இருதயம், மந்த மாருதத்தில் ஊசலாடும் பூங்கொம்பர் போலவும், சிற் றலைகளால் அசைந்தாடும் தாமரை போல வும், கருப்பஞ் சாற்றில் கரையும் கற் கண்டைப் போலவும், அக்னியில் நெகிழ்ந்து உருகும் மெழுகைப் போலவும், தங்கத்தைப் போலவும் ஆகிவிடுகிறது. அவர்களுடைய மனது புதிய உலகத்தில் சஞ்சரிக்கத் துவங்கிவிடுகிறது. மனோ லோகத்தில் சித்திரத்துக்குமேல் சித்திரம் தோன்றிக் கொண்டே வருகிறது. அவர்கள் லயப் பட்டு, வயப்பட்டுப் போய்விடுகிறார்கள். இந்தக் கலைஞனுக்கும் முன் சொல்லப் பட்ட கலைஞனுக்கும் உள்ள வித்தியாசம், இவனிடம் கனிவு இருந்தது, அவனிடம் அது இல்லை. ஆனால், அது மாத்திரமில்லை. இவனுடைய பாட்டின் அமைப்பு மனோ ஹரமாக அமைந்திருக்கிறது. ஒவ்வொரு ஆவிருத்தமும் அதற்கு முன்னே பாடப் பட்ட ஆவிருத்தத்தினின்று இயற்கையாக வளர்ந்த வளர்ச்சியாகும்; அதே மாதிரி தனக்குப் பின்னே வரப்போகும் ஆவிருத்தத் திற்குத் தோற்றுவாயும் ஆகும். ஒவ் வொரு 'சங்கதி'யும் அந்தந்தப் பதங்களை அலங்கரிக்க விழுந்த அலங்காரமாகுமே யன்றி, பதங்களையே முழுக்கி மூடிவிடும் வெறும் சப்த சாலங்களாகா. ஒவ்வோ ரிரஸமும் போதிய அளவுக்கு விஸ்தரிக்கப் பட்டு இயற்கையான சோபானங்கள் வழி யாக அதனோடு பொருந்தக்கூடிய வேறொரு சுவைக்கு வழிகாட்டிக் கொண்டு போகும். கடைசியாக எல்லா ஆவிருத்தங்களும் எல் லாச் சுவைகளும் இன்னலந் தெரிய வல் லாருடைய இருதயம் லயித்துப் போகும் படி ஓர் சமஷ்டி உணர்ச்சியை உண் டாக்கும்.

இதே மாதிரிதான் ஒரு காவிய ரசனையும். காவியத்தின் தனித் தனிப் பாகங்களிலுள்ள இன்சுவை ஒரு பக்க மிருக்க, பாகத்துக்கும் பாகத்துக்கும் உள்ள பொருத்தம் அழகாக இருப்பதோடு காவிய மானது நல்ல சமஷ்டீகரணத்தைப் பெற் றிருக்க வேண்டும். எவ்வளவுக் கெவ்வளவு இந்த சமஷ்டீகாரம் அழகாக இருக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு காவியமானது ரஸி கருடைய இருதயத்தைக் கவர்ந்து எல் லோரும் விரும்பத்தக்கதாகும்.

கம்ப ராமாயணத்தில் உள்ள ரசனைச் சுவை மிகவும் உயர்ந்தது. ரஸிகருடைய அறிவுக்கு அது அமுதமாக நிற்கின்றது. கம்ப ராமாயணத்தின் ரசனைச் சுவையை உணராமல் மற்றச் சுகங்களை மாத்திரம் உணருகிறவர்கள் அதன் சுவையில் செம் பாதிக்கு மேல் இழந்துவிடுகிறார்கள். ராமாயணத்தின் அழகை விஸ்தரிக்கிறவர் கள் ஒவ்வோர் பாகத்தின் அழகை, சிற்சில வேளைகளில் ஒவ்வோர் செய்யுளின் அழகைத்தான் எடுத்துக் காட்டுகிறார்கள். ராமாயணத்தை ஓர் சிற்பியால் சமைக்கப்பெற்ற அரண்மனையாகப் பாவித்து, அவ்வரண்மனையின் ஒவ்வோர் அவயவத்துக்கும் மற்ற அவயவங் களுக்கும் உள்ள பொருத்தத்தையும், அவயவங்களுக்கும் அரண்மனையின் சமக்ர அமைப்புக்கும் உள்ள பொருத்தத்தையும் வியக்திகரித்து எடுத்துக் காட்டும் விமரி சனங்கள் இதுவரையில் வெளிவரவில்லை.

க. பாலகாண்டம்

ராமாயண கதை அயோத்தியா காண்டத்தில்தான் ஆரம்பிக்கிறது என்று சொல்லவேண்டும். வால்மீகி பகவான் தனது ராமாயணத்துக்கு 'ராவண வதம்' என்றும் 'சீதையின் பெருங் கதை' என்றும் மறு பெயர் கூறுகிறான். ராமாயணத்தின் வஸ்து, அதாவது பிரதான சம்பவம் ராவண வதம். அதற்கு நெருங்கிய காரணம் அரணியத்தில் நேரும் சீதா ராவண சந்திப்பாதலால், ராமன் சீதா சமேதனுய்க் காட்டுக்குச் செல்வதையே அந்த வஸ்துவுக்கு பீஜம், அதாவது விதை என்று கூறவேண்டும். அயோத்தியா காண்டத்தில் தான் இவ்விதை விதைக்கப்படுகிறது. ஆதலால் அதுவேதான் கதையின் உண்மையான துவக்கம். அது முதற்கொண்டு கதையானது ஓர் அரண்மனைக் கட்டடம் போல அழகாயும் கம்பீரமாயும் கிளம்பி, வஸ்து பூர்த்தியாகிற வரையில் ஒரே வளர்ச்சியாக வளர்ந்து செல்கின்றது. இப்பெரிய கட்டடத்திற்குப் பால கண்டம் முன்வாயிற் சோலையாக விளங்குகிறது. அரண்மனைக்குள் பிரவேசித்து அதன் சிற்ப வேலையில் மூழ்குவதற்கு முன் படிப்போனுடைய மனது இவ் உத்தியானத்தில் ஆனந்தத்தோடு உலவும். இதில் ராமனுடைய அவதாரமும் விவாகமும் வர்ணிக்கப்படுகின்றன. ஆனல், இவை மாத்திரம் இக்காண்டத்தின் 1,400 செய்யுள்களை நிரப்பப் போதா. அதற்காகக் கம்பன் நாட்டு வர்ணனைகளும், நகர வர்ணனைகளும், எழுச்சி, உண்டாட்டு, வரைக் காட்சி, ஆற்று வர்ணனைகளும் உலாவியல் வர்ணனைகளும், பிறவும் கொண்டு இக்காண்டத்தை விரிக்கிறான். தவிர, இக் காண்டத்தில் விசுவாமித்திரனுலும் விசுவாமித்திரனைக் குறித்தும் சொல்லப்படுகிற கதைகளைக் கம்பன் வால்மீகியினின்று எடுத்துக்கொண்டு பால காண்டத்தின் அளவைப் பெருக்கிக் கொள்ளுகிறான். வஸ்துவின் பெருமையையும் விஸ்தாரத்தையும் உத்தேசிக்க, இந்த முகவுரையை நாம் அனுவசியம் என்றாவது, அதி விளம்பனமாக இருக்கிறது என்றாவது கண்டிக்க வேண்டியதில்லை. ஆனல், காவியத்தோடு அவயவ சம்பந்தம் அதற்கில்லை என்பதை நாம் நன்கு உணர்ந்துகொள்ள வேண்டும்.

உ. அயோத்தியா காண்டம்

ராவண வதத்தையே ராமாயணத்தின் வஸ்துவாக வால்மீகி பகவான் அமைத்தது போலவே கம்பனும் அமைத்திருக்கிறான் என்று மேலே கூறினேம். இவ்வஸ்துவின் ஒருமையைக் கம்பன் மறப்பதே இல்லை. முக்கியமான கட்டங்களிலெல்லாம் அவன் தனக்கும் படிப்போருக்கும் அதை நினைவுறுத்திக் கொண்டே செல்லுகிறான். பால காண்டத்தில் ராமனுல் அடிபட்டுத் தாடகை விழும்போது அவள்,

> .... தலைகள் தோறும்
> முடியுடை அரக்கற்கு அந்நாள் முந்திஉற் பாத மாகப்
> படியிடை அற்று விழ்ந்த வெற்றிஅம் பதாகை ஒத்தாள்,

என்று வஸ்துவை உபமானத்தின் வாயிலாகக் காட்டுகிறான். அவ்விதமே மந்தரையின் சூழ்ச்சியினுல் கைகேயியின் மனம் கலைந்து மாறியபோது,

> .. .. இமையோர்
> மாயை யும்,அவர் பெற்றநல் வரம் உண்மையாலும்,
> ஆய அந்தணர் இயற்றிய அருந்தவத் தாலும்,
> .. ..
> அரக்கர் பாவமும், அல்லவர் இயற்றிய அறமும்

துரக்கவேதான் நல் அருள் துறந்தனள் அத் 'தூய்மொழி'. கடைசியாக ராவணன் போர்க்களத்தே பட்டு வீழ்ந்து கிடக்கையில் மண்டோதரி வந்து புலம்பும்போது, கம்பன் அவள் வாயில் இம் முத்தாய்ப்பை வைத்து விடுகிறான். அஃதாவது:

> 'காந்தையருக்கு அணி அனைய சானகியார்
> பேர்அழகும் அவர்தம் கற்பும்,
> ஏந்துபுயத்து இராவணனர் காதலும்,அச்
> சூர்ப்பநகை இழந்த மூக்கும்,
> வேந்தர்பிரான் தயரதனர் பணியினுல்
> வெங்கானில் விரதம் பூண்டு
> போந்ததுவும், கடைமுறயே புரந்தரனர்
> பெருந்தவமாய்ப் போயிற்று, அம்மா!'

அச்சம்பவங்கள் அனைத்தும் பளிங்குக் கற்கள் போல நின்று ராவண வதமாகிய மண்டபத்தைக் கட்டவே கருவியாக நிற்கின்றன என்பது கவியின் அபிப்பிராயம். ஏனெனில், ராவண வதம் இன்றி இந்திரன் சுயராஜ்ஜியத்தை அடைவது எங்ஙனம்?

இத்த வஸ்து ஒருமை உணர்ச்சி அயோத்தியா காண்டத்திலிருந்துதான் உண்டாகிறது என்று ரசனை என்ற பகுதியில் கூறினேம்.

அயோத்தியா காண்டத்தினின்று கதையானது மத்தகஜத்தின் நடையோடு,

கங்காப் பிரவாகத்தின் கமனத்தோடு ராவண வதம் வரை செல்லுகிறது. உபாக்கியானங்களுக்காக வேனும், மத் திராலோசனைக் காகவேனும் கதை நிற் கிறதே என்றால், அது இயற்கையை யொட்டியே அவ்வாறு நிற்கின்றது. வன ராஜனுன கஜேந்திரனும் அங்கங்கே ஆகா ரத்துக்காக நிற்கிறான்; அங்கங்கே இளைப் பாறுகிறான். கங்கா நதியும் சம தடத்தில் வேகம் குறைகிறது. யமுனை முதலிய உப நதிகளின் நீரை ஏற்றுக் கொள்ளு கையில் வேகத்தைத் திரும்பப் பெற்றுக் கண்டோர் வியக்கச் செல்லுகிறது. கிளை நதிகளையும் கால்வாய்களையும் நிரப்பிக் கொண்டு சற்று ஆலசியமாக நடக்கிறது. ஆனால், ஆலசியமெல்லாம் அடுத்த கட் டத்தில் இரண்டு பங்கு வேகமாகச் செல்லு வதற்காகத்தான். கடைசியில் சமுத்திர ராஜனோடு கலப்பதற்கு முன் கங்கா தேவியின் அழகையும் காம்பீர்யத்தையும் வாயால் வர்ணித்துச் சொல்ல ஒண்ணுமோ? தேவர்களும் கண்டானந்திக்கத் தகும் காட்சியன்றோ கங்காதேவியின் சமுத்திர சங்கமம்! இத்தகைய வேகமும், ஓட்டமும், பொலிவும் இருக்கிறது கம்ப ராமாயணத் தில்.

அயோத்தியா காண்ட ஆரம்பத்தில் சக்ரவர்த்தி ராமனுக்குத் தன் கையா லேயே முடி சூட்டவேண்டும் என்ற கருத் துடன் மந்திரக் கிழவரை அழைத்து அனுமதி கேட்கிறான்.

> 'ஊருணி நிறையவும், உதவு மாடுஉயர்
> பார்கெழு பயன்மரம் பழுத்தற்று ஆகவும்,
> கார்மழை பொழியவும், கழனி வாய்நதி
> வார்புனல் பெருகவும், மறுக்கின் றூர்கள்யார்?'

ஆகையால் மந்திரக் கிழவர்களின் பிரதி நிதிகளாக நின்று வசிஷ்டனும் சுமந்திர னும் ராமனுக்கு முடிசூட்ட அரசனுக்கு அனுமதி கொடுக்கிறார்கள். எல்லாம் செவ் வனே நடந்தேறிப் பட்டாபிஷேகமும் அழகு பெற நிறைவேறும் என்று படிப்போருக்குத் தோன்றுகிறது. ஆனால், இல்லை.

> இன்னல் செய் இராவணன் இழைத்த தீமை போல்
> துன் அருங் கொடு மனக் கூனி

தோன்றி விட்டாள். ராமனிடம் பரம பிரேமை செலுத்துவதாக நினைத்துவந்த கைகேயியின் மனத்தையும் கலைத்துவிட் டாள். ஆகவே,

> தீய மந்தரை இவ்வுரை செப்பலும் தேவி
> தூய சிந்தையும் திரிந்தது சூழ்ச்சியின்!

ராவண வதத்தின் பீஜம் விதைத்தாகிவிட் டது.

விதை விழுந்ததும் என்ன வேகமாக வளரத் துவக்குகிறது! தசரதன் உயிருக்கே ஹானி வந்துவிடும் என்பதை அறிந்தும் கைகேயி அவனுடைய மனத்தை உடைத்து விட்டு, தான் சொல்லி அனுப்பியதற்கு வந்த தாயென நினைவானுன ராமன் முன்னே கூற்றெனத் தமியளாய்த் தோன்றி,

> ஆழிசூழ் உலகம் எல்லாம் பரதனே ஆள, நீபோய்த்
> தாழ்இருஞ் சடைகள் தாங்கித் தாங்குஅருந் தவம்மேற் கொண்டு
> பூழிவெங் கானம் நண்ணி, புண்ணியத் துறைகள் ஆடி,
> ஏழ்இரண்டு ஆண்டின் வாஎன்று இயம்பினன் அரசன்'

என்றாள். தீரோதாத்தனான ராமனும் அப் பணியைத் தலைமேற்கொண்டு அப்பொழுதே அரணியம் போகத் தீர்மானித்துவிட்டான்.

ஆனால், ராமன் மாத்திரம் காட்டுக்குத் தனியே சென்றால் ராவணவதம் எவ்வாறு நடக்கும்? ஆகையால் வால்மீகி சீதையை யும் ராமனோடுகூடக் காட்டுக்கு அனுப்பு கிறான். வில்லாளரானார்க்கெல்லாம் மேலவ னான இந்திரசித்தனைக் கொல்லுவதற்கும் வேறொரு வீரன் இருந்தால்தான் ரசனை சோபிக்கும். ஆகவே, லட்சுமணனும் ராம னோடுகூடக் காட்டுக்கு ஏகுகிறான். ஆனால், வால்மீகி கைகேயினிடத்தில் ராமனுடன் லட்சுமணனையும் சேர்த்து அனுப்பி அவ னுடைய கொடுஞ் சொற்களை அவன் உட னிருந்து கேட்கும்படிச் செய்கிறான். ரசனு தந்திர பாரங்கதனான கம்பன் அத் தகைய உடன்போக்கின் இழுக்கை உன்னி ராமனைக் கைகேயியின் முன்னே தனியே நிறுத்துகிறான். ஆகையினால் ராமனுடைய மகுடாபிஷேகம் நடக்கவில்லை என்ற செய்தி அவனுக்கு வெகு நேரம் கழித்தேதான் தெரி கிறது. ஆக, நம்கவி லட்சுமணனை,

> கேட்டான் இளையோன், கிளர்ஞாலம் வரத்தி னாலே
> மீட்டாள் அளித்தாள் வனம்தம்முனின், வெம்மை முற்றித்
> திட்டாத வேற்கண் சிறுதாய்என, யாவ ராலும்
> மூட்டாத காலக் கடைத்தீ யெனமூண்டு எழுந்தான்,

என்று நாடகத்தில் தோற்றுவிப்பது போலத் தோற்றுவித்தல் சாத்தியமாகிவிடுகிறது.

இங்கு வால்மீகியின் ரசனைக்கும் கம்ப னுடைய ரசனைக்கும் பேதத்தைச் சற்று ஆழ மாகக் கவனித்தல் பயனுடையதாகும். வால் மீகியில் ராமன் தசரதனுடைய சன்னிதிக்கு வந்த பிறகு 18 சுலோகங்களால் என்ன நேர்ந்திருக்கலாம் என்று தனக்குள் தானே

ஆலோசித்துக் கொண்டு கைகேயியைக் கேட்கிருன். என்ன என்று கேட்ட பிறகு கைகேயி பழங் கதையெல்லாம் சொல்லிவிட்டு எட்டு சுலோகங்களால், 'நீ அரசன் வார்த்தையை நிறைவேற்றுவாயா' ? என்று கேட்கிருள். பிறகு, தான் வரங்களைப் பெற்ற வரலாற்றைச் சொல்லிக் 'காட்டுக்குப் போ!' என்று ஆஞ்ஞாபிக்கிருள். ராமனுடைய பதிலும் வளவள என்றேயிருக்கிறது. இத்தகைய நீட்சியினுல் கதை தொய்ந்து போய்விடுகிறது. கம்பனிலோ ராமன் வருவதும், கைகேயி ஆணையிடுவதும், ராமன் ஒரு வார்த்தையில் மறுமொழி கூறிவிட்டு விடைபெற்றுக் கோசலை கோயில் போவதும் அதிவேகமாக, மிகக் கெடுபிடியாக நடப்பதால் கதை நாணேற்றின வில்லைப் போல் வன்மையுடைத்தாய் நடக்கிறது. இன்னும் வால்மீகியில் சீதையையும் லக்ஷ்மணனையும் அழைத்துக் கொண்டு ராமன் மூர்ச்சித்துப் போயிருந்த தசரதனிடம் மறுபடியும் விடைபெற்றுக் கொள்ள வருகிருன். இங்கேயும் அசுவபதி மகாராஜாவின் உபாக்கியானம் பிரவேசித்துக் கதையின் ஓட்டத்தைக் **காலமில்லாத காலத்தில்** தடுக்கிறது. தவிர, கைகேயியே மரவுரியை ராமனிடம் தருகிருள். ராமன் சீதைக்கு அதை அணிவிப்பதைக் கண்டு வசிஷ்டர் தாங்கமாட்டாமல், 'நானும் மற்ற மந்திரிகள் முதலாயினேரும் சீதா ராமர்களோடு காட்டுக்குச் செல்லுகிறேம்' என்று சொல்லிவிட்டு, பிறகு 'சீதை ஆபரணங்கள் அணிந்து கொண்டாகிலும் போகட்டும்' என்று சொல்லி முடிக்கிருன். இந்த அற்ப விஷயம் பிரவேசிப்பதால், கதை மகா காவிய லட்சணத்தை இழந்துவிடுகிறது. தவிர, ராமன் தசரதனிடம் கோசலையை ஒப்பிப்பது ஸ்வபாவீகமாக இருந்தாலும் இந்தப் பாகமே வால்மீகியில் சம்பந்தா சம்பந்தமின்றி ஊழற்று இருக்கிறது. கம்பனே சுமித்திரையின் அரண்மனையில் ராமலக்ஷ்மணர் இருக்கையில் கைகேயி அனுப்பிய சீரை வரும்படி செய்து, அதினின்றும் பரிபூரண ரஸத்தைப் பிழிந்தெடுத்துத் தருகிருன். அனுப்பிய மரவுரியைக் கண்டு வெதும்பி,

> 'யாணர்த் திருநாடு இழப்பித்தவர் ஈந்த எல்லாம்
> பூணப் பிறந்தானும் நின்ருன், அவை போர்விலோடும்
> காணப் பிறந்தேனும் நின்றேன்அவை காட்டுமின்!'

என்று லக்ஷ்மணன் கூறும் வாக்கியத்தின் இருதய பேதன துக்கம் படிப்போர் மனத்தில் சுரீர் என்று தைக்கிறது. சீதா ராம சம்வாதத்தைக் கம்பன் ஒழுங்குபடுத்தி நன்கு அமைத்திருக்கிருன். தவிர,

> காரை ஒத்தவன் போம்படி கண்டஅவ்
> ஊரை உற்றது உணர்த்தவும் ஒண்ணுமோ?

என்று சொல்லிவிட்டு, தசரதனுடைய அரண்மனை வாயிற்படியைச் சார்ந்து அங்கு கூடியிருந்த தசரதனுடைய பத்தினிகளினிடத்தில் ராமன் விடை கேட்ட காலத்தில்,

> ஏத்தி ஞர்தம் மகனை; மருகியை
> வாழ்த்தி ஞர்;இளை யோனை வழுத்திஞர்;
> 'காத்து நல்குமின், தெய்வதங் காள்!'என்ருர்:
> நாத்த ழும்ப அரற்றி நடுங்குவார்!

என்று சொல்லி ராமன் அயோத்தி நகர் நீங்கும் தன்மையை வர்ணிக்கும் தோரணை மிகவும் ரஸமாக இருக்கிறது என்று காவிய இலக்கண அறிஞர் கூறத்தக்கதாக இருக்கிறது.

ராமன் காட்டுக்குச் செல்லுகையில் யாத்திராதானம் செய்கிறதை வால்மீகி வெகு விஸ்தாரமாக வர்ணிக்கிருன். இந்த இடத்தில் கதையின் வேகத்தைக் குறைப்பது சரியாக இல்லை. ஆதலால் கம்பன் கதையை இத்தகைய வர்ணனையினுல் நிற்கச் செய்யாமல் உரிய வேகத்துடன் செல்லச் செய்கிருன். இங்கே கம்பனுடைய கதை அசுவ கதியில் செல்லுகிறது. அதாவது கம்பீரமாயும் வேகமாயும் ஒரே மூச்சில் வெகு தூரம் செல்லுகிறது. பிறகு சிறிது நேரம் ஆசுவாசம் செய்துகொள்ளுகிறதற்காகக் குதிரை நிற்குமே அதுபோலச் சற்று விளம்பனமான வர்ணனைகளுடன் தேங்குகிறது. ஆனுல், உடனே பழைய வேகத்துடனும் உக்ரத்துடனும் கிளம்பி வெகுதூரம் கட்டுச்கு அடங்காது போலச் செல்லுகிறது. இவ்வாறு,

> விசையால் அனுங்க வடமேரு, வையம்
> ஒளியால் விளங்க, இமையாத்
> திசையானை கண்கள் முகிழா ஒடுங்க
> நிறைகால் வழங்கு சிறையா

ஞன பெரிய திருவடியின் கம்பீரமான கமனத்தையும் ஐராவதத்தின் தாட்டியையுமே தனக்கு உவகையாகக் கொண்டு கம்பனுடைய அயோத்தியா காண்டமானது ராமனைத் தண்டகாரணியத்தின் எல்லைவரையில் கொணர்ந்து சேர்த்துவிடுகிறது.

பரதனுடைய சம்பந்தம் கதைக்கு—ராமாயண கதை அனைத்துக்குமே என்று பொதுவாகவே சொல்ல வேண்டியது—உபாக்கியான சம்பந்தமாகத்தான் இருக்கிறது. ஆனுல், உபாக்கியான சம்பந்தமாக இருந்தாலும், சம்பந்தம் எத்தனை நெருங்கியதாக இருக்கிறது! எவ்வளவு அழகாக இருக்கிறது! ராமனுடைய அரணியப் பிரவாசம் அயோத்தியா காண்டத்துக்கு ஓர் முத்தாய்ப்பைக்

கொடுத்துவிட்டது என்று சொல்லலாம். ஆனால், வால்மீகி பகவான் அம் முத்தாய்ப்புக்கும் ஓர் முத்தாய்ப்பு வைக்கவேண்டும் என்று விரும்பி மகாகாந்தனும், மகாசுத்தனும், பின்பிறந்தோர்களுக் கெல்லாம் பெரிதும் உத்தமனான, ஆதர்ச சகோதரனான, பரதனை அரங்கத்தில் பிரவேசிக்க விட்டிருக்கிறான். கம்பன் கதையையும் போக்கையும் அவனிடம் நின்று வாங்கிக் கொணடிருக்கிறான் என்பது உண்மையே. ஆனால், அவன் இந்தப் பரத பிரவேசத்தை வால்மீகியையும் விட மிகமிக அழகாக அமைத்திருக்கிறான். இந்த உபாக்கியானத்தை விஷய ஆராய்ச்சியில் விஸ்தாரமாக ஆராய்ந்தெழுதுவோம். இங்கு இதன் ரசனை அழகைப் பற்றி மாத்திரம்தான் குறிப்பிட வேண்டியது அவசியம்.

அயோத்தியா காண்டத்தில் 67—வது சர்க்கத்தில் தசரதன் இறந்துவிட்டான் என்று கண்டதும் பிரஜைகளெல்லாம் வசிஷ்டனிடத்தில் அரசனில்லாமல் தாங்கள் க்ஷேமமாயிருத்தல் சாத்தியமில்லை என்று முறையிடுகிறார்கள். ஆனால், அம் முறையீடு தர்ம சாஸ்திரத்தில் சொல்லியது போலச் சொல்லப்பட்டிருக்கிறதே ஒழியக் காவியத்தில் சொல்லப்பட வேண்டிய ரீதியில் சொல்லப்படவில்லை. அதே மாதிரி 100—வது சர்க்கத்தில் ராமன் பரதனை 77—சுலோகங்களால் ராஜ்ஜியம் சரிவர நடக்கிறதா என்று விசாரிக்கிறான். இவைகளும் 108, 109—வது சர்க்கங்களில் வரும் ஜாபாலி ராம சம்வாதமும் சம்ஹிதைக்குரிய வர்ணனைகளாகுமேயன்றி காவிய அமைப்புக்கேற்ற வர்ணனைகளாகா. இதையெல்லாம் பார்க்கும்போது,

நைவ வ்யாகரணஜ்ஞ மேதி பிதரம்,
ந ப்ஹ்ராதரம் தார்கிகம்,
தூராத் ஸங்குசிதேவ கச்சஹதி புநச்
சாண்டாலவத் ச்ஹாந்தஸாத்;
மீமாம்ஸாநிபுணம் நபும்ஸக மிதி
ஜ்ஞாத்வா நிரஸ்தாதரா
காவ்யாலங்கரணஜ்ஞ மேத்ய கவிதா
காந்தா வ்ரிணீதே ஸ்வயம்! *

என்ற சுலோகம் நமது ஞாபகத்திற்கு வருகிறது. ஆனால், கம்பன் தன் கதையைக் காவியமாகவே கருதி, சம்ஹிதைக்காரர்கள் சொல்லுவது போலச் சொல்லாமல், சுவைபட வகுத்தலையே தன் தர்மமாகக் கொண்டு தன் காவிய மாளிகையைக் கட்டியுள்ளான். வால்மீகியில் அயோத்தியா காண்டத்தில் 82—வது சர்க்கத்தில் பரதன் சித்திரகூடத்தை நோக்கிப் போவதற்கு வழியெல்லாம் சீர் திருத்தி அமைக்க உத்தரவு செய்த பிறகு, வசிஷ்டன், 'நீ பட்டாபிஷேகம் செய்து கொள்ள வேண்டும்' என்று வற்புறுத்துகிறான். இது சம்பாவிதமாக இல்லை. இதிலெல்லாம் கம்பன் மிக மிக ஜாக்கிரதையாக இருந்து கதையைக் கொண்டு போகிறான். தசரதனுக் காகவேண்டிய கருமங்களெல்லாம் செய்து முடித்தானதும் கம்பன் ஓர் மந்திர சபை கூட்டுவிக்கிறான். அதில் வசிஷ்டன் பரதனைப் பார்த்து, 'நீ ராஜ்ஜிய பாரத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும்' என்று வேண்டுகிறான். பரதன் அரணியம் சென்று ராமனை அழைத்து வரவேண்டும் என்கிற தன்னுடைய நிர்ணயத்தை அந்தக் கூட்டத்தில்தான் முதல் முதல் தெரிவிக்கிறான். அங்கே வசிஷ்டனுடைய வாதத்திற்கெல்லாம் சமாதானம் சொல்லித் தன் நிச்சயத்துக்கு அவனையும் உட்படச் செய்த பிறகே வழிகளைத் திருத்த ஆக்ஞாபிக்கிறான். பரதனுடைய ராம பக்தியைப் பார்த்துக் கோசலை வருந்துவதாக எழுதுவது வால்மீகியின் கற்பனைத் திறத்தைக் காட்டுகிறது. ஆனால் கம்பன் அதை அங்குக் காட்டாமல், யுத்த காண்ட முடிவில் மீட்சிப் படலத்தில் காட்டுவதற்காக நிறுத்திக்கொண்டு, தன் ரசனைத் திறமையை விளக்குகிறான். இன்னும், ராமனுடைய பர்ணசாலையைக் கண்டு பரதன் வேகமாகச் செல்லுகிறான் என்கிற வர்ணனைக்குப் பிறகு சீதையிடம் ராமன் சித்திர கூட பர்வதத்தை வர்ணித்துப் பேசிக்கொண்டிருப்பதாகக் கதையை வால்மீகி கொண்டு போகும் போக்கு சம்பாவித விரோதமாக இருக்கிறது. கதையின் வேகத்தையும் குறைக்கத் தகாத இடத்தில் அவ் வர்ணனை குறைக்கிறது.

---

* (இ-ள்.) கவிதை என்னும் அணங்கு, இலக்சண வித்துவானைத் தந்தையென மதித்து அவனை அணுகாள்; தார்க்கிகனைச் சகோதரன் என்று பாவித்து அவனை நெருங்காள், வேதாத்தியயனம் செய்தவனை (யும், சந்தத்தையே கவனிப்பவனையும்) விட்டுச் சண்டாளர்களிடம் நின்று ஓடுகிறவர்கள் போல ஓடியே போய்விடுகிறாள்; மீமாம்சையை ஆராய்பவனை நபும்ஸகன் என்று நினைத்து அவமதித்து விடுகிறாள்; காவியாலங்கார சாஸ்திர மறிந்தவனைக் கண்டதும் அவனையே தன் கொழுநனாகப் பாவித்து அவனைச் சேருகிறாள்......வால்மீகியைச் சாமானிய கவியாக, நாம் பாவிக்கவில்லை. உலகத்திலுள்ள முதல் ஏழெட்டு மகா கவிகள் என்று கணக்கிட்டு எந்த ஜாதி அறிஞர் எண்ணினாலும் அந்தக் கணக்கில் வால்மீகியின் பெயரைச் சேர்க்காதிருக்க முடியாது. எமது சொந்த அபிப்பிராயத்தில் உலகத்தின் ஒரு தனிக் காவியம் என்று சொல்லத் தகுந்தது கம்பராமாயணம்தான் என்றும், வால்மீகி ராமாயணம் அதற்கு அடுத்த ஸ்தானத்தை வகிக்கும் என்றும் சொல்லுவோம். ஆனால் இங்கே வால்மீகி காவிய ரீதியை மறந்து சம்ஹிதை ரீதியில் இறங்குகிறான் என்பது எமது அபிப்பிராயம்.

இம்மாதிரி கட்டங்களில் கம்பன் அசுவ தாட்டியில் செல்வது வழக்கம். பரதனது சைனியம் வருவதைக் கண்ட லக்ஷ்மணன் ஆவேசத்துடன் ராமனிடம் சென்று பர தனைத் தூஷிக்கிறுன். ஆனுல், கால் தாக்க நிமிர்ந்து, புகைந்து கனன்று, பொங்கும் ஆருக் கனல் ஆற்றும் ஓர் அஞ்சன மேகம் என்ன ராமன்,

'எனைத்துஉள மறை,அவை இயம்பற் பாலன,
பனைத்திரள் கரகரிப் பரதன் செய்கையே!
அனைத்திறம் அல்லன்அ வல்ல வன்:அது
நினைத்திலை, என்வயின் நேய நெஞ்சினுல்!'

என்று முதலாய்ச் சொல்லிவிட்டுப் பரதன் ஜடாவல்கலதாரியாய்த் தானே நெருங்கிய தும் லட்சுமணனுக்கு,

'தேர்ப்பெருந் தானையால் பரதன் சிறிய
போர்ப்பெருங் கோலத்தைப் பொருந்த நோக்கு!'

என்று குத்திக்காட்டிச் சொல்லுகிறுன். அதற் குள்ளும் பரதன் வந்து ராமன் பாதத்தில் வீழ்கிறுன். சீதைக்கு வனத்தின் அழகுகளைக் காட்டுவது போன்ற அகால விளம்பனங்க ளின்றிக் கதை ஸ்தாயிக்கு மேல் ஸ்தாயியாக ஆரோகணக் கிரமத்திலேயே செல்லுகிறது. தசரதன் சௌக்கியமா என்று ராமன் கேட் பதும், பரதனுடைய வார்த்தையைக் கேட்ட தும் ராமனுடைய பிரலாபமும் மூர்ச்சையும் சக்ரவர்த்தியின் சரமக் கிரியைகள் ஆனதும் ராஜ்ஜியபாரத்தை ஏற்றுக் கொள்ளும்படி, பரத ராமர்கள் பரஸ்பரம் வேண்டிக் கொள் வதும், வசிஷ்டன் ராமனை வற்புறுத்துவதும், ராமன் யாதொன்றுக்கும் இணங்காது நிற்ப தும், வீண் விவாதங்களின்றி மிகக் கெடு பிடியாக நடைபெறுகின்றன. ஜாபாலியின் அசந்தர்ப்பமான சம்வாதத்தில் கதையின் போக்குத் தேக்கெறிந்து போய்ச் சுவை கெட்டுப் போய்விடுகிறது என்று கண்டு, கம்பன் அவ் உபாக்கியானத்தை அறவே ஒழித்துவிட்டான்.

ஆரணிய காண்டத்திலும் பின் காண் டங்களிலும் கம்பன் ரசனையை எவ்வளவு அழகாகச் செய்திருக்கிறுன் என்பதை அடுத் தாற்போல் காட்டுவோம்.

3. ஆரணிய காண்டம்

ஆரணிய காண்டம்தான் ராமாயணத்தின் மத்திய பாகம். கிஷ்கிந்தா காண்டம் கேவலம் உபாக்கியானமே யானதால் கதை யின் காண்ட வரிசையிலும் ஆரணிய காண்டத்தையேதான் மத்திய காண்ட மாகக் கொள்ளவேண்டும். இதில்தான் ராம ராவணரின் பகைமைக்கு நேரான காரணமான சீதாபஹரணம் நிகழ்கின்றது. ஆதலால் ராம கதையாகிற கன்னிகை யின் மேகலாபரணமாக விளங்குகிற இக் காண்டத்தின் ரசனை மிக அழகாக அமைந் திருத்தல் வேண்டும். கம்பன் அவ்வாறு அமைத்தே யிருக்கின்றுன் என்று இவ்விடத் தில் காட்டுவோம். அதனோடு இக் காண் டத்தில் வால்மீகியின் ரசனையைக் கம்பன் மாற்றியிருக்கிற இடங்களெல்லாம் ரஸக் ஞர்களுக்கு நல்விருந்தாக இருக்கின்றன என்றும் காட்டிவிடுவோமானுல் படிப்போர் கம்பனுடைய ரசனு சக்தியை மதிக்க வேண்டிய அளவுக்கு மதிப்பர் என்பதில் எமக்கு ஐயமில்லை.

இக் காண்டத்தில் முதல் 224 விருத் தங்கள் வரையில் கதை ஆலசியமாகத் தான் நடக்கிறது. விராதன் வதைப் பட லம் மாத்திரம் சிறிது வேகத்தைத் தாங்கி நிற்கின்றது. ஆனுல் அது—விராதனுடைய ஸ்தோத்திரம் இருப்பினுங் கூட —வேதா ளக் கதையின் ஜாதியைச் சேர்ந்ததே யொழிய, மகா காவிய ஜாதியைச் சேர்ந்த தன்று. ஹோமர் எழுதிய ஒதூஸியத்தில் வரும் குக்ளோப உபாக்கியானம், விர் கீலியனுடை ஏனையத்தில் வரும் ஹார்ப்பி யரின் செய்தி,* ஆகிய இவைகளோடுதான் இந்த விராதன் கதையையும், இக்காண் டத்தின் கடைசியில் வரும் அயோமுகி யின் கதையையும் ஒப்பிடலாகும். **சர பங்கர் பிறப்பு நீங்கு படலம்** கதைக்கு எவ்வித உதவியும் செய்யவில்லை—அதை எடுத்துவிட்டதனுல் கதைக்கு எவ்வித நஷ்ட மும் ஏற்படாது. அகத்தியப் படலத்தின் விஷயத்தை ஐரோப்பியக் கவிஞர் அது கம்பனில் தோன்றுமிடத்தில் கூற மாட் டார்கள். கதையின் பிற்பாகத்தில் யாரா வது இரண்டு நாயகர்கள் சம்பாஷிக்கும் போது இவ்விஷயம் உபாக்கியானமாக வரும் படி செய்வது அவர்களுடைய முறையதி கும். அவ்வாறு செய்திருந்தால் இவ்விடத்தா லுள்ள ரசனையைவிட உயர்ந்த ரசனையா யிருந்திருக்கும். ஆனுல், சூர்ப்பநகையின் பிரவேசத்திலிருந்து கம்பனுடைய ரசனை மேனுட்டுக் காவியங்களின் சுவையில் தோய்ந் தவருக்கும் கீழ்நாட்டுக் காவியங்களின் ரஸத்தைப் பருகி அனுபவிப்பவருக்கும் சம மான இன்பத்தைத் தரும். இவ் இரச னையை ஆராய்ந்து பார்ப்போம்.

---

* The episode of Polyrhemus the Cyclops in the Odyssey of Homer and the account of the Harpies in Virgl's AEneid.

பஞ்சவடியில் சீதா ராம லக்ஷ்மணர்கள் வாழ்ந்துகொண்டிருக்கும் நாளில், உடன் பிறந்தே கொல்லும் வியாதியைப் போல் ராவணனுக்கு உடன் பிறந்தாளே யாயினும் அந்நிருதர் வேந்தனை மூலநாசம் பெற முடிக்கும் மொய்ம்பினுளான சூர்ப்ப நகை ராமன் இருந்த சூழல்வாய் வந்து தோன்றுகிறாள். ராமனுடைய ரூப லாவண்யத்தைக் கண்டவுடன் காமாதுரையாகி, அவள் தன் அரக்க உருவத்தை மாற்றிக் கொண்டு, தேவ கன்னிகை போன்ற ஜகன்மோகனமான உருவம் ஒன்றைத் தரித்துக் கொண்டு ராமன் கண்ணெதிரே வருகிறாள்.

கம்பனுடைய சந்தங்களைப் பற்றிய விசாரணை இவ்வாராய்ச்சியின் இறுதியில் தான் செய்வது முறையானாலும் இங்கே எடுத்துக் கொள்ளுகிற சந்தம் விஷயத்துக்கு மிகவும் பொருத்தமானது என்று நாம் கூறாமலிருக்க முடியவில்லை. பால காண்டம் கோலங்காண் படலத்தில் சீதா தேவி சபா மண்டபத்தில்,

> சிற்றிடை நுடங்க,ஒளிர் சிறடி பெயர்த்(து),
> அன்னமும், அரம்பையரும், ஆர்அமிழ்தும் நாண
> மன்அவை இருந்தமணி மண்டபம்

அடைந்ததை வர்ணிக்க எடுத்துக்கொண்ட சந்தத்தையே, தாமரைக் குளத்தில் அன்னம் நீந்தி வரும் உணர்ச்சியையும், இன்பப் படகு வலிக்கப்பட்டுவரும் ஒய்யாரத்தையும் அது நினைவுக்குக் கொண்டு வருவதால், கம்பன் இங்கும் கையாளுகிறான்.

சூர்ப்பநகையை அரங்கத்தில் தோற்றுவிக்கும் அழகைத்தான் என்னென்று சொல்லலாம்! வால்மீகியில் சூர்ப்பநகையின் வரவு சாமானியமாகத்தான் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. ராமன் ரிஷிகளோடும் சீதா லக்ஷ்மணர்களோடும் உட்கார்ந்துகொண்டு அவர்களுக்குக் கதைகள் சொல்லிக் கொண்டிருக்குங் காலத்தில் சூர்ப்பநகை, சிவந்த தலைமயிரும், கொடிய கண்களும், நரை திரை உள்ள உடலும் முதலிய அலங்காரங்களுடன் ராமனிடம் வந்து, 'பத்தினியோடுகூட இந்தப் பிரதேசத்திற்கு வந்த நீ யாவன்? உன்னுடைய விருத்தாந்தங்களெல்லாம் என்ன?' என்று கேட்கிறாள். ராமன்,

> 'நஹி தாவத் மனோஜ்ஞாங்கி
> ராக்ஷஸி ப்ரதிப்ஹாஸி மே'

என்று சொல்லுகிற வாக்கிலிருந்துதான் உரைகாரர் சூர்ப்பநகை யௌவன உருவத்தை எடுத்துக் கொண்டு ராமனிடம் வந்திருக்க வேண்டுமென்று கவி அநுமானிக்கச் செய்கிறார் என்கிறார்கள். சூர்ப்பநகை கேட்டதும் ராமன் தன்னுடைய பூர்வோத்தரத்தைச் சொல்லிவிட்டுச் சூர்ப்பநகையின் பூர்வோத்தரத்தைக் கேட்பதும், சூர்ப்பநகை தான் ராமனைக் காமிப்பதாக முதலெடுத்ததுமே வெள்ளையாகச் சொல்லி விடுவதும் வேலைப்பாடில்லாமல் மொட்டையாக இருக்கிறது. ஆனால், கம்பனில், சூர்ப்பநகை மோகனமான உருவத்தைத் தரித்துக் கொண்டு, நூபுரம், மேகலை முதலிய ஆபரணங்கள் குலுங்க ராமன் தனியே இருக்கும் இடத்தை நோக்கி வர, அவ்வுருவத்தைக் கண்ட எம்பெருமான்,

> பாருழையின் இல்லதுஒரு மெல்உருவு பாரா,
> 'ஆருழைஅ டங்கும்!அழ கிற்குஅவதி உண்டோ?'

என்று நினைக்கிறான். அவள் வந்து, வெவ்விய நெடுங்கண் அயில் வீசி, அயல் பார்த்து, நவ்வியின் ஒதுங்கி, இறை நாணி அயல் நின்றதும், ராமன் அவள் செய்தியை விசாரிக்கிறான். சம்பாஷணை வெகு ருசிகரமாக, இயற்கையில் நடைபெறுவது போல, நடக்கிறது. இடையில் தான் அமுதின் வந்த அருந்ததிக் கற்பின் அஞ்சொல் வேயிடை தோளினளான சீதை ராமனிடம் வருகிறாள். இந்தச் சிறு, ஆனால் ரசனைத் திறம் அனைத்தையும் காட்டுகின்ற தந்திரத்தினால் சீதையை ஓர் அரக்கியென்று சூர்ப்பநகை கூறும்படி செய்வதும், ராமன் அதைக் கண்டு சிரித்துச் சூர்ப்பநகையின் தன்மையைப் பரிபூரணமாகத் தெரிந்து கொண்டுவிடும்படி செய்து கதையை அழகுபட அமைப்பதும் கவிக்குச் சாத்தியமாகி விடுகிறது. அதனோடு மானம் லவலேசமுமிழுக்கா மறம் நிரம்பிய கம்பனுடைய ராமன் சூர்ப்பநகையின் ஸ்வரூபத்தைக் கண்டபிறகுதான்,

> 'தரையளித்த தனிநேமித் தயரதன்தன் புதல்வர்யாம்
> . . . .
> கரைஅளித்தற்கு அரியபடைக் கடல்அரக்கர்
> குலம் தொலைத்து, கண்டாய் பண்டை
> வரைஅளித்த குலமாட நகர்புகுவேம்
> இவைதெரிய மனக்கொள்!'

என்று அகங்காரத்தோடும் கர்வத்தோடும் சொல்லுகிறான்.

கர தூஷண திரிசிரர்களுடைய யுத்தம், வால்மீகியில் போலவே கம்பனிலும், யுத்த காண்டத்தில் வரப்போகும் கோர யுத்தங்களுக்கு ஒத்திகையாக விளங்குகிறது. சூர்ப்ப

நகை ராவண சந்திப்பிலும் சம்பாஷணை யிலும் கம்பன் அபூர்வமான திறமை காட்டுகிறான். பரத ராம சமாகமம் போல வால்மீகியில் இச் சகோதர சகோதரி சந்திப்பும் சம்ஹிதை வழியைத்தான் பின்பற்றுகிறதே யொழியக் காவிய வழியைப் பின்பற்றவில்லை. சூர்ப்பநகை, 'நீ ராஜ்ஜியத்தைக் கவனிப்பதில்லை, விஷய போகத்தில் இறங்கிவிட்டாய், வேவு சரியாகப் பார்ப்பதில்லை, கர தூஷணாதியர் இறந்ததைப் பற்றி நீ இன்னும் தெரிந்து கொள்ளவில்லை,' என்று முதலாகச் சொல்லி ராவணனைத் திட்டிவிட்டு, சம்பந்தாசம்பந்த மில்லாமல்,

'தீக்ஷ்ணம், அல்பப்ரதாதாரம்
ப்ரமத்தம், கர்விதம் சட்ஹம்,
வ்யஸனே ஸர்வ ப்ஹூதானி
ந அப்ஹிதாவந்தி பார்த்ஹிவம்' *

என்பன போன்ற மொழிகளை அவனிடம் பேசுகிறாள். இவ்வாறு இருபத்து மூன்று சுலோகங்களால் சூர்ப்பநகை தகுதியில்லா அரசன் இம்மாதிரி இருப்பான் என்று இராவணனிடம் சொல்லி வருதலில் சுவை சிறிதும் இல்லாம லிருக்கிறது. தவிர இச்சம்பாஷணைக்கு முன்னாகவே அகம்பனன் என்னும் அரக்கன் கரன் முதலாயினோர் பட்டவாற்றைச் சொல்லிச் சீதையை அபகரித்து வருதல்தான் ராமனைத் தண்டிக்கும் முறை என்று ராவணனுக்குப் போதித்ததன் மேல் ராவணன் மாரீசனுடைய உதவியை வேண்டினதாகவும், மாரீசன் ராமனுடைய பராக்கிரமத்தைப் பற்றிச் சொல்லி ராவணனைத் தன் ஊருக்குத் திரும்ப அனுப்பி விட்டதாகவும் வால்மீகி கதையைக் கொண்டு போகிறான். சூர்ப்பநகை இதன் பிறகு 'சீதையை அபகரித்து வா!' என்று ராவணனிடம் சொல்லுவதும், ராவணன் மறுபடி மாரீசனிடம் சென்று கூறியதையே கூறுவதும் கதைக் கிரமத்துக்குப் பொருந்தாததாக இருக்கிறது.

கம்பனில் இவ் இரசனையைக் கவனிப்போம். இரத்தம் ஒழுகும் அவயவங்களோடு சூர்ப்பநகை ராவணனைப் பார்க்க வருங் காலத்திலே அரக்கியரெல்லாம் மனங் கலங்கிக் கொண்டும், அழுது கொண்டும், இதைப் பார்த்ததும் ராவணனுடைய கோபம் என்ன செய்யுமென்று அஞ்சிக் கொண்டும் நிற்கிறார்கள். இனி வர இருக்கும் ராவணனுடைய கோபத்திற்கும், சீதாபஹரணத்திற்கும், ராம ராவண யுத்தத்திற்கும், அரக்கரின் வீழ்ச்சிக்கும் இந்த உபோற்காதம் அந்தம் தருகிறது. வந்த சூர்ப்பநகை வால்மீகியில் போல ராவணனை இழித்துக் கூறவில்லை. கம்பனுடைய ராவணனை உரிமையின்றிச் சீறத் தகுந்தவர் யாருமில்லை. குறையிரப்பவள் செய்ய வேண்டிய பிரகாரம் சூர்ப்பநகை ராவணனது பாதத்தில் வீழ்கிறாள். அந்த நிலைமையில் அவளைக் கண்ணுற்றதும் ராவணனுடைய புருவங்கள் நெரிந்தன; நயனங்கள் எரிந்தன; கோபத்தால் உடல் விம்மத் தோள் வலயங்கள் விரிந்தன! அவன் கோபாவேசத்தைக் கண்டு சூரியன் நடுங்குகிறான்; தேவர்கள் ஓடி ஒளிக்கின்றனர்; ஆதிசேஷன் கூட நெளிந்து கொடுத்துக் கொள்ளுகிறான். கடைசியாக,

மடித்தபில வாய்கள்தொறும் வந்துபுகை முந்த,
துடித்ததொடர் மீசைகள் சுறுக்கொள உயிர்ப்ப,
கடித்தகதிர் வாள்எயிறு மின்கஞல, மேகத்து
இடித்தஉரும் ஒத்துஉரறி;

'யாவர் செயல்?' என்று ராவணன் கேட்கிறான்.

மானிடர்தாம் வாளுருவி வெட்டினர் என்று சொல்லிச் சூர்ப்பநகை நிறுத்துவதால், ராவணன் 'பயமில்லாமல் உள்ளதைச் சொல்' என்று சொல்வதும், ராம லக்ஷ்மணரின் ரூப லாவண்ணியத்தில் அழுந்திய மனத்தினளாகிய சூர்ப்பநகை அவர்களது அழகை ஆசை தீர வர்ணிப்பதும் இயற்கையாகிறது. 'என்னுடைய ஆக்கினைக் குட்பட்ட காட்டில் என்னுடைய அருமைச் சகோதரிக்கு இந்த அவமானம் ஏற்பட்டு விட்டது பார்த்தாயா?' என்று ராவணன் தன்னைத்தான் கடிந்து கொள்ளுவதும், கரதூஷணர் அவர்களைக் கொல்லவில்லையோ என்பதும், கரன் பேரைக் கேட்டதும் சூர்ப்பநகை கண்ணீர் விட்டுப் புரண்டு அழுது கரதூஷணர் வீழ்ந்த வரலாறு கூறுவதும், ராவணன் நிறை நெடுங் கண்களெல்லாம் நெருப்புக் கால, 'நீ இடை இழைத்த குற்றம் என்னை கொல்?' என்று கேட்பதும், காரணம் சொல்லுகையில், பொய்யொன்றைச் சேர்த்து ராவணனுடைய அந்தப்புரத்துக்காக, பார் அவள் பாதம் தீண்டப் பாக்கியம் படைத்தவளும், தாமரை இருந்த தையல் சேடி ஆம் தரமும் அல்லாதவளும், அஞ்சொற்கள் அமுதில் அள்ளிக்கொண்டவளும், கடலினும் பெரிய கண்களையுடையவளும் ஆன

---

* (இ-ள்.) 'கடுஞ்செயலன், இவறற்குண முடையான், பொச்சாப்புடையவன், கர்வமுடையவன், மூர்க்கன் ஆகிய இத்தகைய அரசர்களுக்குக் கேடு வந்த காலத்தில் யாரும் உதவார்.'

சீதையை வர்ணித்து ராவணனுடைய மனத்தில் காமத் தீயைக் கொளுத்தி விடுவதும், மலையருவி விழுவது போலக் கதையில் தேக்கமின்றிச் சரளமாகப் பெருகி வருகிறது. அயோத்தியா காண்டத்தில் 'ஆழி சூழ் உலக மெல்லாம்' என்ற செய்யுளில் போட்ட வித்து காவிய பூமியில் விழுந்து, மண்ணையும் நீரையும் உண்டு, உப்பி, அங்குரித்துவிட்டது.

கரனையும் மறந்தான், தங்கை மூக்கினைக் கடிந்து நின்றான்
உரனையும் மறந்தான், உற்ற பழியையும் மறந்தான், வெற்றி
அரனையும் கொண்ட காமன் அம்பினால், முன்னைப் பெற்ற
வரனையும் மறந்தான், கேட்ட மங்கையை மறந்தி லாதான்!

என்ற செய்யுளில் அவ் வித்து முளையைக் காட்டத் துவக்கிவிட்டது.

ராவணனுடைய காம நோயை வர்ணிக்கக் கம்பன் 80 செய்யுள்கள் எழுதியிருக்கின்றான். இது அதிவர்ணனையே. ஆனால், கும்பகர்ணன் மாண்டும், இந்திரசித்தன் தலை யிழந்தும், மூல பலங்கள் மடிந்தும் அவியாத காமத்துக்கு இத்துணை விளம்பனமான வர்ணனை வேண்டும் என்று கவி நினைத்திருக்கிறான் என்று கொள்ளல் வேண்டும். இவ்வர்ணனைகளில் பெரும்பாலன பன்னாட்டு இலக்கியங்களையும் ஆராய்ந்து சுவையறிவைச் சேகரித்தவருக்குச் சுவை கொடா. இவற்றில் இயல்பின்மைதான் மிகுதியாகக் காணப்படுகிறது. முன் சொன்ன காரணத்தை வைத்துக் கொண்டு பார்த்தால் இதிலும் ரசனையின் குறைபாடு அத்துணை அதிகமாகத் தோன்றாது என்று சொல்லுவோம். இருப்பினும் இப்பாகம் வேறு மாதிரி அமைக்கப்பட்டிருத்தலே முறை என்று எடுத்துக் காட்ட நாம் பின்வாங்குகிறோமில்லை.

மாய மான் விஷயத்தில் லக்ஷ்மணன் ஆக்ஷேபித்ததும் ராமன் சமாதானம் கூறிவிட்டு வேட்டைக்குப் புறப்பட்டுச் சென்று விடுகிறான் என்று வால்மீகி செய்திருக்கும் ரசனையில் லக்ஷ்மணனுடைய சாமர்த்தியமும் முன் யோசனையும் வற்புறுத்திக் காட்டப்படவில்லை. லக்ஷ்மணன் ராமனை அவ்வேட்டையினின்று விலக்கப் பன்முறையும் முயன்று பார்த்தால்தான் படிப்போருடைய மனத்தில் லக்ஷ்மணனுடைய கூரிய அறிவையும் ராம பக்தியையும் விளக்கிக் காட்ட முடியும் என்று கம்பன் ராம லக்ஷ்மண சம்வாதத்தை மிக வேலைப்பாட்டோடு அமைத்திருக்கிறான்.

சீதை லக்ஷ்மணனைச் சீறி ராமனை நோக்கிப் போகச் செய்யும் கட்டத்தில் வால்மீகியின் வேலைப்பாட்டுக்கும் கம்பனுடைய கைநயத்துக்கும் உள்ள தாரதம்மியம் மற்றெங்கேயும்விட அதிக விசதமாக விளங்குகிறது. மாரீசன் ராமன் குரலை அனுகரித்துக் கூவியதும் சீதை ராமனது உயிருக்கு அபாயம் நேர்ந்துள்ளது என்று ஐயுற்று லக்ஷ்மணனை ராமனைத் தேடிப் போகும்படி ஆக்ஞாபிக்கிறாள். ஆனால்,

ந ஜகாம தத்ஹோக்தஸ்து
ப்ஹ்ராதுர் ஆஜ்ஞாய சாஸனம் *

என்று மாத்திரம் கவி லக்ஷ்மணனைப் பற்றிக் குறிப்பிடுகிறான். அவன் சும்மா இருந்ததைக் கண்ணுற்ற சீதை உடனே, 'என்னைக் காமித்தன்றோ நீ ராமனுடைய அழிவைக் கோருகின்றாய்! என்னைச் சுவீகரிக்கும் பொருட்டே நீ ராகவனுக்குத் துணைபுரியச் செல்லுகிறாயில்லை!' என்று சொல்லிவிடுகிறாள். இவ்வாறு பேசுவதில் உள்ள வைரஸ்யம் † ஒருபுற மிருக்க, ஆரம்பத்திலேயே இத்துணைப் பெரிய வார்த்தைகளைப் பிரயோகிப்பதனால் இச்சம்பாஷணைக்கு ஆரோகணக் கிரமம் இல்லாமற்போய், சென்று தேய்ந்திறுதற் குற்றம் சம்பவித்து விடுகிறது. இன்னும், 'பரதன் ஏவுதலினாலோ, அல்லது நீயே சூழ்ச்சி செய்து கொண்டுதானோ இவ்வாறு செய்கிறாய்! பார், உன்னெதிரிலேயே பிராணனை விட்டு விடுகிறேன்,' என்று சீதை சொல்லுகிறாள். பரதனைப் பற்றிச் சீதை இவ்வாறு பேசுவது இயற்கைக்குப் பொருந்தியிருக்கிறது என்று சிலர் சொல்லலாம்—சிலர் சொல்லியும் கேட்டிருக்கிறோம். ஆனால், இயற்கைக்காவது, கதை அமைப்புக்காவது, சீதையின் தன்மைக்காவது இத்தகைய வாக்குச் சிறிதும் பொருந்தியதன்று என்று தைரியமாகச் சொல்லுவோம். இதற்கு லக்ஷ்மணன் கூறும் பதில் இன்னும் விரஸமாக இருக்கிறது.

'இத் தகாத வார்த்தைகள் பெண்கள் வாயினின்று வருவதில் ஆச்சரியமில்லை. பெண்கள் அறவழி நில்லாதவர், சபலசித்தர், கொடியவர், கலக மூட்டுபவர், என்னை இவ்வாறு ஐயுறும் நீ கெடுக!' என்று சொல்லிவிட்டு, அதே மூச்சில், 'உன்னை வன தேவதைகள் காத்திடுக!' என்று சொல்லிக் கொண்டு லக்ஷ்மணன் ராமன் காலடிகளைப் பின்பற்றிச் செல்லுகிறான்.

---

* (இ-ள்.) அவ்வாறு ஆணையிடப்பட்டும் ஆணையைக் கருதி லக்ஷ்மணன் அதைவிட்டு நகரவில்லை. † விரஸத் தன்மை.

இக் கட்டத்தைக் கம்பன் எவ்வாறு அமைக்கிருன் என்று பார்க்கலாம். மாரீசனுடைய சத்தத்தைக் கேட்டதும் குயில் தலத்திடை உற்றதோர் கொள்கையாளான சீதை, லக்ஷ்மணன் யாதொரு வேதனையும் படாதிருப்பதைக் கண்ணுற்று,

> 'குற்றம் விந்த குணத்தின்எம், கோமகன்
> .. ..
> இற்று வீழ்ந்தனன் என்னவும்! 'என்அயல்
> நிற்றியோ, இளேயோய், ஒரு நீ

என்ருள். உடனே லக்ஷ்மணன் ராமனுடைய அசகாய சூரத்துவத்தை ஆறு கம்பீரமான பாட்டுக்களில் வர்ணிக்கின்ருன்.

> 'கார் எனக் கரிய அக் கமலக்கண்ணனே
> ஆர் எனக் கருதி இவ் இடரின் ஆழ்கின்றீர்?'
> '.. .. .. புரம் எரித்த புங்கவன்
> ஏற்றிநின்று எய்தவில் இறுத்த எம்பிரான்
> ஆற்றலின் மேலும்ஓர் ஆற்றல் உண்மையோ!'

என்று கேட்டுவிட்டு, லக்ஷ்மணன், 'ராமனது அம்பினுல் பட்டு வீழ்ந்த அரக்கனது சத்தமாகத்தான் அது இருக்க வேண்டும், ஆதலின் மனத்தில் சஞ்சலப்படாமல் பொறுத்திரும்' என வணங்கிச் சொல்லுகிருன். இதற்குச் சீதை வால்மீகியில் போலவே எடுத்த சீற்றத்தளாய், கொன்றன இன்னலளாய், கொதிக்கும் உள்ளத்தளாய்த்தான் பேசுகிருள். ஆனல், அதில் எவ்வளவு நிதானம்! சிறிதேனும் வரம்பு கடத்தல் என்பதில்லே. வார்த்தைகள் நிறுத்து வைத்தது போல் விழுகின்றன. பரதனேப் பற்றியாவது லக்ஷ்மணனேப் பற்றியாவது விரஸமான அவாச்சியமான வார்த்தைகள் ஒன்றுகூடச் சீதையின் வாயினின்று வரவில்லே. 'நின்ற நின் நிலே இது நெறியிற்று அன்று!' என்று சொல்லிவிட்டு,

> 'ஒருபகல் பழகினர் உயிரை ஈவரால்!
> பெருமகன் உலேவுறு பெற்றி கேட்டு,நீ
> வெருவலே! நின்றனே! வேறுஎன்? யான்இனி
> எரியிடை வீழ்ந்துஉயிர் இறப்பல் ஈண்டு'

என்று சொல்லிக் கொண்டு, தாமரை வனத்திடை தாவும் அன்னம்போல், காட்டுத் தீ எரியுமிடம் நோக்கிச் செல்லத் தொடங்கிவிட்டாள்.

இதன் பிறகும் லக்ஷ்மணன் வாயினின்று ஒரு கொடிய சொல்கூட விழவில்லே.

இந்தக் கட்டத்தை வால்மீகியிலும் கம்பனிலும் ஆதியோடந்தமாய்ப் படிக்குமவர்க்கு வால்மீகி ராமாயணமானது இடைக்கிடை தங்கக் கொடிகள் கொழுத்து ஓடினுலும் பூமியிலிருந்து அப்படியே பாறையோடு வெட்டி யெடுக்கப்பட்ட கட்டியைப் போன்றதுதான் என்றும், கம்ப ராமாயணம் அத் தங்கத்தை எடுத்து உருக்கி, மாசு போக்கி, வார்த்த சொர்ண விக்ரகமாகும் என்றும் தோன்றும்.

சீதா ராவண சம்வாதத்தையும் கம்பன் வெகு சாமர்த்தியமாய்ப் பாகுபடுத்தியிருக்கிருன். ராவணன் சீதையைத் தூக்கிக்கொண்டு போகுமுன் ஒரு சம்வாதம் அமைத்துவிட்டு, வால்மீகி, உடன் கையிலேயே சீதையை அசோக வனத்தில் கொண்டுபோய்ச் சேர்த்த பிறகு அவர்களுக்குள் ஏறத் தாழ அதே மாதிரி சம்பாஷணேயே மறுபடி ஏற்படும்படி செய்திருக்கிருன். கம்பனுடைய சுவையுணர்ச்சிக்கு இவ்விரண்டு சம்பாஷணேகளும் இவ்வளவு நெருங்கியிருத்தல் முறையில்லே யென்று தோன்றியே அவன் சுந்தரகாண்டத்தில் அனுமானுடைய பார்வையில் நடக்கும் சம்வாதத்துக்கு முன் லங்கையில் சீதா ராவணர்களுக்குள் யாதொரு பேச்சும் நிகழ்த்தாமல் நிறுத்திக் கொண்டிருக்கிருன்.

ராவணன் சீதையை அபகரிப்பதற்காக வருங் காலத்தில் வால்மீகி அவனேக் கண்டு இயற்கைப் பொருள்கள் நடுங்கின என்று வர்ணிக்கிருன்.* கம்பன் இந்த வர்ணனேயைச் சுவீகரித்துக் கொண்டு தனது சித்திரப் படலத்திலும் அதைச் சேர்த்துக் கொண்டு விட்டான். கம்பனுடைய வர்ணனே பின் வருமாறு :

> நடுங்கின மலேகளும் மரனும்! நா அவிந்து
> அடங்கின பறவையும்! விலங்கும் அஞ்சின!
> படம்குறைந்து ஒதுங்கின பாம்பும், பாதகக்
> கடுந்தொழில் அரக்கனேக் காணுங் கண்ணினே!

மகா கவிகளெல்லாம் இத்தகைய மகா சந்தர்ப்பங்களில் பிரகிருதி மனித உணர்ச்சியோடு நடப்பது போல எழுதுவது சகஜமாயிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. இலியாதின் 20 - வது சருக்கத்தில் ஹோமர் பின்வருமாறு பாடுகிருன்:

---

* அந்தக் கொடுந் தொழிலனுன ராவணனேக் கண்டதும் ஜனஸ்தானத்தில் நின்ற மரங்கள் அசைவொழிந்து நின்றன: காற்று அடங்கிவிட்டது. வன்தறு கண்ணினனுன அவனது கண்கள் பட்டதும் வேகமாய்ச் செல்லும் கோதாவரி நதியும் பயந்து ஸ்தம்பித்துப் போய் மெல்லவே நகர ஆரம்பித்தது!

—வால்மீகி- , , எ.

போர்க் கடவுள் * துரோயா † மீது வட்ட மிட்டுக் கொண்டு தன் பயங்கரமான உருவத் தைப் புயற்காற்றுலும் மழை வேகத்தாலும் போர்த்தி மறைத்துக்கொண்டு, அத்துரோயா வின் உன்னதமான கோபுரங்களின் மீது நின்று கர்ஜித்துத் தன் வேகத்தைத் துரோயர் நெஞ சில் ஊற்றினுன், பக்கத்திலுள்ள மனேகரமான குன்றிற்குத் தாவி ஸிமோயா ‡ நதியை நோக் கிக்கொண்டு அட்டகாசம் செய்கையில் குன்று அதிர்ந்தது,

....வேகமாய்ச் செல்லும் அந்நதி ஸ்தப்தமாய் நின்று விட்டது. ||

ஏவாள் மரத்தினின்று கடவுள் தொடக் கூடாது என்று ஆணையிட்டிருந்த பழத்தைக் கொய்து மனித ஜாதிக்கே துக்கத்தையும் மரணத்தையும் உண்டாக்கித் தந்துவிட்ட போது,

பூதேவி புண்பட்டாள்; முடிவு வந்துற்ற தென்று பகுதியாளும் தான் நிற்கும் அனைத்துப் பொருள்களினும் உயிர்த்துக்கொண்டு பொரு மினுள், துடித்தாள், $

என்று மில்தனும் கற்பித் தெழுதுகிருன். எந்த ஜாதியினராயினும் பெருங் கவிகளின் இதயத்தில் ஒரே மகாநாதம் ஒலிக்கு மன்றோ?

சீதா ராவண சம்வாதத்தைக் கம்பன் வெகு அழகாக, சுவைப் பிறழ்ச்சி சிறிது மின்றி,

> இருந்தவன், 'யாவதுஇவ் இருக்கை? ஈங்குஉறை
> அருந்தவன் யாவன்?நீர் யாரை?' என்றலும்,
> 'விருந்தினர்—இவ்வழி விரகு இலார்'என,
> பெருந்தடங் கண்ணவள் பேசல் மேயினுள்,

என்று ஆரம்பிக்கிருன். வால்மீகியோ ராவ ணனைப் பதினேழு சுலோகங்களால் சீதை யின் சர்வாங்கங்களையும் காமதூரனைப் போல் வர்ணிக்கச் செய்து விரஸமாக்கு கிருன். சம்பாஷணையின் துவக்கத்தினின்று,

* Ares or Mars. † Troy. ‡ Simois. || The mountain shook, the rapid stream stood still.

$ Earth felt the wound and nature from her seat
Sighing through all her works, gave signs of woe
That all was lost.

'படங்குறைந் தொதுங்கின பாம்பும்' என்பதற்குக்கூட இங்கு மில்தனில் Back to the thicket slunk the guilty serpent என்கிற சதிருச வாக்கு அகப்படுகிறது. ஆனல் சர்ப்ப ரூபம் தரித்து வந்த சைத்தனையே அது குறிப்பதால் நூலில் அதை எடுத்துக் காட்டவில்லை.

> .... எரிந்தன நயனம்: திக்கில்
> சென்றன திரள்தோள்: வானம் தீண்டின மகுடம்: திண்கை
> ஒன்றெடுஒன்று அடித்த: மேகத்து உரும்என எயிற்றின் ஒளி
> மென்றன: வெகுளி பொங்க விட்டது மாய வேடம்!

என்ற முத்தாய்ப்புவரை கம்பனில் சம் வாதம் ஆரோகணக் கிரமத்திலேயே ஏறி வருகிறது படிப்போருக்குப் பேரானந்தத் தைத் தருகிறது.

அயோமுகிப் படலம் விராதன் வதை யைப் போலவே வேதாளக் கதை ஜாதி யைச் சேர்ந்ததா யிருக்கிறது என்ருேம். ஆனல், கம்பன் அதற்கு ஓர் பிரயோஜனம் கற்பித்து வைக்கிருன். லக்ஷ்மணன் அயோ முகியினுல் வழி மறிக்கப்பட்டுக் குறித்த காலத்துக்குள் வாராததைப் பார்த்து ராமன் சகோதரனுக்கு ஏதாவது தீங்கு நேர்ந்து விட்டதோ என்று தவியாய்த் தவிக்கிருன். லக்ஷ்மணனிடம் ராமனுக்கு இருக்கும் நிரதி சயமான வாற்சல்லியத்தைக் காட்டச் செய்து கம்பன் இந்த வியர்த்தமான கதையையும் பொருளுள்ளதாகச் செய்துவிடுகிருன்.

இன்னும் எடுத்துக் காட்டக்கூடியது அநேக மிருந்தும் விரிவஞ்சி இதனேடு நிறுத்திக்கொள்வோம்.

4. கிஷ்கிந்தா காண்டம்

கிஷ்கிந்தா காண்டத்தை உபாக்கி யானம் என்கிற ஜாதியிற் சேர்த்தோம். மேனுட்டு இலக்கணுசிரியர்கள் உபாக்கி யானங்களை இரண்டு வகையாய்ப் பிரிக்கி ருர்கள். அவைகளில் ஒன்று, கதாநாயகர் களில் ஒருவர் மற்றெருவருக்குச் சொல்லு கிற உபகதையாகும். மற்றது, கதையின் பாகமாக இருந்தாலும் கதைக்கு இன்றி யமையாத பாகமாக இராமலும், எடுத்து விட்டதினுல் கதையை ஊனமாக்காமலும் இருக்கும் ஓர் அவயவமாகும். பால காண் டத்தில் வருகிற ரிஷியசிருங்கன் கதையும், க்ஷீராப்தி மதனமும், விசுவாமித்திரன் சொல்லுகிற கதைகளும், விஸ்வாமித்திரனைப் பற்றி வருகிற கதைகளும் உபகதை உபாக்கி யானங்களே. அயோத்தியா காண்டத்தில் வரும் சுரோசனன் கதையும், ஆரணிய காண்டத்தில் வரும் விராதன் கதையும், இலங்கணியின் கதையும், உயுத்த காண் டத்தில் வரும் இரணியன் வதைப் படல மும் அதே வகுப்பைச் சேர்ந்த உபாக்கி யானங்களேயாகும். ஆனல், கிஷ்கிந்தா காண் டம் அத்தகைய உபாக்கியான மன்று. அது ஹோமரில் வரும் கப்பல் ஜாபி தாவையும், பால காண்டத்தில் வரும் பூக் கொய் படலம் முதலியவற்றையும் போல,

கதையோடு அவயவ சம்பந்தம் மிக லேசாக உள்ள உபாக்கியானமாகும்.

உபாக்கியானங்கள் அமைப்பதில் ஹோமரைத்தான்—அவனும் இலியாதைப் பாடுகையில்தான்—மிகச் சாமர்த்தியசாலி என்னலாம். அவன் எழுதிய ஒதூஸியம் என்னும் காவியத்தை உண்மையாக மகா காவியமென்று சொல்லக் கூடாது. அதை அனேக உபாக்கியானங்களின் சேர்க்கையென்று சொல்வதே முறையாகும். ஆனுல், இலியாதிலுள்ள அவனுடைய உட் கதைகள் சிறியனவாயும் அவயவங்களுக்கு அளவில் பொருத்தமாயும் இருக்கின்றன. கதையும் உபாக்கியானங்களும் ஒன்ருேடொன்று பின்னிக் கொண்டு, கதைக்கு இடைஞ்சற்படுத்தாமல் பெரும்பாலும் எடுக்க முடியாதனவாய் இருக்கின்றன. ராமாயணத்தில் உபாக்கியான அமைப்பு இலியாதின் அமைப்புக்குத் தாழ்ந்ததன்று; இங்கேயும் பால காண்டத்திலுள்ள உட்கதைகளை நீக்கிவிட்டுப் பார்த்தால் உபாக்கியானங்களும் மூலக் கதையும் ஒன்ருேடொன்று பின்னிக் கொண்டு, இணைந்து கொண்டு இருக்கின்றன. இரணியன் கதையைத்தான் கதைக்குக் கேடின்றி எடுத்துவிடக் கூடும். ஆனுல் திசை திறந்து அண்டம் கீறிச் சிரித்த செங்கட் சீயத்தின் காம்பீரியம் நிறைந்த உபாக்கியானத்தை—அமைப்பில் பாகவதக் கதையையும் விஷ்ணுபுராணக் கதையையும் வென்றுவிட்டு, ராமாயண மாகிற வைரமணி மாலையில் இந்திர நீல மணியைப் போல விளங்கும் இந்த அற்புதமான உட்கதையை—யாரே ராமாயணத்தினின்று எடுக்க ஒருப்படுவர்?

ராமாயணத்திலுள்ள பரதன் கதையும் கதைக்கு உபாக்கியான சம்பந்தமுள்ளதே. ஏனெனில், கதையின் வஸ்துவாகிய ராவண வதத்திற்குப் பரதன், ராமன் காட்டிற்குச் செல்ல அனிஷ்ட காரணனுக இருப்பதால் தவிர வேறு மாதிரி உதவவில்லை. இருப்பினுங்கூட வால்மீகியும் கம்பனும் பரதனுடைய சிருஷ்டியில் எத்துணை அன்பை, எத்துணை பக்தியை, எத்துணைத் தியாகத்தை, எத்துணை ஆத்ம கண்டனத்தைப் புகுத்தி, பரதனை அனன்னிய சதிருசமான, இணையற்ற ஆத்ம வீரனுக்கி விட்டார்கள்! நமது ஆங்கில ஆராய்ச்சியில்* கூறியிருப்பது போல், பரதனை அறியாதவர்கள் ராமாயணத்தின் அழகில் செம்பாதியை இழந்தவர்களாவார்கள்.

* இங்குக் கூறப்பெற்ற 'Kamban' என்ற ஆங்கில நூல் டில்லித் தமிழ்ச் சங்கத்தாரால் வெளியிடப் பெற்றுள்ளது.

கிஷ்கிந்தா காண்டத்தின் பிரதான பாகமான வாலி வதை ராமாயணத்தின் வஸ்துவுக்கு அவயவ சம்பந்தம் வாய்ந்ததன்ருதலால் அதை எடுத்துவிட்டதினுல் கதைக்கு யாதொரு ஊனமும் வராது. ஆனுல், கம்பன் தன் நாடகத் திறமையனைத்தையும் இந்த வாலி வதைப் படலத்தில் கொட்டிவைத்து விட்டான். இந்த வாலி வதை உபாக்கியானத்தை மாத்திரம் எழுதிவைத்துவிட்டு வேறென்றும் எழுதிவையாமல் இறந்திருந்தாற்கூட அறிஞர் அவனை உலகத்து மகா கவிகளின் வர்க்கத்தில் சேர்க்காமல் விடத் துணியார். அத்துணைச் சிறப்பு வாய்ந்தது கம்பனுடைய வாலி வதை உபாக்கியானம்.

ஆனுல், ராமாயணத்தின் ரசனை அழகைப் பற்றி மாத்திரம் சொல்ல எடுத்துக்கொண்ட இவ்வாராய்ச்சி வரையில் இவ் உபாக்கியான காண்டத்தின் அழகைப் பற்றியாவது விஸ்தாரமாகப் பேசுதல் பொருத்தமுடைத் தன்ருகலான் கிஷ்கிந்தா காண்டத்தைப் பற்றி இங்கே சொல்லியதற்கு மேல் ஒன்றும் சொல்லாமல் நிறுத்திக்கொள்ளுகிறேம்....

5. சுந்தர காண்டம்

இனிச் சுந்தர காண்டத்தின் அமைப்பை ஆராயப் புகுவோம். அதற்கு இப்பெயரை வைத்தது வால்மீகியேயாயிருந்தாலும், வேறு யாராயிருந்தாலும், பெயர் வைத்தவன் மிகப் பொருத்தமாகவே வைத்திருக்கிருன். இதுவே காண்டங்களனைத்தினும் பேரழகு வாய்ந்தது. உயுத்த காண்டத்தில் காம்பீரியமும் கதையின் ஓட்டமும் அதிகம். ஆரணிய காண்டத்தில் வெவ்வேறுபட்ட சம்பவங்களின் சமன் வயத்திஞல் வரும் அழகு பிரதானமாக இருக்கிறது. அயோத்தியா காண்டத்தில் நாயகர்களின் சுக வாழ்வுக்கு நேரும் எதிர்பாராத தடையும் சோக பரம்பரையும், அக்காண்டத்தின் வேகமும் அதற்கு ஓர் தனிச் சுவையைத் தருகின்றன. ஆனுல், கவி தன் அருமையையெல்லாம் தன் சக்தியையெல்லாம், தான் சிறையிலிருந்து உலகை விடுவிக்க வந்த எம்பெருமாட்டியான சீதா பிராட்டியின் பெருமைகளை வர்ணிக்கும் இந்தச் சுந்தர காண்டத்திலேயே வரையாமற் செலவு செய்திருக்கிருன். சிறையிருந்தாளின் ஏற்றத்தைக் கூறுகின்றதுதான் ராமாயணம் என்று ஸ்ரீ. பிள்ளைலோகாச்சாரியர் சொல்லியதும், 'ஸீதாயாச் சரிதம் மகத்' என்னும் வால்மீகி ராமாயணப் பாயிரத்தின் சூத்

திரத்திற்கு இலக்கியமாக விளங்கும் வால்மீகி ராமாயண சுந்தர காண்டத்தையும், ‘அதற்கு நான் தோற்றேனில்லை!’ என்று துவஜம் கட்டி நிற்கும் கம்ப ராமாயணத்தின் சுந்தர காண்டத்தையும் கருதியே யாகும்.

சீதையைத் தேடிக் கண்டுபிடிப்பதற்காக அனுப்பப்பட்ட வானர தூதர்களுக்குள்ளே, மகா புத்திமானும், பலவானும், ஸ்வாமி பக்தனும், திறமைசாலியுமான அனுமான் மகேந்திர பர்வதத்தின்மீது நின்று கடலைத் தாவுகிற வர்ணனையோடு சுந்தர காண்டம் ஆரம்பிக்கிறது. கடலைத் தாவும் வர்ணனையில் வால்மீகி கம்பனை எளிதில் வென்றுவிடுகிறான். வால்மீகியில் அதிசயோக்திகள்கூட இயற்கைக்குப் பொருந்த ரஸக்ஞர்கள் சிரக் கம்பம் செய்யும்படி இருக்கின்றன. கம்பனில் இந்த வர்ணனைச் சுவை குறைவாக இருக்கிறது என்றே சொல்லவேண்டும். அவன் சொல்லுகிற உத்பிரேக்ஷைகள் சமுத்திரத்தின் காம்பீரியத்தையும் அனுமான் தாவுகிற சண்டமாருத வேகத்தையும். மறைத்து விடுகின்றன. ஆனால், அதற்கு மாறாக, மைந்நாக பர்வதத்தினுக்கும் அனுமானுக்கும் நடக்கிற சிறு சம்பாஷணையில்கூட கம்பனுடைய திறன் அதிகமாய் விளங்குகிறது. ‘நீ நான் செய்யும் விருந்தினை ஏற்றுப் போக வேண்டும்’ என்று மைந்நாகம் செய்கிற உபசாரத்துக்கு,

> பெருந்தேன் பிழிசாலும்நின் அன்பு பிணித்த போதே
> இருந்தேன்! நுகர்ந்தேன்! இதன்மேல்இனி ஈவது
> (என்னோ? *

என்று அனுமான் சொல்லுகிற பதில் எவ்வளவு ரஸமாக இருக்கிறது! இலங்கிணிக்கும் அனுமானுக்கும் நடக்கும் போரும் சம்வாதமும் இன்னும் உயர்ந்த ஸ்தாயியை எட்டுகிறது. சீதா ராவண சம்வாதமும், ஹனுமத் ஸீதா சம்வாதமும், இன்னும் பிற சம்பாஷணைகளும் நிகழும்போது கம்பன் தன்னிலும் உயர்ந்து கொண்டுவிடுகிறான்! இவற்றைப் பற்றி மறுபடியும் பேசுவோம்.

ஊர்தேடு படலத்தில் கம்பனுடைய செழுமையுள்ள பாவனா சக்தி கரை புரண்டோடி இலங்கையை சுவர்க்கத்திற்கும் விழுமியதோர் பூமியாக்கி விடுகிறது. பின்னே வர இருக்கும் சீதையின் சோகத்திற்கும், இலங்கைத் தீவின் ஆவேசத்திற்கும் இது மணியின் ஜ்வலிப்பைத் தூக்கிக் காட்டும் வர்ணத் தகட்டைப் போல அடி நிலமாக விளங்குகிறது. ஆனால் இதிலும் வர்ணனை சற்று விளம்பமாக நடந்து வருகையில் படிப்போருக்கு,

> கரியனாய், வெளியனாகி, செய்யனாய்க்காட்டும் காண்டற்கு
> அரியனாய், எளியனாய்

நிற்கும் ராமபிரானையும், செவிக்குத் தேன் என நிற்கும் ராமனுடைய புகழையும், சிறையின் எய்திய செல்வியின் முகத்தையும் கம்பன் நினைவுறுத்திக் கொண்டே செல்லுகின்றான்.

ஒரு உத்கிருஷ்டமான கவிக்குப் பிறகு இன்னொரு கவி அதே கதையைப் பாடினானால், முதல் கவியின் போக்கும் வாக்கும் பின்னவன் காலைச் சுற்றி நிற்கும் ஈயத் தளை போலாகி விடுகின்றன. ஆனால், கம்பன் பூமண்டலத்தை ஓர் தலையால் தாங்கும் ஆயிரந் தலை ஆதிசேஷன் போல வால்மீகியின் கனத்தை அலக்ஷியமாய்த் தாங்கி நடப்பதோடு, அவனது கதையையும் தனக்குக் குற்றவேல் செய்து தன் உத்பிரேக்ஷைகளை அலங்கரிக்கும் மணிப் பூண்களாகச் செய்துவிடுகிறான். தாடகை வதை காலத்திலும், மந்தரை சூழ்ச்சியால் கைகேயியின் மனம் திரிந்த காலத்திலும் வால்மீகி புனைந்து வைத்திருக்கிற கதை முடிவைக் கம்பன் எவ்வாறு கையாளுகிறானென்று அயோத்தியா காண்டப் பகுதியில் நாம் காட்டியுள்ளோம். சுந்தர காண்டத்தில் அந்த வழியை அவன் இன்னும் அழகாகப் பின்பற்றிச் செல்லுகிறான் என்பதை நேயர்களுக்கு இப்பொழுது எடுத்துக் காட்டுவோம்.

சீதையைத் தேடுவதற்காக இலங்கையில் ஒவ்வொரு வீடாக அனுமன் நுழைந்து சென்றான் என்று சொல்லி வரும்போது, 6-வது சருக்கத்தில் வால்மீகி, ‘பிரஹஸ்தன் வீட்டையும், மகாபார்சுவன் வீட்டையும், கும்பகர்ணன் அரண்மனையையும், இந்திரசித்தன் அரண்மனையையும், விபீஷணன் மந்திரத்தையும்’ என்று வேறொரு வர்ணனையு மில்லாமல் ஜாபிதாவாக அடுக்கிக் கொண்டு போகிறான். கம்பன், சுந்தர காண்டத்தில் பிற்பகுதியிலும் யுத்த காண்டத்திலும் வால்மீகி புனைந்திருக்கிற கதையை இங்கேயே சூசிப்பித்து தன் வர்

---

* ‘தேன் பொங்கிப் பொழிவது போன்ற உன் அன்பு என்னைத் தழுவிய போதே உன்மீது நான் இளைப்பாறினவனாகிவிட்டேனன்றோ? நீ கொடுக்கும் அமுதை உண்டவனாகிவிட்டேனன்றோ? இதற்கு மேல் நீ செய்யத் தக்கது என்ன உளது?’

ணைக்கு வேறுபடுத்தி வைத்தலால் வரும் அழகைத் தந்து வைத்திருக்கிறான். உதாரணமாக, கும்பகர்ணனை அனுமன் கண்டான் என்னும்போது, அவன் ஆதிசேஷனைப் போலவும், பரந்த கடலைப் போலவும், உலகத்திலுள்ள இருளெல்லாம் ஒரே யிடத்தில் செறிந்து நின்றது போலவும், தீவினையெல்லாம் உடல்பெற்றுத் தோன்றியது போலவும் இருந்தானென்றும் பிறவுமாக வர்ணிக்கிறான். விபீஷணனது அரண்மனையில் பிரவேசித்ததும், அவன் தோற்றத்தினின்று அவனது தன்மையை அனுமன் ஊகித்துக் கிரகித்துக்கொண்டு, அரக்கர் நாட்டில் பகிரங்கமாக வசித்தல் அசாத்தியமென்பது கண்டு, அவர்களைப் போன்றதோர் உடலை எடுத்துக்கொண்டு வசிக்கும் அறத்தைப் போலிருக்கிறான் என்று அவன் நினைத்தான் என்று கவி கூறுகிறான். இந்திரசித்தனை அனுமன் கண்ணுற்றான் என்பதற்கு முன்னேயே,

இந்திரன் சிறையிருந்த வாயிலின் கடை எதிர்ந்தான்,

என்று ஓர் கட்டியம் கூறிவிட்டு, அவனைக் கண்ணுற்றபோது, ஆச்சரியப்பட்டு,

வளையும் வாள்எ யிற்று அரக்கனோ, கணிச்சியான் மகனோ,
அளையில் வாளரி அனையவன் யாவனோ, அறியேன்—
இளைய வீரனும் ஏந்தலும் இருவரும் பலநாள்
உளைய உள்ளபோர் இவனொடும் உளதுஎன உணர்ந்தான் *

என்றும் நினைப்பதாகக் கூறுகிறான்.

'சிவனை, நான்முகத்து ஒருவனை, திருநெடு மாலாம்
அவனை அல்லவர் நிகர்ப்பவர் என்பதும் அறிவோ?'..

இந்த மேற்கோள்களினின்று, பிறருடைய கதைகளை சுவீகரித்து அவற்றை முதனூலாசிரியன் போலவே சுதந்திரமாகவும் கம்பீரமாகவும் நடத்திக்கொண்டு போவதில் கம்பன் ஹோமரின் கதைகளை சுவீகரித்துக் கையாண்ட எஸ்கூலனுக்கும் ஸோபோகிளனுக்கும் ஓர் படி உயர்ந்தவன் எனவே அறிஞர் கண்டுகொள்வர்.

ஊர்தேடு படலம் போன்ற கட்டங்களில் கவிக்கு நீண்ட உபதேச வர்ணனை மாலையை யாக்கவேண்டிய தவசியமாக இருக்கிறது. ஆனால், இவற்றை வெறும் வர்ணனைகள் மாத்திரம் நிரப்பின் படிப்போருக்குச் சலித்துப்போம். இவற்றோடு பொருந்திய உணர்ச்சிகள் விரவி வருகின்றதே ரசனைக்கு அழகு தரும். இவ்விரகசியம் மகாகவிகளுக்குத்தான் தெரியும். மற்றக் கவிகள் யாதொரு உணர்ச்சியும் மெய்ப்பாடும் இல்லாமல் நூற்றுக்கணக்கான விருத்தங்களைப் போட்டு வர்ணனைகளை நிரப்பிவிடுகிறார்கள். அல்லது உத்பிரேக்ஷைகளை மழை பொழிவது போலப் பொழிந்து வெள்ளம் வெள்ளமாய்ப் போலி உணர்ச்சிகளைத் தோற்றுவித்து, படிப்போரின் பாவனையை விலக்கிவிட்டுத் திக்குமுக்காடச் செய்துவிடுகிறார்கள். கம்பன் இப்படலத்தில் அனுமன் மனத்தில் தோற்றுவிக்கிற உணர்ச்சிகள் பொருத்தமாயும் சுபாவிதமாயும் இருக்கின்றன. அவற்றிலும் ஆரோகண அவரோகணத்தை அழகுபட அமைத்து மேளச் செவ்வி † குறையாமலிருக்கும்படி செய்துவிட்டிருக்கிறான்.

சில உதாரணங்கள் காட்டுவோம். இலங்கையைக் காக்கும் படையை அனுமன் கண்டதும்,

'தெவ்வர் இவர்! சேமம் இது! சேவகனும் யாமும்
வெவ் அமர் தொடங்கிடின் எனாய் விளையும்? ‡

என்றும்,

'கருங்கடல் கடப்பு அரிது அன்று, நகர் காவல்
பெருங்கடல் கடப்பது அரிது! எண்ணம் இறை பேரின்
அருங்கடன் முடிப்பு அரிது; ஆர் அமர் கிடைக்கின்
நெருங்குஅமர் கிடக்கும் நெடுநாள்!' $

என்றும் தனக்குள் சொல்லிக்கொள்ளுகிறான்.

பிறகு மண்டோதரியைச் சீதையென ஓர் நிமிஷ நேரம் ஐயுற்று நோக்கிய பின்னர்,

'கான் உயர்த்ததார் இராமன்மேல் நோக்கிய
காதல் காரிகையர்க்கு
மீன் உயர்த்தவன் மருங்குதான்
மீளுமோ? நினைந்தது மிகை'

---

* 'குகையில் சிங்கம் தூங்குவது போன்று தூங்குகிற இவன் ராவணனேதானோ, சூலபாணியின் மகனான முருகக் கடவுளோ, யாவனோ, அறிய முடியவில்லை: ஆனால் லக்ஷ்மணனும் ராமனும் பல நாள் தவிக்கும்படி போர் கொடுக்கப் போகிறான் என்பது நிச்சயம்!' என்று அனுமன் சொல்லிக்கொண்டான்.

..'சிவனையும் விஷ்ணுவையும் விட்டால் இவனுக்கு வேறொருவர் நிகர் ஆவர் என்று சொல்லுவதும் அறிவாகுமா?'

† வாத்தியத் தொகுதியில் அனுபவிக்கப்பெறும் பல சப்தங்களால் ஸ்வரங்களும் சம்மேளிப்பதால் வரும் அழகு.

‡ 'பகைவர் இத்துணைப் பலிஷ்டர்; அவர்களது காவற்படையோ இத்தகையது; ராமனும் நமது வானர சைனியமும் போர் துவக்கினால் முடிவு என்ன ஆகுமோ?'

$ 'இலங்கையின் காவற்படையைத் தாண்டிச் செல்வது கடலைக் கடப்பதைவிடக் கடினமான காரியமாயிருக்கிறது; கொஞ்சம் கவளம் தப்பினால் நான் வந்த காரியத்தைச் சாதித்தல் அசாத்தியமாய்விடும். போர் செய்ய நேர்ந்தால் யார் வெல்வர் என்று சொல்ல முடியாதபடி நெருங்கிய போர் நெடுநாள் செய்ய வேண்டி வரும்!'

என்று அனுமன் இவ்வாறு ஐயுற்றதே மகா பாபம் எனச் சொல்லிக்கொள்ளுவதும் எத்துணைச் சிறப்பு வாய்ந்திருக்கின்றது என்று ரஸிகருக்கு எடுத்துக் காட்டவும் வேண்டுமா?

ராவணனுடைய சொந்த அரண்மனைக்குள் பிரவேசிக்கையில் வானம் மின்னலின்றி இடித்ததையும் பூரண மங்கல கலசங்கள் வெடித்ததையும் கண்ட ஆஞ்சனேயன்,

நெக்கு நின்றனன், 'நிங்கும் அந்தோ, இந்த
நெடு நகர்த்திரு' என்னு.

ராவணனைக் கண்ணுற்றதும் அனுமனுக்கு ஆவேசமுண்டாகி அவனைத் தாளாற்றலால் இடித்துத் தலை பத்தையும் தகர்க்க எண்ணுகின்றான். ஆனால், உடனே மறுபடியும் யோசித்துப் பார்த்து அது பிழையாகும் என்று தீர்மானித்து, தன்னைத் தானே அடக்கிக் கொள்ளுகிறான். இதைச் சொல்லும் செய்யுட்கள் கம்பனுடைய பெயர்போன செய்யுட்களின் வகுப்பைச் சேர்ந்தவையாகும்.

ஆலம்பார்த்து உண்டவன் போல் ஆற்றல்
அமைந்துளர் எனினும்
சீலம்பார்க் குரியோர்கள் என்னுது செய்பவோ?
மூலம்பார்க் குறின், உலகை முற்றுவிக்கும்
முறை தெரினும்
காலம் பார்த்து, இறைவேலை சடவாத
கடல் ஒத்தான்.
'இற்றைப் போர்ப் பெருஞ் சிற்றம்
என்னோடு முடிந்திடுக:
கற்றைப் பூங்குழலாளைச்
சிறைவைத்த கண்டகனை
முற்றப் போர் முடித்தது ஒரு
குரங்கு என்றால் முனை வீரன்
கொற்றப் போர்ச்சிலைத் தொழிற்குக்
குறைவு உண்டாம்!' எனக்குறைந்தான்.

ஊர் முழுதும் தேடிய பிறகும் சீதையைக் காணாததால் அனுமனுக்கு உண்டாகும் விஷாதத்தின் வர்ணனை இப் படலத்திற்கு அழகிய முத்தாய்ப்பாக விளங்குகிறது.

சீதையின் நிலைமையையும் எண்ணங்களையும் வர்ணிக்கிற பாகத்தில் கம்பன் தன் கலைத்திறன் அனைத்தையும் கொட்டி விட்டான். சீதையின் தவத்தைக் கண்ணுற்றதும் அனுமன் அடையும் ஆனந்தத்தையும், சொல்லும் வார்த்தைகளையும் வர்ணிக்கிற செய்யுட்களை உயரிய கவிதையின் எல்லை என்றே கூறிவிடலாகும். அந்த ஆனந்தத்தில் அனுமன் 'வீடினதன்று அறன்' என்றதும், 'கள்ளவாள் அரக்கன் கமலக் கண்ணனுர் உள் உயிரினை ஒளித்து வைத்தவா!' என்றும், 'ஐயம் இல்! அரவின் நீங்கிய தேவனே அவன்! இவள் கமலச் செல்வியே!' என்றும்,

'மாசுண்ட மணியனுள், வயங்கு வெங்கதிர்த்
தேசுண்ட திங்களும் என்னத் தேய்ந்துளாள்,
காசுண்ட கூந்தலாள் கற்பும் காவலும்
ஏசுண்ட தில்லையால்! அறத்துக்கு ஈறுஉண்டோ?' *

என்றும்,

'புனைகழல் இராகவன் புயத்தை யோ,புகழ்
வனிதையார் திலகத்தின் மனத்தின் மாண்பையோ,
வனைகழல் அரசரின் வண்மை வீக்கிடும்
சனகர்தம் குலத்தையோ, யாதைச் சாற்றுகேன்?' **

என்றும்,

'தேவரும் பிழைத்திலர்! தெய்வ வேதியர்
யாவரும் பிழைத்திலர்! அறமும் ஈறு இன்றால்!
யாவது இங்கு இனிச் செயல் அரியது?' ‡

என்றும் கூறிக்கொண்டு ஆடுகிறான், பாடுகிறான், அங்கும் இங்குமாக ஆனந்த வெறி கொண்டு ஓடுகிறான்! இன்னும் அவளது தவத்தைப் பார்த்துவிட்டு அவள் அங்கிருந்த ஆற்றைக்

'காண நோற்றிலன்.. அவன் கமலக் கண்களால்!' $

என்கிறான். ''தருமமே காத்ததோ? ராவணனுடைய வினைதான் அவளைக் காத்துக் கொடுத்ததோ? அல்லது சீதையது கற்புத்தான் வேறோர் துணைப் பலமின்றி அவளைக் காத்து வைத்ததோ? அருமை! அருமை! யாரால் இவ்வளவு ஆச்சரியமான தற்காப்பு சாத்தியம்? என் நண்பருக்கு இச் செய்தியை எத்துணை முறை சொன்னால்தான் என் ஆவல் அடங்கும்? வேறு ஒரு பிராணிக்கு இத்துணை மனோதிடம் இருக்குமோ? இவ்வளவு தவத்தை இவள் ஆற்றும்போது உலகின் கஷ்டங்க

* 'அழுக்குண்ட ரத்தினத்தையும் தேய்ந்த சந்திரனையும் போல மலிவான நிலையிலிருக்கிற சீதையின் கற்பும் காவலும் சிறிதும் கெடாமலிருக்கின்றன. அறம் அழியுமோ?'

** 'இதற்காக, ராகவனுடைய திருமேனி யழகைப் புகழட்டுமா? அல்லது பிராட்டியின் திடச் சித்தத்தையும் சீலத்தையும் புகழவோ? அல்லது அரசரின் வள்ளன்மைக்குப் பெருமை தரும் சனகரின் குலத்தையேதான் புகழவோ? யாதைப் புகழ?'

‡ 'தேவர் மீது இனிப் பழியில்லை—வேதியர் மீதும் பழியிலது—அறத்திறனுக்கு எல்லை இல்லையென்று ஏற்பட்டுவிட்டது: இனி உலகில் அசாத்தியம் என்று எது இருக்கிறது?'

$ 'ராமன் கொடுத்து வைக்கவில்லை.'

ளெல்லாம் இன்றேடு முடிந்துவிட்டன! அறத் தினைத் தீவினை வெல்லுமோ? ஒரு நாளும் வெல்லாது!' என்று அவன் வாயினின்றும் பெருகுவதாகக் கூறும் வார்த்தைகள் முத் தாய்ப்புக்கு மேல் முத்தாய்ப்பாக ஏறிக் கொண்டு செல்லுகின்றன என்று படிப்போ ருக்கு எடுத்துக் காட்டுவோம்.

சீதையோடு அனுமன் பேசுமுன் வால் மீகி சீதையையும் ராவணனையும் சந்திக்கச் செய்திருக்கும் அமைப்பைக் கம்பன் ஸ்வீ கரித்துக்கொண்டுவிட்டான். 'சீதையை ராவ ணன் தொடுவதானல் அவனையும் தாக்கி இலங்கையையும் அழித்துவிடுவேன்!' என்று அனுமன் சங்கற்பித்துக் கொள்ளுவதாகக் கூறுவதன் ரசனை குறிப்பிடத்தக்கது.

உருக்காட்டுப் படலத்தின் அமைப்பின் செவ்வியை எக்கவியும் எக்காலத்திலும் வென்றதில்லையென்றும், வெல்ல முடியாது என்றும் கூறிவிடலாகும். சூளாமணி கொடுக்கு முன் சீதை ராமனுக்கு அனுப்பும் செய்தி யும் அனுமனது பதிலும் மிகப் பொருத்த மாக அமைந்துள்ளன. இதினின்று பிணி வீட்டு படலம் ஈறுக உள்ள கதை சங்கிலி கோத்தது போலச் சம்பவத்துடன் சம்பவம் அழகுபட ஒட்டிக்கொண்டிருக்கும்படி செல்லு கிறது.

இலங்கையை அனுமன் எரிக்கும் சம் பவத்தில் கடல் தாவு படலத்தில் போல வால் மீகியின் வர்ணனை கம்பனதைவிட மிகவும் அழகாக இருக்கிறது. கம்பனது உத்பிரேக்ஷை கள் அக் காட்சியின் காம்பீரியத்தைத் திரை போட்டது போல மறைத்துவிடுகின்றன. ஆனல், இதிலும் படிப்போருக்கு ராவணனை நினைவுறுத்தி,

> 'என்று கொல் குரங்கு அன்னது இவ்வலி உளது? இலங்கை
> நின்று வெந்துமா நீறுஎழு கின்றது! நெருப்புத்
> தின்று தேக்கிடு கின்றது! தேவர்கள் சிரிப்பார்:
> நன்று, நன்று போர்வலி!' என இராவணன் நக்கான்,

என்று கூறிக் கம்பன் தன் அமைப்புத் திற மையை விளக்கி விடுகின்றன்.

சுந்தர காண்டத்தில் ஊர்தேடு படலத் தில் எதிர்பார்க்க வைத்தபடி, கம்பன் தனது ஸ்தாயியைப் படிப்படியாக ஏற்றிக்கொண்டு சென்று கடைசிப் படலமாகிற திருவடி தொழுத படலத்தில் முத்தாய்ப்பை வைத்து விட்டான். இதில்கூட ஓர் ஜிகினு வேலை செய்திருக்கிறுன். இலங்கையில் நிகழ்ந்த வற்றை வினவிய வானர வீரருக்குச் சீதை யின் கற்பை வர்ணித்தும் அவள் கொடுத்த சூடாமணியைக் காட்டியும்விட்டு அனுமன்,

> .. .. ;போரில்
> நீண்டவாள் அரக்கரோடு நிகழ்ந்ததும் நெருப்புச்சிந்தி
> மீண்டதும் விளம்பான், தான்தன் வென்றியை
> உரைப்ப வெள்கி! $

அதற்கு வானரர், பாரஸீகக் கதையில் வரும் ஒட்டகத்தைக் கண்டிராமலே அதைக் கண் டவன் போல வர்ணித்த அராபிய சாது வைப் போலவும், கோனன்தாயில் சிருஷ்டித் துள்ள ஷெர்லக் ஹோம்ஸைப் போலவும், தாங்கள் சகலத்தையும் ஊகித் தறிந்து கொள்வதாகக் கூறுகிறுர்கள்.

> 'பொருதமை புண்ணே சொல்ல, வென்றமை போந்த தன்மை
> உரைசெய, ஊர் தீ யிட்டது ஓங்கு அரும் புகையே ஓத,
> கருதலர் பெருமை, தேவி மீண்டிலாச் செயலே காட்டத்
> தெரிதர உணர்ந்தோம்!'‡ .. ..

என்றுர்களாம். ஆனல், இந்தச் சமத்கார வர்ணனை யன்று கம்பனுக்குச் சிறப்பான பெருமையைத் தருவது. மற்று,

> 'விற்பெருந் தடந்தோள் வீர!
> விங்குநீர் இலங்கை வெற்பின்
> நற்பெருந் தவத்தள் ஆய
> நங்கையைக் கண்டேன் அல்லேன்
> இற்பிறப்பு என்பது ஒன்றும்,
> இரும்பொறை என்பது ஒன்றும்,
> கற்புஎனும் பெயரது ஒன்றும்
> களிநடம் புரியக் கண்டேன்!'

என்பது போன்ற ரஸவாதிகளுக்கும் அகப் படாத ஆயிரத்தெட்டு மாற்றுத் தங்கத்துக் கிணையான கம்பீரமான செய்யுட்களும், அவற்றைப் பொருந்த அமைத்துவைக்கும் ரசனைத் திறனுமே கம்பனைப் பிராகிருத மான கவிகளினின்றும் அவன் சாதியைச் சேர்ந்த கலைவலாளரான வால்மீகி, வியாசன், ஹோமர், மில்தன் முதலியோரினின்றும் வேறுபடுத்தித் தனிச் சிறப்புத் தருகின்றன.

$ தான் அரக்கரோடு போர் செய்து, இலங்கைக்கு நெருப்பு வைத்துத் திரும்பியதை அனுமன் சொல்லவில்லை: தான் காட்டிய பராக்கிரமங்களைப் பற்றித்தானே உரைக்க அவன் நாணினுன்.

‡ 'உன் உடம்பில் கோரமான காயங்களிருப்பதி னின்று போர் செய்தாய் என்றும், நீ இங்கு திரும்பி வந்ததினின்று நீ பகைவரை வென்றுய் என்றும், அதோ வானளாவிச் செல்லுகிறதே புகை—அதினின்று நீ இலங்கைக்குத் தீ வைத்தாய் என்றும், சீதா தேவியை நீ உடன் அழைத்து வராததினின்று பகைவர் இத்துணைப் பலிஷ்டர் என்றும் உணர்ந்து கொண்டோம்.'

கம்பன் வழக்கமாய்க் கதைப் பாங்கை மறப்பதில்லை. ஆனால். அனன்னிய சாத்திய மான பராக்கிரமம் காட்டித் தன் பெருந் தேவி சிறையிருந்த உளவைக் கண்டுபிடித்துத் தந்த அனுமனுக்கு இவ்விடத்தில் ராமன் ஓர் நன்றிக்கூற்றுக்கூடக் கூறுவதாகச் சொல்ல வில்லை. இருப்பினும் வால்மீகி கூறுவது போல அனுமன்மீது தானும் அங்கதன் மீது லக்ஷ்மணனும் 'ஏறிச் செல்வோம்' என்று ராமனே சொன்னான் என்னமல், கம் பன், அனுமன் இரண்டு கைகளையும் கூப்பிக் கொண்டு, 'என்னைக் குரங்கென இகழாமல் என்மீது ஏறி வரத் திருவுளம் பற்றவேண்டு' மென்று சொல்லிய பிறகே ராமன் சிறிய திருவடியின் மீது சரணம் வைத்தான் என்று கதையைப் புனைந்திருப்பதினின்று மிகச் சிறிய விஷயங்களிலும்கூட அவன் தன் அரிய கருத்தைச் செலுத்திக் காவியத்தைத் திறம் பட அமைத்திருக்கிறான் என்று படிப்போர் கண்டுகொள்வர்.

6. யுத்த காண்டம்

ரசனைச் சுவையின் ஆராய்ச்சியில் இங்குக் கம்பனுடைய யுத்த காண்டத்தை ஆராய எடுத்துக் கொண்டோம். இவ் யுத்த காண்டம் ஒன்று மாத்திரம் அளவில் மேனாட் டுப் பெரிய மகாகாவியங்களுக்கு ஏறத்தாழச் சரியாக இருக்கிறது. சாதாரணப் பதிப்புக் களில் யுத்த காண்டத்தில் 4,358 விருத்தங் கள் காணப்படுகின்றன. இலியாதில் 15,693 அறுசீர் வரிகளே இருக்கின்றன என்று கணக் கிடுகிறார்களாதலால் கம்பனது யுத்த காண் டம் இலியாதைவிடப் பெரிதாகவே இருக் கிறது. அவ் இலியாதில் உள்ள சகல சுவை களையும் இக் காண்டத்தில் நாம் காணலா கும். யுத்த காண்டம் என்று பெயர் வைக் கப்பட்டிருந்தாலும் இது யுத்தங்களை மாத் திரம் வர்ணிக்கவில்லை. சோகம், பயம், வியப்பு, பக்தி, காதல் முதலிய இதர ரஸங் களும் வீர ரஸத்தோடு சம்மேளித்து இக் காண்டத்தை அழகுபடுத்துகின்றன.

இக் காண்டமே கம்ப ராமாயணத்தின் இறுதிக் காண்டம். இதில்தான் கதையின் வஸ்து சம்பூர்ணமாகிறது. சாதாரணமாக நமது பண்டிதர் யுத்த காண்டத்தை மற்ற ஐந்து காண்டங்களையும் படிக்கும் கவனத்துடன் படிக்கிறதில்லை. அவர்கள் இதில் மற்றக் காண் டங்களிலுள்ள சுகம் இல்லையென்ற ஓர் எண் ணத்தை உண்டாக்கிப் படிப்போருக்கு இதன் மீது ஓர் அசிரத்தை ஏற்படும்படி செய்துவிட் டார்கள். ஆனால், கம்ப ராமாயணத்தின் பெருமையெல்லாம் இவ் யுத்த காண்டத்தில் தான் காணப்படும். இதுதான் கம்ப ராமா யணமாகிற விஸ்தாரமான துர்க்கத்தில் அர சன் உகந்து வாழும் அரண்மனையாகும். ஆகையால், கம்பன் தனது ரசனைத் திறன் அனைத்தையும் இங்குக் காட்டியிருப்பான் என்று எதிர்பார்ப்பது முறையேயாகும். கம்பனும் அவ்வாறே, உண்மையில், தன் சக்தியனைத் தையும் இக் காண்டத்தில் காட்டியுள்ளான்.

யுத்த காண்டம் கடலின் வர்ணனை யோடு தொடங்குகிறது. ஆனால், நாம் ஏற் கெனவே குறித்திருக்கிறதைக் கொண்டு படிப்போர் எதிர்பார்க்கக்கூடியபடி இங்கும் வருணனை வழிவேண்டு படலத்திலும் கடல் வர்ணனை மூன்றாந் தரத்ததாகத்தானிருக் கிறது. பைரனுடைய கம்பீரமான சமுத்ர வர்ணனையை நினைவுறுத்தக்கூடிய, ரஸிகர் காதில் அடிக்கொரு முறை அவர்கள் விரும்பாம லிருக்கையில்கூடத் துவனித்துக் கொண்டிருக்கக்கூடிய, செய்யுள் ஒன்றேனும் இப்படலங்களில் இல்லை. கடல் காண் படலத் திலுள்ள பன்னிரண்டு செய்யுட்களும் கேவ லம் வார்த்தைகளால், வியர்த்த வார்த் தைகளால், நிரம்பி யிருக்கின்றன. அவைகளி லுள்ள உத்பிரேக்ஷைகள் சமுத்திரத்தின் கோஷத்தையோ, பூரிப்பையோ, அலை வீச் சுத்தையோ, பிரதிபிம்பிக்கும் ஆற்றலற் றனவா யிருக்கின்றன. வர்ணனையின் முடிவில் கவி,

.. .. இலங்கை
பின்னதாய காரியமும் நிகழ்ந்த பொருளும் பேசுவாம்

என்னும் போது நல்ல வேளையாய் இவ்வள வோடு நிறுத்தினானே என்ற எண்ணமே ணமே உண்டாகிறது.

மந்திரப் படலத்தில், அரக்கர் ராவண னது சன்னிதியில் ராமனோடு எவ்வாறு போர் புரியலாம் என்று விவரிக்கும் பாகத்தில், மில் தனது ஸ்வர்க்க நஷ்ட காவியத்தின் 2—ம் புத்தகத்தில் காணும் மந்திர* வர்ணனையின் ஒழுங்கும் திருப்தி உணர்ச்சியும் இல்லை. ஆனால், அரக்கரின் மந்திரத்தில்தான் உபாக்கி யான ரத்தினமாகிய இரணியன் வதைச் சரித்திரம் விபீஷணனால் ராவணனுக்குச் சொல்லப்படுகிறது.

ஸ்ரீ பாகவதத்திலுள்ள பிரகலாத சரித் திரத்தையும், அதை அனுசரித்துப் பொம் மர போதன்னா ஆந்திர பாகவதத்தில் எழு திய பிரகலாத சரித்திரத்தையும் கம்பனது இரணியன் வதைப் படலம் வெகு சுலபமாக வென்றுவிட்டது.

---

* அரசன் மந்திரிகளுடன் செய்யும் ஆலோசனை.

ராவணன் தன் வார்த்தையைத் திரஸ்கரிக்கவே, விபீஷணன் அவனை விட்டுவிட்டு ராமனிடம் சரணுகதி செய்து கொள்ளப் போய்விடுகிருன். ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயத்தில் ராமாயணத்திற்குச் சம்பிரதாய கிரந்த ஸ்தானத்தைக் கொடுப்பது இந்த விபீஷண சரணுகதியேயாகும் என்று சொல்லலாம். விபீஷணனைச் சேர்த்துக் கொள்ளலாமா கொள்ளக்கூடாதா என்கிற விஷயத்தை வானரர் சபையில் யோசித்து, அம் மந்திரத்தின் இறுதியில் ராமபிரான்,

'ஆநயை நம், ஹரிச்ரேஷ்டஹ,
தத்த மஸ்யாப்ஹயம் மயா!
விப்ஹீஷஞேவா, ஸுக்ரீவ,
யதி வா ராவண: ஸ்வயம்!' *

என்று சொல்லுகிற, யுக யுகாந்தங்களையும் தாண்டி வந்து ராம பக்தர் அனைவருக்கும் முக்தி நம்பிக்கையைத் தருகிற கம்பீரமான வாக்கானது வால்மீகி பகவான் நம்மனேருக்காக வரையாது கொட்டிவைத்திருக்கிற ரத்தினக் களஞ்சியத்தினுள் ஜாஜ்வல்லியமானதோர் மணியரசாகும். இச் சபையின் மந்திரத்தை வர்ணிக்கையில் வால்மீகி தனது கவிநய மனைத்தையும் காட்டியிருக்கிருன். அண்ணனைக் காட்டிக் கொடுக்கிறவனை நம்பக்கூடாது என்று சுக்ரீவன் சொல்லுவதும், 'தான் வாலியைக் காட்டிக் கொடுத்தது மாத்திரமின்றிக் கொல்வித்ததையும் சுக்ரீவன் மறந்துவிட்டான் பார்த்தாயா?' என்று ராமன் லக்ஷ்மணனைப் பார்த்து முறுவலிப்பதும்,

'ராஜ்ய காங்க்ஷீ ச ராக்ஷஸ:
பண்டிதா ஹி ப்ஹவிஷ்யந்தி
தஸ்மாத் கிராஹ்யோ விப்ஹீஷண:' $

என்று சொல்லி ராகவன் சுக்ரீவனைக் குத்திக் காட்டுவதும் இந்த மந்திர சபையின் வர்ணனைக்குச் சாத்தியதைத் தன்மையும் உயிரும் கொடுக்கின்றன. ஆனுல், கம்பன் இந்தக் கட்டத்தில்கூட வால்மீகியை வெல்கிருன். எவ்வாறு என்று ஓரிரண்டு விஷயங்களில் குறித்துக் காட்டுவோம்.

---

* 'வானர சிரேஷ்டனுன சுக்ரீவ! அவன் விபீஷணனுக விருந்தாலும் சரி, சாக்ஷாத் ராவணனுயிருந்தாலும் சரி! அவனுக்கு அபயம் கொடுத்துவிட்டேன்: இனி அவனை என்னிடம் அழைத்து வந்துவிடு!'

$ 'இந்த ராக்ஷஸன் இலங்கை ராஜ்ஜியத்தை விரும்புகிருன். இவ்வாறு அரசை விரும்புவோர் அவ்விருப்பத்தைச் சாதித்துக் கொள்கிற விஷயத்தில் தங்கள் சாமர்த்திய மனைத்தையும் பிரயோகிப்பர். ஆதலால் விபீஷணன் கொள்ளத்தக்கவனே.'

விபீஷணனுடைய குணுகுணங்களை அனுமன் எடுத்துக் கூறுவதில், தூதனைக் கொல்லக் கூடாது என்று அவன் ராவணனுக்குத் தர்மம் எடுத்துக் கூறி அனுமனுக்குப் பரிந்து பேசியதாகச் சொல்லுவது இயற்கையாகும்: வால்மீகியில் இது கவனிக்கப் படவில்லை. கம்பனே அனுமனுடைய வாக்கில்,

'.. .. .. தூதரை எறிதல் என்பது
புல்லிது; பழியொடும் புணரும்; போர்த்தொழில்
வெல்லலம் பின்னை!' என்று இடை விலக்கினுன்,

எனவும்,

'தூதரைக் கோறலும் தூய்து அன்ரும்,'என
ஏதுவின் சிறந்தன எடுத்துக் காட்டினுன்,

எனவும், பேச்சுக்களை அமைத்து, சம்பாவிதத்தால் வரும் திருப்தியை நமக்கு அளிக்கிருன்.

வேருெரு பாவிகம் கம்பனுடைய விபீஷண சரணுகதியை வால்மீகியினதைவிட உயர்த்துகிறது. அஃதாவது, விபீஷணனுக்கு அபயப் பிரதானம் கொடுத்தாயிற்ருே இல்லையோ உடனே வால்மீகியில் ராமன்,

'ஆக்ஹ்யாஹி மம தத்த்வேந
ராக்ஷஸாநாம் பலாபலம்,' *

என்று சொல்லுவதால், விபீஷணன் மீதுள்ள நிர்ஹேதுகமான பிரீதியினுலன்று (முக்கியமாக) அவனுக்கு ராமன் அபயப் பிரதானம் செய்தது, மற்று, இலங்கை அரக்கரின் பலாபலத்தை ஒற்றித் தெரிந்து கொள்ளவேயாகும் என்று படிப்போருக்குப் படுகிறது. ஆனுல், கம்பன் ராமனது குணத்தை ஒரு சிறு புனைவினுல் மிகவும் உயர்த்திவிடுகிருன் என்று கீழே காட்டுகிருேம்.

ந ஸர்வே ப்ஹ்ராதாஸ் தாத
ப்ஹவந்தி ப்ஹாதோபமா: ‡

---

* 'ராக்ஷஸர்களது பலாபலங்களை உள்ளது உள்ளபடியே எனக்குச் சொல்வாய், விபீஷண!'

‡ (இ-ள்) 'அப்பா, சகோதரராய்ப் பிறந்தவரெல்லாம் பரதனைப் போன்றிருப்பதில்லை.'

இந்த பாவத்தைக் கம்பன் வால்மீகியிலிருந்தே எடுத்துக் கொண்டிருக்கிருன். ஆனுல் அதை இங்கே ஆளாமல் வாலிவதைப் படலத்தில்தான் ஆளுகிருன்.

'அத்தா, இது கேள்.. .. ..
எத்தாயர் வயிற்றினும் பின் பிறந்தோர்கள் எல்லாம்
ஒத்தால் பரதன் பெரிது உத்தமன் ஆவதுண்டோ?'

என்ற செய்யுளையேதான் குறிக்கிருேம் என்று வித்துவான்களுக்கு எடுத்துரைக்க வேண்டியதில்லை. ஆனுல் இங்கேயும் வால்மீகி, இதனேடு 'மத்வித்ஹாவா பிது: புத்ரா' ('என்னைப் போன்ற பிதிருவாக்கிய பரிபாலனம் செய்யும் புத்திரர்களாவது') என்ற வார்த்தைகளைச் சேர்த்து ராமனுடைய வாக்கில் தற்புகழ்ச்சியைப் புகுத்தியிருக்கிருன். கம்பன் தகுதி நோக்கி அந்த பாவத்தை எடுத்துவிட்டிருக்கிறது குறிப்பிடத் தக்கது.

என்று சுக்ரீவனையும் லக்ஷ்மணனையும் குத்திக் காட்டிய பிறகும்கூட வால்மீகியில் சுக்ரீவன் பழைய ஆக்ஷேபனைகளையே திரும்பக் கூறுவதாக வருவது அசம்பாவிதமாக* இருக்கிறது. கம்பனில் இத்தகைய அசம்பாவிதப் போக்குகள் இல்லை. அனுமன் விபீஷணனை அங்கீகரிக்கவேண்டியது என்று அபிப்பிராயம் சொல்லியதும் ராமன் வாதத்தை முடித்து,

‡ 'வெற்றியே பெறுக, தோற்க; வீக வியாது வாழ்க:
பற்றுதல் அன்றி உண்டோ புகல் எமைப் பகர்கின்றானை?'

என்று கம்பீரமாகக் கூறிவிடுகிறான். அதன் பிறகு விபீஷணன் வந்து ராமனிடம் நேரில் சரணாகதி செய்கிறான். இதே சமயத்தில் இலங்கையைப் பற்றிக் கேட்டல் ராமனது குணத்துக்கு இழுக்குத் தரும் என்றுன்னிக் கம்பன் இப் படலத்தை இவ்வளவோடு நிறுத்திக் கொண்டு, இராமன் விரகதாபப்பட்டு வருந்துவதாகவும், அப்பொழுது சுக்ரீவன் அவனிடம் வந்து,

'தேய்வது என்? காரியம் நிரப்பும் சிந்தையை
மேயவன் தன்னொடும் எண்ணி, மேல்இனித்
தூயது நினைக்கிலை?' $

என்று யோசனை கூறுவதாகவும், அதன் பிறகு ராமன் விபீஷணனை இலங்கையின் காவலைப் பற்றியும் படைகளைப் பற்றியும் விசாரிப்பதாகவும் கற்பித்து வைத்திருக்கிறான். இதனால் இலங்கையின் சமாசாரமும் கேட்கப்படுகிறது, ராமனுடைய குணமும் சுயநயம் என்கிற குற்றத்தினின்றும் விடுபடுகிறது. †

ராம ராவணர்களாகிற இரண்டு வீரர்களும் எதிரிகளின் சைனியங்களைக் கண்ணுற்றுப் பலாபலங்கள் தெரிந்து கொண்ட பிறகு அங்கதன் ராமனால் ராவணனிடம் தூதனாக அனுப்பப்படுகிறான். 'மாருதி அல்லனாகில் நீ எனும் மாற்றம் பெற்றேன்,' என்று அடங்காத மகிழ்ச்சி கொண்டு அவன் ராவணனது அரண்மனை சென்று ராவணனோடு சமாதானம் பேசும் செய்திகூடக் கம்பனால் மிக நயமாகக் கற்பிக்கப்பட்டிருக்கிறது. இதன் பிறகு யுத்தம் துவங்கிவிடுகிறது.

போரை வர்ணிப்பதில் ஹோமரே தான் சிறந்த கவி என்ற மேனாட்டு ஆசிரியரின் கூற்றுக்களைக் கண்டும், ஹோமரின் உத்கிருஷ்டமான யுத்த வர்ணனைகளைப் படித்துப் பார்த்தும் நாம் மயங்கிப்போய், ஹோமரின் போர்ச் சித்திரங்களைவிட உயர்ந்த சித்திரங்கள் கிடையா என மதித்திருந்தோம். ஆனால், கம்பராமாயணத்தின் யுத்த காண்டத்தைப் படித்துப் பார்த்ததும், கம்பன் போர் வர்ணனையில் ஹோமருக்குத் தாழ்ந்தவனில்லை என்றும், சில இடங்களிலும் சில விஷயங்களிலும் ஹோமரது போர் வர்ணனையை வென்றிருக்கிறானென்றும் கண்டுகொண்டோம். ஹோமரில் ஓர் குற்றம் இங்கு எடுத்துக் காட்டற்பாலது. அந்தந்த நாயகனைப் போர் முனையில் கொண்டுவரும்போது ஹோமர் அதுவரையில் அவன் சும்மா இருந்தான் என்று பொருள்படும்படி கதை புனைந்திருக்கிறான். உதாரணமாக, மகா வீரனான தியமேதனைப் பார்த்து ஆத்ரேயன், 'நீ என்ன பயந்தாரியாயும் சோம்பேறியாயும் இருக்கிறாய்?' என்று நீண்ட பிரசங்கம் செய்த பிறகுதான் முன்னவன் தன் பராக்கிரமங்களைக் காட்டத் துவக்குகிறான். அதேமாதிரி இணையற்ற வீரனான ஹெக்தரைக்கூட ஸார்ப்பெதன், 'நீ என்ன போரில் கலவாமல் வாளா இருக்கிறாய்?' எனக் கண்டிக்கிறான். அவனும் சும்மா இருந்ததாக ஒப்புக் கொள்கிறான். ஆனால். கம்பனில் இத்தகைய குற்றங்கள் கிடையா. போர் நடக்குமிடத்தில் கவி சாக்ஷாத்தாய் நின்று பார்த்தால் எவ்வாறு வர்ணிப்பானோ அவ்வாறே அவனது வர்ணனைகள் அமைந்திருக்கின்றன. அவன் முதலில் நாற்பெரும் படைகளும் தத்தமக்குள் போர் செய்தன என்று வர்ணனையைத் துவக்கிக்கொள்கிறான். அவ் வர்ணனை போதிய அளவு சென்ற பிறகு தனித்தனி வீரர்கள் யுத்தரங்கத்தில் காட்டிய பராக்கிரமங்களை வர்ணிக்க எடுத்துக் கொள்கிறான். அதுவரையில் அவர்கள் சும்மா இருந்தார்கள் என்ற எண்ணம் படிப்போருக்கு வராதபடி கம்பன் சாமர்த்தியமாய்ப் பார்த்துக் கொள்கிறான். இகல் குறித்த நாயகர் இருவர் போர் செய்து ஒருவர் தோற்றுப் பின்னடைந்ததும் கம்பன் உடனே வேறு நாயகரைப் போர்க்களத்தில் புகுவிக்கிறதில்லை: மறுபடியும் ஓர் பொதுப் போரை விஸ்தாரமாக வர்ணித்த பிறகுதான் அவன் இரண்டாவது இணையைக் கொண்டுவந்து விடு

* ஸமாஸார்த்தத்திலேயே கொள்க—அதாவது, 'நடந்திருக்கக்கூடிய தன்று போல' எனப் பொருள் கொள்க.

‡ (இ-ள்) 'நமக்கு வெற்றியே வரட்டும், தோல்வியே வரட்டும்; நமக்கு அழிவே வரட்டும், அல்லது வாழ்வே பெருகட்டும்; சரணாகதி என்று சொல்லி என்னை அடைந்துவிட்டவனை நான் கைவிடுவது எங்கேனும் உண்டோ?'

$ (இ-ள்) 'ஏன் துக்கிக்கிறாய்? நம்மோடு வந்து சேர்ந்த விபீஷணனோடு கலந்துகொண்டு இனிச் செய்ய வேண்டிய காரியத்தைப் பற்றி நினைக்கவேண்டாமா?'

† இவ்வாறு ஒவ்வோர் பாகத்தையும் ஆராய்ந்து கொண்டு போனால் இவ் ஆராய்ச்சி பெரிதும் விரியுமாதலால், இவ்வியாசத்தின் பிற்பாகத்தில் ரசனை-ஆராய்ச்சி பெரும் போக்காகத்தான் செய்யப்படுகிறது.

BIG HELP TO SMALL SCALE INDUSTRIES

You can set up expand or modernise your small scale Industrial unit with our liberal help. Come to us with your plans and we will turn your dreams into reality.

Our Medium Term Loans will help you to buy factory sheds, plants and machinery. Short Term Loans will cover the cost of raw materials and components, spares and stores, processing of raw materials and marketing of finished products.

For further details please contact our nearest branch.

punjab national bank

41

அருள் திரு அழகிய சோழநங்கை

அம்மன் திருக்கோயில்

தேரூர், கன்னியாகுமரி மாவட்டம்

குமரி மாவட்டத்தில் பழைய ஆற்றின் வடகரையில் தேரூர் என்னும் சிற்றூரில் அருள்மிகு அழகிய சோழநங்கை அம்மன் திருக்கோயில் அமைந்துள்ளது. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை இத்தலத்தில் அவதரித்துத் தமது 13–வது வயதில் அறிவுச்சுடரின் தெய்வமாம் அழகிய சோழநங்கை அம்மனின் பெயரில் பாமாலை புனைந்து பாடியிருக்கிறார்கள்.

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களின் நினைவு நூலகம் ஒன்று, ஸ்ரீ அழகிய சோழநங்கை அம்மன் நிதியிலிருந்து கட்டி முடிக்கப்பட்டு, 1952 ஜுன் மாதம் 6–ம் தேதி சென்னைப்பல்கலைகழக முன்னாள் வரலாற்றுப் பேராசிரியர் டாக்டர் K. K. பிள்ளை அவர்களால் திறந்து வைக்கப்பட்டு நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. தமிழ் நூல்களில் இலக்கணம் இலக்கியம்—கல்வெட்டு—வரலாறு மற்றும் ஆராய்ச்சி நூல்களும், ஆங்கில நூல்களும் உள்ளன. விலை மதிப்புக்கு உட்படாத 5412 நூல்கள் உள்ளன. இந் நூலகத்திற்கு அரசு மான்யம் வழங்கி வருகிறது.

தேரூர் ஸ்ரீ அழகிய சோழ நங்கை அம்மன் கோயில் நிர்வாகத்தின் கீழ் செயல்பட்டு வரும் இந்நூலகம் குமரி மாவட்டத்தின் சிறப்பான நூல் நிலையம் ஆகும். குறிப்பாகக் கல்லூரி மாணவர்களுக்கும் தமிழ் ஆராய்ச்சியாளர்களுக்கும் மிகவும் பயன்பட்டு வருகிறது.

அன்பர்கள் யாவரும் இத்தலத்திற்கு வந்து அம்பிகை அருள்பெற்று நூலகத்தின் மூலம் பெருமை பெற வேண்டப்படுகிறது.

ஜி, சங்கரநாராயணன்
செயல் அலுவலர்.

39

கிருன். இவ்வாறு அநேகமாய் ஒவ்வொர் போரும் அவியக்தத்தினின்று பரிணமித்து வியக்த தசையையடைந்தும், அந்த வியக்தம் பரிணமித்து ஆரோகணக்கிரமம் அனைத்தையும் பெற்ற பிறகு படிப்படியாயோ ஒரே அடியாயோ இறங்கி அவியக்தத் தன்மையை மறுபடியும் பெற்றும், பிண்டாண்டங்களின் வளர்ச்சிகளை அனுசரிக்கிறது. வேறு எந்தக் கவியும் இந்த உயர்ந்த வழியைக் கம்பனுக்கு முன் கையாண்டதில்லை என்று நிச்சந்தேகமாகச் சொல்லலாம்.

தனிப் போர் வர்ணனை ஓர் பக்கம் இருக்க, ராம ராவண யுத்தத்தின் சமக்கிரத்தையும் கம்பன் ஆரோகணக்கிரமம் கெடாமல் அமைத்திருப்பது ஆச்சரியத்தைத் தருகிறது. இதுவே ரசனையின் பெருந்திறன். வால்மீகியில் ஆரோகணக்கிரமம் வெகு ஸ்தூலமாகத்தான் காட்டப்படுகிறது. முதல் போரிலேயே ராமன் அடிபட்டு வீழ்ந்துவிடுவதும் சீதை போர்க்களம் வந்து புலம்புவதும் வர்ணிக்கப்பட்டுப் போய் விடுகிறது. இதே போரிலேயே லக்ஷ்மணன் நாகபாசத்தால் கட்டுண்பதும், ராமன் அதைக் கண்டு மனமுடைந்து பிரலாபிப்பதும், கருடன் வரவினால் நாகபாசம் அவிழ்ந்து போய்விடுவதும் நிகழ்ந்துவிடுவதாய் வர்ணிக்கப்படுவதால் வால்மீகியின் யுத்த காண்டம் ஆரோகணக் கிரமத்தினால் பெறக்கூடிய அழகை அம்மட்டுக்கு இழந்துவிடுகிறது— ஏனெனில், 45—வது சருக்கத்தில் ராம லக்ஷ்மணர் இந்திரசித்தினால் அடிபட்டு வீழ்கிறார்கள் என்ற வர்ணனைக்குப் பிறகு வால்மீகிக்கு 75—வது சருக்கத்தில் அதேமாதிரி சம்பவத்தையே தான் மறுபடி வர்ணிக்கவேண்டி வருகிறது. ஆதலால் வர்ணனைகள் வியப்பையும் ஆரோகண சுகத்தையும் இழந்துவிடுகின்றன. வால்மீகி இத்துணைப் பெரிய கவியாக இருந்திராத பக்ஷத்தில், வர்ணனையைத் துரித காலத்தில் ஆரம்பித்துவிட்டு விளம்ப காலத்துக்கு இறங்கவேண்டி வரும்போது அவனது வர்ணனை ரஸமின்றிப் போயிருக்கும். அவனது அசாமானிய கவிதா சக்தியே இவ் இரசனைக் குற்றத்தால் வரும் ரஸக் குறைவினின்று அவனைக் காக்கிறது. உதாரணமாக, எப்படியாவது ஆரோகணச் சுவையை உண்டாக்குவதற்காக வால்மீகி இரண்டாவது முறை லங்காதகனம் நிகழ்வதாகக் கற்பிக்க வேண்டி வருகிறது. அப்படியிருந்தும் முதலதனில் போலவே இதிலும் புதுமை புலப்படும்படி செய்ய அவனது அபாரமான பாவனா சக்தியும் சொல்லின் மோகனமும் அவனுக்கு ஆற்றல் அளிக்கின்றன.

கம்பனோ சிறந்த சுவையுணர்ச்சியுடன் படலங்களை ஆரோகணக் கிரமத்திலேயே அமைத்திருக்கிறான். அதனோடு, யுத்தங்களுக்கிடையில் சீதா ராவண சம்வாதத்தையும், மாயாசனகப் படலத்தையும், மாயா சீதைப் படலத்தையும், தேரேறு படலத்தையும் இடையிடையே புகுத்தியும், யுத்தங்களை வர்ணிக்கிற படலங்களிலேயே தானமாலையின் சோகம், விபீஷண கும்பகர்ணர்களின் அருமையான சம்வாதம் முதலியவற்றைச் சேர்த்தும், யுத்த வர்ணனைகளையே படித்து அலுத்துப்போகும், மனோபாவத்துக்கு அங்கங்கே இளைப்பாற்றி செய்து கொடுக்கிறான். எப்படி என்று சற்று விரிவாகக் காட்டி நம் ரசனை ஆராய்ச்சியை நிறுத்திக் கொள்வோம்.

ராவணன் வானர சைனியத்தைக் கண்ணுற்று வரும்போது சுக்ரீவன் திடீரென அவன்மீது பாய்ந்து மகுடத்தைத் தகர்த்தெறிகிறதே ராம ராவண யுத்தத்தின் முதற் சம்பவமாகும். இங்கே சுக்ரீவனுக்காக ராமனை இரங்கச் செய்து, கம்பன் அப்போரையும் இரங்கலையும் ஒவ்வொன்றும் மற்றதினால் தூக்கிக் காட்டப்படும்படி செய்துவிடுகிறான்.

> . . . . 'நின்னை அக் கருணை யில்லோன்
> கொல்லுதல் செய்தா னுகில் . . . .
> . . . .
> வெல்லினும் தோற்றேன் யானே அல்லனோ விளிந்திலாதேன்!'

என்று ராமன் சுக்ரீவனைப் பார்த்துச் சொல்கிற வார்த்தை அவனது அபிராகிருதமான அன்பையும் கருணையையும் காட்டா நின்றது. அந்தப் புறத்தில்,

> '. . . . . இன்று கண்டும் அக் கிளி மொழி மாதரானை
> மீட்டிலேன்! தலைகள் பத்தும் கொணர்ந்திலேன்!
> வெறுங்கை வந்தேன்!'

என்றும் பிறவும் சொல்லுகிற சுக்ரீவன் தன் வன்மையைத் தானே இழித்துக் கூறி அவனது வீரத்தை நாம் மெச்சும்படி செய்துவிடுகிறான்.

முதனாட் போரில் வீரர்கள் போர் செய்வதும் அவரவர்கள் தங்கள் சத்துருக்களைப் பற்றி நினைக்கும் எண்ணங்களும் சொல்லும் வார்த்தைகளும் பின்னால் வரும் போர்களில் அவர்கள் காட்டப்போகிற பராக்கிரமங்களுக்கு ஒத்திகையாகவும் கட்டியமாகவும் விளங்குகின்றன. அனுமன் ராவணனை முஷ்டியால் குத்தியபோது அவனது வலுவைக் கண்டு ராவணன்,

> 'வலி என்பதும் உளதே, அது
> நின்பாலது, மறவோய்!
> . . . .

சலி என்று எதிர் மலரோன் உரை
தந்தால் இறை சலியேன்,
மெலிவு என்பதும் உணர்ந்தேன், எனை
வென்றாய், இனி, விறலோய்!' *

என்று சொல்லி அனுமனது பலத்தை மெச்சுவதும், அதற்கு மாருதி,

'. எனை நீ
வென்றாய் அலேயோ, உன் உயிர் .
விடாது உரை செய்தாய்' *

என்று சொல்லுவதும் அவர்களது போரை நேரே பார்த்தால் தோன்றக்கூடிய உணர்ச்சியைவிட அதிகமான உணர்ச்சியை நமக்குத் தருகின்றன. இந்த வார்த்தைகளை எழுதிய பிறகு கம்பன் நம்மை அழைத்து, 'ராவணன் யுத்தரங்கத்தில் பிரவேசிக்கிறான், அனுமன் போர்க்களத்தில் வந்துவிட்டான், பார்த்துக் கொள்ளுங்கள்,' என்று சொல்லவே வேண்டியதில்லை. அந்த இரண்டு செய்யுட்களைக் கொண்டு கம்பன் அனுமனுக்காகவும் ராவணனுக்காகவும் நம்முடைய கவனத்தையும் வியப்பையும் விலைக்கு வாங்கிக்கொண்டுவிட்டான். இனி அவ்விரு வீரர்களும் யுத்த பூமிக்கு வரும்போது நமது மனம் தானே வலிய இழுக்கப்பட்டுப் போய் அவர்களுடைய பராக்கிரமங்களில் மூழ்கிப் போவதைத் தவிர வேறு மார்க்கமற்றதாய் விடுகிறது.

முதற் போரில் தோல்வியுண்ட ராவணன் மாலியவானிடம் தான் பட்ட பாட்டைச் சொல்லி ராமனுடைய அபிராகிருதமான பலத்தை நாம் உணரும்படி செய்துவிடுகிறான். கும்பகருணன் எழுந்து போர் செய்தால்தான் இனி உண்டு என்று ராவணனுக்குத் தோன்றிவிடுகிறது. கும்பகருணனைக் கம்பன் வால்மீகி காட்டுகிறபடி காட்டாமல் தர்மாதர்மம் அறிந்த ஓர் ஞானியாகச் சித்திரித்திருக்கிறான். வால்மீகியில் கும்பகருண ராவண சம்வாத கட்டத்தில் நூற் சிதைவு இருப்பதாக நமக்குத் தோன்றுகிறது—அவன் பேசும் பேச்சு முன்னுக்குப் பின் முரண்பாடுற்றதாக இருக்கிறது. ஆனால், கம்பனில் அவனது நிலை முரணின்றி அறிவுக்குப் பொருந்தியதாக இருக்கிறது. ராவணன் செய்த தீமையை அவன் வெறுக்கிறான். ராமனை மகா பலவான் என்றும் அவதாரம் என்றும் நினைக்கிறான். ஆதலால் சீதையை விட்டு விட்டுச் சமாதானம் செய்து கொள்ளும்படி ராவணனுக்கு அவன் புத்தி கூறுகிறான். ஆனால்,

'உறுவது தெரிய அன்று உன்னைக் கூயது!'

என்று கூறி ராவணன் அவமதித்ததும் அவன்,

'என்னை வென்று உளர் எனின், இலங்கை காவல,
உன்னை வென்று உயருதல் உண்மை! ஆதலால்,
பின்னை நின்று எண்ணுதல் பிழை,அப் பெய்வளை
தன்னை நன்கு அளிப்பது தவத்தின் பாலதே,' *

என்று யோசனை கூறிவிட்டு,

'இற்றை நாள் வரைமுதல் யான் முன் செய்தன
குற்றமும் உள எனின் பொறுத்தி, கொற்றவ!'

என்று அபராத க்ஷமை கேட்டுக்கொண்டு,

'அற்றதால், முகத்தினில் விழித்தல் ஆரிய!'..

என்று மனம் பொருமிக்கொண்டு போர் முனைக்குப் புறப்பட்டுவிடுகிறான். அச்சமயம் ராவணன் கண்களில் வந்த இரத்தங் கலந்த கண்ணீர் நம் கண்களையும் ஊற்றெடுக்கச் செய்கின்றன!

விபீஷணன் ராமனது உத்தரவு பெற்றுக் கும்பகருணனைப் பேதிக்க முயலுகிறான். அதற்கு, கும்பகருணன், 'ஒருபுறம் ராவணனுக்குத் துரோகம் செய்யமாட்டேன்' என்றும், ஒரு புறம்,

'கும்பிட்டு வாழ்கிலேன் யான்
கூற்றையும் ஆடல் கொண்டேன்?' *

என்று 'மானத்தைப் பரிபாலிப்பேன்' எனவும், மற்றோர் புறம், 'நீயும் எங்களோடு வந்துவிட்டால் அரக்க ராயினர்க்கெல்லாம்'

'கையினால் எள்நீர் நல்கிக்
கடன்கழிப் பாரைக் காட்டாய்,'

என்றும் கூறி, நான் 'ராவணனுக்காகக் கடைசிவரை போர் செய்து, ஆலம் கண்டு

* 'உலகத்தில் வன்மை என்றொன்று இருக்குமானால் அது உன்னிடம்தான் இருக்கிறது, அனுமி! பிரமனே, ''என்னோடு போர் செய்து நீ தளரக் கடவாய்'' என்று சபிக்கினும் தளர்வேனல்லாத நான் உன் முஷ்டிக் குத்தால் மெலிவு என்பது என்ன என்று உணர்ந்து கொண்டேன்: ஆதலால் நீயே எனை வென்றாய்!'

* 'உன் உயிர் போகாததுமன்றி இத்தனை வார்த்தை நீ பேசுகிறபோது நீ யல்லனோ என்னை வென்றுவிட்டவன்!'

* பொருள்:—'என்னை வென்று ராம லக்ஷ்மணர் பிழைத்து நின்றால் உன்னை வென்று விடுவார்கள் என்பதில் ஐயமில்லை. ஆதலின் அப்பொழுதாவது முன் யோசனையுடன் சீதையை ராமனிடம் அனுப்பிவிடு.'

.. 'இனி நமக்கு முகவிழி யற்றது, ஐயனே!'

* 'எமனையும் போரில் வென்ற யான் என் தமயனைக் கொன்ற மானிடனைக் கும்பிட்டு வாழ்வேனோ?'

அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில், பழனி.

பழனி ஞானதண்டாயுத பாணியைப் பணிந்திட வாரீர் !
அழகான திருமுருகன் அருள் பெறவே திரண்டு வாரீர் !

செந்தேனும் பாலும் மணக்கும் சேயோனை வழிபட வாரீர்
சந்தன விபூதி மணக்கும் திருமேனி கண்டு மகிழ வாரீர் !

முடிக்காணிக்கை தர தனியிடம் !

தங்குவதற்கேற்ற வசதிகள் !

முதியவரும் முடியாதோரும் முருகன் அருகே செல்ல இழுவை ரயில் வசதி !

பொங்கியெழும் பேரழகனைத் தாங்கிவரும் தங்கரதம் காண வசதிகள் !

தங்கமயில் மீது பவனி வரும் முருகனுக்கு அர்ச்சனை, அபிஷேகத்தில் விசேஷ கவனம்.

அத்தனையும் செய்து அழைக்கிறது பழனித்திருக்கோயில். தமிழ்க் கடவுளாம் கந்தப்பெருமான் அருள்பெற்று, அருள்மிகு தண்டாயுத பாணி சுவாமி திருக்கோயில் கண்காணிப்பில் கீழேகண்ட நிறுவனங் கள் நிர்வகிக்கப்படுகின்றன.

1. அருள்மிகு பழனியாண்டவர் கலைக் கல்லூரி
2. அருள்மிகு பழனியாண்டவர் இந்தியப் பண்பாட்டுக் கல்லூரி
3. அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக் கல்லூரி
4. அருள்மிகு பழனியாண்டவர் செந்தமிழ்க் கல்லூரி
5. பழனியாண்டவர் பள்ளி (ஆங்கிலப் போதனை)
6. செவிடர் பள்ளி
7. நாதசுரக் கல்லூரி
8. வேத ஆகம பாடசாலை
9. அன்பு இல்லம்
10. முதியோர் இல்லம்
11. குழந்தைகள் காப்பகம்
12. மருத்துவமனை
13. சித்த வைத்தியசாலை
14. நடமாடும் வைத்தியசாலை

பழனித் திருமலையில் நாளும் பெருகிவரும் பக்தர்கட்குப் போதிய வசதி கள் செய்து தருவதற்காக ஒரு கோடியே ஐந்து லட்ச ரூபாய் செலவில் மாபெரும் திருப்பணித் திட்டம் செயல்பட உள்ளது. இந்த ஆலயத் திருப் பணிகளுக்குத் தாங்கள் கொடுக்கும் நன்கொடைகள் மத்திய அரசின் வருமானவரி இலாக்காவில் வரிவிலக்குக்கு உட்பட்டது. எனவே இம் மாபெரும் திருப்பணித் திட்டத்தின் வெற்றிக்குத் தங்களால் இயன்ற அளவு நன்கொடை வழங்கியருளி அருள்மிகு ஞான தண்டாயுதபாணி சுவாமியின் பேரருளுக்குப் பாத்திரராகி நல்வாழ்வு பெறுமாறு அனைவரையும் வேண் டிக் கொள்கிறோம்.

வி. சௌ. கோதண்டபாணி, பி.எஸ்ஸி.பி.எல்.,
துணை ஆணையர்—நிர்வாக அதிகாரி.

அஞ்சி ஓடும் அமரர் போல வானரர்களை ஓடச்செய்து, போர்க்களம் முழுதும் கறங்கு எனத் திரிந்து,

'கருவரை, கனகக் குன்றம் என்னலாம் காட்சி தந்த
இருவரும் நிற்க,

மற்றனைவரையும் கொன்று போடுவேன்' என்று சபதம் செய்து, 'எம்மீது இரக்கம் வையாமல் ராமனிடம் நீ திரும்பச் சென்று நாங்கள் இறந்த பிறகு எங்களுக்குப் பிதிருக் கிரியைகள் செய்து கரையேற்று,' என்று முடிக்கிறான். இந்த சம்வாதத்தினால் விபீஷணனது தன்மையும் கும்பகருணனது தன்மையும் மிகவும் உயர்வு பெறுகின்றன.

கும்பகருணனது போருக்கும் அதிகாயனது போருக்கும் இடையில் வேறொரு ருசியான சம்பவத்தைப் புகுத்தாமற் போனால் ரசனையில் சுகம் குறையும் என்று கண்டு, கம்பன் மாயாசனகப் படலத்தை இடைப் புகுத்தி யிருக்கிறான். இப்படலத்தில்,

'ஊன் இலா ஆக்கை பேணி
உயர் புகழ் சூடாது, உன்முன்
நாண் இலாது இருந்தேன் அல்லேன்:
நவை அறு குணங்கள் என்னும்
பூண் எலாம் பொறுத்த மேனிப்
புண்ணி மூர்த்தி தன்னைக்
காணலாம் இன்னும் என்னும்
காதலால் இருந்தேன், கண்டாய்!' *

என்று, தன்னைக் காதல் இரக்க வந்த ராவணனிடம் கம்பீரமாய்க் கூறும் சீதா பிராட்டியின் திருவாக்குகள் நமக்கு வீரச் சுவையை வேறொரு வழியில் ஊட்டுகின்றன.

அதிகாயனது போர் முடிந்த பிறகு இந்திரசித்தனது நான்கு போர்கள் வர்ணிக்கப் பெறுகின்றன. இவை நான்கும் அழகிலும், காம்பீரியத்திலும், வேலைப் பாட்டிலும் ஒன்றைவிட ஒன்று உயர்ந்துகொண்டே செல்லுகின்றன. முதற் போரிலே லக்ஷ்மணனை ராவணன் அவனிடமே மெச்சும்போது,

'கானின் அன்று இகற் கரன் படை படுத்த அக் கரியோன்
தானும், இந்திரன் தன்னை ஓர் தனுவலம் தன்னால்
வானின் வென்ற என் மதலையும், வரிசிலை பிடித்த
யானும் அல்லவர் யார் உனக்கு எதிர்?'..

என்று சொல்லி இந்திரசித்தனது போர்த் திறத்தைப் புகழ்கிறான். அவனது போரும் இப்பெரும் புகழைப் பொய்ப்படுத்தவில்லை. அவன் ஒருவனே ராவணனை எதிர்த்துப் பேசும் திறலை உடையவன். 'அதிகாயனை யார் கொன்றார்?' என்று அவன் கேட்டதற்கு 'லக்ஷ்மணன் கொன்றான்,' என்று ராவணன் பதில் சொன்னபோது,

'கொன்றார் அவரோ? கொலை சூழ்க என நீ கொடுத்
தாய்!'

என்று, அவனையே இந்திரசித்தன் கண்டிக்கிறான். பிறகு பெரிய சபதங்கள் செய்து, பெரும் படையோடு சென்று, வானரப் படையை நூறி, நாகபாசத்தை விட்டு லக்ஷ்மணனைக் கட்டிவிட்டு, ஜயகோஷத்தோடு திரும்புகிறான். ஆனால்,

விசையால் அனுங்க வடமேரு, வையம்
ஒளியால் விளங்க, இமையாத்
திசையானை கண்கள் முகிழா ஒடுங்க,
நிறைகால் வழங்கு சிறையான்

ஆகிய கருடன் தோன்றி அப் பாசக்கட்டை அவிழ்த்துவிட்டான். இது தெரிந்ததும் உடனே இந்திரசித்தன் போர்க்களத்துக்குத் திரும்பி வருவதானால் வேறுபாட்டினால் வரும் அழகு குன்றுமாதலால், கம்பன் அவனது இரண்டாம் போருக்கு முன் படைத் தலைவர் போரையும் மகரக் கண்ணன் போரையும் இடைப் புகுத்தி வைத்திருக்கிறான். மகரக் கண்ணன் இறந்த பிறகு ராவணன் அழைக்கிறான் என்று தூதன் வந்து சொல்ல, இந்திரசித்து,

'போயின நிருதர் யாரும் பொன்றினர் போலும்!'

என்று சொல்லிக்கொண்டு ராவணனிடம் சென்று, 'இன்று அனைவரையும் அதஞ் செய்கிறேன்' என்று சங்கற்பித்துக் கொண்டு களம் செல்கிறான். அங்கே லக்ஷ்மணன் முதனாள் தோற்ற தோல்விக்குப் பரிகாரமாக, 'இன்று நானே சென்று இந்திரசித்தனை எதிர்ப்பேன்!' என்று சொல்லி அண்ணனிடம் உத்தரவு பெற்று வருகிறான். போரில் எத்தனை விதமான வேறுபட்ட வர்ணனைகளைக் கொட்ட முடியுமோ அத்தனைவித

* 'பிராணனை விட்டு இப்பொழுதே புகழுடம்பை எய்தாமல் நான் உயிர் தரித்திருப்பது, விரதங்களால் இளைத்த என் உடலின் மீது அபிமானம் வைத்து என்றாவது, மன உணர்ச்சி அற்றுப் போயினதால்தான் என்றாவது நினையாதே, தன் இணையற்ற குணங்களையேதன் ஆபரணங்களாகக்கொண்ட புண்ணிய மூர்த்தியாகிற என் கணவனை இந்த ஜன்மத்திலேயே காணலாம் என்கிற ஆசை ஒன்றினால்தான் நான் இன்னும் ஜீவனை வைத்துக் கொண்டிருக்கிறேன் என்று அறிந்து கொள்!'

.. 'ராமனையும், என் மகன் இந்திரசித்தனையும், என்னையும் விட்டால் போரில் உனக்கு நிகரானவர் வேறு யார்?'

அருள்மிகு நவநீதேசுவரர் திருக்கோயில், சிக்கல்,
நர்கப்பட்டினம் வட்டம்.
தஞ்சாவூர் மாவட்டம்

இறைவன் — அருள்திரு நவநீதேசுவரர் (பால்வெண்ணைநாதர்)
இறைவி — அருள்திரு சத்தியாதாட்சி (வேல்நெடுங்கண்ணி)
சிறப்பு மிக்கவர் — அருள்திரு சிங்காரவேலவர்.
தலவிருட்சம் — மல்லிகை.
தீர்த்தம் — பாற்குளம்.

இத்திருக்கோவில் திருவாரூர்.நாகைப் பெருவழியில் உள்ளது. கோச்செங்கட் சோழனல் 4—ஆம் நூற்ருண்டில் கட்டப்பெற்ற மாடக்கோயில். அருணகிரி நாதராலும், சம்பந்தராலும், சுந்தரராலும் பாடல் பெற்றுள்ளது இத்தலம்.

இக்கோயிலின் வடக்குப் பிரகாரத்தில் பெருமாள் கோயில் அமைந்துள்ளது. பெருமாளின் பெயர் அருள்திரு கோலவாமனப்பெருமாள். பிரகாரம் வலம் வருவார். சிவன் விஷ்ணு இருசந்நிதிகளையும் கண்டு தரிசித்து வர ஏதுவாய் அமைந்துள்ளது இக்கோயிலின் தனிச்சிறப்பு.

இத்தலத்தில் ஐப்பசி மாதத்தில் சிறப்புப் பெற்ற கந்தர்சஷ்டி விழாவும், சித்திரையில் பிரம்மோற்சவமும், வைகாசியிவ் தெப்போற்சவமும், பெருமாளுக்கு மார்கழியில் 'பகல் பத்து இராப் பத்து' உற்சவமும் நடைபெற்று வருகின்றன. கந்தர் சஷ்டியில் வேல் வாங்கும்பொழுது அருள் திரு சிங்காரவேலவருக்கு முகத்தில் வியர்வை அரும்புவதை யாவரும் கண்டு களிக்கலாம்.

சிக்கல். **லெ. சங்கரகுத்தாலம்,**
30—1—75 செயல் அலுவலர்.

34

வர்ணனைகளையும் கம்பன் கொட்டுகிறான். கடைசியில் லக்ஷ்மணனும் ராமனும் பிரம்மாத்திரத்தால் கட்டுண்டு வீழ்கிறார்கள். இந்திரசித்தனும் தன் வீரர் அனைவரும் களத்தில் பட்டுப் போயினமையாலும், சத்துருக்கள் அனைவர்களும் அழிந்தார்கள் என்று நினைத்தும், லங்கை திரும்பித் தன் வெற்றியை ராவணனிடம் சமர்ப்பிக்கிறான். ஆனால், அனுமன், சாம்பவான், விபீஷணன் ஆகிய மூவரும் அவ் அஸ்திரத்திற்குத் தப்பினவரானதால், சாம்பவானது யோசனையின்மீது அனுமன் மருந்து மலையைக் கொண்டு வந்ததும் வானர சைனியமும் ராம லக்ஷ்மணரும் விழித்தெழுகின்றனர்.

இதைக் கேள்வியுற்றதும் இந்திரசித்தனுக்கு, முதல் தடவையாக, பயம் என்பது தோற்றத் துவக்கிற்று. பிரம்மாத்திரம்கூட அவர்களைக் கொல்லலாம் ஆற்றல் படையாதபோது ராமன்,

> 'மானிடன் அல்லன், தொல்லை வானவன் அல்லன், மற்று
> மேல் நிவர் முனிவன் அல்லன், வீடணன் மெய்யின் (சொன்ன
> தேவன் நகு தெரியல் மன்னு, சேகு அறத் தெரிந்தது, அன்றே'
> ஏனவன் எண்ணின் தீர்ந்ததார் எண்ணுறும் ஒருவன் என்றே,

என்று தந்தையிடம் சொல்லுகின்றான். இருந்தும், அன்னது பகர்தல் ஆண்மை வினை அன்றாகையால் நிகும்பலை சென்று, யாக பலத்தினால் புதிய ஆயுதங்கள் பெற்று அவர்களை வெல்ல முயலுதலே காரியமென்று தீர்மானித்து, அவ் யாகம் முடியும் வரையில் சத்துருக்கள் தன்னைத் தாக்காதிருப்பதற்காக மாயையினால் சீதையின் உருவம் ஒன்று செய்து, அவ் உருவத்தை வாளால் வீசிக் கொன்று, 'ராம லக்ஷ்மணரைச் செயலறச் செய்து வெல்வேன்' எனச் சங்கற்பித்துக் கொண்டு அவன் போர்க்களம் செல்கிறான்.

[இத்துடன் இந்த ரசனைச்சுவை ஆராய்ச்சி முற்றுப் பெருமல் நிற்கிறது. இந்திரசித்து மாயா சீதையைப் படைத்து வாளால் வெட்டுவதும், அதைக்கண்டு அனுமன் மயங்குதலும், விபீஷணன் உதவியால் சீதை உயிரோடிருப்பது தெரிந்து பின் நிகும்பலையிற் புகுந்து லக்ஷ்மணன் இந்திரசித்தை வதைப்பதும், இடையில் இந்திரசித்து ராவணனை அடைந்து சீதையை விட்டு விடும்படி வேண்டித் தோல்வியுறுவதும், ராமன் தன் வீர வெஞ்சிலையிலிருந்து 'கண கண கண' என்று அம்பு மழை பெய்து மூலபலத்தை அவிப்பதும், கடைசியில் முறை துறந்தானான ராவணனே ராமனுடன் வீரப் போர் புரிந்து மடிவதும், மூவுலகிற்கும் கங்குல் விடிவதற்காகத் தான் சிறையிலிருந்த தேவி மீட்சி பெறுதலும், பதினான்கு வருஷம் கல்லும் கனியும்படி கனிந்த துயரத்தானான பரதன் அக்னிப் பிரவேசம் செய்யப்புகும்சமயத்தில் ராமன் திரும்பி விட்ட செய்தி கேட்டு ஆனந்தித்தலும், பிறகு ராமன் திருமுடி சூட்டிக் கொள்ளலும் அளவற்ற ரசனைத் திறனுடன் எவ்வளவு ரஸ புஞ்சங்களாக அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதையெல்லாம், மேதாவிலாஸம் ததும்பிப் பிரகாசிக்கும் அய்யரவர்களுடைய ஆராய்ச்சியின் முற்பகுதிகளை வைத்துக் கொண்டு, நாமாக ஓரளவு ஊகித்துக் கொள்ளவே வேண்டியிருக்கிறது.]

கம்ப ராமாயணச் சிறப்பு

திரு வெ. ப. சுப்ரமண்ய முதலியார்

கம்ப ராமாயணத்தின் பெருமையை அறியாத தமிழர் இல்லை. அதனில் அடங்கியுள்ள மிக்க அருமையும் இனிமையும் வாய்ந்த கருத்துக்களை அறிந்து ஆனந்திக்கும் பயன் பெறவே, தமிழரல்லாதாரும் தமிழைக் கற்கவேண்டுமென்பது மிகையாகாது.

இவ்வாறு அந்நிய பாஷையில் உள்ள இலக்கியங்கள் தம் பாஷையிலே மொழி பெயர்க்கப்பட்டவற்றைப் படித்த மட்டிலே திருப்தியடையாமல், அவ்விலக்கியங்களை நேராக அறிந்து ஆனந்திக்க விரும்பி, அவைகள் எழுதப்பட்டுள்ள மூல மொழிகளைக் கற்றுத் தேறிய அருங்கலை விநோதர் அநேகர் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் உளர். நாகரிகமடைந்த மற்றைத் தேசங்களிலும் அத்தகையார் சிலர் இருக்கின்றனர்.

இவ்வுலகத்துச் செல்வ மெல்லாவற்றையும் ஒருங்கே அடைந்து சகல போகங்களையும் ஆசைதீர அநுபவிக்கும் ராசபதவியே யன்றி, எல்லா வகையிலும் அந்த இராச பதவியினும் ஏற்றமான இந்திர பதவியுமே கம்ப ராமாயணம் போலக் கற்றோர்க்கு மனக் களிப்பைத் தர மாட்டாது என்னும் கருத்துப் புலப்பட,

இம்பர்நாட்டிற் செல்வமெல்லாம்
எய்தி அரசாண் டிருந்தாலும்
உம்பர்நாட்டிற் கற்பகக்கா
ஓங்கும்நீழல் இருந்தாலும்
செம்பொன்மேரு அனையபுயத்
திறல்சேர்இராமன் திருக்கதையில்
கம்பநாடன் கவிதையிற்போற்
கற்றோர்க்கிதயம் களியாதே

என்று கற்றோர் ஒருவர் மனம் கனிந்து கூறியது உபசாரமன்று, உண்மையேயாம் எனக் கற்றோரனைவரும் ஒப்புக் கொள்வர்.

யாதாயினு மொரு காவியத்திலே பற்றுடையோர், அக்காவியத்தின் சிறப்பைப் புலப்படுத்த, அதை வேறு காவியங்களோடு ஒப்பிடாமல், கம்ப ராமாயணத்தோடு ஒப்பிட்டு அது கம்ப ராமாயணத்தினும் சிறந்ததெனப் பாராட்டி முடிவு கட்டுவது வழக்கம். ஒரு பெண்ணின் அழகைச் சிறப்பாகக் கூறுவோன், அப்பெண் இலக்குமியினும் சிறந்த அழகுடையாளென்பதனால், இலக்குமியே அழகிற் சிறந்தா ளென்னும் உண்மை பாதிக்கப் படாதது போல, கம்ப ராமாணம் அதனோடொப்பிடப்பட்டு உயர்த்திக் கூறப்பட்ட எல்லாக் காவியங்களினும் உயர்ந்ததென்பது உண்மையில் மறுக்கப்படவில்லை யென்பது சொல்லவேண்டியதில்லை.

மலையாள ஜில்லாவில் [Malabar] கோவில்களில் கம்ப ராமாயணத்தைப் பிரசிங்கித்ததற்கு, மானியங்கள் ஏற்பட்டுத் திருவிழாக் காலங்களில் அயல் மொழியினரான மலையாளிகள் கம்ப ராமாயணப் பாட்டுப் பாடிப் பொருள் கூறும் திருப்பணி செய்துவருகின்றார்கள். இந்தப் பெருமை வேறெந்தத் தமிழ் நூலுக்கும் இருப்பதாகத் தெரியவில்லை. இவ்வழக்கம், மலையாளத்தில், சில நூற்றாண்டுகளுக்கு முன் தமிழே தாய் மொழியாயிருந்த காலத்தில் ஏற்பட்டு, வெகு பிரபலமாய் இருந்திருக்க வேண்டு மென்பதும், அந்தப் பிரபலத்தின் ஆற்றல், அவ்வழக்கத்தைத் தமிழராயிருந்த மலையாளிகளின் தாய்மொழி மலையாளமாக மாறிய பின்னும், நிலைத்

திருக்கச் செய்திருக்கின்றது என்பதும் ஊகித்தற்பாலனவாயுள்ளன.

தெலுங்கு ஜில்லாக்களில் கம்ப ராமாயணத்திலுள்ள சுந்தர காண்டம் தெலுங்கெழுத்தில் எழுதப்பட்டுப் பாராயணம் செய்யப்பட்டு வருவதும் கம்ப ராமாயணச் சிறப்பை வலியுறுத்தும்.

கம்ப ராமாயணப் பிரசங்கமே தங்கள் ஆயுள் முயற்சியாகக் கொண்டு கம்ப ராமாயணப் பிரசங்கிகள் என்ற பெயர் வகித்த புலவர் பெருமக்கள் ஒவ்வொரு தலைமுறையிலும் பலர் பல இடங்களில் இருந்துவந்திருப்பது, வேறெந்த நூலுக்குமில்லாத தனிச்சிறப்புடையது கம்ப ராமாயணமென்பதை இறுதியாகவும் உறுதியாகவும் நிலை நாட்டுகின்றது.

உலகத்துப் பல பிரபல மொழிகளில் உள்ள மிகச் சிறந்த காவியங்களுள் ஒன்று வான்மீக இராமாயண மென்பர். வான்மீகி முனிவரது 'உரையின்படி நான் தமிழ்ப்பாவினால் உணர்த்திய'தென்று கம்பர் வான்மீகத்தின் வழிநூலாக இயற்றிய ராமாயணம், அழகிலே யன்றி* அளவிலும் வான்மீகத்தினும் சிறந்து விளங்குகின்றதென்று இரண்டு நூல்களையும் ஒப்பு நோக்கி ஆராய்ந்தோர் சிலர் கூறுவர். இதனை வடமொழி தென்மொழி இரண்டினும் வல்லார் எல்லாரும் ஒப்புக் கொள்ளினும், வான்மீகத்துக்கு இழுக்கு அன்று; பெருமையேயாம்; தந்தையினும் மகன் சிறப்புடையனாதல், தந்தையின் சிறப்பைக் குறையாது, (அத்தகைய புத்திரனுக்குப் பிதாவாம் பெருமையால்) அதிகப்படுத்துவதா மாதலால். தந்தையின்றேல், மகன் இன்மை போல, வான்மீகமின்றேல், கம்ப ராமாயணமு மின்றாம். தக்கவன் ஒருவன் அடைந்த பிதிரார்ச்சிதச் சொத்து, அவனாற் கழித்தற்பாலன கழிக்கப்பட்டும், சீர்திருத்தற்குரியன சீர்திருத்தப் பெற்றும், நூதனமாகச் சேர்க்கத் தக்கன சேர்ப்புண்டும், எல்லா வகைகளிலும் மேன்மையுற்று விளங்குவது போல, முதல் நூலாகிய வான்மீகத்தினும் வழி நூலாகிய கம்ப ராமாயணம் சிறந்து விளங்குகின்றது. இவ்வாறு கூட்டவும் குறைக்கவும் மாற்றவும் பெற்ற பகுதிகளிலே, பல, நூலினிமையை அதிகப் படுத்துவனவாம்; வேறு பல, வான்மீகர் கால நாகரிகத்துக்கு இசைய அவர் கூறியவைகள் கம்பர் கால நாகரிகத்துக்கு ஏலாதனவானதனால் பிந்திய காலத்திற்குப் பொருத்தமாக மாற்றப்பெற்றனவாம்.

தமிழிலே கம்ப ராமாயணம் போல ஆங்கிலத்திலே, சிறந்த பாரகாவியமாகிய சுவர்க்க நீக்கத்தை (Paradise Lost) இயற்றிய மிலிட்டனாரது சரித்திரத்தை எழுதிய ஓர் ஆங்கில ஆசிரியர், உலக இலக்கியக் காட்சிச் சாலை ஒன்று நியமித்து அச் சாலையில் ஒவ்வொரு மொழியாளரும் தத்தம் மொழியில் இரண்டு இலக்கியப் புத்தகங்களை கொண்டு வந்து வைக்கலாமென நிபந்தனை ஏற்படுத்தினால், ஆங்கிலேயர்கள், அங்கே, ஷேக்ஸ்பியரது புத்தகத்தையும் மிலிட்டனாரது புத்புத்தகத்தையுமே காட்சிப் பொருளாக வைப்பரென்று கூறியுள்ளார். அப்படிப்பட்ட காட்சிச் சாலையில், தமிழ் மக்கள் கொண்டு வைத்தற்குரிய இரண்டு நூல்கள் குறளும், கம்பராமாயணமுமே யென்பது தெளிவாம்.

கங்கையாறு தோன்றிய பின் வேறுள்ள ஆறெல்லாம் மேம்பாடிழந்தது போல, சீதை தோன்றிய பின் ஏனை அழகிய மாதரனைவரும் அழகிழந்தார்கள்* என்று கம்பர் கூறியவாறு, கம்ப ராமாயணம் பாடப்பெற்றபின் மற்றெல்லா நூல்களும் சிறப்பற்றனவாயின என்னலாம்.

அவர், 'ஒவ்வோ ருறுப்புச் சிறந்த அழகுடையதாகப் பெற்றவர் மற்றைய வனப்பு மிக்க மாதர்; அவயவம் அனைத்தும் உத்தம அழகு ஒருங்கு நிரம்பப் பெற்றவள் சீதையொருத்தியே' † என்றவாறு ஏனைய நூல்களெல்லாவற்றிலும் சில சில பகுதிகளே சிறந்தனவாயிருக்க, எல்லாப் பகுதிகளும் ஏற்றமுடையனவாக வுள்ளது கம்ப ராமாயணமொன்றேயென்று கூறலும் ஆம்.

எந்தக் காவியம், தன்னைப் படித்து இன்புறப் பெறுராய்த் தான் தோன்றுமுன் இறந்த காவிய ரசிகரைக் காட்டிலும் தன்னை அறிந்து ஆனந்திப்பாராய்த் தான் தோன்றிய பின் வாழப் பெற்ற காவிய ரசிகர் பாக்கிய

* வான்மீகம் 24,000 சுலோகங்களை யுடையது; கம்ப ராமாயணம் 12,000 விருத்தங்கள் உள்ளது; ஆயினும் சுலோகங்களின் குறுமையையும் விருத்தங்களின் நெடுமையையும் நோக்கக் கம்பராமாயணமே அளவிற் பெரிதாம்.

* கணங்குழையாள் எழுந்ததற்பின் கதிர்வானிற் கங்கையெனும்
அணங்கிழியப் பொலிவிழந்த ஆறொத்தார் வேறுற்றார்.
—கார்முகப் படலம்.

† உழைகுலாம் நயனத் தார்மாட் டொன்றொன்றே விரும்பற் கொத்தது
அழகெலாம் ஒருங்கே கண்டால் யாவரே ஆற்ற வல்லார்!
—கோலங்காண் படலம்.

சாலிகள் என்னும்படி எல்லாவகை வனப்புகளும் மலிந்து சிறந்து விளங்குகின்றதோ, அந்தக் காவியம் கம்ப ராமாயணமேயாம்.

கம்பர், ஏகம்பவாண முதலியாரது புகழை வருணிக்குமிடத்து, 'வாணன் புகழ்க் கெல்லை வாழ்த்துவோர் நாளெல்லை' என்றபடி அவர் பாடிய ராமாயணச் சிறப்புக்கு எல்லை, அதனை எடுத்துரைப்போர் சொல்வன்மையின் எல்லையே. அச்சிறப்பை உரைப்பவர் எத்துணைச் சொல்லாற்ற லுடையாராயினும் அவர் அதனை உரைக்க உரைக்க, அது வளரா நின்று, அவர் 'உரை குறுக நிமிர்' * கின்ற இயல்புடையதாய் ஒருவராலும் முற்றக் கூற முடியாததாயுள்ளது. உலகத்துப் பெருமலைகளெல்லாவற்றினும் பெரிதாய், உயர்ந்ததாய்ப், பொன் மயமாயொளிமிகுந்த தென்று காவியங்க ளெல்லாவற்றிலும் பெரியதாய், ரசமயமாய், இனிமை மிகுந்தது கம்ப ராமாயணமேயாம். அதன் சிறப்பு இவ்வாறிருத்தலானன்றே, 'கம்பர் கவிச் சக்கரவர்த்தி' என்றும், 'கல்வியிற் பெரியவன் கம்பன்' என்றும் ஆன்றோர் நன்காராய்ந்து துணிந்து கூறினர்.

அவர், வானர சேனைப் பெருமையை விளக்கக் கூறிய 'கடல்கண் டோமென்பர் யாவரே முடிவுறக் கண்டார்?† என்றதையே நாமும் அவர் நூலின் பெருமையைப் புலப்படுத்தக் கூறுதலன்றி வேறு கூறுவதற்கு யாதும் இல்லை.

* கம்ப ராமாயணம், பால காண்டம், குலமுறை கிளத்துப் படலம், 4.

† தானைகாண் படலம், 34

கடவுள் சிருட்டியாகிய பிரபஞ்சம் போலக் கம்பர் சிருட்டியாகிய கம்ப ராமாயணமும் நுணுகி நுணுகி நோக்குந்தோறும் நோக்குந்தோறும் நூதன நூதனமான வனப்புக்களும் உண்மைகளும் புலப்படுத்தி மேலும் மேலும் விளங்குவதாய் வியப்பும், நயப்பும் விளைப்பதா யுள்ளது.

கம்பர் பெருமை

தமிழ்க் கவிஞருள்ளே அவரவர் காலத்தவரால் **கவிச் சக்கரவர்த்தி**யெனப் பட்டப் பெயர் பெற்றார், கம்பர் போலச் செயங்கொண்டாரும் ஒட்டக்கூத்தருமாவர். ஆயின் காலக் குறிப்பு அல்லது வேறு குறிப்பின்றி வெறுமனே கவிச்சக்கரவர்த்தியென்றால், அது கம்பரையே குறிப்பதும், 'கல்வியிற் பெரியவன்' என்பது கம்பர் காலந்தொட்டுக் கம்பருக்கே வழங்கி வருவதும், அவர் எல்லாக் காலத்துமுள்ள கவிஞர் கற்றார் என்ற இரு திறத்தாருள்ளும் மிக்காரென்பதை நிலைநாட்டும். தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார், 'தெய்வப் புலமைக் கம்ப நாட்டாழ்வார்* என, வேறெப் புலவர்க்குமில்லாத தெய்வப் புலமைச் சிறப்புள்ள இருவர்களுள்ளே கம்பர் ஒருவரா யிருப்பதும் அவருடைய பெருமையை வலியுறுத்தும்.

வீர சிரேட்டரும், தனிக சிரேட்டரும், இராச சிரேட்டரும், ஏனைய சிரேட்டருமான எல்லாச் சிரேட்டர்களும், 'கவி சிரேட்டராகிய கம்பராகப் பிறந்தோ மில்லையே!' யென்று பொறாமைப்பட்டு ஏங்கி வருந்தும் மகிமை வாய்ந்தவர் கம்பர்.

* தனியன்கள். 2.

கம்பரும் தமிழரும்

திரு டி. கே. சிதம்பரநாத முதலியார்

ஒரு விஷயத்தில் ஆங்கிலேயரைப் போல் யோகக்காரர் உலகத்திலேயே கிடையாது. அவர்களுடைய பாஷை உலகம் எங்குமே பரவி இருக்கிறது. சாமானியமாக எல்லாத் தேசத்தாரும் அனுபவிக்கும்படி ஆங்கிலத்தில் ஏதோ ஒரு புஸ்தகம் எழுதி விட்டால், அதை வாசிக்கிறவர்களை லக்ஷம் லக்ஷமாகக் கணக்குச் செய்ய வேண்டியிருக்கிறது. வாசிக்கிறவர்கள் உலகத்தில் முக்கு முடைகள் எங்கெல்லாமோ இருந்துகொண்டு புஸ்தகத்தைப் பற்றி அப்படியும் இப்படியுமாகப் பேசி அனுபவிப்பார்கள். ஒரு புஸ்தகம் எத்தனை எத்தனை பேரை எல்லாமோ ஒன்று சேர்த்து ஒருமனப் பாங்குக்குக் கொண்டு வந்து விடுகிறது. இது ஆங்கில பாஷைக்கும் அதற்குரிய ஆங்கிலேயருக்கும் பெரிய யோகம்.

ஆனல் யோகத்தில் யோகம் என்னவென்றல், முந்நூறு வருஷத்துக்கு முன் எழுதிய புஸ்தகத்தை, அதுவும் தலை சிறந்த கவியை, ஆங்கிலேயர் எல்லாரும் நெடுகிலும் தக்க முறையில் பாராட்டி அனுபவித்து வருகிறர்கள் என்பதுதான். ஷேக்ஸ்பியர் என்றல் தெரியாத ஆங்கிலேயன் கிடையாது. கல்வி பயின்றவனே ஷேக்ஸ்பியரைத் தன் வாழ்க்கையோடு ஒட்டிய அங்கமாக எண்ணுகிறன். கவிஞனை இப்படி ஏகோபித்துப் பாராட்டி வருவதால், நூலுக்குச் சரியான சக்தி ஏற்படுகிறது, பயிலுகிறவர்களுக்கும் அறிவும் உணர்ச்சியும் எவ்வளவோ உயர்ந்து விடுகிறது.

ஷேக்ஸ்பியர் ஆங்கிலத்தில் தலைசிறந்த கவி என்பது பற்றி விவாதிக்க மனுஷர்களே கிடையாது. ஷேக்ஸ்பியர் தான் உலகத்திலே சிறந்த கவி என்று ஆங்கிலேயர் சொல்லத் தயங்குவதில்லை. அயர்லாந்து, ஸ்காட்லாந்து தேசத்தார் தங்களுக்கு விரோதமான இங்கிலாந்து தேசத்தான் ஷேக்ஸ்பியர் என்று ஒதுக்குவதில்லை. சமய வேற்றுமைபற்றி விரோதிப்பதும் இல்லை. ஏதோ விதிவசத்தால், ஷேக்ஸ்பியர் தமிழ் நாட்டில் தமிழ்க் கவிஞனுகப் பிறக்க நேர்ந்திருந்தால் அவர் பாடு பெரும் பாடாகத்தான் போயிருக்கும். ஷேக்ஸ்பியர் தப்பி விட்டார்.

கம்பராலோ தப்ப முடியவில்லை. தமிழ் நாட்டில் வந்து பிறக்க நேர்ந்துவிட்டது.

2

ஆயிர வருஷமாகவே தமிழர்கள் அவர்மேல் இல்லாத பழியெல்லாம் சுமத்தப் பார்த்திருக்கிறர்கள். கட்டின கதைகளுக்குக் கணக்கில்லை. கம்பருக்கு அம்பிகாபதி என்று மகனெருவன் இருந்தானும். ராஜா மகளை இச்சித்து உண்ட வீட்டுக்கு ரண்டகம் செய்தானும். கம்பரோ ராஜா மகனைக் கொன்றராம். சேர அரசனேடு சரிசமானமாக இருந்து கொண்டு சகல மரியாதைகளுக்கும் ஆளானவராய் இருந்தாராம். இருக்கும்போது அவருக்கு உயர்ந்த ஜாதிப் பிறப்பு ஒன்றும் கிடையாது என்று ருஜு ஆய்விட்டதாகக் கதை கட்டி விட்டார்கள் அந்தக் காலத்துப் புலவர்கள். பிற்காலத்துப் புலவர்களோ, ஜாதியை மாற்ற வேண்டி, பழைய சாற்றுகவி ஒன்றிலுள்ள பாடத்தையே மாற்றத் தலைப்பட்டார்கள்.

இராமாயணத்தைக் கம்பர் திருவெண்ணெய் நல்லூரில் வைத்து அரங்கேற்றிய போது ஒரு புலவர் சம்பிரதாயத்தை ஒட்டிச் சாற்றுகவிகள் மூன்று* எழுதி வாசித்தார். கம்பர் செல்வந்தராகப் பலருக்கும் கொடை கொடுத்து, வள்ளல் என்று சொல்லும்படியாகத் திருவழுந்தூரில் வாழ்ந்து வந்தார் என்று புலவர் பாடியிருக்கிறார்.

சீரணி சோழ நாட்டுத் திருவழுந் தூரில் வாழ்வோன்
காரணி கொடையான் கம்பன் தமிழினால் கவிசெய் தானே.

முதல் அடியில் 'திருவழுந் தூரில் வாழ்வோன்' என்பது, இயல்பான வார்த்தை. அதைத் 'திருவழுந் தூரு வச்சன்' என்று பிற்காலத்தில் மாற்றியிருக்கிறார்கள். இரண்டாவது சாற்றுகவியிலும் வள்ளல் என்று மறுபடியும் புகழ்ச்சியாகப் பாடியிருக்கிறார். திருவழுந்தூருக்குப் பக்கத்தில் இருந்திருக்கக்கூடிய ஒரு கிராம வட்டம் கம்பருக்குரியதாய் அவர் பெயராலே 'கம்ப நாடு' என்று வழங்கப்பட்டிருக்க வேண்டும். இதைக் குறித்து, 'கம்ப நாடுடைய வள்ளல்' என்று சொல்லுவதும் இயல்புதானே! இப்படி எல்லாம் அந்தஸ்துள்ள ஒருவரைப் புகழ்ந்து பாட வந்தவர், 'உவச்சன்' என்று சொல்லியிருப்பாரா? சொல்ல அவசியந்தான் உண்டா?

ஆரோ ஒருவர், வேண்டுமென்றோ அல்லது எழுத்தை வாசிப்பதில் ஏற்பட்ட கஷ்டத்தினாலோ பாடத்தை மாற்றிவிட்டார். இந்தப் பிழைபட்ட பாடத்தை இறுகப் பிடித்துக் கொண்டு ஜாதி நிர்ணய ஆராய்ச்சியில் புகுந்துவிட்டார்கள் புலவர்கள். சேரனுடைய சமஸ்தான வித்துவான்களோ பூர்வ காலத்தில் பாடத்தை வேறுவிதமாகத் 'திருவழுந்தூரம்பட்டன்' என்று கூசாமல் மாற்றியிருப்பார்கள். ஜாதியைக் குலைக்க அவர்களுக்கு அவ்வளவு ஆத்திரம். கம்பர் எந்த ஜாதியாய் இருந்தாலும் நமக்குக் கவலையில்லை. உலகத்தில் தலைசிறந்த ஜாதியைச் சேர்ந்தவர் அவர் என்பது உண்மை. அதாவது கவிச்சக்கரவர்த்தி—ஜாதி. வால்மீகி, காளிதாஸர், டாகூர், ஷேக்ஸ்பியர், ஹோமர் இவர்களுடைய ஜாதிதான் கம்பர் ஜாதி. இதற்கு மேலான ஜாதி இருக்க முடியாது.

3

தற்காலத்து ஆசிரியர்கள், ஜாதியின் தாரதம்மியத்தைப் பாராட்டுவதினால் அவ்வளவாகக் கம்பருக்குக் குறைவு ஏற்பட்டு விடாது என்று கருதி, வேறொரு வகையில் வேலை செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். மேலே குறித்த சாற்றுகவிகளில், முதற் செய்யுளில் கம்பரை இன்னார் என்று சொல்லிவிட்டு, இரண்டாவது செய்யுளில் கவியின் சிறப்பைக் 'கவிச் சக்கரவர்த்தி' 'நரருக் கமுதம் ஈந்தான்' என்று சொல்லுகிறார். கடைசிச் செய்யுளான மூன்றாவது செய்யுளில் அந்தக் காலத்து வழக்கின்படியும் தற்காலத்து வழக்கின்படியுமே அரங்கேற்றிய நாள், நக்ஷத்திரம், இடம், சபையோர் எல்லாவற்றையும் பற்றி ஒரு குறிப்புக் கொடுத்தார்.

எண்ணிய சகாத்தம் எண்ணூற்றேழில்

அரங்கேற்றினான் என்றார்.

எண்ணூற்றேழாவது சகாப்த வருஷம் என்றால் கி.பி.885, என்றாகும். அதாவது 9—வது நூற்றாண்டு கம்பர் காலம் என்று ஏற்படும். இப்படி 9—வது நூற்றாண்டு என்று, செய்யுளை வைத்துக் கொண்டு சொல்லுவதில் யாதொரு கஷ்டமும் இல்லை. ஆனாலும் சிலர் ஏதோ கஷ்டம் அடைந்து 'எண்ணூற்றேழு' என்பதற்கு 'எண்ணுகிற நூற்றேழு' என்று பொருள் செய்து, அதற்கு ஆயிரத்தைச் சேர்த்து, ஆயிரத்து நூற்றேழு என்பதாகக் கணக்கிட்டுக் கம்பரைப் பனிரண்டாவது நூற்றாண்டுக்குக் கொண்டுவந்திருக்கிறார்கள்.* கம்பர் காலை இன்னும் இறுகப் பிடித்து இழுத்து இருபதாவது நூற்றாண்டுக்கே

---

* கம்ப ராமாயணம் பி. நா. சிதம்பர முதலியார் பதிப்பு—பக்கம், 2.

1. நாரணன் விளையாட் டெல்லாம்
   நாரத முனிவன் கூற
   ஆரணக் கவிதை செய்தான்
   அறிந்தவான் மீகி என்பான்
   சீரணி சோழ நாட்டுத்
   திருவழுந் தூருள் வாழ்வோன
   காரணிக் கொடையான் கம்பன்
   தமிழினால் கவிசெய் தானே.

1. அம்பிலே சிலையை நாட்டி
   அமரர்க்கன் றமுத மீந்த
   தம்பிரான் என்னத் தானும்
   தமிழிலே தாலை நாட்டிக்
   கம்பநா டுடைய வள்ளல்
   கவிச்சக்ர வர்த்தி பார்மேல்
   நம்புபா மாலை யாலே
   நரருக்கின் றமுதம் ஈந்தான்.

3. எண்ணிய சகாத்தம் எண்ணூற்
   றேழின்மேற் சடையன் வாழ்வு
   நண்ணிய வெண்ணெய் நல்லூர்
   தன்னிலே கம்ப நாடன்
   பண்ணிய விராம காதை
   பங்குனி அத்த நாளிற்
   கண்ணிய அரங்கர் முன்னே
   கவியரங் கேற்றி னானே.

அருள்மிகு வேதாரண்யேசுவர சுவாமி திருக்கோயில்

வே தாரண்யம்

திருத்துறைப்பூண்டி வட்டம் — தஞ்சை மாவட்டம்

இத்தலம் தஞ்சை மாவட்டத்தில் தென்கிழக்கில் சப்தவிடங்கத் தலங்களில் ஒன்ருக விளங்குகிறது. திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரர் ஆகிய சமயப் பெரியோர்களால் பாடப்பெற்ற சிறப்புடையது. ஆடி, தை அமாவாசைகள், அர்த்தோதயம் மகோதயம் முதலிய புண்ணிய காலங்களிலும் மாசி மக நாளிலும் இவ்வூர் கடலில் நீராடிஞல் சிறந்த நற்பலமுண்டாகும். வேதங்களால் வழிபடப்பெற்ற மூடப்பட்ட திருக்கோயிற் கதவுகள் அப்பர் பெருமான் பாடலால் திறக்கவும், சம்பந்தர் பாடலால் திருக்காப்பிடவும் பெற்ற சிறப்புடையது.

இத்திருக்கோவிலுள் தென்முகம் பார்த்து வேண்டுவார்க்கு வேண்டுவன நல்கும் ஸ்ரீ துர்காபரமேஸ்வரியின் அருள் அளவிடற்கரியது.

இத்திருக்கோவிலின் உபகோவிலாக கோடியக்காடு குழகர் கோயில் விளங்குகின்றது. கடல் சூழ்ந்து விளங்கும் அழகு, தனிப்பெருமையாக விளங்குகின்றது. வைகாசி விசாக நாளில் நடைபெறும் திருமுருகப் பெருமானின் திருவிழாவில் பக்தர்களின் காவடிகளும், நோன்பும் காண்பதற்கரிய காட்சி. மறுநாள் இருபத்தைந்து வகை மகாபிஷேகம் நடைபெறும். இக்கோடியக்காட்டில் மான்கள் மிகுதி. பறவைகள் சரணுலயமும் உள்ளது. இயற்கை எழில் விளங்கும் இத்தலத்தில் ஒரு முகத்துடனும் ஆறுகைகளுடனும் அருள்மிகு முருகன் அன்பர்க்கருள் புரிகிறுன்.

யாழ்ப்பாணம் கரணவாய் வரணி ஆதீனம்
ஸ்ரீ—ல—ஸ்ரீ ச. கதிர்காம பண்டார சந்நிதி
பரம்பரை அறங்காவலர்

கே. என். சொர்ணம்
நிர்வாக அதிகாரி.

கொண்டுவந்து விட்டாலும் நமக்குக் கவலை இல்லை.

மேலே குறித்த ஜாதி நிர்ணயம் கால நிர்ணயம் எல்லாம் ஒன்றை மாத்திரம் தெளிவாகக் காட்டுகிறது. தமிழர்களாகிய நம்மவர் ஜாதி வெறிக்கும் மத வெறிக்கும் உள்ளாகி, யாரையும், ஆயிரம் வருஷத்திற்கு முன்னிருந்த மகா கவியையும், தூற்றுவதற்கு முன் வருவார்கள்; அதற்காக ஏட்டைக் கெடுப்பார்கள்; பாட்டைக் கெடுப்பார்கள்.

மேலே சொன்ன விஷயங்களைப்பற்றிப் பேசாமலே விட்டுவிடலாம்; அவைகள் நூலின் பெருமையைப் பாதிப்பன அல்லதான். ஆனல் சென்ற சில வருஷங்களாகச் சிலர் கம்பரிடத்திலும் அவர் செய்த ராமாயணத்திலும் வேண்டாத ஒரு பகைமையை உண்டாக்கிக்கொண்டு போன போன இடங்களில் எல்லாம் பிரசாரம் செய்யத் தலைப்பட்டிருக்கிருர்கள்; எழுதவும் ஆரம்பித்திருக்கிருர்கள். இந்தப் பிரசாரத்தின் ஆர்ப்பாட்டத்தினுல் எதிர்த்துச் சொல்லுவதற்கு மனமில்லாமல் அறிவாளிகளும் பொறுப்பாளிகளுங்கூட அங்கீகரித்த முறையில் ஒத்துப் பாடிவிடுகிருர்கள். சாமானிய ஜனங்கள் என்ன செய்யக்கூடும்? 'ரொம்பப் படித்தவர்களே இப்படி எல்லாம் சொல்லுகிருர்கள். உண்மைதான் போலிருக்கிறது!' என்று நம்ப ஆரம்பித்து விடுகிருர்கள். இப்பேர்ப்பட்ட விளையாட்டும் வினயமும் நாளடைவில் சரித்திர உண்மைகளாக ஆகிவிடுகின்றன. இந்த வேண்டாத விபத்துக்கள் விளையாமல், பரவாமல் இருக்கவேண்டும் என்பதற்காகத்தான் மேலே சொன்ன விஷயங்களைப் பற்றிக் குறிப்பிட நேர்ந்தது. அதுவும் மனமில்லாமல் தான் குறிப்பிட நேர்ந்தது. மேல் நாட்டில் இத்தகைய பிரசாரங்கள் நடந்தால் கேலிக்கிடமாகும்; இங்கோ மதிப்புக்கிடமாய்விடுகிறது. இது நம்முடைய ஜாதக பலன்; வேறென்ன?

4

பொதுவாகப் பண்டைக் காலத்துப் புலவர்கள் சம்பந்தமாக ஜாதி நிர்ணயம் கால நிர்ணயம் செய்வது கஷ்டந்தான். வள்ளுவரைப் பற்றியும் மாணிக்கவாசகரைப் பற்றியும், காரைக்கால் அம்மையாரைப் பற்றியும், பொய்கை ஆழ்வாரைப் பற்றியும் சரித்திரக் குறிப்பு ஒன்றுமே கிடையாது. கிடையாமற் போனுல் என்ன? அவர்கள் எழுதிய பாடல்களை விடவா வேருெரு புறம்பான குறிப்பு அவர்கள் இதயத்தோடு நம் இதயத்தை ஒட்டச் செய்துவிடும்!

கம்பர் சம்பந்தமாகச் சரித்திரக் குறிப்புக்கள் (மேலே குறித்த சாற்றுக்கவிகள் தவிர) அவ்வளவாக ஒன்றுமே இல்லை. மற்றக் கதைகள் கவிகள் எல்லாம் நேரான வார்த்தைகள் என்று எடுத்துக் கொள்ளக்கூடியவை அல்ல. ஏதோ அவ்வக்காலத்தில் உள்ள புலவர்களும் மற்ற ஜனங்களும் கம்பருடைய பாடல்களின் பெருமையையும் நயத்தையும் பற்றி வின்னியாச முறையில் சொன்னவைகளே ஒழிய வேறில்லை. அவ்வை, புகழேந்தி, ஒட்டக்கூத்தர், கம்பர் எல்லாரும் ஒரே காலத்தில் இருந்ததாகக் கற்பித்துக்கொண்டு பிள்ளைகளை 'டிரில்' வாங்குகிற மாதிரி, 'உட்காருங்கள், எழுந்திருங்கள்—ஒன்று, இரண்டு, மூன்று!' என்றெல்லாம் 'டிரில்' வாங்கிக் கதை கட்டியிருக்கிருர்கள். இவைகளை வைத்துக் கொண்டு பிற்காலத்துப் புலவர்கள் ஆராய்ச்சியில் புகுந்து விடுவார்கள் என்று தெரிந்திருந்தால் முன்னேர்கள் அவ்வாறு கதை கட்டி விளையாடி இருக்க மாட்டார்கள்.

இப்படி எல்லாம் ஊன்றிப் பார்ப்பதில் கம்பரைப்பற்றிச் சரித்திரம் இல்லாமல் போய்விடுகிறதே என்று வருத்தப்பட வேண்டியதில்லை. உண்மையில் மகாகவியின் சரித்திரம் அவர் பாடல்களில்தான் கிடக்கிறது. கம்பர் வெகு விரிவாகவே தன்னைப்பற்றிய சரித்திரம் எழுதி வைத்திருக்கிருர் என்று சொல்லலாம். கம்ப ராமாயணத்தில் அவருடைய செய்யுளான ஒவ்வொன்றும் அவருடைய உண்மையான அனுபவத்தை—இதய பாவத்தை—பளிங்கில் வைத்துக் காட்டின மாதிரி காட்டுகிறது. இதைவிடச் சிறந்த சரித்திரக் குறிப்பு ஒரு கவிக்கு இருக்க முடியாது.

ஆகவே நாம் அறிய முயலவேண்டியதெல்லாம் கம்பருடைய இதயம். இந்தப் பூமியையும் பேரண்டத்தையுமே தன்னுள்ளே வட்டமிட்டு ஓடச்செய்து அனுபவிக்கக்கூடிய அவ்வளவு விசாலமானது அந்த இதயம்.

வேதங்கள் அறைகின்ற உலகெங்கும் விரிந்தனஉன்
பாதங்கள் இவை,என்னில் படிவங்கள் எப்படியோ!

---

* (1) 'எண்ணும் நூற்றேழு' என்று உரை சொல்லுகிறதையே வியக்கிருேம். அதோடு, 'ஆயிரத்தையும் சேர்த்துக் கொள்ளுங்கள்' என்று சொல்லுகிற தைரியத்தைப் பார்த்தால் என்ன சொல்லுவதென்று தெரியவில்லை.

(2) வீர சோழிய உரை ஆசிரியர் காலம் பதினேராம் நூற்ருண்டாம். அவரும் தமக்குப் பின், நூறு வருஷம் கழித்துவரும், பனிரண்டாம் நூற்ருண்டிலுள்ள கம்பரைப் பற்றிக் குறிப்பிடுகிருர் என்ருல் அது இலக்கிய ஆரூடந்தான். இவைகளைப்பற்றி வாசகர்கள் தொந்தரவு படுத்திக்கொள்ள வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளுகிருேம்.

என்று கடவுளின் முடிவில்லாத வியாபகத்தை அளந்து காட்டுகிறார். தமிழர்களுக்கு ஆயுள் முழுதுமே ஊடாடித் திரிந்து களிப்பதற்கு ஓர் உண்மை உலகம் அதாவது பாவ உலகம் கிடைத்திருக்கிறது. ஷேக்ஸ்பியரின் இதய உலகத்தை ஆங்கில மக்கள் ஏகோபித்து அனுபவிக்கிற மாதிரி கம்பரது இதய உலகத்தைத் தமிழர் ஏகோபித்து அனுபவிப்பார்கள் என்பது ஏற்பட்டுவிட்டால் நமக்குக் கிடைக்கக்கூடிய உல்லாச உயர்தர வாழ்க்கை மாதிரி வேறு யாருக்கும் கிட்டாது என்று சொல்லலாம். இதற்கு ஒப்பாகச் சொல்ல வேண்டும் என்றால், கிரேக்க பாஷை வழக்கில் இருந்தபோது ஹோமர் பாடிய கவியைப் பாடிப்பாடி கிரேக்கர்கள்—மேதாவிகள் முதல் சாமானியப் பெண்டுகள் வரை—அனுபவித்து வந்ததைத் தான் சொல்லலாம். இது மிகையல்ல. கம்பர் அவ்வளவு எளிமையோடும், ஆடவர் பெண்டிர் எல்லாருடைய இதயத்தைத் தட்டும்படியான அவ்வளவு தெளிவான பாவத்தோடும் கவிகளைப் பாடியிருக்கிறார். அவருக்கும் நமக்கும் ஆயிரம் வருஷம் இடையே கிடப்பதால் அங்கொரு வார்த்தை இங்கொரு வார்த்தை நம்முடைய வழக்கோடு ஒட்டாமல் இருக்கலாம். மற்றப்படி பாஷை வீட்டுப் பாஷையே, கம்பராமாயணத்தை ஆர அமர பாவத்தை அழுத்திப் பாடினால் யாருமே அறிந்தனுபவிக்க முடியும் என்பது நம்மில் பலரும் கண்கூடாகக் கண்டதே.

5

ஆனாலும் கம்ப ராமாயணப் புஸ்தகத்தை இப்போது இருக்கிறபடி வாசித்து அனுபவிப்பது கஷ்டமான காரியமே. சந்திகளையும் சீரையும் சேர்த்து அச்சிட்டிருப்பதால் வாசிப்பது யாருக்குமே கஷ்டம்; சாமானிய மக்களுக்கு முடியவே முடியாது. இந்தக் கஷ்டத்தை ஒருவாறு இனி நிவர்த்தி செய்து கொள்ளலாம். பழைய காலத்துப் பிடிவாதக்காரரான சந்திப்புலவர்கள் காலம் போய்விட்டது. 'பற்றேய்த்துவா—காற்றுட்டுத்தா—காறள்ளாடுது—பாறருவாருண்டோ—முட்டைத்துவிட்டது* என்று எழுதியும் பேசியும் வந்த காலம் போய்விட்டது. சந்தி பிரித்துச் சீர்பிரித்துச் செய்யுள்களை எழுதலாம், அது தமிழுக்குத் துரோகம் அல்ல என்று துணிந்து சொல்ல ஆரம்பித்துவிட்டார்கள். ஆகவே ஒரு கஷ்டம் எளிதில் நீங்கிவிடும்.

6

தமிழ் நூல்களில் பாடம் எத்தனையோ விதத்தில் சிதைந்து கிடக்கிறது. ஆனால் கம்ப ராமாயணத்தில் பாடம் சிதைந்து கிடக்கிற மாதிரி வேறொன்றிலும் பார்க்க முடியாது. சில பாடல்களில் சீருக்குச் சீர் பாடபேதம். பாடபேதங்கள் குறித்த எந்தப் பதிப்பைப் பார்த்தாலும் அது தெரியவரும். கண்ணை எடுத்துக் காதில் வைத்திருக்கும்; அப்படியே காதை எடுத்து மூக்கில் வைத்திருக்கும்; கையைப் பிய்த்து இடுப்பிலும், காலை வாங்கித் தோளிலும் தொங்கவிட்டிருக்கும். 'ஆப்பரேஷன்' செய்து உருவம் ஆக்குவது என்றால் எளிதா? 'போதும் போதும், கம்ப ராமாயணம் போதும்!' என்று தோன்றிவிடும். பழைய ஏடுகள் ஏதோ ஒரு வகையில் வழி காட்டலாமே ஒழியப் பூரணமாகத் திருப்தி கொடுத்த பாடாக இல்லை. யூகித்து யூகித்து ரொம்பவும் சிரமப்பட்டுத்தான் பாடங்களைக் கண்டு பிடித்துத் திருத்த வேண்டியிருக்கிறது.

பாடபேதங்கள், அதாவது பார்த்து எழுதுவதில் ஏற்பட்ட பிழைகள், இருந்துவிட்டுப் போகட்டும். கம்பர் பாடாத கவிகளை ஏட்டில் புகுத்தியிருக்கிறார்களே! அதுவும் எத்தனை எத்தனையோ! இதனால் பாத்திரங்களும் கட்டங்களும் உருக்குலைந்து போயிருக்கிறதைப் பார்த்தால் ஏதோ கம்பர் மேல் துவேஷம் கொண்டே புலவர்கள் நெடுகிலும் ஆயிர வருஷமாகச் செய்துவந்த அக்கிரமம் என்று சொல்லத் தோன்றும். இந்தச் செருகு கவிகளையும் சேர்த்து ஒரு கட்டத்தை வாசித்துப் பார்த்தால் கம்பரானவர் கவி அல்லர் என்று மாத்திரம் தோன்றாது, பைத்திய ஆஸ்பத்திரியில் வைத்துப் பந்தோபஸ்துச் செய்ய வேண்டிய ஆசாமி என்றே தோன்றும். செருகு கவிகளை எல்லாம் அறவே களைந்துவிட்டுப் படித்தாலொழியக் கம்பரை உணர்ந்தோம் என்று சொல்ல முடியாது. இந்த விஷயத்தில் பேரம் பண்ணிக் கொண்டிருந்தால் கம்பருக்குத் துரோகம் செய்கிறோம் என்றுதான் ஏற்படும். கம்பருடைய இதய பாவங்களையும், ஓசை தாளம் ஆகிய இசைப் பண்புகளையும், கை லாகவங்களையும், பார்த்தனுபவித்த சாதனம் உடையவர்கள் செருகு கவிகளைக் கண்டு பிடித்து ஒதுக்கிவிடலாம். இது ஒருவாறு சித்தி ஆவதுதான். கம்பரது கவி ஒவ்வொன்றிலும் இருக்கிறது அவர் முத்திரை. ஷேக்ஸ்பியர் கவிகளில் முத்திரை யிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். மகா கவிகள் எல்லாரிடத்திலுமே முத்திரை என்று சொல்லக்கூடிய

---

* 'பல் தேய்த்து வா—கால் துட்டுத் தா—கால் தள்ளாடுது—பால் தருவார் உண்டோ—முள் தைத்துவிட்டது.'

தனித்த ஒரு அனுபவ தத்துவம் உண்டு. கம்பருடைய தனித்த அனுபவ தத்துவம் ஒரு செய்யுளில் இல்லை என்றால் அந்தச் செய்யுளைத் தள்ளி விடுவதற்கு யோசிக்கவே கூடாது. வைர உட்டாணிகளால் செய்த பதக்கத்தின் இடையே காசுக்கு நாலாக வாங்குகிற கண்ணாடித் தரிப்பு இருந்துவிட்டால் அவைகளை உடனே பிடுங்கி எறியவேண்டியது தானே முறை. அல்லாத பக்ஷம் குறுணி வந்து கோட்டையைக் கெடுத்தது என்றபடி பதக்கமே தரிப்புப் பதக்கமாய்ப் போய்விடும். செருகு கவிகளோடு கலந்திருப்பதால் கம்ப ராமாயணமும் இந்தச் சிக்கலான நிலையில் தான் இருக்கிறது.

7

பாடபேதம் போகட்டும். செருகு கவி போகட்டும். அவைகளைத் திருத்திக் கொள்ளலாம், களைந்து கொள்ளலாம் ஆனால், கம்பர் கவிகளில் எத்தனையோ விடுபட்டிருக்கின்றன. நம்மால் அவைகளை நிரப்ப முடியாது. அதற்குத் தெய்வீக சக்தியல்லவா வேண்டும்! போனது போனதாகத்தான் முடிந்துவிட்டது. இந்த நஷ்டத்தை இவ்வளவு என்று கணக்கிட்டுச் சொல்ல முடியாது. இந்த நஷ்டத்துக்கும், முத்தொள்ளாயிரம் இரண்டாயிரத் தெழுநூற்றில் இரண்டாயிரத் தறுநூறு தொலைந்துபோனதற்கும் தமிழ் மக்கள் என்றென்றும் துக்கம் கொண்டாட வேண்டியதுதான். ஒருகால் முத்தொள்ளாயிர ஏடு கிடைத்தாலும் கிடைக்கலாம்; குக்கிராமம் எதிலாவது இறப்பில் செருகிக் கிடைக்கலாம்: வெளியாகியும் விடலாம். கம்ப ராமாயணம் சம்பந்தமாக அவ்வித நம்பிக்கை வைக்க இடமே இல்லை.

இப்படியாகப் பாடல்கள் தொலைந்து போன போதிலும் மிஞ்சியுள்ள பாடல்கள் ஆயிரக்கணக்காகவே இருப்பதாலும், கதை தெரிந்த கதையாய் இருப்பதாலும், ஒவ்வொரு செய்யுளுமே பட்டம் பட்டமாகத் திருப்பிப் பார்த்து அனுபவித்துக்கொண்டே இருக்கக்கூடிய தனி இசைத் தமிழ்க் கவியாக (மேல் நாட்டார் 'லிரிக்' என்பார்கள்) இருப்பதாலும் கவிகளெல்லாம் ஆயுள் நாள் முழுதுமே பாடியும் பாடக் கேட்டும் அனுபவிக்கக் கூடியவைகள்தான். இவை தமிழருக்கு நிலையான செல்வந்தான்.

கம்ப ராமாயணம் பற்றிய விபரந் தெரியாத சிலர், அது வால்மீக ராமாயணத்தின் மொழிபெயர்ப்புத்தானே என்று அடிக்கடி கேள்வி கேட்கப் பார்க்கலாம். வால்மீக ராமாயணத்தின் மொழிபெயர்ப்பையும் கம்ப ராமாயணத்தையும் ஒத்துப் பார்ப்பதற்கு எந்தக் கட்டத்தையும் எடுத்துக் கொள்ளலாம். ஒப்பிட்டுப் பார்த்தால் ஏதோ ராமர், சீதை, இலக்குவன், பரதன், ராவணன் என்றெல்லாம் இரண்டிலும் வரும். குணாதிசயங்களை நோக்குவோமானால் இனம் கண்டுபிடிக்க முடியாதபடி அவ்வளவு வித்தியாசமாயிருக்கும். வால்மீகியின் சீதை வேறு, கம்பரது சீதை வேறு. அப்படியேதான் ராமர், பரதன் எல்லாருமே. கட்டங்களை வகுக்கும் போது, கம்பர் தம் இஷ்டம்போல், பாத்திரங்களின் பாவங்களுக்குத் தெளிவும் வேகமும் உண்டாகும்படி மாற்றி வகுத்துக் கொள்ளுகிறார். முக்கியமாகப் பாத்திரங்கள் பேசும்போது தமிழுக்குரிய தனியான தொனியோடு பேசுவார்கள். அவர்களுடைய பேச்சுக்கென்றே, பாவத்துக்கென்றே, சொல்லையும் தாளத்தையும், செய்யுள் உறுப்புக்களையும் தமிழ்த் தெய்வம் ஆதியில் வகுத்ததோ என்று சொல்லத் தோன்றும். உதாரணமாக, அனுமாருடைய உயர்ந்த உருவத்தையும் சக்தியையும் பார்த்துச் சீதை வியக்கிறாள்: 'என்னைக் கண்டுபிடிக்க நீ ஒருவன் இல்லாது போயிருந்தால் இராமருடைய அருளை யார் அறியப் போகிறார்கள்? அவருக்குப் புகழ் ஏது? கிடையாதுதான்: ஆனால் உன்னுடைய பராக்கிரமம் முழுவதும் தெரிய வேண்டுமானால் இந்த இலங்கை ஏழு கடலுக்கும் அப்பால் இருந்திருக்க வேண்டாமா? என்கிறாள்.

'ஆழி நெடுங்கை ஆண்தகைதன்
அருளும் புகழும் அழிவின்றி,
ஊழி பலவும் நிலைநிறுத்தற்(கு)
ஒருவன் நீயே உளையானாய்!
பாழி நெடுந்தோள் விரா!நின்
பெருமைக் கேற்பப் பகையிலங்கை
ஏழு கடற்கும் அப்புறத்த(து)
ஆகா திருந்த(து) இழிபன்றோ!'

இந்தச் செய்யுளைப் பாடப் பாட, அதாவது ஆர அமர பாவத்தை ஒட்டிப் பாடப் பாட, என்ன தோன்றும்! சீதை பேசுவதற்கென்றே சொல், இசை, எதுகை மோனைகளைத் தமிழ்த் தெய்வம் அமைத்ததாகத் தான் தோன்றும்.

இந்தமாதிரிப் பாடல்கள் ஆயிரக்கணக்காக அல்லவா இருக்கின்றன! அவைகள் தமிழ் மக்கள் பூமியில் தோன்றிய ஆதி காலத்திலிருந்தே அவர்கள் மனத்தில் எழுந்த உணர்ச்சி தத்துவங்கள் எல்லாமே நிறைந்து பரிமளிக்கிற பாடல்கள். ஷேக்ஸ்பியரை ஆங்கிலேயர் ஏகோபித்து அனுபவிக்கிறது போல நாமும் ஒன்றுபட்டுக் கம்பர் பாடல்களைத் தமிழ் வழங்கும் நாடெங்கும் தீவகம் எங்குமே பாடி அனுபவிப்போமானால் தமிழுலகம் வானுலகமாக மாறாதா!

'கம்பராம் புலவரைக் கருத்தி ருத்துவாம்.'

கம்பர் திருநாள்

திரு. சு. வையாபுரிப் பிள்ளை,

தமிழிலக்கிய சரிதத்திலே கம்பர் பெருமானது இராமாயண அரங்கேற்றத்தோடு எல்லா வகையினும் ஒத்த சிறப்புடைய பிறிதொரு நிகழ்ச்சி இல்லையெனக் கூறுதலே தகும். இதனோடு ஒருவகையான் ஒப்பிடத்தக்கது வள்ளுவப் பெருந்தகையார் தமிழ்-வேதம் அருளிச்செய்த பெரு நிகழ்ச்சியென்பது யாவரும் அறிவர். தெய்வப் புலமைத் திருவள்ளுவரது அறிவின் மாட்சி அதிசயிக்கத்தக்கதே. அவரது பேரறிவு எத்துணைப் பெரியாரையும் தலைவணக்குமியல்பினது. தேவிற் சிறந்த திருமாலைப் போல, இத் தெய்வப் பெரும்புலவரும் தமது நுண்ணிய மாட்சிமிக்க புலங்கொண்டு அறிவுலகினை முற்ற அளந்து எல்லை கண்டனர். மக்கட்கு உறுதி பயப்பனவற்றை ஆணிமுத்தன்ன செஞ்சொற்களால் தெளித்துத் தந்தருளினர். வாழ்வின் பெரு நோக்கங்களை அகன்று கூர்த்து விளங்கும் தமது அறிவினாற்றலாலும் பரந்து கடைபோகிய தமது கல்வி கேள்விகளின் பெருமையினாலும், ஆழ்ந்து சிறந்து முதிர்ந்த தமது அனுபவ வாயிலாலும், நுண்ணிதின் ஆராய்ந்து தெரிந்து தமிழ் மக்கட்கு உதவியருளினர். எவ்வகையினருக்கும் எவ்வகை நிலையினும் துணை நின்றுதவும் அறிவுரைக் களஞ்சிய மொன்றினை அளித்தருளினர் இவ் அருட்பெருஞ் செல்வர். இவர் இயற்றித் தந்த திருக்குறட் பெருநூலிற் காணும் ஒவ்வொரு குறளும் தனித்தனியே செப்பஞ் செய்யப்பெற்றதோர் மணியேயாகும். ஒவ்வொரு குறள்மணியும் உள்ளத்திருளகற்றி யொளிருந் தன்மையது. ஓத இனிதாயும், கேட்க இனிதாயும், உணர இனிதாயும் உள்ளது இத் தெய்விகப் பெருநூல். இதனை யியற்றியருளிய புலமைத் தெய்வத்திற்குக் கோயிலெடுத்துப் போற்றியும் அவர் திருவவதாரஞ் செய்தருளிய திருநாளினைத் தமிழ்-மக்களது விசேஷ தினங்களுள் ஒன்றாகப் பாராட்டியும் வருவது தமிழுலகத்திற்கு ஓர் பெருமையாகவே என்றும் உள்ளதாகும்.

இத் தெய்வப் புலவரது திருவடிப் பரிசத்தால் தமிழுலகு பரிசுத்த மெய்தியதற்குப் பல நூற்றாண்டுகட்கு முன்பாகவே, அவர் வகுத்தருளியது போன்ற உத்தம வாழ்வின் பெரு விதிகளுக்குத் தனி நிலைக்களமாகிய புருஷோத்தம னொருவனைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று பாரத மாதா பெருந்தவம் புரிந்து வந்தனள். ஆரிய சமுதாயத்தின் மனோபாவனையானது தானறிந்த ஜாதீய-வீரர்களுக்குள் இப் புருஷோத்தமனை கோவைப்படுத்தி அலங்கரிப்பதன் கண்ணும் அநேக நூற்றாண்டுகளாக முயன்று வந்தது. இம் முயற்சியின் பயன் முதன்முதல் உருவம் பெறத் தொடங்கியது வால்மீகியென்னும் மஹரிஷியின் காலத்தேதான். 'ஆதிகவி' யென்று இப்பொழுது போற்றப்படும் இம் மஹான் தமது அதியற்புத கவித்வ-சக்தியினாலே ஆரியாவர்த்தத்தில் பரந்து வழங்கிய அச் சரித்திரங்களை யெல்லாம் ஒருநிலைப்படுத்து அழகு

பெறப் புனைந்து இராமாயணமெனப் பெயர் தந்து இதிஹாஸமாக இயற்றித் தந்தருளினர்.

இம் மஹரிஷியின் காலத்திற்குப் பின்பு, ஆரிய-சமுதாயம் விரிந்து பெருகியது; பரத கண்ட முழுவதும் பரந்து சென்றது. தனித் தனியாய்ப் பலவேறிடங்களில் வாசஞ் செய்து கொண்டிருந்த சமுதாயங்கள் பல ஆரிய சமுதாயத்தோ டொன்றுபடவே, இந்து சமுதாய மென்னும் சிறப்புடைப் பெருஞ் சமுதாய மொன்று பரிணமித் தெழுந்தது. இச் சரித்திர கதிக்குத் தமிழ்ச் சமுதாயமும் உட்பட்டு இந்து சமுதாயத்தின் உத்தம-அங்கங்களுள் ஒன்றாக விளங்கத் தலைப்பட்டது. தனித் தமிழ்மக்கள் உயரிய நாகரிகம் படைத்தவர்; இயற்கை மதி நலம் முதலிய அருஞ் சிறப்புக்கள் பெரிதும் வாய்ந்தவர்; கவித்வ சக்தி நிரம்பவுடையவர். இந்து சமுதாயத்தின் பெருமை இத் தனித் தமிழ்மக்களது கலப்பினால் மிக அதிகரித்தது. அதன் ஆத்மசக்தி உர மிகுந்தோங்கியது; அதன் பாவனாசக்தி வளம்பயின்று விரைவுகொண்டு புதுமை நாடியது; அதன் கவித்வ சக்தி நூற்றுக் கணக்கான விவித வர்ணங்களுடன் அதி மனோஹரமான ரூப வைசித்திரியங்களாகத் தோற்றஞ்சான்று நின்றது. தமிழ்ப் பண்பு மிக்க திராவிட - இந்து சமுதாயத்தின் உள்ளத்தே புதிய உணர்ச்சிகள் கிளர்ந்து பரந்தன; பௌத்தமதம் பரவலுற்றது; ஜைன - சமயம் நிலைபெற விரும்பிப் பெரிதும் முயன்றது. வைதிக-சமயம் ஆழ்ந்து நிலைகூடி வெற்றியை யெதிர்நோக்கி நின்றது. வீரமுங் காதலும் விளைந்த தமிழ் நிலத்தே இப்பொழுது அன்பும் அருளும் விளைவுபெறத் தொடங்கிற்று. பக்தி ஊற்றுக்கண் திறந்து சுரந்து பெருகுவதாயிற்று. இங்ஙனமாக, இரண்டு ஜீவநதிகள் ஒன்று கூடிப் பெருகி ஓடுவதைப் போல, ஆரியர் நாகரிகமும் தனித் தமிழர் நாகரிகமும் பேதமின்றிக் கலந்து ஒன்றுபட்டுத் தமிழ் நாட்டிலே பிரவஹிப்பதாயிற்று. காலம் விரைந்து சென்றது. நாகரிகக் கலப்பின் ஆரம்பத்தில் நிகழ்ந்த கலகம், பரபரப்பு முதலியன யாவும் நாளடைவில் மறைந்தொழிந்தன. தக்ஷிண இந்து சமுதாய வாழ்வு அமைதியுற்றுச் சென்றது. தமிழ் மக்கட்குரிய மனப்பண்பு, அநுபவம், நாகரிகம், இவற்றிற்குத் தக்கவாறும், காலகதியின் விளைவுக்குத் தக்கவாறும், நூதன சிருஷ்டிகள் முளைத்துச் செழித்தன. பழமையும் பெருமையும் பொருந்திய இரு பெரு நாகரிகங்கள் ஒன்றுபட்டதன் முதற் பெரும் பயனாக வள்ளுவரென்னும் புலமைத் தெய்வம் தோன்றித் தமிழ் வேதத்தை அருளிச் செய்து மறைந்து சென்றது. பாரதமாதாவின் கனவு நனவாகுங் காலம் நெருங்கியது.

பன்னெடுங்காலமாக ஆரிய சமுதாயத்தின் உள்ளத்தே ஊறிக்கிடந்து வான்மீகி மஹரிஷியால் உருவமைந்த இராமசரிதம் இப்பொழுது தன் பூர்வகதியை யனுசரித்துத் தக்ஷிண இந்து-சமுதாயத்தின் உள்ளப்பரப்பிலேயும் அழுந்திக்கிடந்து ரஸம் ஊறிக் கனிவதாயிற்று. புதுவதாகிய மனோபாவனையால் புதுக் கோலம் புனையப் பெற்றது. பாரத தேவி அரிதிற் றெரிந்து கொண்ட புருஷோத்தமனது சிறந்த குண விசேஷங்கள் நன்கு புலப்படுமாறு நூதன சம்பவங்கள் அழகுபெறச் சேர்க்கப் பெற்றன. இராமபிரானது அபூர்வ குணாதிசயங்களும், அரிய வீரச் செயல்களும், தியாக புத்தியும், மக்களது உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. இவரது பேரொளித் திருமேனியானது தெய்வ மணத்தாற் கமழ்ந்தது. உயரிய மக்கட் பண்பும், உயரிய தெய்வப்பண்பும் ஒருங்கு சிறந்து விளங்கத் தொடங்கியது. இவரது மஹிமையும் பூர்த்தி யெய்தியது. பக்தி நிரம்பிய நம் மூதாதையர்களது உள்ளத்தே, இராமபிரான் தெய்வமாகவே குடிகொண்டு நின்றனர். இராம சரிதத்தில் வழங்கிய இதர கதா பாத்திரங்களின் குண விசேஷங்களும் சிறிது சிறிது பேதமெய்தின. இராமாயணம் பல வகையானும் செப்பமெய்தி ஜன ஸமூகத்தில் வழங்கலாயிற்று. நாடகமாகவும் நடித்து வரப் பெற்றது. நடிக்கப் பெறவே, இத் திவ்விய சரிதம் புது நலங்கனிந்து துளும்புவதாயிற்று. கல்லிடைகளிலே கசிந்து பிறந்து சிற்றருவியாய்ச் சிற்றோடையாய்ப் பேரருவியாய்ப் பின்னர் நதியாய்ப் பல சிறு நதிகளோடு சங்கமித்துப் பெரு நதியாய் இருகரையும் புரண்டு பெருக்கெடுத்தோடும் மாரிக் காலத்துப் பேராறு போல, இராம சரித்திரமும் ஆரிய சமுதாய உள்ளத்கின் அடிப் பரப்பிலே சிறிதளவிற் றோன்றிப் பின் நாளாவர்த்தியில் வரவரப் பெருகி நிரம்பித் தக்ஷிணத்திற் கரை ததும்பிப் பெருக்கெடுத்துச் செல்லுவதாயிற்று. ஆயிரக் கணக்கான வருஷங்களுக்கு முன் சமுதாய உள்ளத்தில் இடப்பெற்ற இராம கதையின் வித்தானது முளைத்துச் செழிப்புற வளர்ந்தோங்கித் திண்ணிய கவடுகள் பல திசைதொறும் போக்கிப் பசேலெனத் தழைத்துத் தண்ணிழல் பரப்பி வானளாவி நின்று தனது பூர்ண-ஆகிருதியை யடைந்தது. தக்ஷிண இந்து-சமுதாயத்தின் உள்ளப் பரப்பிலே கருத்துலகிலே—இராம சரிதம் மேற்கூறியவாறு அங்க-பரிபூர்த்தியை யெய்திய

போதிலும், வாசாரூபமான காவியவுலகிலே தக்க கோலத்தோடு வெளிப்பட்டுத் தோன்ற வில்லை. வாசா ரூபமாகப் பலப்படுவதற்கு உத்தமப் பெருங்கவிஞ ஒருவனை அவாவி நின்றது.

இந்நிலையிலே, தென்னாடு செய்த அருந் தவத்தினாலும், தமிழன்னை பன்னெடுங் காலமாகத் திரட்டிவைத்த அரும் புண் ணியத்தின் பெரும்பயனாலும் கம்பர் பெரு மான் தோன்றியருளினர். அவரது ஜன னத்தைத் 'தெய்வத்தோற்றம்' என்றுதான் விசேடித்துக் கூற வேண்டும். பிரகிருதி தேவி தனது அருள்வளம் அனைத்தையும் இவர்பால் வரையாது பொழிந்தனள். 'கரு விலே திருவுடையவர்' என்பதற்கு இவ ரிடத்தன்றி யேனையோர்பால் பொருள்நிரம் பக் காணுதலரிது. இயற்கையிலேயே பேர் அறிவு படைத்தவர். 'தொட்டனைத்தூறு மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத்தூறு மறிவு' என்பது பொய்யாமொழியாகலின், தம் காலத்து வழங்கிய அருங்கலைகள் அனைத்தையும் முற்றக் கற்றுத் தமது அறிவினது அளவினையும் ஆற்றலையும் முன் பின் ஒப்பின்றிப் பெருக்கிக் கொண்டனர். தமது தாய் மொழியை முற்றக் கற்றத னோடு அமையாது, வடமொழிப் பயிற்சி யும், நிரம்ப வாய்ந்து விளங்கினர். தம்மோடு ஒப்பாரு மிக்காரு மில்லாத பெருங் கல்வியாளராய்ப் புலமை முற்றிய காரணத்தினாலே, 'கல்வியிற் பெரியவன் கம்பன்' என்னும் முதுமொழி காலதேச வர்த்தமானத்தால் அளவு படாத வோர் பொதுவுண்மையாய் வழங்குதலாயிற்று. உணர்ச்சி-வலி முதலிய பிற மனநலங்களும் இவர்பால் நிரம்பியிருந்தன. மக்களது உள்ளமாகிய வீணையில் எத்தனை வகையான உணர்ச்சி பேதங்கள் எழக்கூடுமோ அவை யனைத்தும் தமது சங்கற்ப மாத்திரையினாலே எழுந்து இனிது சப்திக்கச் செய்யும் பேரிசை யாண்மை பெற்றனர். அகத்தும் புறத்தும் காணப்படுகின்ற சௌந்தர்ய வைபவங்கள் அனைத்தையும் நுண்ணிதிலுணர்ந்து ஆழ்ந்தனு பவித்து ஆனந்த சரீரியாய்த் தோன்றினர். இவரது பாவனாசக்தி எல்லையின்றி அகன்று பரந்தது; கொள்ளக் குறையாத பெருங் கடல் போன்றது; எவ்வுலகத்தினுஞ் சென்று சஞ்சரிக்க வல்லது; எவ் வகைப் பொருளி னையும் எவ்வகை நிலையினையும் மனக் கண் முன்னே தெளிவாய்ப் புலப்படுத்துச் சித் திரிக்கும் சிறப்பியல் வாய்ந்தது. அறிவின் பெருமையினாலும், உணர்வின் பெருமையி னாலும், பாவனா சக்தியின் பெருமையினாலும், இவரது கவித்வம் முதிர்ந்து கனிந்தது. ஸ்வரங்களும், ராகங்களும், வர்ணங்களும், கீர்த்தனங்களும் ஒன்றின்மேலொன்றாய்ப் படிப்படியாய் இசைச் செல்வத்தோடு பொங்கி வருதற் பொருட்டு நலம் நிரம்பி நின்ற வீணை போல, இவரது பண்பு மிக்க உள்ளந் தானும், கவித்வ சக்தியின் வேகத்தால் பண் கனிந்தூறும் இனிய கருத்துக்கள் அடுத்தடுத் தெழுந்து ஒன்றேடொன்று இசைந்து நவநவ மான கானவிலாசத்துடன் ஒழுகிவரும் பக்குவ மெய்திற்று. மதுரமிக்க இவ் இருதய கானத்தை யுணர்த்துதற்கென்றே அமைந்த தென்னலாம் இவரது அரிய சொற் செல் வம். தமிழணங்கு இவ் அருந்திறற் பெரி யாரது குறிப்புணர்ந்த மாத்திரையில், அவர் விரும்பிய வண்ணம், இன்சுவை கனிந்த நன் மொழியினைத் தட்டின்றி யுதவிவரக் காத்து நின்றனள். தமிழ் மொழியின் இனிமையினையும், அழகினையும், ஆற்றலை யும், இவர்போல் முற்ற உணர்ந்தார் பிறர் யாரும் இல்லையென்றே கூறலாம். தமிழ் மொழி இவரது தனியரசினுக்கு அன்புற் றடங்கிநின்று குற்றேவல் புரிகுவதாயிற்று.

இங்ஙனம் உத்தமப் பெருங்கவிஞர்க்குரிய உத்தம லக்ஷணங்க ளனைத்தும் ஒருங்கு நிரம்பி விளங்கினர் கம்பர் பெருமான்.

பாரத தேவியின் அருந்தவம் முற்றுப் பெறுங் காலமாயிற்று. அவ் அம்மை பல நூற்றாண்டுகளாக ஆசையொடு எதிர்நோக்கி யிருந்த ஸம்பூர்ண-ராமபிரானை வாசாரூப மாக உலகினர்க் களிக்கக் கம்பர் பெரு மான் திருவுளம்பற்றினர். எத்தகைய மங்கல நன்னாளில் நமது கவிஞர் இங்ஙனம் எண்ணித் துணிந்ததென யாவரால் அளவிட்டுரைக்கத் தகும்! தம்முயிர் போற் கம்பர் பெருமானைப் பாதுகாத்துத் தமக்கும் தமிழ்க்கும் அழி யாப் புகழ் தேடிக்கொண்ட சடையப்ப வள்ளலார் தூண்ட இராமசரிதம் பாடுங் கருத்து எழுந்த தெனச் சிலர் கூறுவர். ஆனால் இத் தெய்வமாக்கதையைப் பாட வேண்டுமென்று கம்பரது உயிரே அளவு கடந்த ஆசை கொண்டிருந்தது என்பது தான் உண்மை. 'ஆசைபற்றி யறைய லுற்றேன்' என்றே நமது கவிஞர்சிகா மணியும் நமக்கு உணர்த்துகின்றார். பிறர் யாரேனும் வேண்ட இத்தெய்வ நறுங் கனி ரஸம் ஊறிப் பழுத்ததாகமாட்டாது. மேலும், இப் பெருங் கருத்துக் கம்பரது இளமைப் பிராயத்திலேயே அவரது திரு வுள்ளத்தில் தோன்றியிருத்தல் வேண் டும். இளமைதொட்டே தம்மை இராமா யணத்திற்கெனத் தத்தஞ் செய்தனர். தமது வாழ்வின் தனிப் பெரு நோக்கம் இராம காதையை யியற்றுதலே யென்று கடைப்பிடித்தனர். இவரது சிந்தை

இராமசரிதத்தையே சுற்றிச் சுழன்றது; இவரது சொற்கள் யாவும் இராம சரித்திரம் பற்றியே விளைந்தன; இவரது செயல்கள் யாவும் இராம சரிதத்தை முற்றுவிக்கும் பொருட்டே எழுந்தன.

'ஆரே யெனுமொன்று சொல்லத் தொடங்கினு மவ்விடத்துன்
பேரே வருமென்ன பேறுபெற்றேன் பெரு நான்மறையின்
வேரே மிதிலையின் மின்னெடும் போய் வெய்ய கானடைந்த
காரே கடல்கொளுந்தச் சிலைவாங்கிய காகுத்தனே'

என்ற அழகிய செய்யுளின் பொருள் கம்பர் பெருமானது திருவுள்ளத்தன்மையை நினைக்கும்பொழுதுதான் நமக்குப் புலப்படுகின்றது.

'உண்ணும் நீருணு முயிரினு மவனையே யுகப்பார்'

என்ற தெய்வத் திருவாக்கின் இன்னிசையிலே நமது மனம் கட்டுண்டு கிடப்பதன் காரணம் இப்பொழுதுதான் நாம் அறிகின்றோம். இவரது அகன்று பரந்த அக உலகிலே இராம சரிதமொன்றே தனியாட்சி புரிந்துவந்தது. காலம் அளவு முதலிய வரையறையின்றிச் செவிநுகர் கனிகளைச் சொரிந்து தரவல்ல கம்பரென்னும் கற்பக தருவினை, அது வெயில் முதலியனவற்றால் வாடி வருந்தாதபடி, நீர்பெய்து பாது காத்துவந்த சடையப்பவள்ளலார் தாமும் இராம சரிதத்திற்கு அடுத்தபடியாகவே நம் கவிஞர் பெருமானது அன்பிற்குரியராயினர். பல வருஷங்களாக, இரவும் பகலும், இராமாயண விஷயத்தையே கம்பர் சிந்தனை செய்து வந்தாராதல் வேண்டும். கதைப் போக்கினை அழகுபெற ஒழுங்குபடுத்துதலினும், பலவேறு கட்டங்களில் நிகழும் சம்பாஷணைகளின் முக்கியாம்சங்களைத் தெரிந்தெடுத்து அழகுபடுத்துதலினும், கதாபாத்திரங்களின் குண விசேஷங்களை அவ்வவர்க்குரிய சொற்செயல் முதலியவற்றால் விளங்க அமைப்பதிலும், இவர் வாழ்வு காலத்தின் முற்பகுதி கழிந்திருத்தல் வேண்டும். இராம சரிதம் என்னும் புண்ணிய தீர்த்தத்திலே இவர் தோய்ந்து தோய்ந்து அதன்கண் தம்மை ஊறவைத்திருத்தல் வேண்டும். தம்மை இராமசரித மயமாக மாற்றியிருத்தல் வேண்டும். பலரும் இவரைப் பித்தரெனவும் பேதை யெனவும் கூறுமாறு தமது உளங் கோயில்கொண்ட தெய்வப் பெருஞ் சரிதத்திலே ஈடுபட்டுப் பக்தராய் விளங்கினர்.

'பித்தர் சொன்னவும், பேதையர் சொன்னவும்
பத்தர் சொன்னவும் பன்னப் பெறுபவோ!''

என்று நம் கவிஞர்பெருந்தகை கூறுவதன் குறிப்பு உணரத் தக்கது. இவர்தம் பெருங் காப்பியத்தைப் பாடியது பிறரது ஆணையை மேற்கொண்டன்று: பிறர் கேட்டு உளங் குளிரும் பொருட்டு மன்று; தமது ஆத்மதாகத்தைத் தணிக்கும் பொருட்டுத் தாம் பெய்துகொண்ட கானவர்ஷமேயாகும் இவரது 'இராமாவதாரம்'. இப் பெருந்தகையாரது கவித்வ சக்தி இராம சரித்திரத்தை அலங்கரித்தற் பொருட்டாகவே அரும்பி மலர்ந்து ஒளி சிறந்து மணங் கமழ்ந்து விளங்கியதாகும். இத் தெய்வ கீதத்தைப் பாடுதற்பொருட்டாகவே அமைந்து நின்ற ஓர் அரும்பெறல் வீணையென்று நம் புலவர் பெருமானைக் கூறின் அது மிகவும் பொருத்தமுடையதேயாகும்.

இராம காதையைப் பாடுதற்கெனத் தம்மைப் பக்குவப்படுத்தி அவ் அருஞ் செயலினை மேற்கொள்ளுதற்கண்ணே தாம் ஈடுபட்டிருந்த போதிலும், கம்பர் பெருமானது உள்ளத்தில் இடையிடையே சிறிது தளர்வு தோன்றாமற் போகவில்லை யென்று கருதற் கிடமுண்டு. வான்மீகி மஹரிஷியின் பெருமையை நண்குணர்ந்தார் யார்தாம் அவரோடு கவிதையில் இகலி வெற்றி கொள்ள மனமொருப்படுவர்? பாடுதற் கமைந்த தெய்வசரிதத்தின் பெருமையை நன்குணர்ந்தார் யார்தாம் அச்சரிதத்திற்குத் தமது கவித்வ-சக்தி போதிய தாகுமென இறுமாந்திருப்பர்? இவ்வகைத் தளர்வு தோன்றியிருத்தல் வேண்டு மென்பதற்கு,

'நொய்தி ஞெய்ய சொல் நூற்கலுற் றேனெனை
வைத வைவின் மராமரம் ஏழ்துளை
எய்த எய்தவற் கெய்திய மாக்கதை
செய்த செய்தவன் சொன்னின்ற தேயத்தே.'

என்னுஞ் செய்யுள் சான்றாகும். இங்ஙனம் மனந்தளர்ந்த காலங்களிற் சடையப்பவல்லலாரே நமது கவிஞர்க்கு ஊன்றுகோலாயுதவினர். தம் உயிர்நண்பரது கவித்வ சக்தியின் பெருமையைப் பலவாறாக அறிந்த சடையப்பர் அவரை அடிக்கடி யூக்கி மனத்தளர்வகற்றி இராம சரித்திரம் பாடுஞ் செயலினை மேற்கொள்ளச் செய்திருத்தல் வேண்டும். இதனை யடிப்படையாகக் கொண்டே இராமகாதை சடையப்ப வள்ளல் தூண்டலாற் பாடப்பெற்ற தென்னும் பரம்பரை வரலாறு எழுந்ததாகல் வேண்டும்.

தமது கவித்வ சக்தியின் பெருமையினாலும் சடையப்பரது அன்பினாலும் கம்பர் பெருமானின் உள்ளத்தில் ஏகதேசமாய்த் தோன்றிய தளர்வு அறவே நீங்கியது. தோன்றாத் துணையாய் நின்று உலகனைத்தையும் இயங்கச்செய்யும் இறைவனது திருவருளால் நமது

கவிஞர் பெருந்தகையின் சிந்தை செய லாகப் பரிணமித்தது. இராமாயண கானம் இனிதெழுந்து சப்திக்கத் தொடங்கிற்று. பாரத மாதாவின் தவமுற்றி அவளது உயி ராசை நிரம்புவதாயிற்று. அவள் மனத் திற்குகந்த புருஷோத்தமன் என்றும் அழி யாத வாசாரூபத்தில் தோன்றுவானுயினன். இராமாவதாரப் பேரிதிஹாஸம் உருப்பெற லாயிற்று. பல நூற்ருண்டுகட்கு முன்னர் நிகழ்ந்த இவ் அரிய சம்பவம் இப்பொழு தும் நம்மால் அன்போடும் மகிழ்ச்சியோடும் நினைந்து இன்புறத்தக்கதா யுள்ளது. கம்பர் பெருமாளுேடு உடனுண்டுறைந்து அவரைத் தம்முயிரினு மேலாகப் பாதுகாத்து வந்த சடையப்பவள்ளலார் எத்துணை யன்போடு இப் பெருநிகழ்ச்சியைப் போற்றியிருத்தல் வேண்டுமென அறிதல் கூடுமோ? அவரது அன்பின் திறம் யாவரால் உணரத் தக்கது! 'அன்பென்ப தொன்றின் றன்மை யமரரு மறிந்த தன்ருல்' என்று கம்பர் தாமே அருளிச் செய்தது தமது ஆருயிர் நண்ப ராகிய வள்ளலது பேரன்பினை மனத்தகத் துக்கொண்டே போலும்! சடையப்ப வள் ளல் தம் ஊர்ப்புறத்துள்ள ஓர் அழகிய பூஞ்சோலையிலே அவரது அன்பே வடிவெடுத் தாற் போன்ற பெருமை வாய்ந்த மணி மண்டப மொன்று வனப்புத்தோன்ற அமைத் தனரென்று நாம் கருதல் வேண்டும். அப் பூஞ்சோலையிலே பிரகிருதிதேவி நிச் சப்தமாய் அமைதியுற்று விளங்குகின்ருள். மணிமண்டபத்தினுள்ளே கம்பர் பெருமான் அறிவும் அன்பும் கவித்வசக்தியும் தமது திருமுகமண்டலத்தே ஒளி சிறந்து தோன்ற நடுவிருந்தருளுகின்ருர். சிறிது தூரத்தே விரைந்தேற்குஞ் செவியும் சோர்வறியாத ஞாபகமுடைய தமிழறிஞர் பலர் ஏடும் எழுத்தாணியுங்கொண்டு இவரைச் சூழ்ந் திருக்கின்றனர். வாயிற்படியினருகே சடை யப்ப வள்ளலார் ஓர் ஆசனத்தின் மீது அமர்ந்தருளியிருந்து எவ்வகை யிடையூறும் எய்தா வண்ணம் கவலையொடு நோக்கி அன்புபூண்டு விளங்குகின்ருர். பூஞ்சோலை யிலே அந்நியரது வரவு தவிர்க்கும் பொருட் டுக் காவலாளர்கள் நிற்கின்றனர். தமி ழார்வம் தாங்கலாற்ருத தமிழ்ச் செல்வர் சிலர் தமது ஆசை யிழுத்துச் செல்லுத லால் அறிமுகமுள்ள காவலாளரைக் கடந்து சென்று மணிமண்டபத்தருகில் வந்து இராம சரிதமாகிய கீதவமுதைச் செவிமடுத்தற்கு ஒற்றியிருந்தனர். 'உலகம் யாவையும் தாமுள வாக்கலும்' என்னும் பொருள் நிரம்பிய மதுரத் திருவாக்கு நமது கவிஞர் சிகா மணியின் இதயத்தினின்றும் பொங்கியெழுந் தது. மணிமண்டப முழுவதும் நிறைந்து பூஞ்சோலையிற் பரந்துலவி மக்களிதயத்தே குடிகொண்டு நின்றது இத் தெய்வத் திருவாக்கு. ஏடெழுதும் ஒலி கேட்கலா யிற்று. கம்பர் பெருமானது திருவுள்ளம் இராமாயண-கீதமாகக் கரைந்து பெருகி ஏட்டிற் பிரவஹித்துப் பாய்குவதாயிற்று.

இங்ஙனம் தொடங்கிய இராமாவ தாரம் முற்றுப் பெறுதற்கு வருஷங்கள் பலப்பல சென்றிருத்தல் வேண்டும். சிறந்த ஆங்கில கவிஞரும் நுண்ணிய ஆராய்ச்சி யாளருமாகிய கோலரிட்ஜ் என்பவர், பத்து வருஷ காலம் இதிஹாஸப் பொருளினைக் குறித்துக் கவிஞர் சிந்தனை செய்வதற்கும் பத்து வருஷகாலம் அதை எழுதி முடித் தற்கும் ஆக, இருபதுவருஷ காலமேனும் ஓர் இதிஹாஸம் பாடி முடித்தற்கு வேண்டப்படுமென்று ஒரு வகையாற் கணக் கிடுவித்தனர். ஆனுல், இங்ஙனம் கணக்கிடும் போது கம்பரது இராமாவதாரம் போன்ற பேரிதிஹாஸத்தினை அவர் கனவிலும் நினைத் திரார் என்பது திண்ணம். மில்டன் எழுதிய 'சுவர்க்க நீக்கம்' என்னும் ஆங்கில இதி ஹாஸத்தினையும், ஹோமர், வர்ஜில் முத லானுேரது இதிஹாஸங்களையும் மனத்திற் கொண்டே மேற்கூறிய காலவரையறை செய்திருத்தல் கூடும். சுவர்க்க நீக்கத்தினைக் காட்டினும் இராமாவதாரம் நான்மடங்கு பெரிது. அதனை யெழுதி முற்றுதற்கு ச0-வருஷங்களேனும் முன் குறித்த கணக்கின்படி வேண்டுமெனக் கருதலாம். இங்கே ஒரு விஷயம் மனங்கொள்ளுதற் குரியது. மேல் நாட்டுக் கவிஞர்கள் கவிதை எழுதும் முறை வேறு; நமது நாட்டுக் கவி ஞர்கள் கவிதை எழுதும் முறை வேறு. மேல் நாட்டுக் கவிஞர்கள், தமது மனத் தின்கண் கவிதை தோன்றியவுடன், அத னைத் தாமே யெழுதிக்கொள்ளுதல் பெரு வழக்காகும். இதனுல் கவிதைப் பிரவாஹ மானது இடையீடின்றிச் செல்லுதற்குச் சிறிது முட்டுப்பாடு உளதாகின்றது. கவித்வ ஆவேசம் நிலைநின்று விளங்குவதற்கும் சிறிது தடை ஏற்படுதல் கூடும். நமது நாட்டுப் பெருங்கவிஞர் கவிதைகள் தோன்றத் தோன்றச் சொல்லி வருதலும் அவர்களின் மாணுக்கர்களும் பிற தமிழறிஞர்களும் உட னிருந்து அவற்றை ஏட்டில் எழுதிக்கொள்ளு தலுமே பெருவழக்காக ஏற்பட்டுள்ளது. கவிதைகள் எத்துணை விரைந்து பெருகிவரினும் ஏடெழுதுவோர் அவற்றை வரன் முறையே ஒவ் வொன்ருகப் பங்கிட்டுத் தமது திண்ணிய ஞாபக சக்தியால் விரைந்து எழுதி வந் தனர். அன்றியும் விருத்தம் முதலிய தமிழ்க் கவிதை இசையோடு கலந்தன்றித் தோன்றுத லில்லை. இவ் இன்னிசை இடையீடின் றிச் செய்யுட்கள் விரைந்து வருவதற்குப்

பெரிதும் அநுகூலம் செய்கின்றது. இங்கே கூறிய இரண்டு காரணங்களாலும் கோல்ரிட்ஜ் கணக்கிட்ட முறை நமது நாட்டிற்குப் பொருந்துமாறில்லை. இராமாவதாரம் பாடி முடிதற்கு இத்தனை வருஷங்கள் ஆகியிருத்தல் வேண்டுமென நிச்சயமாய் வரையறுத்துக் கூறுதல் ஏலாது. எனினும் ஒன்று மாத்திரம் ஐயமின்றிக் கொள்ளுதல் தகும். அறிவு, அனுபவம், கல்வி, கவித்வம் ஆகிய இவையனைத்தும் முதிர்ந்து விளங்கிய தமது வாழ்வின் உச்ச காலத்தை இராமாவதாரத்திற்கெனக் கம்பர் அர்ப்பணஞ் செய்தனரென்பதே உண்மையாகும். தினமொன்றுக்கு 700 செய்யுட்கள் வீதம் இரண்டுவாரத்திற்குள் இராமாயணம் பாடி முடிந்த தெனவும், இத் தினங்களிலே இரவுகள் யாவும் வான்மீகி-இராமாயணம் பொருள் கேட்டலிலே கழிந்தன வெனவும் சிலர் கூறுவர். இதனை,

'.. .. .. அபிநவ கவிநாதன்
விழுந்த நாயிற தெழுவதன் முன்மறை வேதிய ருடனுராய்ந்
தெழுந்த நாயிறு விழுவதன் முன்கவி பாடின தெழுநூறே

என்ற செய்யுள் ஆதரிப்பதாமென்றுங் காட்டுவர். இவ்வரலாறு முற்றிலும் அசம்பாவிதமாயுள்ளது. உணவருந்துதல் முதலிய அவசிய கர்மங்களால் இடையீடுபடாது இராமாவதாரம் பாடப்பெற்றதெனக் கொள்ளினும் நிமிஷம் ஒன்றிற்குச் செய்யுளொன்று வீதம் பாடப்பெற்றதாகல் வேண்டும்! அன்றியும் மேற்காட்டிய செய்யுள் ஏட்டுப் பிரதிகள் பலவற்றிற் காணப்படவில்லை. பிற்காலத்தே கதை பெருக்குவோர்களால் இது பாடப்பெற்றதாகல் வேண்டுமெனக் கருதுதல் தகும். மேலும் நூலினகத்து ஆழ்ந்து கிடக்கும் சில சான்றுகளும் இவ்வரலாற்றினை அநாதரிக்கின்றன. கடைசியாக, இராமாயணம் போன்ற பெருங் காவியம் பிறக்கும் கவித்வ-தத்துவத்திற்கு இவ்வரலாறு முற்றிலும் மாறுகவுள்ளது. இக் காரணங்களால் மேற்காட்டிய செய்யுள் சிறிதும் கொள்ளத்தக்கதன்று. ஆனல் இச் செய்யுள் குறிக்கும் வரலாறு மிக அரியதோர் உண்மையினை யறிவுறுத்துகின்றது. கவித்வ-ஆவேசம் நிரம்பி உணர்வுமயமாய்க் கம்பர் பெருமான் விளங்கிய அமயங்களில் இராமாவதாரம் பாடப்பெற்றதாகும். அவ் அமயங்களிற் கவிதைப் பிரவாஹம் சிறிதும் இடையீடின்றிப் பெருகிப் பாய்ந்து, கம்பீரமாயோடும் பெரு நதி போன்று, விரைந்து சென்றது. இதனை யுணர்த்தும் அத்துணையே மேலைச் செய்யுள் உண்மையுடையதாகும்.

வருஷங்கள் சில சென்றன. இராமகாதை முற்றுப் பெற்றது. சம்பூர்ண-ராமபிரான் வாசாரூபமாகத் தமிழ் நாட்டில் திருவவதரித்துப் பாரதமாதாவின் திருவுளத்தை மகிழ்வித்தனன். கம்பர் பெருமான் தமிழுலகிலே தோன்றியதன் பயன் இனிது முற்றியது. அவரது ஆன்மா இராம சரித-வடிவமாய் உருவெடுத்து விளங்கியது. தமது இராமகாதையினைத் தமிழ் மக்கட்குப் பொதுவுடைமையாகவும் குலதனமாகவும் அரங்கேற்றி ஈந்தருளுவதொன்றே அவராற் செயற்பாலதாய் எஞ்சி நின்றது.

புண்ணிய தினமொன்று தெரிந்து கொள்ளப்பட்டது. கம்பரது இதிஹாஸத்தில் நாயக நாயகிகளுக்கு விவாஹ மஹோத்ஸவம் நிகழ்ந்ததாகக் கூறும் பங்குனியுத்தரத்தின் மறுதினமாகிய பங்குனியத்த நாளே மிக்க பொருத்தமுடைய தினமாகக் கொள்ளப்பட்டது. ஸ்ரீ ரங்கநாதரது திருச்சந்நிதியே* அரங்கேற்றுதற்குரிய இடமாயமைந்தது. சடையப்ப வள்ளலாரால் அழைக்கப்பெற்ற தமிழ்நாட்டுப் புலவர் சிகாமணிக்களும் பிரபு சிகாமணிகளும் அரங்கேற்று மண்டபத்தில் வரன்முறையே வீற்றிருந்தனர். பக்தர் குழாங்கள், பள்ளத்துப் பாயும் நன்னீர் போல, நாலு திசைகளினின்றும் வந்து சூழ்ந்தனர். பண்டிதர்களும் பாமரர்களும் இடம்பெறாது மிடைந்து நெருங்கினர். மண்டபத்தின் அகத்தும் புறத்தும் புடைசுற்றித் தமிழ் மக்கள் திரண்டு கூடினர். அதன் நடுவே சிறிது உயரிய பீடத்தின் மீது கம்பர் பெருமான் எழுந்தருளியிருந்தனர்.† அவரது திருமுகத்தே பேரறிவும் ஆழ்ந்த சாந்தியும் பெருங்கவித்வ சக்தியும் நர்த்தனம் புரிகின்றன; அவரது நயனங்கள் ஆழ்ந்தகன்று உள்ளமனைத்தையும் ஒருங்கு தோற்றி விளங்குகின்றன; நோக்குவோரை யெல்லாம் வசீகரித் தமைகின்றன; அன்பு அலையெறிந்து படர்கின்றது. அறிவு கூர்த்து விளங்குவதனை யொப்ப அவரது நாசியும் நீண்டு கூர்ந்திருக்கின்றது. அவரது உதடுகள் இளநகையரும்பி விகசிக்கின்றன. அகன்ற மார்பும் திரண்ட புயமும் பேரழகு பயக்

---

* திருவரங்கத்திலே கம்பர் தமது காவியத்தை அரங்கேற்றியதாகக் கூறுவர். அரங்கநாதன் சந்நிதி வெண்ணெய் நல்லூரிலுள்ள தென்று கொள்ளும்படி 'எண்ணிய சகாத்தம் என்னுஞ் செய்யுள் அமைந்திருக்கின்றது.

† திருவரங்கத்திலுள்ள கற்சிலையொன்று கம்பர் பெருமானது திருவுருவமாகச் சிலராற் கருதப்படுகின்றது. இங்ஙனம் கருதுதற்கு ஆதாரம் யாதுமில்லை. இக் கற்சிலை கம்பர் திருவுருவன்றென்பதே உறுதி.

கின்றன. அவரது தடக்கைகள் தாள்களைத் தொட்டு நீண்டிருக்கின்றன. அவரது திருமேனி முழுவதும் தெய்வவொளி பரந்து சுடர்கின்றது. இப்புலவர் பெருமானையடுத்து யாரினுமினிய பேரன்பினராகிய சடையப்ப வள்ளல் வீற்றிருக்கின்றனர். கருணையின் நிலயம்; கவிஞரின் புகலிடம்; தமிழ் நாட்டுப் புலவர்கள் பல காலமாக ஈட்டி வந்த புண்ணியம் அனைத்தும் ஒருங்கு திரண்டு வடிவெடுத்து வந்தாற்போன்று அமைந்திருக்கின்றனர். அகக்கண் கொண்டு நுனித்து நோக்குவோமாயின் வேறு சில அற்புதக் காட்சிகளும் காணலாகும். தெய்வ கணங்கள் களிசிறந்து குலவுகின்றன. பாரத தேவி எல்லையற்ற சாந்தியுடனும் எல்லையற்ற ஆனந்தத்துடனும் விளங்குகின்றாள். அவளது திருமுக மண்டலத்தைச் சுற்றியிலகும் சோபாவலயத்தினூடே உளத்து நின்றும் பொங்கிவரும் களிப்பின் சிற்றருவி மெல்லென வீழ்ந்து ஒழுகுகின்றது. இத் தேவியை யடுத்துத் தமிழன்னை அழகு சிறந்து ஒளிருகின்றாள். அவளது திருமுடி மீது நூதனமா யமைக்கப்பெற்றதும் விலையற்ற இரத்தினங்களால் இழைக்கப் பெற்றதுமான கிரீடமொன்று குளிர்ந்த ஒளி பரப்பி நிலவுகின்றது; அவளது செந்தாமரைக் கண்கள் கருணைநில வெறித்து மிளிர்கின்றன; திருமேனி முழுதும் அன்பின் செழுமையால் பொடித்துத் துடிக்கின்றது. ரிஷிகணங்கள் ஒருபால் குழுமியிருந்தனர். அவருள்ளே வால்மீகியும் வள்ளுவரும் தலைமை தோன்ற விளங்குகின்றனர். ஆதிகவியாகிய மஹரிஷியின் சிரத்தின் மீது சடைமாமகுடம் இலங்குகின்றது. இராம கதாம்ருதத்தை உலகிற் கருளிய அவரது தெய்வத் திருவதரத்தின் கீழ் முதுமையாற் பஞ்சென வெளுத்துத் தோன்றும் தாடி நீண்டு அடர்ந்து பொலிகின்றது. அவரது ஆழ்ந்து தெளிந்த கண்களிலே கவித்வ வொளி இன்னும் நிரம்பிப் பிரகாசிக்கின்றது. மழித்த சிரமுடையவராய்ச் சாந்த மூர்த்தியாய் அமர்ந்திருக்கின்றனர் வள்ளுவப் பெருந்தகையார். பேரறிவும் பேரருளும் அவர் கண்களிற் கனிந்து இலங்குகின்றன. தமிழ்த் தாய் வயிற்றில் தம்மோடு உடன்பிறந்த கவிஞர் பெருந்தகையார் மீது அவரது அளவு கடந்த காதல் படர்ந்து செல்லுகின்றது. அவரது துரிசிலாத் திருமனத்தே இன்று சிறிது கர்வம் இடம் பெற்றிருப்பதுபோலத் தோன்றுகின்றது.

அரங்கநாதன் சந்நிதியில் இத்துணை விசேஷமான திருக் கூட்டம் என்றும் இருந்ததே இல்லை யெனலாம். யாண்டும் கண்கள்! யாண்டும் செவிகள்! அனைவரும் ஏகாக்கிர சித்தராய்க் கம்பர் பெருமானை நோக்கிய வண்ணமா யிருக்கின்றனர். 'ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள அளப்பருங் கரணங்கள் நான்கும் — சிந்தையேயாக' என்ற அருமைத் திருவாக்கு எத்துணை யுண்மையுடையதென இன்று ஒருவாறு அறியலாகும். குறித்த அமையம் நெருங்கிற்று. உலகமனைத்தையும் ஆக்கியளித்துத் துடைத்தலையே தனது திருவிளையாட்டாக வுடைய பரம்பொருளை நெஞ்சுற வழுத்திக் கம்பர் தமது இதிஹாஸ கீதத்தைப் பாடி அரங்கேற்றலாயினர். உள்ளத்தை யுருக்கி யுருவஞ் செய்ததுபோலத் தோன்றிய கம்பர் பெருமானது கம்பீரத் தொனி மண்டப முழுவதும் பரந்து சென்றது; கேட்டோர் இதயத்தினின்றும் எதிரொலி யெழுந்தது. இராமாயணமாகிய அமுத கீதத்தில் ஆண்டிருந்தோர் மனங்கள் லயித்து மயங்கின.

> 'வயிரியர் மதுர கீதம் மங்கைய ரமுத கீதம்
> செயிரறு மகர யாழின் தேம்பிழி தெய்வ கீதம்
> பயிர்கிளை வேயின் கீதம் என்றிவை பருகி விண்ணோர்
> உயிருடை யுடம்பு மெல்லாம் ஓவிய மொப்ப நின்றார்'

என்று கூறியதனோடொப்ப அனைவரும் சித்திரப்பதுமைகள் போன்று செய்கையற்றிருந்தனர். இராமசரிதம் படிப்படியாய் வளர்ந்தது. செஞ்சொற் கவியின்பம் இனைத்தென்பது இன்றுதான் உணரலாயிற்று. சிலபொழுது அவையகத்தார் வியப்பு மேலிட்டு மதிமருண்டு கிடப்பர்; சில பொழுது உவகை மேலிட்டு ஆனந்தவாரியில் திளைத்திருப்பர்; சில சமயம் சோகத்தால் உளங்கலங்கி நைந்து வருந்துவர்; சில சமயம் பக்தியால் உளங்கனிந்து உருகுவர். ஒருகால் நகைச்சுவை மீதூர்ந்து மெய்குலுங்கச் சிரிப்பர்; ஒரு கால் பயங்கொண்டு வெருண்டு நடுநடுங்குவர்; ஒரு சமயம் வீரம் மேலிட்டுப் புயம்பூரித்து ஏற்றெழுவர்; 'அழகெலாம் ஒருங்கே கண்டால் யாவரே ஆற்றவல்லார்?'

பூலோகத்திலும், வானுலகத்திலும், நாட்டிலும் காட்டிலும் நதிக்கரையிலும் கடற்கரையிலும் யுத்த களத்திலும், ஆகாய மார்க்கத்திலும், நிகழ்ந்த சம்பவங்களெல்லாம் திருவரங்கர் சந்நிதியிலே நடித்துக் காட்டப்பெற்றன. அயோத்தி நீங்கிய அரசர் பெருந்தகை புஷ்பக விமானமேறிச் சீதா லக்ஷ்மண சமேதராய் வானர பரிவாரங்களுடன் திரும்பத் தனது நகரமடைந்து,

> 'தள்ளரிய பெருநீதித் தனியாறு புகமண்டும்
> பள்ளமெனுந் தகையானைப் பரதனெனும் பெயரானை'

வாழ்வித்தருளினன். கைகேசியின் சூழ்வினையால் தடையெய்தி சீதாபஹரண மென்

னும் சோக-சம்பவத்தால் இடையீடுபட்ட பட்டாபிஷேக மஹோத்ஸவம் விமரிசையாய் நிகழ்கின்றது.

'அரியணை அநுமன் தாங்க அங்கதன் உடைவாள் ஏந்தப்
பரதன் வெண்குடை கவிக்க இருவரும் கவரி பற்ற
விரிகடலுலக மேத்தும் வெண்ணைமன் சடையன் வண்மை
மரபுளோன் கொடுக்க வாங்கி வசிட்டனே புனைந்தான் மௌலி

என்ற சிறப்பு மிக்க செய்யுளைக் கம்பர் பெருமான் பாடினர். பாடின அளவில் அவைக்கணிருந்தோர் அனைவரும் சடையப்ப வள்ளலாரை நோக்கி அவரது பெருமையையே உள்ளத்தெண்ணினர்கள். வள்ளலாரோ தலைவணங்கி யிருந்தனர்.

இராமாவதாரம் அரங்கேற்றி முடிந்தது. கவிதை வெள்ளத்தின் பெருஞ் சுழியில் அகப்பட்டுத் தம்மையிழந்து நிற்பாரை யன்றிப் பிறரைக் காணுதல் அரிதாயிற்று. திடீரென ஓர் அரவம் உண்டாயிற்று. வான்மீகி-மஹரிஷி புனைந்த சடை முடிதுளக்கிப் புலவரேற்றினை முகம் பார்த்து மெல்ல நடப்பாராயினர். அவரைத் தொடர்ந்து வள்ளுவப் பெருந்தகை, தமிழ் வேதம், எழுதியருளிய அருமைத் திருக்கரத்தில் பொன்கொண்டிழைத்து மணியைக் கொடு புணைந்த மகுடமொன்று தாங்கிப் பின் சென்றனர். இருவரும் தம்மையடுத்து வந்ததும் கம்பர் பெருமான் எழுந்து வணங்கலுற்றனர். அப்பொழுது தகவுடையோர் சிந்தையினும் சென்னியினும் வீற்றிருக்குஞ் சீர்த்தியுடைய வான்மீகி மஹரிஷி தந்தையினுங் களிகூரத் தழுவி நின்று, 'நீரே கவிச்சக்கரவர்த்தி; எனது அன்பிற்குரிய ஞான புத்திரரை யின்றுதான் காணப் பெற்றேன்' என்று கூறி, வள்ளுவப் பெருந்தகையார் தாங்கிச் சென்ற மகுடத்தை வாங்கிக் கம்பர் பெருமானது முடிமீது புனைந்தருளினர். தமிழ்ப் புலமைத் தெய்வமாகிய வள்ளுவர் அன்பூற்றெடுக்குந் திருநயனங்களாற் கனிந்துநோக்கி முடி புனைந்த சிரமீது தமது திருக்கைகளை வைத்து ஆசீர்வதித்தருளினர்.

பங்குனி அத்த நன்னாள்! இந்தச் சுபதினத்தன்று இற்றைக்குச் சுமார் ஆயிரம் வருஷங்கட்கு முன்னர் மேல் விவரித்தவாறு கம்பர் பெருமானது இராமாவதாரம் அரங்கேறுதலாயிற்று. இந்நாள்தான் தமிழ்த் தெய்வம் மணிமாமகுடம் புனைந்துகொண்ட பெருநாள். பாரத தேவி பன்னெடுங்காலமாக முயன்றுவந்த தவம் பயனிரம்பி முற்றியதும் இந்நாளே. இத்தகைய விசேஷ தினத்தைத் தமிழ் மக்களாகிய நாமனைவரும் இன்றுபோல் என்றும் போற்றிப் பாராட்டுவோமாக!

எண்ணிய சகாத்த மெண்ணூற் றேழின்மேற் சடையன்வாழ்வு
நண்ணிய வெண்ணெய் நல்லூர் தன்னிலே கம்ப நாடன்
பண்ணிய இராம காதை பங்குனி யத்த நாளில்
கண்ணிய வரங்கர் முன்னே கவியரங் கேற்றி னனே.

இராமபிரானது மறக் கருணை

திரு. மு. இராகவையங்கார்

ஸ்ரீ ராமபிரானுக்குக் 'கருணாகரன்' என்ற திருநாமமொன்று பழைமையாகவே உண்டு. 'இலங்கை யெறிந்த கருணாகரன்' என்றார் செயங்கொண்டார். கம்பரும்,

'கடுமையார் கானகத்துக் கருணையார் கலிஏக'
'கருணையங்கடல் கிடந்தனன் கருங்கடல் நோக்கி'

என்று, கருணைக்கடல் இராமபிரான் என்பதைக் குறிப்பிட்டனர். இவர்கள் கூறிய படியே, அப்பெருமானிடத்திலிருந்து கருணாப்பிரவாகம் பெருக்கெடுத்தோடிய சந்தர்ப்பங்கள் பலவுண்டு. அவனது கருணை, பெரும்பாலும் அறங் கனிந்து ஸாதுவான நிலையில் தோன்றியதாகும். தண்டகாரண்யத்து முனிவர்களுக்கும், சுக்ரீவ விபீஷணாதியர்க்கும் இராமபிரான் காட்டிய கருணைகள் இத்தகையனவே. இதனை அறக் கருணை என்பர் முன்னோர். இனி, மறத்தை அதாவது வீரத்தைச் சார்பாகக் கொண்டு அஸாதுவான நிலையில் தோன்றும் கருணை ஒன்றுண்டு. அது, செற்றங்கனிந்த நெஞ்சில் எதிரியிடம் நிகழ்வது. இதனை மறக்கருணை என்பர். மறம் என்பது வீரமாம். அறப்புகழ், மறப்புகழ், அறக்கற்பு மறக்கற்பு என்பவை, மேற்கூறிய கருணைபோல, ஸாது அஸாதுக்களாய், தர்மமும் வீரமும் பற்றி உண்டாம் புகழ்க் கற்புக்களை முறையே குறிப்பன. உதாரணமாக, சீதா பிராட்டியின் கற்புநிலை அறக்கற்பென்றும், கோவலன் மனைவியான கண்ணகியின் கற்பு நிலை மறக்கற்பு என்றும் உணர்க. பிற்கூறிய மறக்கற்புப் பற்றி, கண்ணகியை வீரபத்தினி என்பர் முன்னோர். இவ்வாறே, அறக்கருணையைக் காப்பியக் கதாநாயகர் பலரிடத்தும் காணக்கூடுமாயினும், மறக்கருணை தோன்றிய இடங்கள் மிகச் சிலவே. அவற்றுள், இராமபிரானிடம் அக்கருணை பிரகாசித்த அழகான சந்தர்ப்பமொன்று இராமாயணத்துள் காணப்படுவது வருமாறு:—

அங்கதன் இராவணனிடம் தூது சென்று திரும்பி வந்து, 'மூர்க்கன் முடித்தலை அற்றபோதன்றி ஆசையறாது' என்று இராமபிரானிடம் தெரிவித்தபின், வானர சேனைகள் இலங்கைமாநகர் அகழியைத் தூர்த்துக் கோட்டையை நாற்புறத்தும் முற்றுகை யிட்டன. அது தெரிந்து, அரக்கர் பெருஞ் சேனைகள் அவற்றை எதிர்த்துப் பொரவும், அப்போரில் அச்சேனை யாவும் அதன் தலைவர்களுடன் வானர சேனைகளால் அழிபட்டன. இதனை யறிந்த இராவணன் சீற்றமிக்கு யுத்த சன்னத்தனாய்ப் போர்க்களம் புகவே, சுக்ரீவனும் மாருதியும் அவனுடன் மிகவும் பொருது மெலிந்தனர். அதனால் லக்ஷ்மணன்

இராவணனை வளைத்துக் கொண்டு பெரும் போர் புரிய, அக்காலை, பிரமனளித்த வேலாயுதத்தை இராவணன் ஏவி, லக்ஷ்மணனை மூர்ச்சையடையச் செய்தனன். அவனது சோர்ந்த நிலை தெரிந்து இராவணன் அவனைத் தூக்கிச் செல்ல முயன்றும் முடியாமற் போக, அனுமான் விரைந்து ஆங்கு வந்து, அவனை இலேசாக எடுத்துச் சென்று இராமனிடஞ் சேர்ப்பித்தான். அவ்விளவலும் மூர்ச்சை தெரிந்தனன். உடனே, கடுஞ் சீற்றங் கொண்ட பெருமான் மாருதி தோளில் ஆரோகணித்தவனாய், இராவணனுடன் பெரும்போர் புரிந்து அவன் சேனை முழுவதையும் நீறாக்கி அவன் முடிகளையுந் தகர்த்தெறிந்து, அவனையும் நிராயுதனாக்கினன். அப்போது இராவணன் நின்ற நிலையை,

'அறங்க டந்தவர் செயலிதுஎன்(று) உலகெலாம் ஆர்ப்ப
நிறங்க ரிந்திட நிலம்விரல் கிளைத்திட நின்றான்
இறங்கு கண்ணினன் எல்லழி முகத்தினன் தலையன்
வெறுங்கை நாற்றினன் விழுதுடை ஆலன்ன மெய்யன்

என்று அழகுற மொழிந்து, இராவணனை நோக்கிக் கூறிய இராமபிரானது வீர வார்த்தைகளையும் கம்பர் பின்வருமாறு பாடுகின்றார்:

'அறத்தி னாலன்றி அமரர்க்கும் அருஞ்சமம் கடத்தல்
மறத்தி னால்அரிது என்ப(து) மனத்திடை வலித்தி
பறத்தி நின்னெடும் பதிபுகப் பழியொடும் பாவி!
இறத்தி யானது நினைக்கிலன் தனிமைகண் டிரங்கி.

'உடைப்பெ ருங்குலத் தவரொடும் உறதொடும் உதவும்
படைக்க லங்களும் மற்றும்நீ தேடிய பலவும்
அடைத்து வைத்தன திறந்துகொண்(டு) ஆற்றுதி யாயின்
கிடைத்தி, அல்லையேல் ஒளித்தியால்; சிறுதொழிற் கிழோய்

சிறையில் வைத்தவள் தன்னைவிட்டு உலகினில் தேவர்
முறையில் வைத்துநின் தம்பியை இராச்கதர் முதற்பேர்
இறையில் வைத்(து) அவற்(கு) ஏவல்செய்(து) இருத்தியேல் இன்னும்
தறையில் வைக்கிலன் நின்தலை வாளியிற் றடிந்து.

'அல்லை யாமெனின், ஆரமர் ஆற்றெனும் தோற்றம்
வல்லை யாமெனின் உனக்குள வலியெலாம் கொண்டு
நில்ஐ யாவென நேர்நின்று பொன்றுதி எனினும்
நல்லை ஆகுதி, பிழைப்பினி உண்டென நயவேல்.

'ஆளை யாவுனக்(கு) அமைந்தன மாருதம் அறைந்த
பூளை யாயின கண்டனை, இன்றுபோய்ப் போர்க்கு
நாளை வா'வென நல்கினன் நாகிளங் கமுகில்
வாளை தாவுறும் கோசல நாடுடை வள்ளல்.

'பாவீ! தர்ம மார்க்கத்தாலன்றி, பாவ வழியால் போர் வெற்றியை அடையலாம் என்பது பெரிய தேவர்களுக்கும் அரிது என்பதை உறுதியாக மனத்துக் கொள்க. இனி உன் நகரை நோக்கி, யாவரும் பழிக்கும்படி ஓடிப் பிழைப்பாய். இப்போதே யான் உன்னைக் கொல்லக்கூடுமேனும் உன் தனிமை நிலைக்கு இரங்கி அது செய்ய நினைந்திலேன். உன்னைச் சார்ந்த அரக்கர் பெருங் குலத்தோடும், உறவினரோடும், உனக்கு உதவும்படி நீ அரிதில் தேடி அடைத்து வைத்துள்ள படைக்கலங்களை யெல்லாம் திறந்தெடுத்துக் கொண்டு, சக்தியுள்ளவனானால், திரும்பி வந்து என்னெதிர் நின்று பொருவாய். இல்லையேல், இழிஞரினும் இழிஞனே! எங்காயினும் ஓடி ஒளிப்பாயாக. நீ பிழைக்க விரும்பினால், சிறையில் வைத்த தேவியை வெளியேற்றி, உன்னால் பதவியிழந்த தேவர்களை அவ்வவர் நிலையில் வைத்து, உன் தம்பியை இராக்கதத் தலைவரின் அரசாக்கி, அவனுக்கு நீ ஏவல்செய்து வாழவேண்டும். இவ்வாறாயின் உன் தலையை என் அம்புகளால் தடிந்து தரையில் வைக்கமாட்டேன். அன்றி, போர்புரிக என்ற பொலிவு உனக்குண்டானால், உனக்குள்ள பலங்களை யெல்லாந் திரட்டிக் கொண்டு என்முன் நில்; ''ஐயா!'' என்ற இரக்கக் குரலுடன் என்முன் நீ செத்து விழும்போதுதான் நீ நல்லவனாகக்கூடும். ஏதோ உயிர் தப்பலாம் என்ற ஆசையை இனி அடியோடு விட்டுவிடு. ஆள்வதற்கு எவை துணையாயிருந்தனவோ அவற்றையெல்லாங் கொண்டு நீ எதிர்த்துவந்த இப்போரிலே, அவை யாவும் சண்டமாருதத்தால் அறையப்பட்ட பூளைப் பஞ்சு போலப் பறந்து சிதறியதை நீ கண்கூடாகக் கண்டனை. இப்போது நீ தனி நிலையில் இருப்பதால், உன்னுடன் போர் புரிய இசைந்திலேன். அதனால், இன்று போய்ப் போர்க்கு நாளை வா' என்று பேரருளுடன் கூறினன் இராமபிரான் என்பது பொழிப்பு.

எவ்வளவு கம்பீரமான சொற்களிலே பெருமானது மறக்கருணை வெளிப்படுகின்றது! நேரில் இராமபிரான் நின்று பேசுவது போலக் கம்பர் பாடிய இவ்விடத்தைப் போல, அப்பெருமானது வீரச் சிறப்புத் தோன்றும் இடம் வேறில்லை என்றே சொல்லலாம். ஆயினும், ஒரு பெரிய சங்கை மட்டும் இங்கு எழுகின்றது. மகா அபராதியான இராவணனை, வாய்த்த இந்த நல்ல சந்தர்ப்பத்தில் அழித்து முடிக்காமல் இவ்வாறு கூறியது, இராமபிரானது கருணைத்திறத்தைக் காட்டுவதென்பது உண்மைதான். ஆனால், இவனது அளவிலாற்றலைக் கண்கூடாகக் கண்ட இராவணன்,'

'இனி நம்மால் எதிர்த்து நிற்றல் அரிது,' என்று சரணாகதி பண்ணி விடுவானாயின், அவன் தம்பி விபீஷணனுக்குக் கடற்கரையிலே 'இலங்கைச் செல்வம் நின்னதே தந்தேன்' என்று யாவருமறியப் பெருமான் செய்த பிரதிக்ஞை என்னாகும்? அதற்கு இவன் செய்யும் பரிகாரம் யாது?—என்ற கேள்விகள் உண்டாமன்றே? அதற்கும் விடையளிப்பவர்போலக் 'கோசல நாடுடை வள்ளல்' என்று இறுதித் தொடரைக் கம்பர் அமைத்துள்ள அழகு குறிப்பிடத் தக்கது. அவ்வாறு, இராவணன் சரணம் புகுவானாயினும், தான் செய்த பிரதிக்ஞையைக் காக்கவல்ல சத்திய சங்கற்பன் பெருமான் என்பதும், அவன் சரண்புக்க நிலையில், தன் சொற்படி இலங்கை யரசை விபீஷணனுக்கே அளித்துவிட்டு, இராவணனுக்கு அவன் நிலை தாழாதிருக்கும்படி, தன் ஏகாதிபத்யமான கோசல ராஜ்யத்தையே அளித்துதவக்கூடியதான வீரன் அவன் என்பதும், அதனால் ஆதி சங்கற்பம் ஒரு போதும் பங்கமுறக் கூடியதன்று என்பதும் ஸாபிப்பிராயமாக அத்தொடரில் அமைந்து திகழுதல் காணலாம்.

> '.. .. .. நாகிளங் கமுகின்
> வாளைதாவுறும் கோசல நாடுடை வள்ளல்'

என்ற விசேஷணத்தால், அவ்வாறு தான் அளிக்கக்கூடிய நாடு இலங்கைக்குக் குறைந்த வளமுடையதன்று என்பதைக் குறிப்பிடும். இத்தகைய பொருட்பொலியும் சொற் செறிவும் பொலியும்படி பாடிய கம்பநாடரது அருங் கவித்திறம் யாவரும் அறிந்து போற்றற்குரியதாகும். இவ்வாறு இராமபிரானிடம் மறக்கருணை தோன்றிய சந்தர்ப்பம், முதல் நாட்போர் என்று கொண்டு பாடினர் நம் புலவர் பெருமான். ஆனால், வால்மீகத்தில் அது நிகழ்ந்த இடம் வேறாகக் காணப்படுகின்றது. வானர சேனையும் அதன் தலைவர்களும் அரக்கர் சேனையால் அழிவுண்டு குலைந்தும், இராம லக்ஷ்மணர்கள் நாக பாசத்தால் மூர்ச்சையடைய அதனைப் பிராட்டி கண்டு புலம்புவதும், தோல்வியுற்ற நிலையில் கருடபகவானது சாந்நித்தியத்தால், அவ்விராமனும் இளவலும் உயிர்த்தெழுந்து வலியுற்றன ரென்பதும், அதன் பின்பு நடத்திய பெரும் போரிலே, இராவணனை வென்று நிராயுதனாக்கி அவன் நிலைமைக்கிரங்கி 'இன்று போய்ப் போர்க்கு நாளை வா' என்று இராமபிரான் கூறியருளினன் என்பதும் அவ்வட நூலிற் காணும் கதாபாகம். இவ்வாறு, தன் சேனைகளையும், தன்னையுமே அலைத்த இராவணனது வெற்றிக்குப் பின் நிகழ்ந்த வேறு போரில் இராமபிரான் ஜயம் அடைந்தனர் என்றும் அதனில் தன் மறக்கருணையைக் காட்டினர் என்றும் உள்ள கதையமைப்பில், விசேட வீரச் சிறப்பு நிகழாமைபற்றி, அந்நிகழ்ச்சியை அங்கதன் தூதுக்குப் பின் நடந்த முதனாட் போரில் வைத்து, தன் பேராற்றலை முதலெடுப்பிலே இராவணன் கண்டு பிரமிக்கும்படி செய்து, தன் மறக்கருணையையுங் காட்டினன் அப்பெருமான் என்று மாற்றி அமைத்தார் கம்பர் என்று தோற்றுகின்றது. எவ்வாறாயினும், இராமபிரான் காட்டிய அவ் வீரக்கருணையின் சிறப்புப் போல, வேறெந்த இடத்தும் காணப்படவில்லை என்றே சொல்லக்கூடும். இத்தகைய அரிய செய்தியைத் தம் உள்ளத்துக் கொண்டே,

> பேராண்மை என்ப தறுகணொன் றுற்றக்கால்
> ஊராண்மை மற்றதன் எஃகு

என்று, இம் மறக்கருணையைச் சிறப்பிக்கலாயினர் திருவள்ளுவரும். போரில் அஞ்சாது நின்று காட்டும் வன்கண்மையையே பேராண்மை அல்லது மகா வீரம் என்பராயினும், அவ்வீரத்துக்குக் கூர் என்று சிறப்பிக்கப்படுவது, பகைவன் தளர்ந்த நிலையில், அவனிடம் அருளுடன் புரியும் உபகாரமே என்பது இக்குறளின் கருத்து. இங்கே, பரிமேலழகர்—'ஊராண்மை—உபகாரியாந் தன்மை; அஃதாவது, இலங்கையர் வேந்தன் போரிடைத் தன் தானை முழுதும் படத், தமியனாய் அகப்பட்டானது தனிமை நோக்கி, அயோத்தியரிறை மேற்செல்லாது, ''இன்று போய் நாளை நின் தானையோடு வா'' என விட்டாற் போல்வது' என்றெழுதிய விசேடவுரை குறிப்பிடத்தக்கது. இதனைப் பெரும்பாலும் ஒத்த கதாபாகம் மகாபாரதத்தும் ஓரிடமுண்டு. அது பதினாறும் நாட் போரில், தனியனாய் அகப்பட்ட கர்ணனை வென்று கொல்லாமல் அருச்சுனன், 'நாளைப் போருக்கு வருக' என்று விட்ட சந்தர்ப்பமாகும். இதனை, வில்லிபுத்தூரர்,

> அன்று போர்புரி சேனையின்பதி யானவீரனை 'நீ
> இன்று போய்இனி நாளைவா' என இனிதியம்பினனால்
> வென்றிகூர்வரி வின்மையாலடல் வெவ்வரக்கனைமுன்
> கொன்றகாளையை யொத்தபேரிசை கொண்ட ஆண்மை யினான்

என்று பாடுதலும், 'இன்று போய் நாளை வா' என்று மறக்கருணை புரிந்த திறத்தில் இராமபிரானோடு ஒத்தவன் அருச்சுனன் என்பதைப் பின்னிரண்டடிகளிலே அவர் குறிப்

பிட்டிருத்தலும் அறியத்தக்கவை. இவ்வாறு பேராண்மை தோற்றுவிக்குங்கால் பகைவனிடம் புரியும் இக்கருணையையே,

> அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
> மறத்திற்கும் அஃதே துணை. *

என, அன்புடைமை அதிகாரத்துங் குறிப்பிட்டனர் வள்ளுவனார். 'அறச்செயலுக்கு மட்டும் அன்பு சார்பாகும் என்று கூறுவர் அறியாதார்: வீரமாகிய மறச்செயலுக்கும் அவ்வன்பு சார்பாகிச் சிறப்பதாம் என்பது இதன் கருத்து. அஃதாவது, தறுகண்மை காட்டும் வீரச் செயலும் அன்பைத் துணையாகக் கொண்டே நிகழ வேண்டும் என்பதாம். அன்பு முதிர்ந்த நிலையே அருளாகிய கருணையாதலால் இக்குறளில் அன்பென்று கூறப்பட்டது கருணையையும் உள்ளடக்கியதே யாகும். ஆகவே, இம் மறக் கருணையையே, அம்மறம் நிகழுமிடம்பற்றிப் படைச்செருக் கதிகாரத்திலும், அதன் சார்புச் சிறப்புப்பற்றி அன்புடைமை யதிகாரத்திலும் ஆக இரண்டிடத்துங் கூறலாயினர் திருவள்ளுவர் என்க. இவ்வாறு, பகைவனது தளர் நிலையிற் காட்டும் அன்புச் செயல், தழிஞ்சி என்ற புறத்துறையைச் சார்ந்ததாகும். அத்துறையாவது, ஒரு வீரன், தன்னொடு பொருது தோற்றவன் மேல் ஆயுதஞ் செலுத்தாத பேராண்மை என்பர். [தழிஞ்சி-தழுவுதல்] இவற்றால், அறக்கருணையோடு, மறக்கருணையாலும் ஒப்புயர்வற்ற கருணாமூர்த்தி இராமபிரான் என்பதைக் கம்பர் சிறப்பித்துள்ள மாட்சி யாவர்க்கும் விளக்கமாகும்.

* இக்குறளுக்கு வேறுரை கூறினர், பரிமேலழகர். அதன் பொருத்தம் அறிஞர்களது ஆராய்ச்சிக்கு உரியது.

★

ஆஸ்தான கவிஞர்
திரு. வே. ராமலிங்கம் பிள்ளை அவர்களின்

வாழ்த்துப் பாக்கள்

கம்பன் பெரும்புகழ் பாடிடுவோம்
கன்னித் தமிழ்க்கடல் ஆடிடுவோம்.

கவிதையின் உச்சம் இவன்பாட்டே கலைகளின் சிகரம் அதன்மாட்டே
புவிதனில் கம்பனுக் கீடாகும் புலவனைக் காண்பது பாடாகும் (கம்)

நம்பெரும் தமிழை உயர்வாக்கும் நாயகன் கம்பன் பெயராக்கும்
ஐம்பெரும் பூதம் உள்ளளவும் அவன்புகழ் குறையா தெள்ளளவும் (கம்)

உள்ளம் களித்திட ஒருபுலவன் உணர்ச்சியை வளர்த்திட வெகுவலவன்
வெள்ளம் வருகிற வேகத்தில் வீரம் புகுத்திடும் தேகத்தில் (கம்)

எத்தனை தரம்அதைப் படித்தாலும் எப்படிப்பொருள்கொள ஒடித்தாலும்
நித்தமும் புதுப்புது நினைவுதரும் நிரந்தர இலக்கியக் கனிஅதுவாம் (கம்)

புகழ்ந்திட வார்த்தைகள் போதாது புனையினும் இகழுரை மோதாது
இகழ்ந்தவர் மனத்தினும் இனிப்பூட்டும் இலக்கியச் சுவைகளை நினைப்பூட்டும் (கம்)

அன்பின் நலங்களை எடுத்தோதி அறிவைத் துலக்கிடும் பெருஞ்ஜோதி
கம்பன் கவிதையைத் துறந்துவிடில் கலையறி தமிழொளி மறைந்துவிடும் (கம்)

கலைவளர் காரைக் குடிகண்ட கம்பன் கழகம் தடையின்றி
நிலையுள கலைத்தமிழ் கீர்த்திகளை நீடுறச் செய்திடும் சீர்த்தியுடன் (கம்)

வாழிய கம்பன் கவியழகை வாழ்த்திடு கம்பன் கலைக்கழகம்
ஊழியம் என்றுஇத் திருநாளை உகந்திடும் அனைவரும் வாழ்ந்திடுவோம். (கம்)

கம்பனின் நாடகத்தன்மை

திரு ஏ. வி. சுப்பிரமணிய அய்யர்

ஆங்கிலத்தில் 'எபிக்' என்று சொல்லப்படும் இலக்கிய உறுப்பைப் பெருங்காப்பியம் (பொதுவான பொருளில்) அல்லது இதிகாசம் என்று சொல்லலாம். நமது நாட்டில் பலவிதமான புராணங்களும் பெருங்காப்பியங்களும் இருந்தபோதிலும், வியாச பாரதமும் வான்மீகி ராமாயணமும்தான், இரண்டு மதிப்பிடக்கூடாத சிறப்பையுடைய இதிகாசங்கள். பாரத நாட்டு மக்களின் மனத்தில், பல்லாயிரக்கணக்கான வருஷங்களாக ஊறிக் கிடந்த எண்ணங்கள், பாவங்கள், பக்தி யெல்லாம், உருத் திரண்டு, மிகப் பெரிய கதைகளாக மாறி, கர்ணபரம்பரையாகச் சிரவணம் செய்யப்பட்டு, காலக்கிரமத்தில், நாகரிகமும் எழுத்தறிவும் முதிரவே, மகா கவிகளால், விஸ்தாரமான அமைப்புடன் இதிகாச காவியங்களாக ஆக்கப்பட்டன. அவைகளில், ஆரம்பமுதல் முடிவுவரை, ஒரு பெரிய கதை, அதன் நாயகன், நாயகி இவர்களுடைய சுக துக்கங்களுடன், பிரம்மாண்டமாய் வளர்ந்து கொண்டு போகிறது. அத்துடன், ஏராளமான உப கதைகள், தத்துவ போதனைகள் (உலகம் போற்றும் பகவத் கீதை மகாபாரதத்தின் ஒரு சிறு பகுதி), சமுதாய அறநெறிகள், காவிய வர்ணனைகள் முதலியன சேர்ந்து வளர்கின்றன.

இதிகாசங்களுக்குச் சில தனிச் சிறப்புக்களுண்டு. அவைகளில் காணப்படும் கதைகளின் மாண்பும், வீரர்களின் செயல்களும், மனித இயற்கையின் பரிணமங்களும் மக்களின் உள்ளத்தில் பதிந்து, அவர்களுக்கு இன்பம் தருகின்றன. அவை, ஒரு நாட்டின் நாகரிகம், மக்களின் அடிப்படையான லட்சியங்கள், கலைகள் இவைகளைப் பிரதிபலித்துக் கொண்டிருக்கும் உயிருள்ள இலக்கியங்கள்; மக்கள் கூட்டங்களின் மதப்பற்று, ஆத்ம வளர்ச்சி, ஞான வளர்ச்சி, இவைகளின் உண்மையான சரித்திரங்களுக்குக்கூடத்தான். காலத்தின் இயல்பால் வாழ்க்கையில் அநேக மாறுதல்கள் ஏற்பட்டுக் கொண்டே யிருந்த போதிலும், மனிதனிடம், படைப்புக் காலம் முதல் சில பொதுவான தன்மைகளும் இயல்புகளும் இருந்து வந்திருக்கின்றன. நமது வாழ்க்கை, நமது முன்னோர்களின் வாழ்க்கையி லிருந்துதான் வளர்ந்திருக்கிறது. இதனால்தான் இதிகாசங்கள் காலத்தின் ஆட்சிக்குட்படாத காவியங்களா யிருக்கின்றன. இதிகாசங்கள் மகாசமுத்திரங்கள். அவைகளில் எல்லாவிதமான இலக்கிய தினுசுகளும், ரஸங்களும் பொதிந்து கிடக்கும். உலக மகா கவிகளின் இதிகாசங்களில் முக்கியமாய்க் காணப்படுபவை இரண்டு; ஒப்பற்ற கவிதை, கனிந்த நாடகத்தன்மை; மற்றெல்லாக் குணங்களும் மேம்பாடுகளும், இவ்விரண்டிற்குள் அடங்கும்.

தமிழர்களின் நல்லதிர்ஷ்டத்தால், கம்பர் தமிழில் வால்மீகி ராமாயணத்தைப் பெருங்காப்பியமாக்கினர். நாட்டில் வழங்கும் கதை உண்மையா யிருந்தால், இந்த முயற்சியில் அவரைத் தூண்டியது சடையப்ப வள்ளல். ஆழ்ந்த கல்வியையும் அபரிமிதமான கவிதா சக்தியையும் அருட் புலமையையும் பெற்றிருந்த கம்பர், இந்தக் காரியத்தில், உலகம் பிரமிக்கும்படியான வெற்றியை யடைந்தார். பொதுவாக வான்மீகத்தை அநுசரித்தபோதிலும், கம்பர், கதைப் போக்கில், காலப்போக்கா லேற்பட்ட ரசிகத்தன்மைக் கேற்றவாறு சில மாறுதல்களைச் செய்

தார். தமிழரின் நாகரிகம், பழக்க வழக்கங்கள், இலக்கிய முறைகள், ஒழுக்க முறைகள் இவைகளைத் தழுவியே கதைப் போக்கும் கவிப் போக்கும் அமைந்திருக்கின்றன. காவியக் கட்டுக்கோப்பும் திடமாகவே யிருக்கிறது.

கம்பர் என்ற பெயரை நினைத்தமாத்திரம், ஒவ்வொரு தமிழ் இலக்கிய ரஸிகன் கண்முன்பும், தமிழ்க் கவிதா மண்டலத்தின் மிக உன்னதமான உச்சியும், கற்பனை உலகத்தின் விரிவும் சக்தியும், தமிழகத்தின் கலைவாழ்வின் வளமும் சுவையும், ஒரு சித்திரத்தில் தோன்றுவதுபோல் தென்படும். தமிழ் மன்னர்கள் தமிழ்ப் பணியை அரசியல் பணிக்கு மேலாகவே கருதிச் செய்த தொண்டினால் நாட்டிலேற்பட்ட தமிழ் வளர்ச்சியாலும், தமிழ் மக்களின் உள்ளக் கவர்ச்சியாலும் புலவர்களின் அழுக்காறற்ற அறிவின் சீலத்தாலும், 'கவிச் சக்கரவர்த்தி' என்ற அழியா மகுடத்தைப் பெற்ற கம்பரைத் தமிழர்கள், தலைமுறை தலைமுறையாகப் படித்து அநுபவித்துப் போற்றிவந்திருக்கிறார்கள். அந்நிய நாட்டார்களும், நமது நாட்டில் தமிழைத் தவிரப் பிற பாஷைகளைச் சேர்ந்தவர்களும், கம்பரை மொழி பெயர்ப்புக்களிலாவது படித்தநுபவிக்கக் கூடாத துர்ப்பாக்கிய நிலையில் இருக்கிறார்கள். ஆயினும், கம்ப ராமாயணம், உலகத்திலுள்ள மிகப் பெருங் காப்பியங்களில் ஒன்றென்பது மட்டுமல்லாமல், அவைகளில் அநேக காப்பியங்களைவிடச் சிறந்தது என்பதும், பிற பாஷைகளிலும் தமிழிலும் தகுந்த பயிற்சி பெற்றிருந்த காலஞ் சென்ற வ.வெ.சு. அய்யர் போன்ற அறிஞர்களின் துணிபு. இது தமிழர்களுக்கு நியாயமாகவே பெருமையையும் மகிழ்ச்சியையும் தரலாம். இப்பெருமையைக் கொண்டாடுவதற்குப் பொறுப்பும், அதிகம். கம்ப ராமாயணம், சம்பந்தமாய், இன்றியமையாத இலக்கிய ஆராய்ச்சி நூல்கள், எத்தனையோ துறைகளில் ஆக்கப்பட வேண்டியது அவசியமா யிருக்கிறது. பொறுமையுடனும், தளரா ஊக்கத்துடனும், நுண்ணிய அறிவுடனும், பகுத்தறிவு கலந்த ஆராய்ச்சித் திறனுடனும், இந்தப் பணியை ஆற்ற, போதிய தமிழ் அறிஞர்கள் இன்னும் முன் வரவில்லை. தகுந்த ஆராய்ச்சி நூல்கள் தோன்றுவதற்கு, இப்போது தமிழ் நாடெங்கும் வருஷா வருஷம் நடைபெறும் கம்பன் விழாக் கொண்டாட்டங்களும், அடிக்கடி பல இடங்களில் தமிழ் ரஸிகர்களால் நிகழ்த்தப்படும் கம்ப ராமாயணப் பிரசங்கங்களும், பயன்தரக்கூடிய பூர்வாங்கமான வேலை என்பதில் ஐயமில்லை.

கம்ப ராமாயணத்தின் பெருமைகளைப் பற்றி நமது முன்னோர்கள் புகழ்ந்து கம்பரைக் கவிச் சக்கரவர்த்தியென்று கூறியிருக்கிறார்கள். அவர்கள், அதேமாதிரி, ஒட்டக்கூத்தர், ஜெயங்கொண்டார் போன்ற புலவர்களையும் கவிச் சக்கரவர்த்திகளென்று பாராட்டி யிருக்கிறார்கள். நாம் இப்போது கம்பரை அந்த முறையில் போற்றவில்லை. கம்ப ராமாயணத்தின் உண்மையான பெருமை என்ன என்பதைப் பற்றி நாம் ஆராய வேண்டும். நன்றாய்ச் சிந்தனை செய்து பார்த்தால், கம்ப ராமாயணத்தின் ஏற்றம், ராமகாதையின் சிறப்பை விலக்கி விட்டால், முக்கியமாக இரண்டு காரணங்களால் உண்டாகிறது. கவி ரீதியாகப் பார்க்குமிடத்து, கம்பர் ஈடு மெடுப்புமில்லாத கவி, கற்பனை, இசைத்தன்மை, நடை, ஓசைப் பெருக்கு, உணர்ச்சியை எழுப்பும் சக்தி, அர்த்த புஷ்டி, வாக்கின் எளிமை, கலைப் பாங்கு முதலிய கவிதையின் எந்த விதமான அம்சத்தைக் கவனித்தாலும், கம்பர், மற்றத் தமிழ்க் கவிகளைவிட சிரேஷ்டரா யிருப்பதுடன், உலக மகாகவிகளின் கோஷ்டியி லிருக்கவும் உரிமை பெற்றிருக்கிறார் என்பது எளிதில் விளங்கும். இதை, உதாரணங்கள் கொடுத்து ஆராய்வது எனது நோக்கமன்று. கம்ப ராமாயணத்தில் நாடகத்தன்மை நிறைந்திருக்கிறது. இந்த அம்சமும், கம்பரின் காவியத்தின் சிறப்பின் பெரும் பகுதிக்குக் காரணம் என்பது எனது கருத்து. அதை விளக்குவதே இக் கட்டுரையின் நோக்கம்.

ஓர் இதிகாசத்திலாவது, அதைப் போன்ற பெருங் காப்பியத்திலாவது, நாடகத்தன்மை அமைந்திராவிட்டால் அதற்கு இருக்க வேண்டிய, எக்காலத்து மக்களையும் கவரும் சக்தி குறைந்துவிடும். இதிகாசங்களில் நாடகத்தன்மையைப் பலவித அம்சங்களில் பார்க்கலாம். முக்கியமாகக் கதைப் போக்கிலும், கதை வளரும் முறையிலும், அவைகளுக்கேற்றவாறு நிகழும் செய்யுள் நடையின் மாறுதல்களிலும், பாத்திரங்களின் குண விபாகங்களை அவர்களுடைய சம்பாஷணைகளின் மூலமும் நடிப்பின் உத்வேகத்தின் மூலமும் சிருஷ்டி செய்வதிலும் நாடகத்தன்மை விளங்கும். நாம், காவியத்தை வாசித்து, அனுபவிக்கும்போது, நம்மிடம் ஊறும் இன்பமும், பலவித உணர்ச்சிப் பெருக்கும், நாடகத்தன்மையின் சக்தியாலேயே ஏற்படுகின்றன. கம்ப ராமாயணத்தில் நாடக இயல் நிறைந்த பாகங்கள் அநேகம் இருக்கின்றன. இயற்கையாய்க் கதைக்குண்டான நாடகத்தன்மை, கம்பனின் கலைத்திறனும் சிருஷ்டி சக்தி

யாலும் ஆயிர மடங்கு அதிகப்பட்டு ரஸிகர்களுக்கு இன்பம் தருகிறது.

அனுமான், இலங்கைக்கு வந்து, சீதையைப் பல இடங்களிலும் தேடி, எங்கும் காணுமல் தவித்து, மனஞ் சோர்ந்து வெறுப்படைந்து, ராவணன் நாட்டை யழித்துத் தன்னையும் மாய்த்துக்கொள்ளவேண்டுமென்ற மனோபாவத்தில் விழ்ந்து சஞ்சலத்துடன் போய்க்கொண்டிருக்கும் போது, அசோகவனம் தெரிந்தது. இழந்த நம்பிக்கையை மீண்டும் பெற்று அனுமான் அதற்குள் சென்முன். அங்கே, சீதை, மெலிந்து, வாடி, உயிரற்று, 'ஓவியம் புகை யுண்டதே ஒக்கின்ற உருவளாகி,' 'நடுக்கடலில் பெருங் காற்றி லகப்பட்ட, பார மரக்கலம் போலத் திக்கற்று,' கொடூரமான அரக்கியர்கள் நடுவில், ஒரு மரத்தடியில் காணப்பட்டாள். அனுமான் பரமானந்தங்கொண்டு, அந்த மரத்தின் மீது ஏறியிருந்தான். இதே சமயத்தில், ராவணன் தனது விருப்பை நிறைவேற்றிக் கொள்ளுமாறு, சீதையைக் கேட்க அசோக வனத்திற்கு வருகிறுன். அனுமான் மேலேயிருந்து பார்த்துவிட்டு, 'வினையமும், செயலும், மேல்வினை பொருளும் இவ்வழி விளங்கும் என்றெண்ணி மறைந்துகொண்டிருக்கிறுன். சீதையைக் கண்டுபிடித்துவிட்டோமென்று, அனுமானுக்கு ஏற்பட்ட அமிதமான மகிழ்ச்சிக்குத் திடீரென்று ஒரு குறைவு விளைந்துவிட்டது. நல்ல கனவைக் கண்ட திரிசடைக்கும், நல்ல சகுனங்களைக் கண்ட சீதைக்கும் அவைகளின் பயனை உடனே காண முடியவில்லை. வான்மீகத்தில், ராவணன் வந்துபோன பிறகுதான், திரிசடைக்குக் கனவும், சீதைக்கு நல்ல சகுனங்களும் தோன்றுகின்றன. கம்ப ராமாயணத்தில், நல்ல நிமித்தங்களை அநுபவித்த சீதை முன்பு, மகத்தான ஒரு சோதனையாக, ராவணன் தோன்றுகிறுன். நாடகத் தன்மையைக் கவனித்தால் இந்த அமைப்பு அழகாயிருக்கிறது. அனுமான், சீதை, ராவணன், இவர்களின் மனம் தனித்தனியே வெவ்வேறு காரணங்களால் பதைபதைக்க, வாசகர்களின் மனமும் துடிக்கின்றது. என்ன நடக்குமோ என்ற பயம் அவரைத் தயங்கச் செய்கிறது.

ராவணன் வரும் தோரணை என்ன? பரம பராக்கிரமசாலியும், பல மண்டலங்களுக்கு அதிபதியுமாயுள்ள ராவணன், தனது பூரண சக்தியையும் அந்தஸ்தையும் சீதையின் மனத்தில் பதியவைத்து, அவளை இசையச் செய்யவேண்டுமென்ற எண்ணத்துடன் வருகிறுன். ஆகையால் கோடிக் கணக்கான ஸ்திரீ பரிவாரங்களுடன், 'உருப்பசி உடைவாள் எடுத்தனள் தொடா,' 'மேனகை வெள்ளடை யுதவ,' 'நான நெய் விளக்கம் நாலிரு கோடி நங்கையர் அங்கையி லெடுப்ப,' பலவித வாத்திய கோஷங்களுடனும், அரக்கியர் சேனையோடும், சர்வாபரண பூஷிதனுய், ராவணன் இரவில் புறப்படுகிறுன். அவன் எவ்வளவு கம்பீரத்துடன் வருகிறுன் என்பதை நிந்தனைப் படலத்தின் ஆரம்பப் பாட்டுக்களின் நடை காட்டும்.

சிகரவண் குடுமி நெடுவரை எவையும்
ஒருவழி திரண்டன சிவண,
மகரிகை வயிர குண்டல(ம்) அலம்பும்
திண்திறல் தோள்புடை வயங்கச்
சகரவே லையினீர் தழுவிய கதிரில்
தலைதொறும் தலைதொறும் தயங்கும்
வகையபன் மகுடம் இளவெயில் எறிப்ப,
கங்குலும் பகல்பட வந்தான்.

இந்தப் பாட்டிலிருந்து தொடங்கும் பாகத்தில் கவிதையின் எழுச்சியும் போக்கும் கம்பீரத்துடனிருக்க, வருணனையும் கற்பனையும் கொழுத்திருக்கின்றன. அதை வாசிக்கும்போது, ராவணன் போகும் ஆடம்பரத்தைப் படத்தில் பார்ப்பதைப் போல் நாம் காணலாம். கவிதையின் நடையே, சம்பவத்தின் கோலாகலத்தைப் பிரதிபலிக்கிறது; அதன் பேரொலியைக் கவிதையின் ஓசை வெள்ளத்தில் நாம் ஒருவாறு கேட்கலாம்.

ராவணனைப் பார்த்தவுடன் சீதை, 'காய்சின உழுவை தின்னியவந்த கலையிளம்பிணை யெனக்கரைந்து' நடு நடுங்குகிறுள். மரத்தின் மீதிருக்கும் தூதன் மனம் ஊசலாடி உளைகின்றது. பரிவாரங்களெல்லாம் ஒதுங்கவே, ராவணன், 'கூசிக் கூசித்' தனது இச்சையைச் சீதையிடம் தெரிவிக்கிறுன். தனது மகோன்னத நிலையையும் மறந்து, மனத்தில் தாழ்மையடைந்து, ராவணன் இரங்கி வேண்டுகிறுன். வான்மீகத்தில் ராவணன்-சீதை சம்வாதம் விவகார ரீதியாகவே விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. ராவணன் பலவிதமான காரணங்களைச் சொல்லிச் சீதையைத் தனக்கு இசையுமாறு வேண்டுகிறுன். அவன் பிறர் மனைவியரை விழைதலும், அவர்களை எவ்விதமாவது வலிந்து பிடித்து வருதலும் அரக்கியர்களுக்கு இயற்கை. ஆயினும், 'என்னிடத்து விருப்பமில்லாத உன்னை நான் தொடமாட்டேன்' என்றும் கூறுகிறுன்; சீதையைப் பலாத்காரம் செய்யக் கூடாதென்று அவன் தீர்மானிக்கிறுன். தன்னுடைய ஐசுவரியத்தை

யும் பலத்தையும் பற்றிச் சொல்லி, அவள் மனத்தைப் பெறவேண்டுமென்பது அவனது அவா. கம்பர் இதைக் குறிப்பாலுணர்த்தி, நாம் அனுமானிக்குமாறு, ராவணனின் மொழியையும் நடத்தையையும் அமைக்கிறார். தாழ்மையுடன் இரங்கினால் சீதையின் மனம், பரிதாபத்தினாலாவது மாறாதோ என்ற எண்ணத்துடன் அவன் கூறுவதாவது:

'இன்றி றந்தன, நாளை பிறந்தன,
என்றி றம்தரும் தன்மை யிதால்(ல்) எனைக்
கொன்(று) இறந்தபின் கூடுதியோ?'

காரியத்தைச் சாதிக்க என்ன கனிந்த பணிவு! ராவணனின் மனோபாவம் கவனிக்கத் தக்கது. தன்னுடைய நடத்தையை ஆதரித்துக் காரணம் சொல்ல வேண்டுமென்று அவன் கருதவில்லை. எதற்காகச் சொல்லவேண்டும்? தானோ, மிகுந்த செல்வமும் சக்தியும் வாய்ந்த மண்டலாதிபதி. சீதையோ சொல்லற்கரிய அழகுடையவள். அவளைத் தான் விரும்புவது இயற்கை தானே என்று முடிவுசெய்து விடுகிறான். கற்பு, ஒழுக்கம் என்றவை ராவணன் அகராதியில் ஏது? தன் இச்சைக்கு இணங்கினால், சீதை மூன்று உலகங்களுக்கும் அரசி யாகலாமென்று சொல்லிவிட்டு, ராவணன், ஒருவேளை அவள் ராமனிடம் திரும்பச் செல்லக்கூடுமென்று வைத்துக்கொண்டாலும், அதனுடன் கூடியிருப்பது, கேவலம் 'மானுடர் வாழ்வன்றோ!' என்று திரஸ்கரிக்கிறான். இந்த வார்த்தை, சீதைக்கு, ராமனைப் பார்க்கலா மென்ற நம்பிக்கையைக் கொடுத்துவிடுமோ என்று அஞ்சி, ராமனை அவளால் ஒருகாலும் பார்க்க முடியாதென்று கூறுகிறான். வலிய வரும் 'மூவுலகின் தனி நாயகத்தை' உதறித் தள்ளுவது அறிவில்லாத செயல் என்று சொல்லி, ராவணன் சீதை முன்பு, தலைமேல் கைகூப்பி, சாஷ்டாங்கமாக விழுந்தான். வான்மீகத்தில், ராவணன், சீதையின் முன்பு இந்தக் கட்டத்தில் இப்படிக் கைகூப்பி விழுந்ததாக இல்லை. கம்பர், அறந் திறம்பிய காமத்தி வீடுபட்ட ராவணனின் மதியிழந்த தன்மையை நாடகத் தன்மையுடன் வலியுறுத்துமாறு, இப்படி அமைத்தது ரஸமா யிருக்கிறது.

ராவணன் மொழியைக் கேட்ட சீதை கோபாவேசங் கொண்டாள். கண்கள் சிவந்தன. தன்னை மறந்து, என்ன நேர்ந்தாலும் சரியென்று, வீர மொழிகளைப் பகர்கிறாள். இவ்வளவு கோபாக்கினி, சீதைக்கு உண்டாவதற்குப் போதிய காரணமிருந்தும், ஒரு பெண் இந்த நிலையை எய்தலாமோ என்ற உணர்ச்சி கவிக்கு எழுகிறது. இதனால் சீதையை ஒருவரும் குறை கூறக் கூடாதே யென்று நினைத்தது போல், கம்பர், 'பெண்மைக்கு ஏய்ந்தன அல்ல வெய்ய மாற்றங்க'ளைச் சொன்னாள் என்கிறார். வான்மீகத்தில், ராவணனுக்குச் சீதை சொல்லும் பதில், முதலில் சாந்தமாயும், உபதேச ரீதியாயும், விவகார ரீதியாயும் இருக்கிறது. சீதை, மெல்லிய குரலில், மெல்லிய மொழிகளை, மெதுவாகச் சொன்னாள் என்கிறார் ஆதி கவி. வெகு நாளாக வாடி, மெலிந்து, சோகத்தி லாழ்ந்தவள் மெதுவாகவே பேசியிருக்கக் கூடும். இது, உள்ளதை உள்ளபடி உரைக்கும் தன்மைக்குப் பொருந்தலாம். ஆயினும் இது நாடகத்தன்மைக் கொவ்வாது. பேச்சு, உள்ளத்தின் உணர்ச்சியைக் காட்ட வேண்டும். சற்றுப் பின்னால், கவிதா நியாயம் மேலிட்டு, சீதை, போகப் போகச் சற்று சீற்றங் கொண்டு, ராவணனுக்கு, ராமரிடமிருந்து பின்னால் அவனுக்குக் கிடைக்கப் போகும் குலநாச தண்டனையை வலியுறுத்துகிறாள். கம்பரின் சீதையோ, ராவணன் வார்த்தைகள் வந்து அவள் செவிகளில் படு முன்னமே, கோபாக்கினியில் மூழ்கி, வீராவேசங் கொள்கிறாள். வாசாலகத்துடன் அவள் சொல்லும் பதில், ராவணன் மனத்தில் கூரிய வேல் கொண்டு குத்துவது போலிருக்கிறது. ராவணன் எப்படிச் சீதையிடம் தன்னுடைய மட்டிலா ஐசுவரியத்தையும் சக்தியையும் தெரிவிக்க வேண்டு மென்று நினைத்தானோ, அதே போல், சீதை, தனது நாயகனின் பராக்கிரமத்தையும், கோதண்டத்தின் வலிமையையும் தெரிவிக்கிறாள். அத்துடன் நிற்காமல், நெஞ்சைப் பிளக்கும் வார்த்தைகளால், அவனுடைய நயவஞ்சகத்தையும் கோழைத்தனத்தையும் நேரில் சுட்டிக் காட்டி வாட்டுகிறாள். வீரனாயிருந்தால், ராமனில்லாத போது மாறு வேடந் தரித்து ஏன் வர வேண்டுமென்றும், தன்னைத் தூக்கிக்கொண்டு வரும்போது சடாயுவால் அடிபட்டபோது, சிவன் கொடுத்த ஆயுதத்தை உபயோகப் படுத்தித்தான் அவன் தப்பவேண்டி யிருந்ததென்றும், ராமர் அவனது வலிமையையும் அரக்கர் சேனையின் பெருமையையும் கேட்டுத் தெரிந்த பின்புதான், அவனுடைய சகோதரிக்கும், சகோதரர்களுக்கும், தண்டகாரண்யத்தில் தகுந்த தண்டனையை அளித்தாரென்றும் சீதை குறிப்பிட்டுக் கூறுகிறாள். அவள் ஆரம்பத்தில்,

'மேருவை புருவல் வேண்டின், 'விண்பிளந்(து)ஏகல் வேண்டின்
ஈரெழு புவனம் யாவும் முற்றுவித் திடுதல் வேண்டின்
ஆரியன் பகழி வல்லது: அறிந்திருந்(து) அறிவிலாதாய்!
சீரிய அல்ல சொல்லித் தலைபத்தும் சிந்து வாயோ?'

என்றும், முடிவில்,

'ஆயிரம் தடக்கை யான்நின் ஐந்நான்கு கரமும் பற்றி,
வாய்வழி குருதி சோரக் குத்திவான் சிறையில் வைத்த
தூயவன் வயிரத் தோள்கள் துணித்தவன், தொலைந்த
மாற்றம்
நீஅறிந் திலையோ, ஏகு நெறிஅறிந் திலாத நீசா?' *

என்றும் சொன்ன உத்வேகம் ராவணனைப் பிரமிக்கச் செய்கிறது. கோபத்தையும் வீரத்தையும் காட்டக்கூடிய முறையில் பாட்டின் நடை யிருப்பது எளிதில் விளங்கும். ராவணனின் ஆண்மைக்கும், மானத்திற்கும் பங்கம் விளைந்துவிட்டது.

சீதை போட்ட இந்தப் பலமான சூடு, ராவணனின் பெருங் கோபத்தைக் கிளப்பிவிட்டது. அவளைப் பிளந்து தின்று விடப் போவதாக உறுமி எழுகிறான். 'சீற்றமும் காதலும் எதிரெதிர் கிடைப்ப' அவன் திகைத்து நின்றுவிடுகிறான். இந்தச் சந்தர்ப்பத்தில், அனுமான் மரத்தின் மீது இருப்பதைக் கவி நமக்கு ஞாபக மூட்டுகிறார். ராவணனைப் புடைத்துச் சீதையைத் தூக்கிக்கொண்டு போய்விடலாமோ என்ற எண்ணம், அனுமான் மனத்தில், ஒரு விநாடியில் தோன்றி மறைகிறது. காரியம் அவ்வளவு எளிதல்ல. எளிதில் அனுமானால் செய்யக்கூடு மென்றாலும், அதில் ஒரு சிக்கலான அம்சமும் இருக்கிறது. இன்னும் அனுமான் சீதையைப் பார்த்துத் தான் யாரென்று தெரிவித்துக்கொள்ளவில்லையே! இதையெல்லாம் கருதித்தான் அனுமான், தன் கைகளைப் பிசைந்துகொண் டிருந்ததாகக் கம்பர் வரைகிறார். இப்படி அநுமான் கஷ்டப்படுவதை நாம் கண்ணால் பார்ப்பது போலிருக்கிறது. சீதையின் துணிகரமான மொழிக்கு, ராவணன் மீண்டும் பதிலுரைக்க முயல்கிறான். ஆனால் பதிலில், பலமொன்று மில்லை. ஏதாவது மறுமொழி சொல்லாவிட்டால், தனது ஆண்மைக்கு இழுக்கு ஏற்படுமென்று கருதி, ராவணன் சொன்னதாகவே தோன்றுகிறது. சீதை சுட்டிக் காட்டிய சம்பவங்கள் வாஸ்தவமாயிருந்த போதிலும், தான் உண்மையில் மிக்க பலசாலி யென்றும், வெறும் மானிடர்களாகிய ராம லக்ஷ்மணர்களைக் கொல்லுதல், தனது வீரத்திற்குத் தகுந்ததில்லையென்றும், அவர்களைக் 'கூவி நின்று ஏவல் கொள்ள'ப் போவதாயும், அவசியமானால், அவர்களைத் தனது ஒரு கையால் தூக்கிக்கொண்டு வந்து கொல்ல முடியுமென்றும் சொல்கிறான் ராவணன். இந்தச் சந்தர்ப்பத்தில் ராவணனிடம் வாசகர்களுக்குச் சற்று பரிவு, அவர்களை அறியாமலே, ஏற்படுகிறது. வேண்டுதலில் ஆரம்பித்த ராவணன் வெருட்டுதலே சரியென்று நினைக்கிறான். தனது இச்சைக்கு இணங்காவிட்டால், தான் அயோத்தி, மிதிலை நாடுகளைத் துவம்சம் செய்து, அவளையும் கொன்று விடப் போவதாகவும், இரண்டு மாத காலம் அவகாசம் கொடுத்திருப்பதாகவும், ராவணன் சீதையிடம் கூறிவிட்டு, அரக்கியர்களுக்குச் சீதையை வசப்படுத்தும்படி கட்டளையிட்டுத் திடீரென்று செல்கிறான். மீண்டும், சீதை, ஏதாவது வெம்மையாகச் சொல்லி அவனது இழிமையைக் காட்டக்கூடு மென்று பயந்தே ராவணன் திடீரென்று போய்விட்டான் போல் தோன்றுகிறது. ராவணன் கட்டளைப்படி அரக்கியர்கள் சீதையை வாட்டுகிறார்கள். திரிசடை அவர்களை அதட்டி நிறுத்துகிறாள். சீதை துயரத்திலாழ்கிறாள்.

இத்துடன் நிந்தனைப் படலம் முடிந்து உருக்காட்டுப் படலம் ஆரம்பிக்கிறது. சம்பவ ரீதியாகவும், நாடக ரீதியாகவும், இந்த இரண்டு படலங்களும் ஒன்றாகவே யிருக்கலாம். அனுமான், சீதையைப் பார்த்து, அவளைக் கண்டு, தன் வருகையைத் தெரிவித்துப் பேசி, ராம லக்ஷ்மணர்களின் சுகத்தையும் சொல்லி, முடிவு காணாத் துக்கத்தில் தத்தளித்துக் கொண்டிருந்த சீதைக்கு, நம்பிக்கையையும் மட்டிலா மகிழ்ச்சியையும் அளித்ததுதான் சம்பவம். ராவணன்-சீதை சந்திப்பும், சம்வாதமும், இந்தப் பாகத்தின் நாடகத் தன்மையை அதிகப்படுத்துகின்றன. சீதை இருக்கிற இடத்தைத் தெரிந்து, அவளைப் பார்த்துவிட்டாலே, அனுமானுக்கு அத்யந்த வெற்றியாகும். இத்துடன், சீதையைப் பார்க்கும் போதே, அவள் கற்பையும், வீரத்தையும், நாயகன் மீதுள்ள தெவிட்டாத பக்தியையும், கண்கூடாகக் கண்டுவிட்டால், அனுமானின் ஆநந்தத்திற்கு எல்லை யேது! தவிரவும், ராவணன் இந்தக் கட்டத்தில் அடக்கத்துடன் நடந்துகொண்டு இரண்டு மாதம் வரை சீதைக்குக் காலம் கொடுத்திருக்கிறான். அனுமான் திரும்பிப் போய், ராமரிடம் செய்தி கூறிப் படைகளைத் திரட்டி வருவதற்குக் காலமிருக்கிறது. அசோக வனத்தில் பார்த்த காட்சியெல்லாம் அனுமான் மனத்தில் சித்திரம்போல் பதிந்து கிடக்கிறது. இந்தச் சித்திரத்தின் ஞாபகத்தால்தான், அனுமான், பின்னால் ராமரிடம் போய்ச் சீதையைப் பற்றி உணர்ச்சிப் பெருக்குடன் வர்ணிக்கிறான்.

---

* ராவணனைக் கட்டிச் சிறையிலடைத்த கார்த்தவீரியன் பரசுராமனால் தோல்வியுற்றதும், பரசுராமன் ராமனால் தோல்வியுற்றதும் இங்குச் சொல்லப்படுகிறது.

அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணி.

தொலைபேசி

அலுவலகம்	225	மலைக்கோயில்	243
மலைப்பாதை	396	குடியிருப்பு இல்லங்கள்	387

திருவிழாக்கள்

1.	ஸ்ரீ வள்ளியம்மன் கல்யாணம்	..	பிப்ரவரி, மார்ச்சு
2.	சிவராத்திரி 1008 சங்காபிஷேகம்	..	மார்ச்சு
3.	ஸ்ரீ தெய்வானை கல்யாணம்	..	ஏப்ரல், மே
4.	ஆடிக்கிருத்திகை தெப்பத் திருவிழா	..	ஜூலை, ஆகஸ்டு
5.	கந்தர் சஷ்டி விழா	..	அக்டோபர், நவம்பர்
6.	திருப்புகழ் திருப்படி விழா	..	டிசம்பர் 31ம் நாள்

குடியிருப்பு இல்லங்கள் பாதி நன்கொடைத் திட்டத்தின் கீழ் ரூ. 10,000/—செலவில் கட்டப்படுகிறது.

95 அறைகளும் 28 குடியிருப்பு இல்லங்களும் பயணிகள், பணிச் செலவின் கீழ் தங்குவதற்கு கட்டப்பட்டுள்ளன.

கல்யாண உற்சவ கட்டணம் ரூ. 251/— (முன் கூட்டியே ஒரு வாரத்திற்கு முன் பதிவு செய்து கொள்ள வேண்டும்.)

1975 ஆம் ஆண்டு கிருத்திகைகள்

18—3—1975	பங்குனி கிருத்திகை.
14—4—1975	சித்திரை முதல் கிருத்திகை.
11—5—1975	சித்திரை 2—ம் கிருத்திகை
8—6—1975	வைகாசி கிருத்திகை
5—7—1975	ஆனிக் கிருத்திகை.
31—7—1975	ஆடி பரணி.
1—8—1975	ஆடிக் கிருத்திகை முதல் நாள் தெப்பம்.
2—8—1975	ஆடிக் கிருத்திகை 2—ம் நாள் தெப்பம்
3—8—1975	ஆடிக் கிருத்திகை 3—ம் நாள் தெப்பம்.
29—8—1975	ஆவணிக் கிருத்திகை.
25—9—1975	புரட்டாசி கிருத்திகை.
22—10—1975	ஐப்பசிக் கிருத்திகை.
18—11—1975	கார்த்திகைக் கிருத்திகை.
16—12—1975	மார்கழிக் கிருத்திகை.
31—12—1975	டிசம்பர் 31ம் நாள் திருப்புகழ்த் திருப்படி விழா.

திருக்கோயில் நிருவாகிகள்.

ராவணன் போன பிறகு, அரக்கியர்கள் சீதையை இமை கொட்டாது காவல் செய்கிறுர்கள். அனுமான் ஒரு 'விஞ்சை'யால் அவர்களைத் தூங்கச் செய்கிறுன். சீதை, தனது நிலைமையைப் பற்றித் துக்கித்துப் புலம்பி, இக்கஷ்டமெல்லாம் தன்னுலேயே வந்ததென்றும், தன் பழியைத் தானே தீர்த்துக்கொள்ளவேண்டுமென்றும் நினைந்து, தன்னைப் பல வாருக நொந்து உயிரை மாய்த்துக்கொள்ள வேண்டுமென்று தீர்மானித்து, ஒரு மாதவிக் கொடிப் பக்கம் போன சமயம், நமது நெஞ்சைப் பிளந்து உணர்வை மங்கச் செய்யும் ஒரு சோக நாடகம் நமது கண் முன்னுல் உருவெடுக்கிறது. இதுவே தக்க சமயமென்று, அனுமான், அவள் முன் வந்து நின்று, வணங்கித், தான் ராகவன் தூதனென்று சொல்வதும், சீதை, முதலில், இதுவும் ராவணனின் வஞ்சகமாயிருக்குமோவென்று ஐயுற்றுப் பின்னுல் தெளிந்து, அனுமானின் விருத்தாந்தத்தையறிந்து, புத்துயிர் பெற்றுப், பேரானந்தமடைந்து அனுமானை வாழ்த்துவதும், அற்புதமான நாடகத் தன்மையுடன் கம்பரால் வரையப்பட்டிருக்கின்றன.

சீதை, அனுமான் ராமதூதன்தானென்று தெரிந்தவுடன் சொல்லும்,

'மும்மையாம் உலகம்தந்த முதல்வற்கும் முதல்வன் தூதாய்ச்
செம்மையால் உயிர்தந் தாய்க்குச் செயல் என்னுல் எளிய துண்டே,
அம்மையாய், அத்தனுய அப்பனே, அருளின் வாழ்வே,
இம்மையே மறுமை தானும் நல்கினை இசையோ(டு)' என்றுள்.

'பாழிய பணைத்தோள் வீர, துணையிலேன் பரிவு தீர்த்த
வாழிய வள்ளலே,யான் மறுவிலா மனத்தேன் என்னின்
ஊழியோர் பகலாய் ஓதும் ஆண்டெலாம் உலகம் ஏழும்
ஏழும்வீ வுற்ற ஞான்றும் இன்றென இருத்தி' என்றுள்.

இப்பாட்டுக்களும், அனுமானின் விஸ்வரூபத்தைப் பார்த்து, அவனுடைய உண்மையான சக்தியைத் தெரிந்த பிறகு சொல்லும்,

'மின்னேர் எயிற்று வல்லரக்கர்
வீக்கம் நோக்கி வீரற்குப்
பின்னே பிறந்தான் அல்லதோர்
துணையி லாத பிழைநோக்கி,
உன்னு நின்றேன், உடைகின்றேன்,
ஒழிந்தேன் ஐயம், உயி(ர்) உயிர்த்தேன்,
என்னே நிருதர் என்னுவர்,
இவனே எங்கோன் துணையென்றுல்!
'மாண்டேன் எனினும் பழுதன்றே,
இன்றே மாயச் சிறைநின்று
மீண்டேன், என்னை ஒறுத்தாரைக்
குலங்க ளோடும் வேரறுத்தேன்,
பூண்டேன் எங்கோன் பொலம்கழலும்,
புகழே யன்றிப் புன்பழியும்
தீண்டேன்' என்று மனமகிழ்ந்தாள்,
திருவின் முகத்துத் திருவன்னுள்.

இப்பாக்களும், கரை புரண்டோடும் உணர்ச்சி வெள்ளத்தைக் கவிதையில் அமைப்பதில், கம்பர் நிகரற்ற கவியென்று எளிதில் காட்டுகின்றன.



உ

குகமயம்



காஞ்சிபுரம் திருக்குமரகோட்டம்

ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானம்,

காஞ்சிபுரம்

சீரும் சிறப்பும் வாய்ந்த தெய்வத் தென்றமிழ்த் திருநாட்டிலே மூர்த்தி, தலம், தீர்த்தம் என்று முச்சிறப்புக்களை உடையதும் சேயாறு, பாலாறு, வேகவதி மஞ்சள்நீர் நதி, கம்பை ஆகிய நதிகளையுடையதும் சைவ சமயத் திருமுறைகளால் புகழ்ந்தோதப் பெற்றதும் மற்றும் பல அற்புதங்களையுடையதுமாகிய காஞ்சிமா நகர்க்கண் உள்ள திருக்குமரக் கோட்டத்தில் சஷ்டி, கார்த்திகை, விசாகம், பூசம், செவ்வாய். வெள்ளி ஆகிய இப்புண்ணிய நாட்களில் தவறாது வந்து வழிபடு வோர்க்கு இம்மை மறுமைப் பலன்களை அளித்து யாவரையும் வாழ்விக்கும் கலியுக வரதனாகிய குமரகோட்டத்தில் எழுந்தருளியுள்ள சுப்பிரமணியப் பெரு மானை வழிபட்டு அருள்பெறுமாறு வேண்டுகிறோம்,

இங்ஙனம்,

திரு. V. K. R. K. கோவிந்தராஜ முதலியார்,

தக்கார்.

திரு. S, கோவிந்தன்,

நிர்வாக அதிகாரி

இளவலின் இங்கிதம்

திரு. மு. மு. இஸ்மாயீல்

'இங்கிதம்' என்ற தமிழ்ச் சொல் ஓர் அற்புதமான சொல். ஒன்றைக் குறிப்பாக உணர்த்துவதையும் இங்கிதமென்று சொல்லலாம். Good manners — என்று இன்று நாம் ஆங்கிலத்தில் குறிப்பிடுகிற சமுதாயப் புற ஒழுகலாறுகளையும் இங்கிதம் என்ற சொல் குறிக்கும். ஒரே பொருளையோ கருத்தையோ சொல்பவர்களுக்கும் அதை யாரிடம் சொல்கிறார்களோ அவர்களுக்கும் இடையே உள்ள வயது, அறிவு, உறவு,முறை, சமுதாய அந்தஸ்து, ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட தார தம்மியங்களைக் கருத்திற் கொண்டு வெவ்வேறு விதமாகச் சொல்லலாம். ஒரே சேதியை ஒரு தனயன் தன் தந்தைக்கு உணர்த்தும் முறைக்கும் தன் நண்பனுக்கு உணர்த்தும் முறைக்கும் வேறுபாடு இருக்கும். தந்தையோ தன்னைப் பெற்றெடுத்தவர்; வயதில் பெரியவர்; அநுபவம் நிறைந்தவர்; தன் மேல் ஆதிக்கம் செலுத்துவதற்கும் உரியவர். ஆனால் நண்பர்களுக்கிடையிலேயோ பெரும்பாலும் வயதிலும் அறிவிலும் அநுபவத்திலும் இணைப்பாட்டிலும் சமநிலையே இருக்கும். இந்தத் தார தம்மியத்திற்கு இணக்கமாகவே அவர்கள் சொல்கிற முறையும் அமைந்திருக்கும். அதைத் தான் இங்கிதம் என்று சொல்கிறோம். இத்தகைய அற்புதமான பண்பினைக் கம்பன் தன் காப்பியத்தில் பல இடங்களில் வெகு நுணுக்கமாக எடுத்துக் காட்டுகிறார்.

இராமனும் இலக்குவனும் ருசியமுக பர்வதத்தை நோக்கிச் செல்கிறார்கள். அவர்களின் எதிரில் வந்த அநுமன் "கவ்வையின்றாக, நுங்கள் வரவு!" என்று வரவேற்கிறான். அப்படி வரவேற்ற அநுமனை "வெவ்வழி நீங்கியோய்! நீ யார்?" என்று இராமன் கேட்கிறான். அநுமன், தன்னைப் பற்றிக் கூறி அறிமுகம் செய்து கொண்டு தான் சுக்ரீவனுக்கு ஏவல் செய்வோன் என்றும் அவர்களுடைய வருகையைக் கண்டு சுக்ரீவன் ஏவ, விவரம் தெரிய, வந்ததாகவும் சொல்கிறான். "அந்தச் சுக்ரீவன் எங்கே இருக்கிறான். அவனைக் காணும் விருப்பத்தோடுதான் நாங்களும் வந்தோம். அவனைக் காட்டு" என்று இராமன் கூறுகிறான். வாலியினால் வருத்தப்பட்டவன் சுக்ரீவன் என்பதை எடுத்துக் கூறிய அநுமன், தங்களுக்கு அடைக்கலம் அளிக்க வேண்டுமென்றும் இராமனை இறைஞ்சுகிறான். அப்படி இறைஞ்சி விட்டு "யார் என விளம்புகேன் நான், எங்குலத் தலைவருக்கு உம்மை? வீர! நீர் பணித்திர்!" என்று கேட்கிறான். இதில் கம்பன் ஓர் அற்புதமான இங்கிதத்தைக் காட்டுகிறான். இராமன் அநுமனைக் கேட்டதோ 'நீ யார்?' என்று அனுமனோ இராம இலக்குவரைப் பார்த்து "நீங்கள் யார்?" என்று கேட்கவில்லை. அதற்கு மாறாக, "எங்கள் குலத் தலைவனான சுக்ரீவனுக்கு உங்களை யார் என்று நான் சொல்வது? என்று எனக்குக் கட்டளை இடுங்கள்" என்று கேட்கிறான். சக்கரவர்த்தித் திருமகனாகிய இராமன் வனத்திலே முதன் முதலாகக் காண்கிற அநுமனை நோக்கி "நீ யார்?" என்று கேட்பது பொருத்தமே. ஆனால், இராம இலக்குவர் தோற்றத்தையும் அவர்கள் வனத்தில் நடந்து வரும் பொழுது மயில் முதலிய பறவைகளும் கற்களும் மலர்களும் மேகமும் அவர்களைக் கண்டதால் உற்ற நிலைமையைக் கண்டவனும் அவர்கள் பால் அளவு இல் காதல் தோன்ற என்பு நெக்கு உருகப் பெற்றவனும் அவர்களிடத்து அடைக்கலம் தேடியவனுமான அநுமன், அவர்களைப் பார்த்து, "நீங்கள் யார்" என்று

உ

தொலைபேசி : 2584

திருக்காமாட்சியம்மை உடனுகிய

திருவேகம்பநாதர் திருக்கோயில்

காஞ்சிபுரம்

''ஏகம்பத்து உறை எந்தாய் போற்றி
பாகம் பெண்ணுரு வானுய் போற்றி''

சீரும் சிறப்பும் வாய்ந்த, தெய்வத் தன்மை பொருந்திய தொண்டை நன்னுட்டின் திலகமாய் விளங்குவது காஞ்சிமாநகரம் ஆகும். இத்தலம் பஞ்ச பூதத்தலங்களுள் பிருதிவித்தலமாகவும், திருஞானசம்பந்தர் முதலாக நாயன் மார்கள் நால்வராலும் திருப்பதிகம் அருளப் பெற்ற தலமாகவும், ஐயடிகள் காடவர்கோன், சாக்கியநாயனுர், திருக்குறிப்புத் தொண்டர் முதலான அடியார்கள் திருவடிப்பேறு பெற்ற தலமாகவும் விளங்குகிறது.

இதன்கண், அம்மை காமாட்சி இறைவனைப் பூசித்து வழிபட்டதும், பிருதிவி இலிங்கத்தை அமைத்துப் பூசித்ததும் ஆகிய மேலான சிறபிபினைப் பெற்றுப், ''பெரிய கோயில்'' என்றழைக்கப்படும் பெருமைக்குரியதாகத் திகழ்வது **இத் திருவேகம்பநாதர் திருக்கோயிலாகும்.** இத்திருக்கோயிலில் திருவேகம்பநாதர், காமாட்சியம்மைக்குக் காட்சி தந்தருளிய சிறப்பிடமாக விளங்குகின்றது **மாவடியே** ஆகும். இதன் கீழ் பெருமான் சோமாஸ்கந்த வடிவில் கையில் முன் முத்திரையுடன் விளங்குகின்ருர். கீழே பதஞ்சலி, வியாக்கிரபாத முனிவர்களின் உருவங்களும், பஞ்சாக்கினி மத்தியில் தவம்செய்யும் தபஸ் காமாட்சியின் வடிவமும் உள்ளன.

இம்மாவடி பிராத்தனைக்குரிய சிறந்த இடமாகும். இக்கோயிலுக்குச் செல்வோர் இம்மாவடியைத் தவருது தரிசித்து வலம் வரவேண்டும். இங்குத் திருவேகம்ப நாதரைத் தொழுது வணங்குவோர் எல்லா நன்மைகளையும் பெறுவர்.

அன்பர்கள் திரளாக வந்து பெருமானை வழிபட்டும், மாவடியைத் தரிசித்தும் பேறு பெற்றுய்வார்களாக !

இங்ஙனம்,

திரு. T. கந்தசாமி,
நிர்வாக அறங்காவலர்.

திரு. E.எல்லப்ப நாயகர்,
,, M.P. பரதன்,
,, T. S. துரைசாமி,
அறங்காவலர்கள்.

S, கோவிந்தன்,
நிர்வாக அலுவலர்.

கேட்பது இங்கித மற்ற கேள்வியாகும். இந்த நுணுக்கத்தைத்தான் கவிச் சக்கரவர்த்தி மிக அற்புதமாக இங்கே எடுத்துக் காட்டுகிறன்.

இதே இங்கிதம் இதைவிட மிகச் சிறப்பாக இலக்குவனிடம் காணப்படுகிறது. பெண்ணைக் கோறல் வீரத்துக்கு இழுக்காகும் என்பது இந் நாட்டு மக்கள் — குறிப்பாகத் தமிழர்கள் தொன்று தொட்டே கொண்டிருந்த உயர்ந்த கருத்தாகும். இந்தக் கருத்தினை மிக அழுத்த மாகக் கம்பன் எடுத்துக் காட்டுகிறன். இந்திர ஜித்து இறந்த பிறகு இராவணன் அளவு கடந்த சோகத்தில் மூழ்கி புலம்பத் தொடங்கு கிறன். இத்துயர் நமக்குச் சீதையால் உண் டானது என்று சொல்லி 'அவளை, வாளால் கொன்று தொலைத்திடுவேன்' என்று கூறி, சீதை இருக்குமிடத்தை நோக்கி ஓடுகிறன். அவன் அப்படி செய்யப் போவதை விலக்கி மகோதரன் அவனுக்கு அறிவுரை கூறுகிறன். சீதையைக் கொல்வதனல், 'நீர் உளதனையும், வானப் பரப்பு உளதனையும், நீண்ட பார் உள தனையும், வானப் பரப்பு உளதனையும், காலின் பேர் உளதனையும், பேராப் பெரும்பழி பிடித்தி போலாம்'' என்கிறன். ''எவ்வளவுதான் வலி மையுடையவர் என்று அளவிட்டுக் கூற முடி யாத காலகேயருடைய சிரத்துடனே திசை யானைகளில் வெண் தந்தங்கள் சிந்தும்படி வீசிய உன்னுடைய வெற்றி வீரவாளை ஒரு மாதின் மேல் செலுத்தியபோது அந்த வாள் தானே நாணத்தினல் இறுவதல்லாமல் அம்மாதின் ஆவியைப் போக்குமோ ?'' என்று கேட்கிறன். ''அப்படி, மங்கையை, குலத்துளாளை, தவத்தியை, முனிந்து சங்கை ஒன்று இன்றிக் கொன்ருல் உன்னல் தோல்வி அடைந்த பிரம் மனும் திருமாலும் சிவனும் உன்னைப் பார்த்துச் 'சிறியன்' என்று செங்கையும் கொட்டிச் சிரிப் பார்களே'' என்று எடுத்துக் காட்டுகிறன். ஒரு பெண்ணைக் கொல்வது, ''நிலத்தியல்பு அன்று; வானின் நெறியன்று; நீதி அன்று; தலத்து இயல்பு அன்று; மேலோர் தர்மமேல் அதுவுமன்று; வலத்து இயல்பு அன்று; மாயாப் பழியே ஆகும்'' என்று எடுத்துக் காட்டுகிறன் இவ்வளவையும் மகோதரன் சொன்ன பிறகு தான், இராவணன் சீதையை வெட்டப் போதலைத் தவிர்க்கிறன். அரக்கர்களி டையேயே இந்த தர்மம் இவ்வளவு அழுத்த மாகவும், ஆழமாகவும் இருக்குமானல் மனிதர் களிடையே, குறிப்பாக அரச வம்சத்தினரி டையே எப்படி இருந்திருக்க வேண்டுமென் பதை ஊகித்துக் கொள்ளலாம்.

விசுவாமித்திர முனியோடு சென்றுகொண் டிருந்த இராம இலக்குவர் முன்னல் தாடகை ஆரவாரத்துடன் வந்து, 'வேல் கொண்டு எறி வேன்' எனச் சினந்து நிற்கிருள். அவளை இராமன் கொல்ல வேண்டுமென்பது முனி வனுடைய கருத்தாக இருந்த போதிலும் அவளைக் கொல்ல இராமன் அம்பை எய்ய வில்லை. அவர்களுடைய உயிருக்கே ஊறு விளை விக்கும் தொழிலில் அவள் இறங்கிய போதிலும் ''பெண் என மனத்திடை பெருந்தகை நினைந் தான்'' என்று கம்பன் கூறுகிறன். இதில் காணக்கூடிய நுணுக்கம் ஒன்று இருக்கிறது. ''தாடகையைக் கொல்.'' என்று அது வரை விசுவாமித்திர முனிவன் இராமனிடம் சொல்ல வில்லை யாதலால், 'அவள் பெண் ஆகையால் அவளைக் கொல்வது தகாது' என்று இராமன் கூறியதாகவும் கம்பன் கூறவில்லை. தாடகையை இராமன் கொல்ல வேண்டுமென்பது முனி வனுடைய கருத்தாக இருந்தது என்றுதான் கம்பன் கூறுகிறன். அதற்கு ஏற்கனவே இராமன் ''அவளைப் பெண் என மனத்திடை நினைந்தான்'' என்று கம்பன் கூறுகிறன். இவ்வாறு இராமன் நினைத்ததை முனிவன் அறிந்து கொள்கிறன். அவளுடைய கொடுஞ் செயல்களையெல்லாம் எடுத்துக் கூறி ''இக்கொடியாளையும் மாது என்று எண்ணுவதோ?'' என்று இராமனைக் கேட்கிறன். முடிவாக,

> ''ஈறுஇல் நல்அறம் பார்த்து இசைத்தேன்; இவள்
> சீறி நின்று இது செப்புகின்றேன் அலேன்;
> ஆறி நின்றது அருள் அன்று; அரக்கியைக்
> கோறி' என்று, எதிர் அந்தணன் கூறினன்.''
>
> (பாலகாண்டம்—தாடகை வதைப் படலம்-43.)

''இந்தத் தாடகை மேல் உள்ள கோபத்தினல் அவளைக் கொல்லுமாறு நான் சொல்லவில்லை; அழிவில்லாக் நல்லறத்தை நன்ருகச் சிந்தித் துப் பார்த்தே இவளைக் கொள்ளுமாறு சொல் கிறேன்; மேலும் தீமையைப் பொறுப்பது அருளு மன்று'' என்று விசுவாமித்திர முனிவன் இராமனுக்கு உணர்த்துகிறன். இங்கே இராம னுக்கு ஒரு தர்ம சங்கடம் ஏற்படுகிறது. பெண்ணைக் கொல்வது அறமாகாது. ஆனல், அறங்களை எல்லாம் உணர்ந்த விசுவாமித்திர முனிவன், இந்தத் தாடகையைக் கொல்வதை அறம் என்கிறன். இப்பொழுது பெண்ணைக் கொல்வது அறத்தின் பாற்படாது என்பதால் தாடகையைக் கொல்லாமல், இருப்பதா? ''நல் தந்தை நீ, தனித் தாயும் நீ, இவற்கு'' என்று யாரைப் பார்த்துக் கூறி தசரதன் இராம — இலக்குவரை ஒப்படைத்தானே, அந்த விசுவா மித்திரன் சொல்கிறன் என்பதால் தாட கையைக் கொல்வதா? என்பதுதான் இராம னுக்கு ஏற்பட்ட தர்ம சங்கடம். இராமன் உடனே ஒரு முடிவுக்கு வருகிறன். தாட கையைக் கொல்வது அறமன்று எனினும் விசுவா மித்திரன் சொல்லை வேதமாகக் கொண்டு அதன்படி நடப்பதுதான் அறம் செய்யும் நெறி என்ற முடிவுக்கு வந்து அந்த முடிவின்படியே தாடகையைக் கொல்கிறன்.

அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில்,

திருவண்ணாமலை, வ. ஆ.

தலங்களில் சிறப்புற்றதும், நினைக்க முத்தி அளிக்கும் சிறப்புத்தலம் இத்தலமாகும். சைவம் வளர்த்த பெரியார்களும், சமயகுரவர்களாம் ஞானசம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர், ஆகியோரால் போற்றிப்புகழப்பட்ட தலமாகும். இத்திருக்கோயில் சுமார் 26 ஏக்கர் நிலப்பரப்பில் பரந்து ஒன்பது திருக்கோபுரங்களை கொண்டு அமைந்துள்ளது. இந்தியாவிலேயே மிக உயரமான கோபுரம் எனக் கூறப்படும் 217 அடி உயரமுள்ள இராஜ கோபுரம் இத்திருக்கோயிலில் அமைந்துள்ளது. மேலும் இத்திருக் கோயிலில் தற்போது சுமார் ஐம்பது லட்ச ரூபாய் மதிப்பீட்டு செலவில் திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திருக்கோயிலின் மிகப் பெரிய திருவிழாவாக கார்த்திகை தீபத் திருவிழா 10 நாட்கள் வெகு விமரிசையாகக் கொண்டாடப் பெறுகிறது. இத்திருவிழாவின் கடைசி பத்தாம் நாள் திருவிழாவின் போது மாலை 6 மணிக்கு ஜோதி சொருபம் ஒன்று மலையின் மீது ஏற்றி வைக்கப்படும். இதைக் காண லட்சக்கணக்கான பக்த கோடிகள் வருவார்கள். இத்தகைய பழமை வாய்ந்த இத்திருக்கோயிலை புதிப்பிக்க, ஆகும் செலவு சுமார் 50 இலட்சம் ரூபாயில் ஒரு பகுதி அரசாங்க மான்யத்தாலும், மற்றும் ஒரு பகுதி நாட்டுக் கோட்டை நகரத்தார்களாலும், மீதி பகுதி பொது மக்கள் நன்கொடையினாலும் நடத்த வேண்டியிருப்பதால், பக்த கோடிகள் தங்களால் இயன்ற அளவு மேற்படி ஆலயத்திருப்பணிக்கு நிதியுதவி அளித்து மகா கும்பாபிஷேகம் செய்விக்க அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.

நன்கொடை அனுப்ப வேண்டிய முகவரி, ''செயலாளர், அருள்மிகு அண்ணாமலையார் திருப்பணிக்குழு, திருவண்ணாமலை, வ.ஆ''. ஆகும்.

பொ. கந்தசாமி, பி. எஸ்ஸி.,
நிர்வாக அலுவலர்.

டி.வி. சுப்ரமண்ய செட்டியார்,
அறங்காவலர் குழுத்தலைவர் & உபதலைவர், திருப்பணிக்குழு

அறங்காவலர்கள்:—

பி. எஸ். மாணிக்கவேலு, ஏ. அண்ணாமலை நயினார், எஸ். ஜெயராம பிள்ளை.

பஞ்சவடியிலிருந்த இராமனைக் சூர்ப் பணகை காமுறுகிறாள். அழகிய உருக்கொண்டு இராமனிடம் வந்து தன் ஆசையை வெளிப் படுத்துகிறாள். அப்போது, அங்கு வந்த சீதையைக் கண்ட சூர்ப்பணகை அவள் அழகைப் பார்த்து அதிசயித்து அவள் இராம னுடன் இருக்கும் வரையில் இராமன் தன்னை விரும்பமாட்டான் என்று எண்ணிச் சீதையை வெருட்டுகிறாள். அதைக்கண்ட இராமன் சூர்ப் பணகையை வெருட்டுகிறான். அவள் மனம் நைந்து ஏங்கிக் காமத் தீச்சுடஉயிர் உலைகிறாள். கடைசியாகச் சீதையைத் தூக்கிச் செல்வ தற்காக அவளைத் தொடர்கிறாள். அதைக்கண்ட இலக்குவன், "நில் அடீஇ" என அவளை நெருங் குகிறான். ஆனால், அவளைப் "பெண் என நினைந் தான்" ஆகையால், வில் எடாது வாள் உருவி "சீதையைத் தூக்கிக் கொண்டு 'விண்வழிச் செல்வேன்" என்று, உறுத்து எழுவாளை "மூக்கும், காதும் முலைக்கண்களும், முறையால், போக்கு"கிறான். இங்கு நோக்கத் தக்கது என்னவென்றால் சீதையைத் தூக்கிக் கொண்டு "விண்படர்வேன்" என்று சூர்ப்பணகை எழுந்த செயல் மிகக் கொடிய செயல். அத்தகைய கொடிய செயலுக்காகச் சூர்ப்பணகையை இலக் குவன் கொன்றிருப்பானேயானால், அது நியாய மற்றதென்றோ முறையற்றதென்றோகூடச் சொல்லமுடியாது. ஆனாலும், அவள் பெண் என்ற காரணத்தினால், இலக்குவன் வில்லை எடுத்து அவள் மேல் அம்பை எய்து அவள் உயிரைப் போக்காமல் வாளை எடுத்து அவளை அங்கபங்கம் மாத்திரம் செய்கிறான்.

சடாயு உயிர் நீத்த பிறகு இராமனும் இலக்குவனும் சீதையைத் தேடிக் கொண்டு தெற்கு நோக்கிச் செல்கிறார்கள். அப்படிச் சென்று கொண்டிருக்கும் பொழுது அவர்கள் ஒரு சோலையை அடைந்து ஒரு பளிக்கறையில் தங்குகிறார்கள். அப்போது இராமன், "நீர் கொணர்க" என்று சொல்லி இலக்குவனை அனுப்புகிறான். நெடுங்கானில், நீர்தேடி இலக் குவன் செல்கிறான். எங்குத் தேடியும் நீரைக் கண்டானில்லை. அப்போது, அயோமுகி என் னும் அரக்கி அவனைக் கண்டு காமுற்று அவ னெதிரில் வருகிறாள். அவளைக் கண்ட இலக் குவன் அவளை ஓர் அரக்கி என்று உணர்கிறான். இப்படி அவன் உணர்ந்ததை கவிச்சக்கர வர்த்தி கம்பன் அற்புதமாகச் சொல்கிறான். அதாவது, "பண்டு நாசி இழந்து பதைக்கும் மிக்க வலிமை உடைய சூர்ப்பணகையோடு தாடகையையும் ஒத்த குலத்தை உடையளான இவள் துஷ்டர்களாகிய இராக்கதர் கூட்டத் தில் பிறந்த ஒரு பெண்ணுவாள் என்று உணர்ந் தான்" என்று கம்பன் கூறுகிறான்.

"பண்டையில் நாசி இழந்து பதைக்கும்
திண்திறலா ளொடு தாடகைச் சீராள்;
கண்டகர் ஆய அரக்கர், கணத்து ஓர்
ஒண்தொடி ஆம், இவள்' என்பது உணர்ந்தான்."

(ஆரணிய காண்டம்—அயோமுகிப் படலம் -49.)

அயோமுகி ஓர் அரக்கி என்பதை இலக்கு வன் உணர்ந்தான் என்று சொல்லவந்த விடத்து தாடகையையும் சூர்ப்பணகையையும் சேர்த்துச் சொல்லும் கம்பனுடைய மதிநலம் எண்ணி யெண்ணி வியக்கத் தக்கது, அந்த நயத்தை, மேலும் கற்கும்போது தான், பூரணமாக உணர முடியும். அந்த அயோமுகியைப் பார்த்து, "நீ யார்" என்று இலக்குவன் கேட்கிறார். அவன் மாட்டுப் பிறந்த ஆசையின் காரணமாக வந்தவள் என்றும் தான் அயோமுகி என்றும் பதிலிறுக்கிறாள். அதனைக் கேட்ட இலக்குவன் கோபமடைகிறான்.

"மாறு இலவார் கனை, இவ்உரை, வாயில்
கூறிடின், நின்உடல் கூறிடும்' என்றான்."

(ஆரணிய காண்டம்— அயோமுகிப் படலம் -53)

அயோமுகி மீண்டும் இலக்குவனை வேண்ட அவன் அவளை அச்சுறுத்துகிறான்,

"................நின் இரு காதொடும் நாசி
துமிப்பதன் முன்பு அகல்."

(ஆரணிய காண்டம்—அயோமுகிப் படலம் -56.)

என்கிறான். அவள் அப்பொழுதும் பயப்படா மல் தன்னுடைய ஆசையை நிறைவேற்றிக் கொள்வதற்காக இலக்குவனைத் தூக்கிக் கொண்டு ஆகாய மார்க்கமாக விரைந்து செல் கிறாள். அப்படித் தூக்கிச் சென்ற அயோமுகி யை இலக்குவன் அவளுடைய மூக்கு முதலிய உறுப்புக்களைப் பிடித்து அறுக்கிறார். உடனே அயோமுகி அலற ஆரம்பிக்கிறாள். இதற்கி டையே, நீர் கொண்டுவரச் சென்ற இலக்குவன் நெடுநேரமாகியும் திரும்பிவராதது கண்ட இராமன், அவனுக்கு என்ன நேர்ந்ததோ என்று எண்ணிப் பலவாறு புலம்பி அவன் இல்லாவிட்டால் தான் உயிர் வாழ்வது இல்லை என்று முடிவு செய்து தற்கொலை செய்து கொள்ள முடிவுசெய்கிறான். அப்போதுதான் அயோமுகியின் அலறலைக் கேட்கிறான். அரக்கி என்று துணிகிறான். அங்கியின் நெடும்படை வாங்கி அந்த இரவிலே இலக்குவனைத் தேடத் தொடங்குகின்றான். எதிரில் வருகிறஇலக்குவன் "வருந்தாதே" என்று சொல்லி இராமனை அணுக, இராமன் மகிழ்ச்சி அடைகிறான். இராமன் வினவ, நடந்ததை இலக்குவன் சொல் கிறான். அப்போது இராமன் இலக்குவனை ஒரு கேள்வி கேட்கிறான். 'போர் செய்யும் வல்லமை உடைய அரக்கியைப் போரில் வென்று மீண் டேன்' என்று நீ கூறினாய். இழிதொழிலை யுடைய அவ்வரக்கி தகாத சொற்களைச் சொன்

னதனுலுண்டாகிய கோபத்தினுல் நீ அவளை ஏன் கொல்லவில்லை? சொல்'' என்று கேட்கிருன்.

''வான்தொழில் வீர! போர் வலி அரக்கியை
வென்று போர் மீண்டனென் என விளம்பினும்;
புன் தொழில் அனையவள், புரிந்த சிற்றத்தால்
கொன்றிலை போலுமால் கூறுவாய்'' என்றான்.
(ஆரணிய காண்டம்—அயோமுகிப் படலம்-89)

என்பது கம்பன் பாட்டு. அதற்குப் பதிலிறுக்கிருன் இளவல். இலக்குவன் "துளைகள் பொருந்திய மூக்கையும் செவிகளையும் தனங்களையும், நான் அறுத்தெறிந்த பொழுதில் அவள் கூக்குரலிட்டுக் கதறினுள்'' என்று சொல்லி நின்று இராமனை இரண்டு கைகளையும் கூப்பி வணங்குகிருன் இதனைத்தான்,

''துளைபடு மூக்கோடு செவிதுமுத்து உக
தளைவயின் நகிலொடு தடிந்து நீக்கிய
அளவையில், பூசலிட்டு அரற்றினுள்', என,
இளையவள் விளம்பி நின்று இருகை கூப்பினுன்.''
(ஆரணிய காண்டம்—அயோமுகிப் படலம்-90.)

என்று கம்பன் கூறுகிருன்.

இந்தப் பாட்டின் நயம் வியந்து வியந்து பாராட்டற்குரியது. இராமனுடைய கேள்விக்கு இலக்குவன் அளித்த விடை முழுமையாக இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. "நான் அவளுடைய மூக்கையும் காதுகளையும் தனங்களையும் துணித்தபோதே அவள் அலற ஆரம்பித்து விட்டாள்; ஆகையால் அவளைக் கொல்லாமல் விட்டுவிட்டேன்'' என்பதன்று இலக்குவன் அளித்த விடை. ஏனெனில், அவளைக் கொல்லாததற்குக் காரணம் அதுவன்று. அயோமுகியைக் கொல்லாததற்கு அவள் பெண் என்பதே காரணம். முதலில் அவளை "என் அம்பினுல் உன் உயிரைப் போக்குவேன்'' என்று அச்சுறுத்தினுன். பின்னுல் "உன் காதும் மூக்கும் அறுபடுவதற்கு முன் நீ அகன்று போ'' என்று சொன்னுன். ஆனுல், செயல்படவேண்டிய அவசியம் ஏற்பட்டபோதோ, பின்னதை மட்டுமே செய்தான். சூர்ப்பணகையையும் இப்படியேதான் செய்தான். அப்போது கவிஞர், "பெண் என நினைத்தான்'' என்று வெளிப்படையாகவே சொல்லி இலக்குவன் வில்லை எடுக்கவில்லை என்று சொன்னுன். அயோமுகி பெண் என்பதற்காக அவளைக் கொல்லவில்லை என்று இலக்குன் சொல்லியிருப்பானேயானுல், இது இங்கிதமற்ற செயலாகும். தாடகையென்ற பெண்ணைக் கொன்ற இராமனிடம் "அயோமுகி பெண் என்பதற்காக அவளை நான் கொல்லவில்லை'' என்று இலக்குவன் கூறியிருப்பானேயானுல், அண்ணனுகிய இராமன் தாடகையைக் கொன்றதன் மூலம் அறத்தினின்று தவறிவிட்டான் என்று அவனுக்கு கற்பிப்பதோடு தான் மாத்திரம் அறத்தினின்று வழுவாமல் நடந்து கொண்டதாகத் தன்னைத் தானே பாராட்டிக் கொள்வதாகவும் ஆகும். அத்தகைய இங்கிதமற்ற செயலை இலக்குவன் செய்யவில்லை. இதை மனத்திற்கொண்டு பார்க்கும் பொழுதுதான் தாடகை, சூர்ப்பணகை, அயோமுகி ஆகிய மூவரையும் ஒன்று சேர்த்துக் குறிப்பிட்ட கவிஞனுடைய நயம் விளங்கும்.

அதே சமயத்தில், தான் அயோமுகியைக் கொல்லாததற்கு பொய்யான காரணத்தைக் காட்டவும் இலக்குவன் முற்படவில்லை. ஆகையால் தான் அவளுடைய மூக்கையும் காதுகளையும் தனங்களையும் துண்டித்த போது அயோமுகி கூக்குரலிட்டுக் கதறினுள் என்று இலக்குவன் பேச்சை முடித்துக் கொள்கிருன். அதற்குமேல் அவன் செய்த செய்கை, அவன் அயோமுகியைக் கொல்லாததற்கான உண்மையான காரணத்தை இங்கிதமாக உணர்த்தி விடுகிறது. "நின்று இருகை கூப்பினுன்'' என்ற கவிஞனின் சொல்லாட்சி இத்தனைப் பொருளையும் உள்ளடக்கிக் கொண்டு நிற்கிறது.

இளவலின் இவ் விங்கிதத்தை இராமன் உடனே புரிந்து கொள்கிருன். "மிகுந்த இருளிலே உன்னைக் கொல்லத் துணிந்தவளாகிய அரக்கியையும் கொல்லாதவனுய் அவளுடைய மூக்கை அரிந்து துரத்திவிட்ட நீ மனுவை முதலாகக்கொண்ட வம்சத்தில் மரபுக்கு ஏற்றவனே'' என்று சொல்லி அவனைத் தழுவிக் கொள்கிருன். மகிழ்ச்சி மிகுதியால் உடல் பூரிக்கிருன்.

'தொல் இருள், தனைக் கொலத் தொடர்கின்றுளையும்,
கொல்லலை; நாசியைக் கொய்து நீக்கினுய்;
வல்லைநீ; மனுமுதல் மரபினேய்!' என,
புல்லினன்—உவகையின் பொருமி விம்முவான்.''
(ஆரணிய காண்டம்—அயோமுகிப் படலம்-91.

என்பது கவிஞனின் வாக்கு. இலக்குவனை இப்படிப் பாராட்டுவதன் மூலம் அவனுடைய இங்கிதத்தை மாத்திரமின்றி அவன் அறவழியையும் பாராட்டுகிருன் இராமன். நாமும் பெண்ணினைக் கொல்லாத இலக்குவனின் பெருவீரத்தைப் பாராட்டுகிறோம். அதனை வெளிப்படையாகச் சொல்லாத இளவலின் இங்கிதத்தைப் போற்றுகிறோம். அந்த இங்கிதத்தை உணர்ந்து அதனையும் அதற்குப் பின்னுல் நின்ற பெண்ணினைக் கொல்லாப் பெருவீரத்தையும் வியச் புகழ்ந்த இராகவனின் பண்பாட்டையும் வியக்கிறோம்.

அருள்மிகு மதனகோபாலசுவாமி திருக்கோயில், மதுரை

மதுரையின் முக்கியப் பகுதியில் அமைந்துள்ள இத்திருக்கோயில் மூலவர் சிலா ரூபத்தில் வேணுகோபாலன், ருக்மணி சத்தியபாமாவுடன் எழுந்தருளியிருக்கிறார். ஸ்ரீஆண்டாளுக்கு மதனகோபாலனுகக் காட்சி தந்தருளியுள்ளார். சற்றேறக்குறைய அரை நூற்றுண்டுக்கு முன் இத்திருக்கோயிலே சுத்திகரிக்கும்பொழுது, கல்தூண்களை ஏலம் எடுத்து பெலடல்பியா (அமெரிக்கா)விற்கு கொண்டு சென்று அங்கு திருக்கோயில் மண்டபங்கள் போல் நிர்மாணித்துள்ளனர் எனச் செய்திகள் கூறுகின்றன.

இத்திருக்கோயிலில் தற்சமயம் திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு திருமண மண்டபம், கல்நடை வரிசை, வளைவு முகடு போன்ற பல நல்ல திருப்பணிகள் நடக்கவிருக்கின்றன. பக்தகோடிகள் பொருளுதவி செய்து அருள்திரு மதனகோபாலனின் இன்னருளைப் பெறுமாறு வேண்டுகிறோம்.

ஆ. இராமனுதக்கோனுர்
அறங்காவலர் குழுத்தலைவர்

டி. சிதம்பரம் பி.எஸ்ஸி பி.எல்.
செயல் அலுவலர்.

ஆர். சுப்பிரமணியபிள்ளை.	அறங்காவலர்கள்
ஆர். பாண்டியன்	ஷை
டி. காட்டையா	ஷை
எம்.ஆர்.ஜி. கோபால்சுவாமி	ஷை

51

அருள்மிகு கூடலழகர் திருக்கோயில், மதுரை மாநகர்

மதுரை மாவட்டம்

நூற்றெட்டு திவ்ய தலங்களுள், அருள்மிகு கூடலழகர் திருக்கோயில் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த தென்மதுரையாம் கூடலம்பதியில் சிறப்புற்று விளங்குவதாகும். உலகத்திலேயே அமைந்துள்ள இத்தகைய அட்டாங்க விமானம் இரண்டில் இது ஒன்ருகும்.

இத்திருக்கோயில் பெரியாழ்வாரால் 'பல்லாண்டு' பாடல்பெற்ற தலமாகும். கோயிலின் விமானம் கண்களைக் கவரும் வனப்பும், சிற்ப நுட்பமும் கொண்டது. இத்துணை சிறப்பு வாய்ந்த விமானத்தின் நிழல் தரை மீது வீழ்வதில்லை. திருப்பணிகள் பல செய்யப்பட வேண்டியிருக்கிறது. திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நடந்துவருகிறது. திருப்பணி முடிவடைய சுமார் ஐந்து லட்சம் ரூபாய் தேவைப்படுகிறது.

திருப்பணி முற்றுப்பெறப் பெருமக்கள் தாராளமாக நன்கொடை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

என். சிவனுண்டி பி.ஏ.
நிர்வாக அதிகாரி,
செயலாளர் .. பொருளாளர்,
அருள்மிகு கூடலழகர் திருக்கோயில், மதுரை—1.

53

கம்பன் கண்ட பக்தியும் அறமும்

திரு அ. ச. ஞானசம்பந்தன்

இக் காலத்தில் அறம் என்று கூறியவுடன் அதனை ஏற்றுக் கொள்ளுபவர்களில் சிலர் பக்தியை ஏற்றுக் கொள்ள அஞ்சும் காலம் இது. நம்மையும் அறியாமல் அறமும் பக்தியும் என்ற இந்த இரண்டும் பிரிந்து சென்றுவிட்டன. அறவாழ்வைக் கடைப் பிடித்தால் போதும். பக்தியைப்பற்றிக் கவலைப்படத் தேவையில்லை என்று மார் தட்டிய நாடு இது. துக்கம், துக்க உற்பத்தி, துக்க நிவாரணம், துக்க நிவாரண மார்க்கம் ஆகிய நான்கையும் அடையவேண்டுமானால், 'புத்தம் சரணம் கச்சாமி'. 'சங்கம் சரணம் கச்சாமி' என்று சொல்லிவிட்டாலே போது மானது. இதற்கு மேல் முழு முதற்பொருள் ஒன்று உண்டு என்று எண்ணத் தேவையில்லை- என்ற அடிப்படையில் மாபெரும் சமயம் ஒன்றை நிறுவி அகில உலகமும் அதனைத் தலை வணங்கி ஏற்கும்படி செய்த புத்த பெருமான் தோன்றிய நாடு இது. அறம் ஒன்றே வாழ்க்கைக்குப் போதுமானது என்று கூறிச் சென்ற புத்த தேவன் தோன்றிய இந்த நாட்டிலே அறத் தோடுமட்டும் நீ வாழ்வாயானால் அந்த வாழ்க்கை பிறர்க்குப் பயன்படும் முழுத்தன்மை உடையதாக ஆவது கடினம். 'மாரனை வெல் லும் வீரர்களான' புத்தபெருமான் போன்ற ஒரு சிலர்க்கே தனி அறநெறி வீடுபேற்றை அளிக்க லாம்.

ஆனால், என்போன்ற-எளிய-குறிக்கோளற்ற-அறியாமை நிரம்பிய மக்கள் அறநெறி ஒன் றையே பற்றி வாழ்வது இயலாத காரியம் என்ற உண்மையை உணர்ந்த கருணை மிகுந்த பல பெரியவர்கள் "அறம் மட்டும் போதாது, பக்தி யும் உடன் இருத்தல் வேண்டும்" என்றும் கூறி யுள்ளனர். அப்படிச் சொன்னதோடு அமை யாமல் எத்தனை எத்தனை வகையாக அதனைப் பகுத்துக்காட்ட முடியுமோ அத்தனை அத்தனை விதமாகப் பகுத்துக் காட்டியும் சென்றனர்.

மனித வர்க்கம் முழுவதனையும் ஒரு கண்ணோட் டம் விட்ட இத் தமிழர், கல்விக் கடலில் கரை கண்டவர்கள் ஒருபுறமும், 'கல்வி' என்ற மூன் றெழுத்தின் வாசனையை அறியாது வாழ்க்கை நடத்துகின்றவர்கள் ஒரு புறமும் இருக்கக் கண் டனர். இந்த இரண்டும் மனித சமுதாயத்தில் இரண்டு கோடிகள். இந்த இரண்டு கோடி கட்கும் இடையில் தொடர்பு உண்டா? புத்த தேவன் சட்டப்படி பார்த்தால் இருத்தல் இய லாத காரியம்; அறத்தை உள்ளவாறு உணர்ந் தாலன்றி மனிதன் உயர் நெறி அடைய இய லாது; எல்லாத் துன்பத்திற்கும் மூலமாக இருப்பது ஆசை' என்ற பேருண்மையை அறி தல் கற்றறிவுடைய பெருமக்கட்கே மிகமிகக் கடினம் என்றால், மனித வர்க்கத்தின் அடித் தளத்திலே இருக்கின்ற அறியாமை நிரம்பிய வன் என்றுதான் உய்கதி அடைவது? இந்தப் பிரச்சினையை ஆராயத் தொடங்கிய நம் பெரிய வர்கள். மனித சமுதாயம் முழுவதையும் ஒரு கண்ணோட்டம் விட்டவர்கள் 'அப்பா, அறி யாமை நிரம்பிய உனக்கும் இடம் உண்டு!' என் றார்கள்: கல்வி என்ற ஒன்றை ஏழு பிறப் பிலும் காணாத ஒருவனுக்கும், கல்விக் கடலின் கரைகண்ட ஒருவனுக்கும் இங்கே இடம் உண்டு. அப்படியானால், இந்த இருவரும் இருவேறு இடத்தினை அடையப்போகின்றார் களா என்றால், இல்லை என்று வாதிட்ட பெருமை இந்தத் தமிழனுக்கு உண்டு. சொன்னான் :—

அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில், அழகர்கோயில்

மதுரை மாவட்டம்

அருள்மிகு கள்ளழகர் திருக்கோயிலானது வைஷ்ணவ ஸ்தலங்களில் மிகவும் புகழ் பெற்ற ஸ்தலம். இத்திருக்கோயில் சித்திரைத் திருவிழா தமிழகத்திலேயே தலை சிறந்த திரு விழாவாகும். சித்திரைத் திருவிழாவின் போது வைகை ஆற்றில் அழகர் எழுந்தருளுவதைக் காண லட்சக்கணக்கான மக்கள் கூடுகின்றனர். இவ்வளவு புகழ்பெற்ற திருக்கோயிலில் தற்சமயம் நூபுரகங்கைக்கு மலைப்பாதை அமைக்கும் திருப்பணியும், தாயார், ஆண்டாள் விமானங்கள் புதுப்பிக்கும் திருப்பணியும், யாத்திரிகர்களுக்கு தங்கும் விடுதிகளும் ஆகிய பல திருப்பணிகள் பல லட்சக்கணக்கான ரூபாய் செலவில் நடைபெற்று வருகின்றன. இத்திருப் பணிகளுக்கு ஆஸ்கதி அன்பர்கள் பொருள் உதவி செய்து அருள்மிகு சுந்தரராஜப் பெரு மாளின் அருளைப் பெற்று உய்யுமாறு வேண்டுகிறோம்.

திரு. ஆ. கருப்பணன் அவர்கள்
தலைவர், அறங்காவலர் குழு, நெல்லியேந்தல் பட்டி.

அறங்காவலர்கள்:

திரு. எம்.பி. அப்புலு அவர்கள் மதுரை
திருப்பாலை திரு. எம்.சின்னச்சாமிக்கோனூர் அவர்கள், மதுரை,
திரு. எம்.கே. செல்லச்சாமி அம்பலகாரார் அவர்கள், மதுரை,
திரு. தொ.ம.க. அம்பலம் அவர்கள், வெள்ளரிப்பட்டி.
திரு. டி. இராமச்சந்திரன் பி.ஏ.பி.எல்., உதவி ஆணையர்— செயல் அலுவலர்.

85

அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில்,மதுரை

1. அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் மகளிர் உயர்நிலைப்பள்ளி ஒன்று ஆலய நிதியிலிருந்து நடத்தப்படுகிறது. ஏழை மாணவிகளுக்கு இலவச மதிய உணவு, நோட்டு புத்தகங்கள் வழங்கப்படுகிறது.

2. கல்லுப்பட்டி, காந்திநிகேதனில் மீனாட்சி மாணவர் இல்லம் 20 மாணவர் களுக்கு உணவு, உடை, விடுதி பள்ளிச் செலவுகளுக்கு நிதி உதவி செய்யப்படுகிறது.

3. யாத்ரீகர்கள் தங்க மேலச் சித்திரை வீதியில் சுமார் ரூ.4,00,000— மதிப் பீட்டில் விடுதி பிர்லா விஷ்ரம் என்ற பெயரில் நடத்தப்பட்டு வருகிறது. கட்டிடம் கட்டும் செலவில் ஒரு பகுதி தொழில் அதிபர் பிர்லா அவர்களால் நன்கொடையாக கொடுக்கப்பட்டது.

4. ஆயிரங்கால் மண்டபத்தில் எழில்மிகு கலைக்கூடம் நடத்தப்படுகிறது.

5. ஏழை மக்களுக்கு ஆலய நிதியிலிருந்து இலவச திருமணம் நடத்தப்படுகிறது.

6. திருப்பரங்குன்றத்தில் முதியோர் இல்லம் ஒன்று நடத்தப்படுகிறது. இதில் ஆதரவற்ற பெண்களுக்கு உணவு, இருப்பிடம், வசதிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

7. ஆன்மீகப் பெருமக்கள் அனைவரும் தமிழ் வளர்த்த தலைநகர் பாண்டிபழம்பதி மதுரை மாநகரில் அன்பர்களுக்கு அருள்வழங்கும் அருள்மிகு மீனாட்சி சொக்கநாதரைக் கண்டு வணங்கி அருள் பெற்று உய்ய திருஆலவாய்க்கு வருகை தருவீர்களாக.

திரு. என். பொன்னப்பன் அவர்கள்,
அறங்காவலர் குழுத் தலைவர்
திரு. டி. தியாகையா அவர்கள்
திரு. ஆர். ரேபால்சாமி அவர்கள்
திரு. கே.எஸ். இராமகிருஷ்ணன்
எம்.எல்.ஏ. அவர்கள் அறங்காவலர்கள்

என்.எஸ். இராமச்சந்திரன்,பி.ஏ.பி.எல்
உதவி ஆணையர்—நிர்வாக அதிகாரி
அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர்
திருக்கோயில், மதுரை

86

''மதவலி நிலைஇய மாத்தாட் கொழுவிடைக்
குருதியொடு விரைஇய தூவெள் அரிசி
சில்பலிச் செய்து பல்பிறப்பு இரீஇ
....
முருகாற்றுப் படுத்த உருகெழு வியல்நகர்''

(திருமுருகு—232-244.)

ஆட்டை அறுத்து அதனுடைய குருதியில் அரிசியைக் கலந்து சிதறி 'ஓ! வேலா' என்று கத்துகின்றானே, கல்வி என்பதையே பல தலைமுறைகளாகக் காணாத ஒருவன், அவ்விடத்தும் முருகன் இருக்கின்றான் என்கின்றான் ஒரு பழந் தமிழன். கல்வியின் கரையிலே நின்று,

''புலராக் காழகம் புலர உடீஇ
உச்சிக் கூப்பிய கையினர் தற்புகழ்ந்து
ஆறுஎழுத்து அடக்கிய அருமறைக் கேள்வி
நாவியல் மருங்கில் நவிலப் பாடி''

(திருமுருகு—184-178.)

ஆடும் அறிவு நிறைந்த ஒருவனுக்கும் அதே முருகன்தான் வீடுபேற்றை அருளுகின்றான். கல்வி என்பதே இன்னது என்று அறியாத ஒருவனும், அறிவின் எல்லையிலே நிற்கும் ஒருவனும் சென்று சேருவது ஒரே இடம்தான் என்று சொல்லும் தெளிவான நிலை இந்தத் தமிழனுக்கு உண்டு.

தத்துவ உலகிலேமட்டுமன்றிக் காப்பிய உலகிலேயும் இந்த இரண்டையும் மோதவிட்ட பெருமை கம்பனுக்கு உண்டு. முழுமுதற் பொருளே இராமனாக வந்திருக்கிறான். அந்தக் காட்சியை அறியாதவர் யாரும் இல்லை. எனவே, இராமனைப்பற்றி ஒன்றும் சொல்லத் தேவையில்லை. அந்த முழுமுதற் பொருள் கங்கைக் கரையின் ஒருபுறம் அமர்ந்திருக்கிறான். நூற்றுக்கணக்கான முனிபுங்கவர்கள் — வாழ்க்கையில் இனி அறியவேண்டியது எதுவுமே இல்லாதவர்கள் — 'கற்பனவும் இனியமையும்' என்று மணிவாசகப் பெருமான் கூறியாங்கு எல்லாவற்றையும் கற்றவர்கள் இராமனைச் சுற்றி அமர்ந்துள்ளனர். அத்தனையையும் கற்ற அவர்களின் கல்வி அறிவானது, பொருளின் இயல்பை அது இது எனப் பகுத்தறிவதற்குப் பயன்பட்டதே தவிர, அந்த அறிவால் வேறு பயன் ஒன்றும் அறியாது மயங்கிய நிலையில் உள்ளனர் அவர்கள். மாபெரும் தவசிகள் அத்தனை பேருக்கும் வேண்டியது ஒன்றே ஒன்று; அதுவே பிறவிக்கு மருந்து. அவர்கள் கற்ற கல்வி பிறவிப் பெரும் பிணிக்கு மருந்தாக அமையவில்லை என்று தெரிகிறது. கற்கக் கற்க மேலும் ஐயம் எழுந்ததே தவிர, எப்படி வாழ்க்கையைப் பயன் உள்ளதாக ஆக்குவது என்பதனை அறிந்துகொள்ள அவர்களால் இயலவில்லை. இதனை அறியவே இராமனிடம் வந்துள்ளனர் போலும்! கல்வியின் கரைகண்டவர்கள் நடுவே இராமபிரான் பாற்கடலில் பாம்பணையில் பள்ளிகொண்டதுபோல் வீற்றிருக்கின்றான். இந்தச் சூழ்நிலையை அடித்தளமாக அமைத்துக்கொண்டு, அறிவுச் சூழலிலே அறிவுக் கடலாக இருக்கும் இராமபிரானை வீற்றிருக்க வைத்து, அறிவுக்கும் தனக்கும் பல தலைமுறைகளாகத் தொடர்பு இல்லாத ஒருவனை இடையே புகவைத்து மோத விடுகிறான் கவிச் சக்கரவர்த்தி. திரும்பிய இடமெல்லாம் அறிவுக் கடலாக விளங்கும் அறிவுலகிற்கு இடையே அறிவே இல்லாத ஒன்று புகுந்து புறப்படுகிறது,

அறிவிலா அவன் வருகின்ற காட்சியே வெறுப்பை அளிக்கும் காட்சியாக உள்ளது. நாள்தோறும் கங்கையிலே மூன்று வேளை உடல் கழுவி வேள்வி செய்யும் முனிவர்களிடையே கங்கைக் கரையில் வாழ்ந்தாலும் ஒரு முறை குளிக்கவும் எண்ணம் ஓடாத ஒருவன், சிவந்த மேனியர்கள் சூழ இருக்கும் இடத்தின் நடுவே கரிய நிறத்தினனாகிய ஒருவன், கைகளெல்லாம் பனைமரத்தினைப் போன்ற வடிவமுடைய ஒருவன். உடல் முழுதும் பனை மரத்தின் சிராம்புகள் போன்ற மயிர்களைப் பெற்ற ஒருவன், கையிலே மீன் நாற்றம் எடுக்கும் கலயத்தோடு நுழைகின்றான். முனிபுங்கவர்கள் நடுவே மீன் நாற்றம் வீசும் கலயத்தைத் தாங்கியவன் ஒருவன் புகுகின்றான். முரண் அழகை இங்ஙனம் ஒப்பற்ற முறையில் கையாள்கிறான் கவிஞன். கல்வியின் எதிரே கல்வி வாசனையே இல்லாமலும், உடல் தூய்மையின் எதிரே தூய்மையற்ற நிலையிலும் உள்ள ஒருவனைப் புகுத்துகிறான்.

குகன் வந்ததனைக் காவலன் இலக்குவனுக்கு உணர்த்தினான். பெற்ற தாயைவிட, பெற்ற தந்தையைவிட, மூத்த அண்ணனைவிடத்தான் அறிவிற் சிறந்தவன் என்று கருதிக்கொண்டிருப்பவனும், சினத்தின் எல்லையில் நிற்பவனுமாகிய இலக்குவன் வெளியே வந்து வந்திருப்பவனைக் காண்கிறான். வந்தவன் உடம்பிலும் கையில் உள்ள கலயத்திலும் உள்ள மீன் நாற்றமே, வந்துள்ளவன் யார் என்பதனைப் புலப்படுத்துகிறது. இருப்பினும் இலக்குவன், 'யார்' என்று கேட்கிறான். அதற்குக் குகன் கூறும் பதிலோ, சேனாவரையர் விதிப்படி, விடை வழுவாகும். அவன் கூறுகிறான்- 'தேவா நின்கழல் சேவிக்க வந்தனன்' கேட்ட கேள்விக்கு உரிய பதிலை அவன் சொன்னானில்லை. பாண்டியன் நெடுஞ்செழியன் கண்ணகியைப் பார்த்து, 'யாரையோ நீ மடக்கொடி யோய்' என்று கேட்டான், கண்ணகிப் பெருமாட்டியோ முதலில் தன்நாட்டின்பெருமையையும் அடுத்துக் கணவனின் குடும்பத்துப் பெருமையையும் கூறினாள். அப்படிப்பட்ட

''மாசாத்துவான் மகளையாகி'', ஊழ்வினை துரப்ப நின்நகர் புகுந்து நின்பாற் கொலைக் களப்பட்ட கோவலன் மனைவி; கண்ணகி என்பது என் பெயர்'' என்று கூறுகிருள். கேட்ட கேள்விக்கு நேரடியாக விடை சொல்வதாயிருப்பின் 'கண்ணகி' என்று கூறி யிருந்தாலே போதும். அறிவுடை உலகிலே வாழ்பவர் 'யார்' என்று கேட்டவுடனே தன்னைப்பற்றியே தம்பட்டம் அடித்துக்கொள்வார்கள். பக்தி உலகிலே வாழ்பவர் தம் நினைவை இழந்து விடுவார்கள். எனவேதான், கண்ணகி பல பேசினுலும் அனைத்தும் அவளைப் பற்றியல்லாமல், குலப் பெருமை, நாட்டின் சிறப்பு, அரசின் உயர்வு ஆகியவைகளைப் பற்றிப் பேசினுள். பக்தி நிலை அவ்வாறு பேசும், நம் அறிவுக்கு விடை வழுவாகத் தோன்றும், ஏன்? நாம் அறிவுக் கண்கொண்டு நோக்குகின்றேம், அதனுலேயே.

இந்த அடிப்படையில்தான் குகனின் சொற்களையும் காணவேண்டும். "தேவா நின்கழல் சேவிக்க வந்தனன், நாவாய் வேட்டுவன் நாயடியேன்'' என்ருன். ஏழு சொற்கள். அறிவே வடிவாக நிற்கும் இலக்குவனின் உள்ளத்தில் இந்தச் சொற்கள் சென்று ஆழப் பதிந்துவிட்டன. பக்தி வடிவத்திலிருந்து தோன்றும் இச் சொற்கள் அறிவின் படிவமாக விளங்கும் இலக்குவன் மனத்தே தோற்றுவித்த உணர்ச்சி மிகப்பெரிய உணர்ச்சி. எனவே, அண்ணனிடம் ஓடினுன். "உள்ளம்தூயவன் தாயினும் நல்லன் (குகப்-40) ஒருவன் வந்திருக்கிருன்''என்ருன். வெகுளியில் விசுவாமித்திரன், துருவாசர் ஆகிய எல்லாரையும் விஞ்சக்கூடிய இலக்குவன் நாற்றம் வீசும் குகனைப்பற்றி அண்ணனிடம் இவ்வாறு கூறினுன் எனின் இது வியப்பன்றே? "தேவா நின் கழல் சேவிக்க வந்தனன் நாவாய் வேட்டுவன் நாயடியேன்'' என்றுனே தவிர, தன் பெயரைக் கூட அந்தக் குகன் சொல்லவில்லை யென்ருல், எவ்வாறு இலக்குவன் மனத்தில் 'தாயினும் நல்லன்' என்ற இவ்வெண்ணம் பிறந்தது? சொல்லால், தோற்றத்தால் மட்டும் ஒன்றை நிர்ணயித்துவிட முடியாது. அறிவால் விஞ்சிய இலக்குவன் அறிவின் துணையை நாடாமல் உணர்வால் குகனை எடையிட்டான். அங்கே பக்தி செய்பவன், பக்தி செய்யப்படும் பொருள், பக்தியாகிய செயல் ஆகிய மூன்றும் வேறு வேருக இல்லாத நிலை தோன்றுகிறது. ஆராய்ச்சி, அறிவு ஆகிய இரண்டுக்கும் அங்கே இடத்தைக் காணமுடியவில்லை. நாம் கடவுளை வணங்கும் போதுகூட நம்மை மறப்பது இல்லை. அங்கே வரவு செலவு கணக்குத்தான் நினைவில் விஞ்சுகிறது; அறிவால் ஆயும்வரை 'நான் யார்? நான் வணங்கும் தெய்வம் எது?' என்பன அறிவின் அடிப்படையில் நின்று நோக்கும் வேறுபாட்டு உணர்வில் தோன்றிக்கொண்டுதான் இருக்கும். இடை இடையே பக்தி தோன்றித் தோன்றி மறையும்.

குகனிடமோ குகன் இல்லை; குகன் கொண்டு வந்த உணவு இல்லை; இராமன் ஒருவனே உள்ளான். அந்த ஒப்புயர்வற்ற நிலையில் அந்த எளிய மனிதன் நிற்கிருன். எனவேதான், இலக்குவன் கேட்ட வினவும்,குகன் அளித்தவிடையும் வேறுபட்டனவாய்த் தோன்றுகின்றன. குகனைப்பற்றி இலக்குவன் இராமனிடம் கூறியதற்கும் குகன் இலக்குவனிடம் கூறியதற்கும் வேறுபாடு இருக்கக் காண்கிறேம். குகனுடைய சொற்களை இலக்குவன் இராமனிடம் கூறவில்லை; சொல்லால் சொல்ல இயலாத அவன் உள்ளத்தைச் சொன்னுன். அங்கே பலப்பல முனிபுங்கவர்கள் இருக்கிருர்கள். இலக்குவனே இராமனே அவர்களைத் தாயாகக் காணவில்லை. ஏன்? அவர்கள் மோட்ச வீட்டிற்கு 'டிக்கட்' பெறும் நோக்கத்தோடு பயன் கருதி உட்கார்ந்துள்ளனர்; முழுமுதற் பொருளிடம் தங்கள் துயரம் கூறி விடுதலைக்கு வழிதேடி வந்துள்ளனர். ஒருவருக்குக்கூட இராமனைப் பற்றிய கவலையே இல்லை. காட்டிலே நடந்து களைத்துவந்த இராமனுக்குப் பசிக்குமே என்ற எண்ணமில்லை. எண்ணியவர்கள் 'எல்லாம் ஆகிய முழுமுதற்பொருள் நாம் கொடுத்தா உண்ணப் போகிறது' என்று அறிவின் துணை கொண்டு எண்ணி இருந்துவிட்டனர். தங்களையும் அவனையும் பிரித்துக் கண்டனர். அறிவால் வந்த வினை அது.

குகனே இராமனையும் தன்னையும் பிரித்து அறியவில்லை. தன்னை இராமனிலே காணுகிருன். தன்னை அவனுள் கரைத்துக்கொள்கிருன், பசியும் களைப்புமே முன் நிற்கின்றன. சக்கரவர்த்தித் திருமகனுக்குப் பசிக்குமே என்ற ஓர் எண்ணம்தான் அவனைச் சுற்றிலும் வட்டமிடுகிறது. ஊருக்கெல்லாம் பயில்வானுக இருந்தாலும் தாய்க்குப் பிள்ளைதானே! அவனுக்குப் பசி என்ருல், நெடுநாள் உண்ணுமலும் வாழ இயலும் பயில்வான் என்று எண்ணுது தாய் பரிந்து சென்று "ஐயா சாப்பிடு, ஐயா சாப்பிடு'' என்று அன்பாலும் ஆணையிட்டும் ஊட்டுகின்ருள். அப்படித்தான் இங்கேயும் குகன் செயல் இருந்தது; எனவேதான் "தாயினும் நல்லன்'' ஆயினுன். பள்ளிக்குக் குழந்தை செல்லாதது தாய்க்கும் தெரியும்; தந்தையும் அறிவான். அவன் வீடு வரும்போது தந்தை கடிகிருன்; தாய் குற்றத்தை மறந்து, 'முதலில் குழந்தை உண்ணட்டும், பின் கடியலாம்' என்கிருள். தாய்க்கு அவனைக் காணும்போது அவன் செய்த தவறு உள்ளத்தில் எழுவதில்லை. அவனுக்குப் பசிக்குமே என்ற பரிவு உணர்வு எழுகிறது. இது கருதியே போலும் மணிவாசகப் பெருந்தகை "பால் நினைந்தூட்டும் தாயி

னும் சாலப் பரிந்து" என்று பாடுகின்றார். அந்த அடிப்படையிலேதான் கம்பநாடன் இலக்குவன் வாயிலாகத் "தாயினும் நல்லன்" என்று குகனைப் பாராட்டுகின்றான்.

இராம இலக்குவர்க்கு மூன்று தாயர்கள் இருக்கிறார்கள்; என்றாலும் சந்தர்ப்பங் காரணமாக அவர்கள் யாரும் இப்போது உதவவில்லை. ஆனால், உணவை நினைந்து ஊட்டும் நிலையிலே குகன் முன்வந்து நிற்கின்றான். எனவே, ஊட்ட வேண்டிய தாயினும் நினைந்து ஊட்டும் கருத்துடன் முன் நிற்கும் இவன் நல்லவனாக உள்ளான் என இலக்குவன் பேசுகின்றான். இது அறிவோடு தொடர்பில்லாத நிலை; இந்நிகழ்ச் சிக்குக் கதையோடுகூடத் தொடர்பு இல்லை. 'சக்கரவர்த்தி இராமனைத் தவறாகக் காட்டுக்கு அனுப்பிவிட்டார். இராமனுக்கு இப்போது பசிக்கும்'-இந்த எண்ணம் ஒன்றுதான் குகனுடைய மனத்தில் உள்ளது. அந்தக் குகன் இராமனைக் காண நுழைகின்றான். இராமன் குகனைக் கண்டு "இருத்தியீண் டென்னலோடும்" குகன் இருக்க மறுத்துவிட்டானாம். 'தம்பி! உட்கார்' என்று இராமன் சொல்லியும் உட்காரவில்லை. ஏன்? 'இராமனுடைய பசி' என்ற ஓர் எண்ணம் மட்டுமே குகனை ஆட்டிப்படைக்கும் உணர்வாக உள்ளது. எனவே, உண்ணச் செய்யவேண்டும், இதுதான் அவன் வேட்கை. தாயன்பு சில காலங்களில் தவறக்கூடச் செய்யும். ஆனால், அன்பின் ஆணியாய், பக்தியின் கொடுமுடியாய் விளங்கும் குகனின் தாயன்பு மிக உயரிய நிலையில் இயங்குகின்றது. முன்னரே உண்டுவந்த தனயனைக்கூடத் தன் கையால் சோறு உண்ணவேண்டும் என்ற விருப்பத்தால், வற்புறுத்தி மறுபடியும் உண்ணச் செய்யும் தாயாரின் பிடிவாதம் தனயன் மார்களை இரண்டாட்ட நிலையில் நிறுத்துவதும் உண்டு. திறமான அறிவுடைத் தாயோ குழந்தை உண்ணுவதற்கான சூழ்நிலையை அமைத்துவிட்டுக் குழந்தை ஆர்வத்தோடு உண்பதனைக் கண்டு மகிழ்வாள். இங்கே குகன் நிலை, நினைந்து ஊட்டுந் தாயின் நிலையாக, திறமான தாயின் நிலையாக இருக்கின்றது. இதனைக் கவிச்சக்கரவர்த்தி அழகாகக் காட்டுகின்றான். குகன் தான் கொண்டுவந்த உணவைக் காட்டினனும் :

> இருத்தி ஈண்டு என்ன லோடும் இருந்திலன் எல்லை நீத்த
> அருத்தியன் தேனும் மீனும் அமுதினுக்கு அமைவது ஆகத்
> திருத்தினன் கொணர்ந்தேன் என்கொல் திருவுளம் என்ன—
> விருத்த மாதவரை நோக்கி முறுவலன் விளம்பல் உற்றான்
> (குக—42.)

(அருத்தியன் - அன்பன்; விருத்தமாதவர் - முதிய முனிவர்.)

உணவைப்பக்குவப்படுத்திக் கொண்டுவந்திருக்கிறேன். இங்கே வந்து பக்குவப்படுத்துவதானல் காலம் கழியும், உனக்குப் பசிக் கொடுமை மிகும் என அஞ்சி முன்னரே பக்குவப்படுத்தியே கொண்டு வந்துள்ளேன், சுவாமி திருவுளம் என்கொல்" என்று கேட்கிறான். நாகரிகம் அற்ற சாதாரண மனிதன் என்று நாம் கருதும் ஒருவன் நாகரிகத்தின் உச்சத்தில் நின்று பேசிய பேச்சாகும் அது. அவன் பக்தியிலே அறிவு ஓடிவந்து பணி செய்கிறது. உயரிய பக்தியின் நிலை இதுதான். அவன் ஆராயவில்லை. ஆராய்ச்சி அவனிடம் ஓடி வருகிறது, ஏன்? அவன் இல்லை அங்கே. இருப்பதெல்லாம் இராமனே. அவன் செயலை அறியாமை என்று எண்ணிய உயர்ந்தவர்கள் அங்கே இருந்தார்கள். அவர்கள் எண்ணம் அறியாமையில் விளைந்த விளைவாகும். அறிவிலே அறியாமையை நாம் காணவும் முடிகிறது. இதனைச் சேக்கிழார் மிகத் தெளிவாகக் காட்டுகின்றார்.

இரண்டு பேர்கள் ஒரே பொருளை வழிபட்டார்கள். குடுமித்தேவனைச் சிவகோசரியாரும் வழிபட்டு வந்தார்; திண்ணனாரும் வழிபட்டு வந்தார். ஒருவர் வேதங்களும் உபநிடதங்களும் கூறிய அறிவு நெறியிலே நின்று சாத்திரங்களைக் கரைத்துக் குடித்த சிவகோசரியார்; மற்றொருவர் கல்வி என்பதனைப் பல தலைமுறைகளாக அறியாமல் குத்து, வெட்டு கொலை என்ற சொற்களைத் தவிரப் பிறவற்றைக் கூறாத திண்ணனார். சிவகோசரியார் குடுமித் தேவரை,

> நிர்குண நிராமய நிரஞ்சன நிராலம்ப நிர்விஷய கைவல்யமாய்
> நிஷ்கள அசங்க சஞ்சலரகித நிர்வசன நிர்த்தொந்த நித்தமுக்த
> தற்பர விஸ்வாதீத வ்யோம பரிபூரணமாகத்
> (தாயு—கருணா-1)

(நிர்க்குணம்-குணமற்றதாய்; நிராமய-குற்றமற்றதாய்; நிராலம்ப-சார்பற்றதாய்; நிர்விஷய-பொறிகட்குப் புலனாகாததாய்; கைவல்யமாய்-ஒரு தனியாய்; நிஷ்கள-உருவற்றதாய்; அசங்க-ஒன்றினுடனும் கூடாததாய்; சஞ்சலரகித-அசைவிலாததாய்; நிர்வசன-சொல்லைக் கடந்ததாய்; நிர்த்தொந்த-இரண்டாட்டமில்லாததாய்; நித்தமுக்த-என்றும் முளதாய்; தற்பர தனக்குத்தானே அப்பாற்பட்டதாய்; விஸ்வாதீத-அனைத்திற்கும் அப்பாற்பட்டதாய்; வ்யோம-வெட்ட வெளியாய்.)

தாயுமானவர் கூறியபடி முழுமுதற் பொருளாய் எல்லாம் வல்லதாய்க் காணுகின்றார். திண்ணனாரும் அதே குடுமித் தேவரைத்தான் காண்கின்றார். ஆனால், உடனே தம்மை மறந்து விடுகின்றார். நாகன் அழைத்ததும் அவருக்குத் தெரியவில்லை. அங்கே உள்ள அந்த ஆண்டவனை முழு முதற் பொருளாய், எல்லாம் வல்லதாய்

திரு. பிள்ளையன் கட்டளைகள்

திருநெல்வேலி டவுன்

ஆன்ற அறவழி நிற்கும் தீந்தமிழ் நாட்டின் தென்பகுதியில் அமைந்துள்ளதும் வான் பொய்ப்பினும் தான் பொய்யா பொருனையாறு அழகு செய்யும் திருநெல்வேலி மாநகரில் அலுவலகத்தைக் கொண்டுள்ள திருக்கோயில்களிலும் ஆற்றப்பட்டு வருகின்ற முக்கிய கட்டளை களின் பெயர்கள்.

1.	அருள்மிகு. நெல்லையப்பர் ஷை ஸ்ரீகாந்தியம்பாள் திருக்கோயில், திருநெல்வேலி.	உச்சிக்காலம் ஷை அர்த்த சாமக் கட்டளை.
2.	அருள்மிகு. குற்றால நாதசுவாமி திருக்கோயில், குற்றாலம்.	காலசந்திக் கட்டளை.
3.	அருள்மிகு. சங்கர நாராயணசுவாமி திருக்கோயில், சங்கரன்கோயில்.	காலசந்திக் கட்டளை.
4.	அருள்மிகு. சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்,வள்ளியூர்	சிறுகால சந்திக் கட்டளை.
5.	அருள்மிகு. வரகுணபாண்டீஸ்வரர் திருக்கோயில் இராமநாதபுரம்.	உச்சசந்திக் கட்டளை.
6.	திரு. பிள்ளையன் கண்ணுவதீர்த்தக்கரை செவ்வாய் கிழமை மடம், கல்லிடைக்குறிச்சி.	செவ்வாய்க் கிழமை அன்னதானம்.
7.	அருள்மிகு. கோத்தாகிரிநாதர் திருக்கோயில், நாங்குநேரி.	சனிக்கிழமை அன்னதானம்.
8.	அருள்மிகு. பால்வண்ணநாதசுவாமி திருக்கோயில், கரிவலம் வந்தநல்லூர்.	விளாபூஜைக் கட்டளை.
9.	அருள்மிகு. பாபனாச சுவாமி திருக்கோயில், பாபனாசம்	அர்த்தசாமக் கட்டளை.
10.	அருள்மிகு. குலசேகரநாதசுவாமி திருக்கோயில், தெற்கு காருசேரி.	அர்த்தசாமக் கட்டளை.

11. ஆறுபடை வீடுகளில் ஒன்றான திருச்சீரலைவாய் என்னும் திருச்செந்தூரில் எழுந் தருளியிருக்கும் அருட்தெய்வம் ஸ்ரீசுப்பிரமணியசுவாமி திருக்கோயில் ஒவ்வொரு ஆண்டிலும் ஆவணி, மாசி ஆகிய திங்கள்களில் ஏழாவது நாள் திருவிழா சம்பந்தப்பட்ட அலங் காரம் பிள்ளையன் அபிஷேகம், ஆராதனைகள், திரு.பிள்ளையன் ஏழாம் திருநாள் மண்டகப் படி பிள்ளையன் கட்டளையால் நடத்தப்பட்டு வருகின்றன.

எஸ். ரெங்கசுவாமி, பி. காம்.
நிர்வாக அதிகாரி.

ஆக்க, அழிக்க, காக்க, அளிக்கவல்ல பரம் பொருளாய் அவர் காணவில்லை. தான் வேறு அங்குக் காணப் பெறும் குடுமித் தேவன் வேறு என்ற நிலையில் அவர் காணவில்லை. அப்படி ஒன்றுபட்ட உணர்வோடு காணுகின்றார், எனவேதான்,

''சாமி! நீ தனியே ஈண்டுத் தங்குதல் தரித்தல் ஆற்றேன்
ஏமநல் உடுப்பூர்க்கு இன்னே என்னெடு வருதல் வேண்டும்''
(சீகாளத்திப் புராணம்)

''வெம்மறக் குலத்து வந்த வேட்டுவச் சாதியார்போல்
கைம்மலைக் கரடி வேங்கை அரிதிரி கானம் தன்னில்
உம்முடன் துணையாய் உள்ளார் ஒருவரும் இன்றிக் கெட்டேன்!
இம்மலை தனியே நீர் இங்கு இருப்பதே?''என்று நைந்தார்.
(பெரியபுராணம்—கண். புரா-107.)

வேடர்குலத்து உதித்த திண்ணனுக்குக் காட்டில் விலங்குகட்கு இடையே தனித்து இருப்பது எவ்வளவு இன்னல் நிறைந்தது என்பது நன்கு தெரியும். எனவே, இறைவன் தனியே இருப்பது கண்டு மனம் உருகினர். இது அறிவுக்கு அப்பாற்பட்ட பக்தி. உணர்வு ஒன்றிய பக்தி, இந்தப் பக்திக்கு ஒரே ஒரு சோதனைதான் உண்டு. அந்தப் பக்தியில் ஈடுபட்டுவிட்ட பிறகு ஈடுபட்டவனுக்குத் தான், தனக்கு உரிய பசி, தாகம் தனக்குரிய கடமைகள் என்பன இல்லாமற் போய்விடும். அத்தகைய நினைவுகள் எழுமானல் அங்கே பக்தியின் ஆழம் குறைந்து போய் விடுகிறது. திண்ணனர் எந்த விநாடியி விருந்து குடுமித் தேவரைக் கண்டாரோ அந்த விநாடியி விருந்து அவரைப் பற்றிய நினைவு தவிர வேறு நினைவே இல்லாமல் இருந்தார். ''இவருக்குப் பசிக்கும் இவருக்கு இந்த ஊன் பிடிக்கும். நேற்றுக் கொண்டுவந்ததைவிட இன்று நல்ல உணவாகத் தரவேண்டும்'' என்ற நினைவுகள் நிறைந்து நின்றாரே தவிர, தாம் காண்பது முழு முதற்பொருள், காற்செருப்பால் அச்சிவபெருமானின் தலையிலுள்ள மலர்களை அகற்றுவது தவறு'' என்று அவர் நினைக்கவே இல்லை. இந்த நினைவு நிலை அவருக்குத் தோன்றவும் இல்லை. இதன் காரணத்தை எளிதாக அறிய முடியும். தான் என்ற ஒன்றைப் பிரித்துக் கண்டால் எதிரே உள்ள பொருள் வேறாகி விடும். அந்தப் பிரிவு மனப்பான்மையில் உயர்வு, தாழ்வு முதலியன தோன்றிவிடும். பிரிவு மனப்பான்மையற்ற திண்ணனுக்கு இந்த வேறுபாடு தோன்றாதது சரியே. அதுதான் பக்தியின் முடிவுநிலை. அந்த முடிவாகிய பத்தியில் ஆராய்ச்சிக்கு இடமே இல்லை. ஆராய்ச்சியில் ஈடுபட்டு ஆண்டவனிடம் செலுத்தப்படும் பக்தி, அச்சத்தில் தோன்றும் பக்தி. அதுதான் சிவகோசரியார் பக்தி. சிவகோசரியாரின் கனவில் தோன்றி இந்த வேறுபாட்டினை ஆண்டவனே சொல்கிறான். வருந்தி நிற்கின்ற சிவகோசரியார், உண்மை நிலையை உணர வேண்டுமென்றே இந்த நிலைக்களனை இறைவன் உருவாக்குகின்றான். சிவகோசரியாரோ திண்ணனாரின் செயலை வெறுத்தார்; பாவஞ் செய்வதாகவே எண்ணினர். இராமனைச் சூழவிருந்தமுனிபுங்கவரும்குகன்தேனும், மீனும் திருத்திக் கொண்டுவந்தபோது அப்படித்தான் எண்ணினர்கள். வெறுத்தார்கள். ஏன்? சிவகோசரியாரும் முனிவர்களும் அறிவின் துணை கொண்டு ஆராய்ந்து தாங்களாகவே அவனிடமிருந்து, தங்களைப் பிரித்துக் கொள்கின்றனர்; தாம் வேறு அவன் வேறு என்ற வேறுபாட்டுணர்ச்சி தோன்றத் தலைப்பட்டு விடுகிறது. வேறுபாட்டுணர்ச்சி தோன்றும்போதே மனிதன் கீழே போய்விடுகிறன்.

குகனும் திண்ணனும் தம்மை இறைவனிடமிருந்து வேறு பிரித்துக் காணவில்லை. பாகற்காய் கசக்கும், பச்சை மிளகாய் காரும் என்பது குழந்தைக்கு தெரியும்; ஆனல் இந்த வடிவங்கள் சர்க்கரையில் செய்த பொம்மையாக இருந்தால் இனிக்கும் என்பதும் தெரியும். இதனைத் தெரிந்துகொண்டுள்ள குழந்தையிடம், கையிலே காசு இல்லாத காரணத்தால் 'ஐயோ! அது பாகற்காய்; கசக்கும், மிளகாய் உறைக்கும்' என்று கூறினல், அந்தக் குழந்தை ''கசக்காது, உறைக்காது, அவை இனிக்கும்'' என்றுதான் கூறும். மீனும் தேனும் கடவுளுக்கு ஆகாதவை என்று நினைத்தார்கள் முனிவர்கள். அவர்கட்கு அந்தக் குழந்தை அறிவு கூட இல்லை. ஏன்? மிகப் பெரிய பேரறிஞர்கள் என்றாலும் வேறுபாட்டு உணர்வினலே வந்த வினையாகும் இது. அங்கே இருப்பது தேனையினும், மீனையினும் அவைகட்கு உள்ளே குழைந்து நின்று இருப்பது அன்பு என்பதனை மறந்துவிட்டார்கள். சர்க்கரையே மிளகாயாகவும், பாகற்காயாகவும் இருப்பது போல் தன்னலமற்ற அன்பே மீன் வடிவிலும், தேன் உருவிலும் அங்கே உள்ளது என்பதனை அவர்களாகவே அறிந்து கொள்ள இயலவில்லை. எனவேதான், இராமன் அன்பே உருவாக நிற்கும் குகனைப் பார்த்து

'அரியதாம், உவப்ப, உள்ளத்து அன்பினல் அமைந்த காதல்
தெரிதரக் கொணர்ந்த என்றால், அமிழ்தினும் சீர்த்த
அன்றே!
பரிவினில் தழீஇய என்னில் பவித்திரம்; எம்ம னோர்க்கும்
உரியன! இனிதின் நாமும் உண்டனம் அன்றோ என்றான்'
(குகப்.—43.)

குகன் அன்புடன் கொணர்ந்த சட்டியுள் அறிவே வடிவாய் விளங்கிய முனிபுங்கவர்க்குத் தேனும் மீனும் மட்டுமே தெரிந்தன. அன்பே வடிவமாய் விளங்கும் முழுமுதற் பொருளாகிய இராமனுக்குத் தேனும் மீனும் தெரியவில்லை. அதன் எதிராக அவைகளின் உருவில் விளங்

கும் அன்பு (பரிவு) ஒன்றே தோன்றிற்று. உபநிடதம் படித்த முனிவர்க்கு, புறத்தே தெரிந்த இரண்டு பொருள்களைத் தாண்டியுள்ள மூன்றும் பொருள் கண்ணுக்குப் புலப்படவில்லை; கருத்துக்கும் எட்டவில்லை. தேனும் மீனும் இழிவானாலும் மூன்றும் பொருளாகிய அன்பு குழைந்து சேர்ந்துவிட்டதானால் அது பவித்திரமாகிவிட்டது. இந்தச் சூழ்நிலையில் இரு வேறு நிலைப்பட்டவர்கள் இயங்கும் நிலையைக் கம்பநாடன் மிகவும் தெளிவாகவும் செம்மையாகவும் விரிவாகவும் காட்டிவிட்டான்.

அவ்வாறனால் அறிவோடு கலந்தால் பக்தி வெளிப்படாதா என்று வினவினால், வெளிப்படும் என்றே கூறலாம். ஆனால், அந்த வெளிப்பாட்டிற்கு எப்போதும் ஒரு குறை இருந்து கொண்டே யிருக்கும். அறிவோடு கூடிய பக்தியில் எப்போதும் ஆபத்தும் உண்டு. என்ன ஆபத்து என்றால், தான் என்ற 'அகங்காரம்' தோன்றித் தன்னையும் மீறி வெளிப்பட்டு விடுதல் கூடும் 'இலக்குவனுக்குப் பக்தி இல்லையா? பிராட்டிக்குப் பக்தியில்லையா? என்றால், நிச்சயமாக உண்டு. ஆனால், அது 99.99 சதவிகிதமே தவிர முழுமையானது என்று சொல்லமுடியாது. 'நான் தலைவனுக்கு ஏவல் செய்கிறேன்' என்ற எண்ணம் அடிப்படையில் இருந்துகொண்டே யிருக்கிறது. முழுமுதற் பொருளாக விளங்கும் இராமனுக்குத் தான் ஒருவனே துணையாக நிற்பதாக இலக்குவன் நினைத்துவிட்டான். எனவேதான் இராமனுக்குத் தீங்கிழைத்த கைகேயிடம் ஆத்திரமும் கோபமும் ஏற்படுகிறது.

''சிங்கக் குருளைக்கு இடும் தீஞ்சுவை ஊனை நாயின்
வெம்கண் சிறுகுட்டனை ஊட்ட விரும்பினளால்''—

என்றும்

''புவிப்பாவை பரங்கெடப் போரில் வந்தோரை எல்லாம்
அவிப்பானும், அவித்துஅவர் ஆக்கையை அண்டம் முற்றக்
குவிப்பானும், இன்றே என்கோவினைக் கொற்ற மௌலி
கவிப்பானும் நின்றேன்; இதுகாக்குநர் காமின்' என்றான்''
(நகர் நீங்கு—117, 121.)

என்றும் சீறுகிறான். சிங்கக்குட்டிக்கு இடுவதற்கென இருந்த ஊனை ஒரு சிறு நாய்க்குட்டிக்கு இடுவதற்கு முனைந்துவிட்டார்கள். அவர்களைக் கொன்றுவிடுகிறேன்'' என்று சீறிப் பேசுகிறான்: இந்த அவல நிலையைத் தான் ஒருவனே தனிநின்று சரிப்படுத்திவிட முடியும் எனச் சீறுகின்றான். இந்த அகங்கார உணர்வு அவன் உள்ளத்தில் தோன்றிவிட்டது. இலக்குவன் இராமனிடத்தில் உள்ள பக்தியால்தான் அவ்வாறு கோபிக்கின்றான். ஆனால், அவன் பக்தியில் 'தான்' என்ற அகங்காரம் இழையோடி நிற்கிறது. இது அறிவால் வந்த வினை. அறிவோடு கூடிய பக்தியையும் இப் பகுதியில் விளக்கமாகக் காட்டுகிறான் கம்பன்.

'அறிவு கலந்தால் பக்திக்கு விமோசனமே இல்லையா?' என்றால், உண்டு. அதனை மூன்றாவது பாடமாகக் கம்பன் காட்டுகின்றான். அதுதான் இராமகாதையில் இராமனையும் விஞ்சி நிற்கின்ற ஒரு மாபெரும் பாத்திரம். முதலில் நூறு இராமர்க்குச் சமமாகி நின்று 'ஆயிரம் இராமர் நின்கேழ் ஆவரோ? எனக் குகனால் அடுத்துப் போற்றப்பட்டு, ஆயிரம் கோடி இராமனுக்குச் சமம் என இராமனைப் பெற்ற கோசலையினால் இறுதியில் புகழப்பட்ட பரதனே அப்பாத்திர மாவான். இப் பரதன் படத்தினைக் கவிச்சக்கரவர்த்தி ஒப்புயர்வற்ற முறையில் தீட்டிக் காட்டுகிறான்.

அறம் அறிவின் துணைகொண்டு பணிபுரிவது. பக்தி அறிவுக்கு அப்பாற்பட்டு வருவது. இந்த இரண்டும் கலந்து ஒரு மனிதனிடம் விளங்க முடியுமா என்று கூட ஐயப்படும் நிலை இன்றுளது. ஆனால், கம்பநாடனே ''இதோ ஒரு மனிதனிடம் இவை இரண்டும் கலந்து பணிபுரிகின்றன பாருங்கள்'' எனக் காட்டுகின்றான். இலக்குவனிடமும் பக்தியும் அறமும் இருந்தன. ஆனால், அவனிடம் அறிவின் பகுதியாகிய 'நான் செய்கிறேன்' என்ற முனைப்புத் தோன்றிக்கொண்டே யிருந்தது. இந்த முனைப்பு அவன் அறத்தையும் பக்தியையும் குறைபடச் செய்துவிட்டது. ஆனால், பரதனைப் பொறுத்த மட்டில் அறம் பக்தி என்ற இரண்டும் சரிசமமாக நிற்கின்றன. அதனால் 'நான் செய்கின்றேன்' என்ற முனைப்பு இல்லாமலே போய்விடுகிறது. எனவே, அதில் குறைபாட்டினைக் காணவே முடியவில்லை. பரதன் அற அடிப்படையில் செயல்பட்டாலும் சரி, பக்தி அடிப்படையில் செயல்பட்டாலும் சரி-அங்கே பரதன் என்ற தனிப்பொருளைக் காண முடியவில்லை. இராமனைத்தான் காணுகிறோம்; அதுவே பரதனின் சிறப்பு. இராமன் பரதன், அறம் பக்தி இவைகளை வேறு வேறாகக் காண முடியாது. எல்லாம் ஒன்றாக விளங்கும் காட்சியைத்தான் பரதனிடம் காணுகின்றோம்.

ஓவியன் ஒருவன் ஓவியத்தினை ஒரு திரைச் சீலையில் வரைந்திருந்தான்; பலர் வந்து பார்த்தனர். ஓவியம் எங்கே? திரைச்சீலையை விலக்குங்கள். ஓவியத்தினைக் காணலாம்'' என்றனர். ''ஐயா! திரைச்சீலைதான் ஓவியம்'' என்றதோடு வெற்றிப் பெருமிதமும் எய்தினான். அதுபோலப் 'பரதன் என்ற பொருள் அறிவா? அன்பா? அறமா? பக்தியா?' என்றால், 'ஆம்! இவை அனைத்துமே பரதன் தான்' என்று விடைகூறலாம். அவை வேறு,

பரதன் வேறு அல்ல. நான் என்ற அகங் காரத்தினை அறவே கரைத்துவிட்ட பாத்திரம் பரதன். அத்தகைய சிறந்த பாத்திரத்தினைப் பெற்றது இராமகாதை; ஆதலினால்தான் பல மொழிகளைக் கற்றறிந்த திரு. வ. வே. சு. ஐயர் அவர்கள் "உலகக் காப்பிய இலக்கியங்களை எடுத்துக்கொண்டு பார்ப்பீர்களானால் கவிச் சக்கரவர்த்தி கம்பனின் பக்கத்தில் வருவதற் குக்கூடப் பிற காப்பிய ஆசிரியர்களை எதிர் பார்க்க முடியாது" என்று பெருமிதத்தோடு கூறுகின்றார். உலக இலக்கியங்கள் முழுவதை யும் எடுத்துக்கொண்டு பார்த்தால் இப்படிப் பட்ட பாத்திரப் படைப்பைக் கவிச்சக்கரவர்த்தி கம்பனைத் தவிர வேறு யாராலும் படைக்க முடியாது என்று கூறிவிடலாம். இந்தப் பெருங்காவியத்தினைத் தமிழில் தவிர வேறு மொழியில் எழுதியிருந்திருப்பானானால் உல கெலாம் போற்றும் ஓர் ஒப்பற்ற நிலையைப் பெற்றிருப்பான். பரதனைப் பற்றி

> 'தள்ளரிய பெருநீதித் தனியாறு புகமண்டும்
> பள்ளம்எனும் தகையானைப் பரதனெனும் பெயரானை
> எள்ளரிய குணத்தாலும் எழிலாலும் இவ்விருந்த
> வள்ளலையே அனையானைக் கேகயர்கோன் மகள் பயந்தாள்'
>
> (குலமுறை—21.)

என்று எல்லாவற்றிற்கும் மேலானவன் எனத் தன்னை எண்ணிக்கொண்டிருக்கும் விசுவா மித்திரனே இவ்வாறு கூறுகிறான். அறக் கடல் பரதன் என்கின்றான்; அறக்கடல் வேறு, பரதன் வேறு அல்ல என்றும் கூறுகின்றான். அந்தப் பாத்திரம் 'இங்நின்ற வள்ளலையே ஒக்கின்றான்! இராமன் வேறு, பரதன் வேறு இல்லை; இராமனைப் பார்த்தவர்கள் பரதனை வீட்டில் சென்று பார்க்க வேண்டியதில்லை. வடிவத்தால், பண்பால், பிறவற்றால் பரதன் இராமனையே ஒத்துள்ளான். அத்தகைய படைப்பு, பரதனாகிய படைப்பு.

பார்க்கும் பரதன் எனும் அந்தப் பாத்திரம் தனியே எடுத்துப் பிரித்துப் பாத்திரம் இல்லை. பரதனை நோக்கும்போதெல்லாம் பரதன் மட்டுமா தோன்றுவான்? அறம் தோன்றும்; பக்தியும் தோன்றும். இவற்றை விட்டுத் தனியே பரதன் என்ற ஒருவனைக் காண இய லாது. அப்படி ஒரு பாத்திரத்தினைப் படைக் கும் ஆற்றல் கவிச்சக்கரவர்த்திக்கு உண்டு. அறம் என்பதுபற்றி உபநிடதமும் அதனை ஒட்டிச் சாமர்செட்மாம் என்ற மேனாட்டறிஞ னும் 'அது வாளின் கூரிய முனை போன்றது' எனக் கூறுகின்றனர். பல சமயங்களில் வாழ்க்கைப் பிரச்சினையை ஆயும்பொழுது அறமா அது சரியா எனப் பிரித்தறிய முடி யாத நிலையில் 'இது சரியா அது சரியா' என்ற ஐயப்பாட்டில் நிற்க வைத்துவிடும். அறமும், பக்தியும் உருவாகிய பரதனுக்கும் ஒரு சோதனை. அந்த நிலையின் மூலம் பரத னின் குறிக்கோள் எங்கே இருக்கின்றது என்பதனைக் காட்டுகிறான் கவிச்சக்கரவர்த்தி. பரதன் தன் பாட்டன் வீட்டில் இருந்தவரை அயோத்தியில் நடந்தவை ஒன்றுமே தெரி யாது. வரும்வரை தந்தையின் இறப்பும், இராமன் காடு ஏகிய செய்தியும் அவனுக் குத் தெரியாது. முனிவன் அழைத்ததாக வந்த செய்தி கேட்டு ஊருக்கு வந்தான். வரும் வழியில் அயோத்தி நல்கும் காட்சியைப் பார்த் தான்; சந்தேகம் வந்துவிட்டது. அம்மாவிடம் சென்றான். முதலில் அவன் கேட்ட கேள்வி, தந்தை வலியன்கொல்' என்பதே. அந்தத் தாயார் இந்த உலகில் எந்தப் பெண்ணும் சொல்லாத ஒன்றினை, சொல்ல முடியாத ஒன் றினை "வானத்தான்" என்று சொல்லால் கூறி னாள். இந்த உலகில் எந்த மனைவியும் சொல்ல முடியாத சொல்லைச் சொல்கிறாள். கணவனை இழந்த நிலையில் எவளிடமும் தோன் றாத ஒரு அலட்சிய நிலையில் நின்று பேசுகிறாள். இத்தகைய நிலை ஒரு பெண்ணிடம் தோன்றும் என்பது கனவிலும்கூட எண்ணமுடியாத நிலை. இது பரதனை மயங்கச் செய்கின்றது. 'வானத் தான்' என்று அலட்சியமாகக் கூறுவது அவனை வெகுளவும் செய்கிறது. அங்கே அறம் அவனுக்குத் துணை செய்கிறது. உண்மை முழு வதையும் தெரிந்துகொள்ளும் முன்பே கோபித் துக் கொள்ளும் இலக்குவன் இயல்பு வேறு; பரதன் இயல்பு வேறு. எனவேதான், அடுத்து அண்ணனைப் பார்க்கத் துணிந்தான். அவனிடம் ஆறுதல் பெறலாம் என எண்ணினான். ஏன்? பரதனைப் பொறுத்தமட்டில் தாய், தந்தை, தெய்வம் அனைவருமே இராமன்தான்.

எனவே, 'இராமன் எங்கே' என்றான். அவன் மனைவியுடன் காட்டில் உள்ளான்' என்றாள் அப்பெருமாட்டி. 'மனைவியோடு போய் விட் டான்' என்றால் அது மரபுக்கு ஒவ்வாத நிலை. என்ன தவறிழைத்தான்? தவறு செய்தவர் காட்டுக்கு அனுப்பப்படுதல் நியாயம். "தவறிழைத்து மானம் கெட்டு காட்டுக்குப் போனானா, தானாக விரும்பிப் போனானா? மன்னன் தண்டித்துக் காட்டுக்குப் போனானா?" இவை பரதனுடைய வினா. இராமன் இவற் றுள் எந்தக் காரணத்தினால் போயினான் என்று வினவுகிறான். பரதன் மூன்று காரணங்களைக் கற்பித்துக்கொண்டு கேட்டான். அவள் வேறு ஒன்றும் சொல்லமுடியாத நிலையில் "இரண்டு வரம் கேட்டேன். ஒன்றால் உனக்கு ஆட்சி உரிமையைப் பெற்றேன். மற்றொரு வரத்தால் இராமனைக் காட்டுக்கு அனுப்பினேன். இதனைப் பொறுக்காமல் மன்னன் மாண்டான்" என்றாள். இதுதான் நிலைக்களன். இதனை அமைத்துக் கொண்டான் சக்கரவர்த்தி. ஒரு

மகன்—ஒரு தாய். மகன் அன்புடையவன். தாயும் தன் மகனிடம் அன்புடையவள். அன்பு காரணமாகத்தான் அறத்தையும் எண்ணாமல் வரத்தினால் பட்டத்தை வாங்கினாள். அன்புடைய இருவர்க்கிடையில் உரையாடல். 'அறத்தின் ஆணி' என்று இராமனாலே புகழப்பட்டவன், "தள்ளரிய பெருநீதித் தனி ஆறு புகமண்டும் பள்ளம்" என்று விசுவாமித்திரனாலே பேசப்பட்டவன், 'ஆயிரம் இராமர் வந்தாலும் உனக்குச் சமமாகாது' என்று குகனாலே புகழப்பட இருக்கிறவன், 'ஆயிரம் கோடி இராமருக்கும் மேலானவன்' என இராமனைப் பெற்ற கோசலையினாலே புகழப்படும் பரதன் தாயையும் கொலை செய்யத் துணிகின்றான். பரதன் அரச குமாரன், அறத்தின் நிலைக்களன். எதிரிலே நிற்பவள் அன்பால் அறமற்ற கொடிய செயலைச் செய்தவள், அறமல்லாதனவற்றை யார் செய்திருந்தாலும் அவர்கள் தண்டிக்கப் படவேண்டியவர்கள். அதுதான் அறம். அந்த வகையில் அவன் உந்தப் பெறுகின்றான்.

> ''நீ இனம் இருந்தனை! யானும் நின்றனென்;
> ஏ எனும் மாத்திரத்து எற்று கின்றிலேன்
> நாயகன் முனியும்என்று அஞ்சினேன் அலால்
> தாய்எனும் பெயர்எனைத் தடுக்கற் பாலதோ?''
>
> ''மாளவும் உளன்ஒரு மன்னன் வன்சொலால்
> மீளவும் உளன்ஒரு வீரன் மேயபார்
> ஆளவும் உளன்ஒரு பரதன் ஆயினால்
> கோள்இலது அறநெறி குறைஉண்டாகுமோ?''
>
> (பள்ளி—72, 73.)

என்கிறான். தாய்க்கொலை பொல்லாதது என்றாலும் துணிகிறான். ஆனால், "நாயகன் முனியும் என்று அஞ்சினேன்" என்று கூறுவதால் தான் வழிபடுகிற இராமன் முனிவான் என்றே விட்டுவிடுகிறானாம். "தாய் என்கிற உரிமைக்கான உறவுக்காக உன்னை விடவில்லை" என்று கூறுவதால் இராமனிடம் இருந்த பக்தி அங்கே அவனுக்குத் துணை செய்கிறது; தாய்க் கொலையிலிருந்து அவனைத் தடுத்து நிறுத்துகிறது. தாய்க் கொலையை எண்ணுவதும் பாதகம். பரதன் இவ்வாறு எண்ணியது அறவாழ்வா? என்ற வினா அடுத்துத் தோன்றுவது இயல்பே.

அறம் 'தேன் தடவிய வாள் முனை போன்றது' என்று காந்தியடிகள் கூறுவார். அது பக்தியோடு சேரவில்லையென்றால் பல சமயங்களில் தவறு செய்துவிடும். அறத்தோடு அன்பு சேரவில்லையென்றால், அறம் என்ற பெயரால் பல தவறுகள் நடந்துவிடும். பக்தி அல்லது அன்பு என்ற உணர்வு அறத்தோடு இழைந்து நிற்கவில்லையென்றால் அதனால் அறமுடையானுக்கும் பயன் இல்லை; மற்றவர்க்கும் பயன் இல்லை. புத்ததேவன் இதனை மறக்கவில்லை. கருணையின் அடிப்படையிலே வாழும் அறவாழ்வுதான் பயனுடைய வாழ்க்கை என்று செயலிலும் காட்டினான். உலக மக்கள் உணரும் வகையில் அதனைச் செய்து காட்டினான். பிம்பிசாரன் செய்த யாகத்திற்கு ஆடு சென்றது. "அந்த ஆட்டைக் கொன்று யாகத்திலிட்டுத்தான் உயர்கதி பெற முடியுமென்றால் ஆட்டின் உயிரினும் உயர்ந்த உயிராகிய என் உயிரைத் தருகிறேன்" என்று ஆட்டைத் தோளிலே சுமந்து சென்றான். பிற்காலத்திலோ அந்தப் புத்தனைப் பின்பற்றுவதாகக் கூறிக்கொள்பவர்கள் அறத்தைமட்டும் வைத்துக்கொண்டு இரக்கத்தை, கருணை உணர்வை மறந்துவிட்டார்கள். எனவே, அறமும் வெறும் சடங்காயிற்று. சமயம் உயிர் இழந்தது. அடிப்படையை மறந்து மேல் கட்டிடத்தை மட்டும் அழகு செய்யும் நிலைக்கு வந்துவிட்டார்கள்.

அறமும் பக்தியும் நிறைந்த பாதையில் வாழ்பவனாகிய பரதனுக்கு ஓர் இக்கட்டான நிலை இது. அறத்தின் அடிப்படையோடு நிற்கும் நேரத்தில் தாய்க் கொலையைவிடக் கொடுமையானது வேறு ஒன்றும் இருக்காது. அறம் அறிவோடு தொடர்புடையது. எனவே, அறவழியிலே செல்பவன் இத்தகைய செயலைச் சிந்திப்பதும் பெருங் குற்றமாகும். பக்தியின் நோக்கிலே யார் எவர் என்ற வேறுபாடே இல்லை. தாயா, தந்தையா என்று கருதக்கூட நேரம் இல்லை. தன்னால் வணங்கப்படும் பெருந் தெய்வமாகிய தன் கடவுள் இராமன். அவனுக்குத் தீங்கு செய்பவர் தண்டிக்கப்பட வேண்டியவர்கள். எனவேதான், இராமன் ஒருவேளை தவறிழைத்து அதன் பயனாகக் காட்டிற்கு அனுப்பப்பட்டும் இருக்கலாம் என்ற விவகாரத்திற்காக நினைக்கவும் பரதன் அஞ்சுகிறான். இதனை மனத்திற்கொண்டுதான் கீழ்வருமாறு பேசுகிறான்;

> ''தீயன இராமனே செய்யுமேல் அவை
> தாய்செயல் அல்லவோ தலத்து உளோர்க்குஎலாம்''
>
> (பள்ளி—61.

"தீயன இராமனே செய்யும்?" இங்கு ஏகாரம் எதிர்மறைப் பொருளில் வந்துள்ளது. இராமன் தவறே செய்யமாட்டான். அவனால் தவறு செய்ய முடியாது. ஒருவேளை பிறர் கண்ணுக்குத் தவறுபோல் தோன்றும் நல்லதைச் செய்தால்?, 'செய்யுமேல் - அது தாய் செயல்' என்கின்றான். 'தாய் செயலே தவிரத் தீச் செயலன்று' என்று கூறுகின்றான். குழந்தையைக் காலின் இடையில் போட்டு அமுக்கி மருந்தை ஊற்றும் தாயின் செயல் காண்பதற்கு மறம் போலக் காட்சியளித்தாலும், அது அன்பு காரணமாக நிகழும் செயலே தவிரக் கொடுமையான செயலன்று. வள்ளுவர்கூட;

''அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை.''

என்று கூறுகின்றார். மருத்துவரின் செயலை நோக்கி முடிவுக்கு வருவது தவறு. செயலின் நோக்கம், பயன் ஆகியவைகளைக் கொண்டு முடிவுக்கு வருவதுதான் நடு நிலைமையுடைமை யாகும், முறையுமாகும். இதனை நன்றாக உணர்ந்தவன் தமிழன். எனவேதான், கம்பன் பரதன் வாயிலாகத் '' தீயன இராமனே செய்யும் '' என்று கேட்டு, 'அது தாய் செயல்' என்று கூறுகின்றான். என்றால், இராமன் தவறு செய்யவில்லை என்ற முடிவிற்கு வந்தபின், ஏன் காட்டிற்குச் சென்றான் என்று வினவுகிறான். இது அறத்தின் அடிப்படை எழுப்பிய வினவாகும்.

ஒருவன் பூசை செய்கிறான். அவன் தந்தை முதுகில் அடிக்கிறான். ஆனால், பூசையிலீடு பட்டவனுக்கு அந்த அடி தெரியவில்லை. ஆனால், பூசைக்குரிய பாலைக் காலால் தட்டியபோது அவ்வாறு தட்டிய தந்தையின் காலை வாளால் துண்டித்தான். தந்தையைக் கொலை செய்யப் புகுந்தவன் சண்டேசுவரன். இது தவறு இல்லையா? தனக்குத்தீங்கு செய்யப்படும்போது அது அவனுக்குத் தீங்காகவே தெரியவில்லை. தன்னால் வணங்கப்படும் தெய்வத்திற்குத் தீங்கு செய்யப்படும்போது செய்தவர் யார் என்ற ஆராய்ச்சிக்கே இடம் இல்லை. உறவுக்கோ பிறவற்றிற்கோ அங்கு இடம் இல்லை. இந்த உணர்வு நிலையைத்தான் நாவுக்கரசர் பெருமான்

''முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள் மூர்த்தி
அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள் பெயர்த்தும்
அவனுக்கே பிச்சி ஆனாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள் அகன்றாள
அகலிடத்தார் ஆசாரத்தைத்
தன்னை மறந்தாள் தன் நாமம் கெட்டாள் தலைப்பட்டாள்
நங்கை தலைவன் தாளே.''

என்று பாடுகிறார். இதே நிலைதான் பரதன் நிலையும். இந்த நிலையில் ஈடுபட்டுவிட்ட பரதனுக்குத் தந்தையில்லை, தாயில்லை, எல்லாம் இராமன்தான்.

''எந்தையும் ஆயும்எம் பிரானும் எம்முனும்
அந்தமில் பெருங்குணத்து இராமன் ஆதலால
வந்தனை அவன்கழல் வைத்த போதுஅலால்
சிந்தைவெங் கொடுந்துயர் தீர்கலாது.''

(பள்ளி—57.)

என்கிறான் பரதன். ஆதலால்தான், நாயகன் முனியும் என்று அஞ்சித் தாயைக் கொல்ல வில்லை. எனவே, அறிவே பக்தியாய், பக்தியே அறிவாய் விளங்கிய நிலையைப் பரதனிடம் காணுகிறோம். அதற்கு அறிவு நிலையில் நின்று ஆராயவும் தெரியும்; பக்தி நிலையில் நின்று தன்னை அர்ப்பணிக்கவும் தெரியும். குகனிடத்தும் திண்ணனிடத்தும் அறிவுக்கு அப்பாற்பட்ட பக்தி நிலையைக் காணுகின்றோம். சிவ கோசரியாரிடம் அறிவு நிலை விஞ்சி அறத்திற்கு மட்டும் சிறப்புத் தரும் பக்தியைக் காணுகின்றோம். இலக்குவனிடம் ஒன்று விஞ்சி நிற்கையில் பிறிதொன்று தாழ்ந்து நிற்கும் நிலையைக் காணுகின்றோம். அவைகளையெல்லாம் கண்டவர்கள் அறமும் பக்தியும் இணையவே இணையாதோ என்றுகூட எண்ணத் தொடங்கி விட்டனர். ஆனால், கவிச்சக்கரவர்த்தி கம்பன் படிப்படியே பலப்பல படங்களைக் காட்டிவிட்டு, அறமும் பக்தியும் இணையும் நிலையில் தவறே நேராத உயரிய நிலை ஏற்படும் நிலையினைக் காட்டுகிறான். இதனைப் பரதன் வாழ்வின் மூலம் அறிகிறோம். அறமும் பக்தியும் முரண்பட்டவையோ என்று எண்ணும் திறனாய்வாளர்களின் சிந்தனைக்குக் கம்பன் நல்ல கருவூலமாகின்றான்; அறத்தையும் பக்தியையும் பரதனிடம் இணைத்துக் காட்டுகிறான்.

இந்தப் பேருலகில் அறம் வேறு பக்தி வேறு என்றும், இரண்டுக்கும் முரண்பாடு உண்டு என்றும் கருத வேண்டா. அறத்தின் அடிப்படையில் பக்தி தோன்றும். பக்தி முதிர்ந்தால் அறம் அதனுள் இழையோடி நிற்கும். பக்தியின் சிறப்பில் அறம் கலந்து நிற்கும். இந்த உண்மையைக் கம்பன் தன் காப்பியத்தில் தெளிவாகக் காட்டுகிறான்.



கம்பன் கனவு

திரு. கம்பன் அடிப்பொடி

மகா கவிகளைப் போலக் கனவு காண்பவர்களை எங்குமே காண முடியாது. நம்முடைய அறிவுக்கெல்லாம் எட்டாத எத்தனையோ அற்புதமான கனவுகளை அவர்கள் கண்டுகொண்டே இருப்பார்கள். உலகிலே எங்கும் காணமுடியாத ஒரு மகோன்னதமான நாட்டை மகாகவிகள் தங்கள் காவியத்திலே உண்டாக்கி விடுவார்கள். கோடானுகோடி செலவில், நூற்றுக்கணக்கான தச்சர்கள் (Engineers)) கூடி, பல்லாயிரக்கணக்கான வேலையாட்களைக் கொண்டு நிர்மாணிக்கிற பெரிய பெரிய நகரங்களும், அங்குக் காணப்படும். அழகோவியங்களும் சிதைந்து அழிந்து மறைந்து மண்ணோடு மண்ணாய்ப் போனாலுங் கூட, இந்தக் கவிதைத் தச்சர்கள் கட்டிய மாளிகைகளும், உயிர் ஓவியங்களும் அழியாத அமரத்துவத்தைப் பெற்று விடுகின்றன. ஆகவேதான் அறிஞர்களைப் பாராட்டுகிற உலகம் மேதைகளை வணங்குகிறது; புலவர்களை வாழ்த்துகிற உலகம் கவிகளை ஏத்துகிறது. இல்லையா?

உலகம் கண்ட மகா மேதைகளிலே, சிறந்து விளங்குபவன் கம்பன். அதனாலேதான் மன்னாதி மன்னர்களும் அவனைக் கவிச்சக்கரவர்த்தி என்று மனமார, வாய் மணக்கப் போற்றி நின்றனர். அத்தகைய மகாகவி ஒரு நாட்டைப்பற்றிக் கனவு காணுகின்றான். நாடு எல்லா வகையிலும் குறைவற்றதாய் இருக்க வேண்டும்; எவ்வகைப் பண்பாடுகளும் நிறைந்திருக்க வேண்டும் என்பது கவியின் ஆசை.

நாடு என்றால் எல்லா வளமும் இருக்க வேண்டும்; மக்களுக்கு முதற்படியான தேவை உணவு. உணவு முட்டின்றிக் கிடைக்க நிலவளம் சிறந்திருக்க வேண்டும். நீர்வளம் பெருகினாலன்றோ நிலவளம் சிறக்கும்? நீர் வளம் நிறைந்திருக்க வேண்டின் நாட்டின் எல்லாப் பாகங்களிலும் ஜீவ நதி ஓடவேண்டும். ஜீவ நதியைத் தருவதற்கு மரம் அடர்ந்த வானளாவிய மலைத் தொடர் வேண்டும். அப்பொழுதுதான் மேகம் கடல் நீரை மொண்டு கொண்டு வந்து மலைமீது பொழியும்: மலையில் விழுந்த மழை நீர் ஆறாய்ப் பெருகும். இவற்றை எல்லாம் நன்குணர்ந்த கவி, தான் கனவு காணும் நாட்டை வருணிக்கத் தொடங்குகிறான் முதலில், மேகத்தை நமக்குக் காட்டுகிறான்.

வெள்ளை வெளேரென்று வானம் முழுவதும் பரந்திருக்கிற மேகம் கடலை நோக்கி ஓடுகிறது. கடலில் விழுந்து நீரை மண்டுகிறது. பிறகு கன்னங்கறேல் என்று திரும்பி வருகிறது. நாம் எல்லாம் எத்தனையோ தரம் பார்த்த சங்கதிதான். ஆனால் கம்பன், அழித்தற் கடவுளான சிவனைப் போலச் சென்ற மேகம் காத்தற் கடவுளான திருமாலைப் போலத் திரும்புகிறது என்கிறான். நிறத்தால் மட்டும் அல்லாமல், குணத்தாலும் இந்த உபமானம் எவ்வளவு பொருத்தமாய் அமைந்திருக்கிறது!

இப்படியாக வரும் மழைமுகில், இடையிலே வழி மறித்தாற்போல ஓங்கி வளர்ந்து,

பச்சைப்பசேல் என்ற தோற்றத்துடன் நிற்கும் மலைமீது பொழிகிறது மழை வெள்ளத்தை. கருமுகிற் கூட்டம் மலையைக் கவிந்து கொண்டிருப்பது கவிக்கு. கடலே மலையைச் சூழ்ந்து கொண்டு விட்டதாய்த் தோன்றுகிறது. அதற்கு ஓர் அழகான அற்புதமான காரணமும் கிடைத்து விடுகிறது. கடலுக்கு மலை மாமன் முறை வேண்டுமாம். எப்படி? ஆறு ஒரு பெண். அது கடலை மணந்து கொள்ளுகிறது. இந்தக் கதை நமக்குத் தெரிந்ததுதான். ஆற்றைத் தந்தது மலை. மலையை ஆண் என்று சொல்லுவது நமது சம்பிரதாயம். எனவே, ஆற்றின் தந்தையாகிய மலை, ஆற்றை மணந்து கொண்ட கடலுக்கு, மாமன் முறை ஆகவேண்டும் என்பது சரி தானே?

காதலிமீதுள்ள அன்பின் பெருக்கினால், மாமன் வெயிலால் வாடி வதங்கிவிட்டான் என்று எண்ணிக் குளிர்ந்த நீரினால் மலையைக் குளிப்பாட்டுகிறதாம்.

> பம்பி மேகம் பரந்தது பானுவால்
> நம்பன் மாதுலன் வெம்மையை நண்ணினான்
> அம்பின் ஆட்டுதும் என்(று) அகன் குன்றின்மேல்
> இம்பர் வாரி எழுந்தது போன்றதே.

(பம்பி—நெருங்கி; பானுவால்—சூரியனால் நம்பன் மாதுலன்—நம்பிக்கைக்குரிய மாமனார்; அம்பின் — நீரினால்; ஆட்டுதும் — முழுக்காட்டுவோம்; இம்பர் வாரி—இவ்வுலகக் கடல்.)

மேகங்கள் ஒரு துளிகூடத் தங்களிடம் வைத்துக் கொள்ளாமல், பிரதி உபகாரத்தையும் எதிர்பாராமல், ஒரே அடியாய்க் கொட்டி விடுகிற தன்மை, கவிக்கு எத்தனையோ தாதாக்களையும், அவர்களுடைய வள்ளன்மையையும் நினைப்பூட்டுகிறது. அதனாலேதான்,

> உள்ளி, உள்ளஎல்லாம் உவந்(து) ஈயும் அவ்
> வள்ளி யோரின் வழங்கின மேகமே!

என்று வியப்படைகிறான். 'உள்ளி' என்றால் 'நாம் இப்படிக் கொடுப்பதால் இம்மையில் எவ்வளவு கீர்த்திப் பிரதாபமும், மறுமையில் எவ்வளவுக்கு ஸ்வர்க்கபோகமும் கிடைக்கும் என்று கணக்குப் போட்டுப் பார்த்து' என்று அர்த்தம் இல்லை. இப்படித் தருமத்தையே வியாபாரமாகக் கருதிச் செய்பவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள் என்பது வாஸ்தவந்தான். அதனாலேதான் அப்படி எண்ணிவிடப் படாது என்று சொல்லவேண்டியிருக்கிறது. 'உள்ளி' என்றால், இன்னும் வழங்குவதற்கு நம்மிடம் என்ன இருக்கிறது என்று துருவிப் பார்த்து' என்றுதான் பொருள் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் கவியின் உபமானம் எவ்வளவு நயம் பட விளங்குகிறது என்பது புலப்படும். இந்தச் சந்தர்ப்பத்திலே,

> ''இம்மைச் செய்தது மறுமைக்(கு) ஆம்எனும்
> அறவிலை வாணிகன் ஆ(அ)ய் அலன்'''

என்னும் உறையூர் ஏணிச்சேரி முடமோசியாரின் வாக்கு நமக்கு நல்ல வழிகாட்டுவதாக அமைந்திருக்கிறது.

மழை ஏராளமாகப் பெய்துவிட்டால் போதுமா? பாலைவனமானால் நிலம் உறிஞ்சக்கூடப் பற்றாது. மலை அல்லவா? சேதமின்றித் தழைக்கிறது; வளருகிறது என்று கூடச் சொல்லலாம். தினந் தினம் அளவாகத் தந்துகொண்டே இருக்கிறது. 'நீதிநெறி கடவாத செங்கோல் மன்னன் கீர்த்தியோ, அல்லது உண்மையை அறியும் அந்தணர்க்குக் கொடுத்த தானந்தானா?' என்று வியக்கிறான், வியப்படையச் செய்கிறான் கவி. அப்படித் தழைக்கிறது தண்ணீர்.

> மானம் நேர்ந்(து) அறன் நோக்கி மனுநெறி
> போன தண்குடை வேந்தன் புகழ்என,
> ஞானம் உன்னிய நான்மறை யாளர்கைத்
> தானம் என்னத் தழைத்தது நீத்தமே.

[நேர்ந்து—குறிக்கொண்டு; மனுநெறி போன—மனித தருமப்படி நடப்பதிலே பெயர்போன; தண்குடை வேந்தன் அன்போடு காக்கும் மன்னன்; ஞானம் உன்னியஉண்மை அறிவில் கருத்தை ஊன்றிச் செலுத்திய; நீத்தம்—பெருநீர் வெள்ளம்.]

விருப்பு வெறுப்பு இல்லாமல் சகல ஜீவன்களுக்கும் உதவுகிறது ஆறு. இப்படி ஓடி வருவது நமக்கெல்லாம் நதிதான். கவியின் கண்ணுக்கு அது எப்படித் தோன்றுகிறது? அது கேவலம் நதியல்ல; அதில் வருவது வெறும் தண்ணீரும் அல்ல. அது சர்வகோடி ஜீவர்களுக்கும் தாய்ப்பால் என்கிறான். பாட்டைப் பார்ப்போம்:

> இரவி தன்குலத்(து) எண்ணில்பல் வேந்தர்தம்
> பரவு நல்ஒழுக் கின்படி பூண்டது
> சரயு என்பது தாய்முலை அன்ன(து) இவ்
> உரவு நீர்நிலத்(து) ஓங்கும் உயிர்க்கெலாம்.

[இரவி—சூரியன்; பரவு நல் ஒழுக்கின்படி பூண்டது எல்லோரும் புகழ்ந்து பாராட்டும் ஒழுக்கத்தைப் போலவே, தன்னால் துன்பம்நேராமல் துயரம் துடைக்கும் தன்மையை மேற்கொண்டது; உரவு நீர்நிலம்—நீர் சூழ்ந்த நிலம்.]

தண்ணீரின் இன்றியமையாத தன்மையை ஆழமாக ஊன்றி நோக்கினால் இது அப்படியே சுத்தமான உண்மை என்பது தெளிவாகப் புலப்படும்.

மலைச் சிகரங்களுக்கு இடையிலேதான் உற்பத்தியாகிறது ஆறு. ஆனால் பல கிளை களாகப் பெருகி ஓடுகிறது; அருவியாய் ஒழுகுகிறது. இறுதியில் கடலில் கலந்து விடுகிறது. இவற்றை எல்லாம் நாம் காண் கிறோம். இந்த நிகழ்ச்சிகளை வைத்துக் கொண்டே கம்பன் உண்மைத் தத்துவத்தை நமக்கெல்லாம் உணர்த்தி விடுகிறான்.

மலையில் உற்பத்தியாகிக் கடலில் சங் கமமாகும் நதி எப்படி உண்டாயிற்று? எந்தக் கடலில் சங்கமமாகிறதோ, அந்தக் கடலின் நீர்தான் ஆவியாக மேகமாக மாறி, மழையாகப் பெய்து, கால்களாக ஓடி, அருவியாகக் குதித்து, நதியாகப் பெருகி, தான் சேர வேண்டிய இடத்தை நோக்கிப் பிரயாணம் செய்கிறது. முடிவிலே, தான் எங்கிருந்து வந்ததோ அங்கேயே, அந்தக் கடலிலேயே ஒன்றிவிடுகிறது.

முதலில் கடல் என்று ஒன்றுயிருந்தது. பிறகு அது எத்தனை நாமத்தையும், ரூபத் தையும் அடைகிறது! அங்கு இங்கு என்று சொல்ல முடியாதபடி எங்கும் நீக்கமற விளங்குகிறதே! இது என்ன பெரிய மாயை யாக அல்லவா இருக்கிறது? எவ்வளவோ சமயிகள் எல்லாம் என் தெய்வம், உன் தெய்வம் என்று சொல்லுகிறார்களே; அந்தக் கற்பனையையும் கடந்த முழு முதலான கட வுளைப் போல அல்லவா இருக்கிறது? இவ் வாறு சொல்லிக் கடவுள் தத்துவத்தின் உண்மையை நமக்குப் புலப்படுத்தி விடு கிறான். ஆம்! மிக மிகப் பொருத்தமான உபமானம். அகண்டமாயிருக்கிற பரமான் மாவின் சிறு சிறு பொறிகள்தாம் ஜீவான் மாக்கள்.

ஜீவான்மா பரமான்மாவிலிருந்துதான் வெளிப்படுகிறது, கடலிலிருந்து நீர் ஆவி ரூபமாகக் கிளம்புவது போல. ஆனாலும் நாம் எல்லாம் எண்ணிக் கொண்டிருக்கி றோம்; உயிர் வர்க்கம் எல்லாம் தாயின் கருவிலிருந்து தான் உற்பத்தியாகின்றன என்று. மலையிலிருந்துதான் நீர் உற்பத்தி யாகிறது என்று சொல்லுகிறோம் அல்லவா? அதைப் போல. எப்படி ஓடி வருகிற ஆற் றில் உள்ள எல்லா நீர்த்திவலைகளும் நேரே ஓடிக் கடலை அடையாமல், வாய்க்கால் களாய் ஓடி, குளங்கள், ஏரிகள், வயல் கள், தோட்டங்களில் சென்று பாய்ந்து மாய்ந்து விடுகின்றனவோ, அப்படியே ஜீவான் மாக்களிலும் எவ்வளவோ, தாங்கள் அடைய வேண்டிய, லட்சியத்தை நோக்கிச் செல் லும் நெறியை விட்டு விலகிச் சென்று, வேறு இடங்களில் மீளமுடியாதபடி சிக்கிக் கொண்டுவிடுகின்றன. இந்த ஆழமான கருத்தெல்லாம் பொதிந்து விளங்கும் கவி யைப் பார்ப்போம்.

கல்லிடைப் பிறந்து போந்து
கடலிடைக் கலந்த நீத்தம்
எல்லையில் மறைக ளாலும்
இயம்ப அரும் பொருளீ தென்னத்
தொல்லையில் ஒன்றே ஆகித்
துறைதொறும் பரந்த சூழ்ச்சி,
பல்பெரும் சமயம் சொல்லும்
பொருளும்போல் பரந்த(து) அன்றே.

[கல்லிடை—மலையிடை; நீத்தம்—வெள்ளம்; மறை—வேதம்; தொல்லையில்—பழமையில், முதல் முதலில்.]

இந்த நீர் எங்கெல்லாம் எப்படி எப் படிப் பரந்து நிற்கிறது? உயிர் எப்படி உடம்பெல்லாம் விரவி நிற்கிறதோ, அப்படி நீர் இங்கெல்லாம் பரந்து கிடக்கிறது. ஒரே ஆன்மா பல வேறு தோற்றமும், அளவும், அமைப்பும், பெயரும் கொண்ட எண்ணற்ற உடம்புகளில் எப்படி விரவி நிற்க முடியும்? இந்த அற்புதமான உண் மையை ஒரே தண்ணீர் பலவேறு தோற்ற மும் அளவும், அமைப்பும், பெயரும் கொண்ட எண்ணற்ற இடங்களில் விர நிற்கிற தன்மையைக் கொண்டே மிகத் தெளிவாக விளக்கி விடுகிறான். முன்னே கண்ட கவிக்கு மேலும் விளக்கம் கூறுவது போல அமைகிறது அடுத்த கவி, அதையும் பார்ப்போம்.

தாதுகு சோலை தோறும்,
சண்பகக் காடு தோறும்,
போ(து) அவிழ் பொய்கை தோறும்,
புதுமணல் தடங்கள் தோறும்,
மாதவி வேலிப் பூக
வனந்தொறும், வயல்கள் தோறும்,
ஓதிய உடம்பு தோறும்
உயிர்என உலாய(து) அன்றே.

[தாது உகு சோலை—மகரந்தப்பொடி உதிரும் மலர் நிறைந்த மரங்கள் மண்டிய சோலை; போது அவிழ் பொய்கை—இதழ் விரியும் மலர் செறிந்த பொய்கை; புது மணல்தடம் —அவ்வப்பொழுது புதிய மணல் பரப்பப்படும் குளிக்கும் குளம்; பூகவனம்—கமுகந் தோட்டம்; உலாயது—சஞ்சரித்தது.]

நீர்வளம் மிகுந்திருக்க நிலவளம் எப் படிச் செழித்துள்ளது என்பதை வந்து காணுமாறு நம்மை எல்லாம் அழைக்கிறான் கவி. கம்பன் அழைத்துவிட்டால் நம்மால் போகாமல் இருக்க முடியுமா? சென்று பார்க் கலாம். ''இதோ பார்'' என்று காட்டுகிறான் கம்பன். பார்க்கிறோம். நாம் பார்ப்பது என்ன? வயலா இது? ஏதோ ராஜதர்பார் நடைபெறும் கொலுமண்டபம் போல அல் லவா இருக்கிறது? திகைப்போடு கம்பன் முகத்தைப் பார்க்கிறோம். நம்மையே நோக்

கிக் கொண்டிருக்கும் கம்பன், ''ஆம்! இது மகாராணி மருதாயி நாச்சியார் கொலு வீற்றிருக்கும் இடந்தான்'' என்கிறன்.

தண்டலை மயில்கள் ஆட,
தாமரை விளக்கம் தாங்க,
கொண்டல்கள் முழவின் ஏங்க,
குவளைகண் விழித்து நோக்க,
தெண்திரை எழினி காட்ட,
தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட
மருதம்வீற் றிருக்கும் மாதோ.

[தண்டலை—சோலை; விளக்கம்—விளக்கு; கொண்டல்கள்—மேகங்கள்; முழவின்—மத்தளம் போல; தெண்திரை—தெளிந்த அலைகள்; எழினி — நாடகத்திரை; தேம்பிழி மகரயாழின் — மதுரகீதம் பொழியும் மகரயாழ் என்னும் வாத்தியத்தைப் போல; மருதம் வீற்றிருக்கும் — நன்செய் நிலம் கொலுவீற்றிருப்பதைப் போலக் கம்பீரமாக இருக்கிறது.]

வயலே இவ்வளவு கம்பீரமாக இருந்தால் இந்நாட்டு மக்கள் எவ்வளவு இறுமாப்போடு இருப்பார்கள்? ஏதோ ஒருவாருக நம் உள்ளம் ஊகித்துக் கொண்டு விடுகிறது. இருந்தாலும் நேரே சென்று கண்ணுலே காண வேண்டும் என்ற ஆசை தூண்டுகிறது. நமது எண்ணத்தைக் கண்டுகொண்ட கம்பன், ''நாட்டிற்குள் சென்று பாருங்கள்'' என்று அனுமதி தருகிறன். புறப்பட்டு விடுகிறேம்; நாட்டிற்குள்ளே நுழைந்தும் விட்டோம்.

இது என்ன? எங்கே பார்த்தாலும் ஒரே கொண்டாட்டமாயிருக்கிறது? திருமண விழா ஒரு பக்கம்! மற்றெருபுறம் நடப்பது சங்கீதக் கச்சேரியா? ஆகா; எப்படி இருக்கிறது! பருந்தோடு நிழல் செல்வது மாதிரி அல்லவா பாட்டோடு இசை இயங்கிச் செல்கிறது? அமுதத்திலும் சுவை மிக்க அரிய சொற்பொழிவுகளைக் கேட்டுக் கொண்டு, அதிலே திளைத்திருக்கிறர்கள் ஒருபால். இன்னும் ஒரு பக்கத்திலே கோவில் திருவிழா நடைபெறுகிறது. என்ன குதூகலம்! என்ன நாகரிகம்! ''வாழ்க்கை என்றல் வாழ்க்கை! இது அல்லவா வாழ்க்கை!'' என்று ஆச்சரியப்படுகிறேம்.

பொருந்திய மகளி ரோடு
வதுவையில் பொருந்து வாரும்
பருந்தொடு நிழல்சென்(று) அன்ன
இயல் இசைப் பயன் துய்ப் பாரும்
மருந்தினும் இனிய கேள்வி
செவிஉற மாந்து வாரும்
வருந்தினர் முகம் கண்(டு) அன்ன
விழாவணி விரும்பு வாரும்.

[பொருந்திய மகளிர் — உடல், அறிவு, வயசு முதலிய வற்றல் தமக்குப் பொருத்தமான பெண்கள்; வதுவை—கல்யாணம்; பருந்தொடு நிழல் சென்று அன்ன — உயரத்தில் பறக்கும் பருந்தின் அசைவுகளுக்கும் கதிக்கும் ஏற்க எப்படிப் பருந்தின் நிழலும் இருக்கிறதோ, அதைப் போல; இயல் — பாட்டு; இசை பாட்டிற்கு— இசையும் ராக தாளங்கள்; இயலின் பயனையும், இசையின் பயனையும் அநுபவிக்கிறர்கள் என்பதை, ''இயலிசைப் பயன் துய்ப்பார்'' என்று காட்டுகிறன்; மருந்தினும் — அமுதத்தைப் பார்க்கிலும்; செவி உற — காதில்பட; மாந்துவார்—ஆர்வத்தோடு கிரகித்துக் கொள்வார்.]

திருவிழாக் கொண்டாட்டத்தை அந்நாட்டினர் மிகவும் அநுபவிக்கிறர்கள் என்பதைத் தெரிவிக்க வந்த கவி, விருந்தாளிகளை எவ்வளவு ஆசையுடன் வரவேற்பார்களோ அவ்வளவு ஆசையோடு' என்று கூறி அந்நாட்டாரின் பண்பாட்டை நமக்கு மிக நன்ருக விளக்கி விடுகிறன்.

ஊருக்குள்ளே நுழைந்து பொதுவாகப் பார்த்த நாம் ஒரு வீட்டிற்குள்ளாவது நுழைந்து அவர்களுடைய மனை வாழ்க்கை எப்படி இருக்கிறது என்று பார்க்க வேண்டாமா? இவ்வளவு நேரம் பார்த்தவையெல்லாம் வெறும் வெளி ஆடம்பரங்களா? அல்லது அவர்கள் உண்மையிலேயே மேலான பண்பட்ட வாழ்க்கை வாழுகிறர்களா? இதைத் தெரிந்துகொள்ள வேண்டும் அல்லவா? வீட்டிற்குள்ளே நுழைந்து உண்டி முதலியவற்றைப் பார்த்தால் இவர்களின் உண்மை நிலை வெளிப்பட்டுப் போய்விடுகிறது சரி; ஒரு வீட்டிற்குள் போகலாம்.

என்ன, எல்லா வீடுகளும் ஒரே மாதிரியாக அல்லவா காணப்படுகின்றன? எளியவர், செல்வர் என்று இங்கே தாரதம்மியம் இல்லையா என்று சந்தேகம் உதிக்கிறது. சரி; எதிரே தெரிகிற அந்த வீட்டிற்குள் போகலாம். வீட்டிற்குள்ளே நுழைகிறேம். உள்ளே சென்றதும் திகைத்துப் போய்விடுகிறேம். ''இது என்ன சத்திரமா? வீடு என்று எண்ணித் தெரியாமல் நுழைந்து விட்டோமா?'' என்றெல்லாம் மலைக்கிறேம். அவ்வளவு பெயர் பண்டகசாலையில் இருக்கிறர்கள். ஒரு பெரிய மனிதர் வந்து, ''எல்லாரும் சாப்பிட வாருங்கள்'' என்று அழைக்கிறர். பேஷ்! ரொம்பச் சரியான நேரத்திலே தான் வந்திருக்கிறேம்!'' என்று நம்மை நாமே மெச்சிக் கொள்ளுகிறேம்.

எல்லாரும் உள்ளே சென்று வரிசையாகப் போடப்பட்டிருக்கும் ஆசனங்களில் அமருகிறேம். ஒவ்வொரு வருக்கும் முன்னே பெரிய பெரிய தலைவாழை இலை போடப்பட்டிருக்கிறது. உணவு பரிமாறப்படுகிறது. சாப்பாட்டைப் பார்த்தால் பெரிய கல்யாண விருந்தோ என்று சொல்லும்படி இருக்கிறது. மாம்பழம் முழுசு முழுசாய்க் கழுவித் துடைத்துப் போடப்பட்டிருக்கிறது

பலாச்சுளைகள் விதை எடுத்துத் தேனில் ஒரு முழுக்கு முழுக்கிவிட்டு ஒன்றோடு ஒன்றாய்த் தழுவிக்கொண்டு கிடக்கின்றன. பொன்னிற மான தங்க வாழைப்பழம் தோலுரிக்கப்பட்டு உண்போரின் வாயைப் பார்த்துக்கொண்டு தவங்கிடக்கின்றன. எத்தனையோ விதமான வர்க்கான்னங்கள் பலவித நிறமும் மணமும் படைத்துப் பந்தி பந்தியாய்க் காணப்படுகின் றன. வர்க்கான்னம் என்றால் நாம் செய் கிறோமே, அதைப் போன்றதா? எவ்வளவோ சோற்றில் கொஞ்சம் தேங்காய்ப் பூவைத் தூவி விட்டு, ஒன்றிரண்டு முந்திரிப் பருப்பை யும் காட்டிவிட்டு, சிறிது நெய்யையும் மேலாகத் தடவி விட்டு அதைத் தேங்கா யன்னம் என்று சொல்லுகிறோம். ஒரு சட்டிச் சோற்றில் ஆழாக்கு மோரையும் உப்பையும் போட்டுப் பிசைந்துவிட்டு, கொஞ்சம் கடுகு மிளகாய் பெருங்காயம் கறிவேப்பிலையைத் தாளித்துக் கொட்டி விட்டுத் ததியோதனம், பகாளபாத் என் றெல்லாம் தடபுடலான பெயர்களால் மயக்கி விட முயல்கிறோமே! அப்படியா இருக்கிறது, இப்போது நாம் பார்க்கும் வர்க்கான்னம்? மூக்கையும் கண்ணையும் திறந்துகொண்டு பாருங்கள். ஏராளமான பருப்பு வகைகளுக் கிடையில் வழிந்தோடும் நெய்யருவிக்கிடை யில் ஏதோ சில சோற்றுப் பருக்கைகளும் காணப்படுகின்றன. தயிர்ச்சாதம், எப்படி இருக்கிறது என்று பாருங்கள். அதோ மூலை யிலே இருக்கிறதே அதுதான் தயிர்ச்சாதம். நம் வீட்டுத் தயிர்ச்சாதத்தைப் போல வெள் ளையாக இல்லையே என்று சந்தேகப் படாதீர் கள். இங்கேயெல்லாம் தயிர்ச்சாதம் சிவப் பாகத்தான் இருக்கும். சோற்றையே காணோமே என்று சந்தேகப்படுகிறீர்களா? செந்தயிர்க்கட்டிகளுக்கிடையில் அங்கங்கே முத்துப் பதித்தது போலத் தெரிகிறதே, அதுதான் சோறு.

பாலை நன்றாக வற்றக் காய்ச்சிப் பிரை ஊற்றுவதாலேதான் தயிரின் நிறம் சிவப் பாகவும், அல்வாத் துண்டுகள் போல் மென்று தின்னக்கூடியதாகவும், காணப்படுகிறது. இப்படி நாம் பார்க்கும் இந்தச் சாப்பாடு நித்தியப்படி ஒவ்வொரு வீட்டிலும் நடை பெறும் சாதாரணச் சாப்பாடுதான் என்று தெரிந்து கொள்கிறோம்.

முந்துமுக் கனியில், நானு
முதிரையில் முழுத்த நெய்யில்
செந்தயிர்க் கண்டம், கண்டம்,
இடைஇடை செறிந்த சோற்றில்
தந்தம்இல், இருந்து, தாமும்
விருந்தொடும், தமரி னோடும்
அந்தணர் அமுதர் உண்டி
அயில்வுறும் அமலைத்து எங்கும்.

[முந்து முக்கனி – முதல்தரமான மா, பலா, வாழைப் பழங்கள். நானுமுதிரை – பலவகைப் பருப்புகள்; முழுத்த– கொட்டிய; செந்தயிர்க் கண்டம் – சிவப்பு நிறமான தயிர்க் கட்டி; கண்டம் – கற்கண்டு; தமர் – சுற்றத்தார்; அயில் வுறும் – உண்ணும்; அமலை – ஓசை.]

சரி; இந்த நாட்டில் பெண்களின் நிலை என்ன? பெண்களைக் கொண்டல்லவா நாட்டின் சிறப்பை அளக்க வேண்டும்? அவர்களின் வாழ்க்கை முறை எப்படி இருக் கிறது? நாகரிகம் முதிர்ந்து விட்டதாய்க் கொக்கரிக்கும் மேல் நாடுகளைப் போல, இந்த நாட்டாரும் மெல்லியரான பெண் களை முரட்டுத்தனமான சுரங்கத்தொழில் போன்றவற்றில் ஈடுபடச் செய்கிறார்களா? அல்லது ஆண்களின் எதேச்சதிகாரத்தால் கல்வி யறிவும், செல்வ உரிமையும் இன்றி வெறும் போகப் பொருளாகவே ஆக்கியிருக்கிறார் களா? இதை எல்லாம் கண்டறிய வேண் டும் என்று உள்ளம் கருதுகிறது. இந்த விஷயத்தைப் பரிசீலனை செய்வதற்காக நூற்றுக்கணக்கான வீடுகளுக்குள் நுழைந்து சோதனை போடுகிறோம். ஒரே திகைப்பு, மலைப்பு. கண்ட காட்சி அப்படிச் செய்து விடுகிறது.

பெண்கள் எல்லாம் உயிர் ஓவியம் என்று சொல்லும்படி அவ்வளவு அழகு நிறைந்தவர்களாக இருக்கிறார்கள். நல்ல, முறையான வழியிலே ஈட்டிய பொருள் அவர் கள் ஆட்சியில் குவிந்து கிடக்கிறது. தகுந்த கல்விச் செல்வத்திலும் நிறைந்தவர்களாக இருக்கிறார்கள். இந்த இரு பெரும் செல்வ மும் குடத்துள் விளக்காய் ஒளி மழுங்கியா கிடக்கின்றன? இல்லை; மலர்ந்து எங்கும் மணம் பரப்பி யாவருடைய கருத்தையும் கவருகின்றன. எப்படி மலர்ந்து மணக்கின் றன தெரியுமா? வந்தவர்க்கு இல்லை என்று சொல்லாது ஈவதன் மூலமும், சிறந்த விருந் துகள் நடத்தி அளவளாவுவதன் மூலமும் பொழுதைப் பயனுறக் கடத்துகிறார்கள்.

பெருந்த டம்கண் பிறைநுத லார்க்கெலாம்
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்,
வருந்தி வந்தவர்க்கு ஈதலும் வைகலும்
விருந்தும் அன்றி விளைவன யாவையே?

[பெருந்தடம் கண் – பெரிய விசாலமான கண்; பிறை நுதல் –பிறைச்சந்திரனோ என்னும்படி வடிவமும் அவ்வளவு ஒளியும் கொண்ட நெற்றி; பொருந்து செல்வம் – தீமையற்ற நல்ல வழியில் ஈட்டிய செல்வம்; வைகலும் – தினப்படியும்.]

''நல்ல காட்சிகளையே கண்டுவிட்டு ஒரேயடியாய் வியந்துகொண்டும், புகழ்ந்து கொண்டும் இருக்கலாமா? நாணயத்தின் இரு புறத்தையும் சோதிக்காமல் முடிவுக்கு வர முடியுமா?'' என்று தமக்குள் ஓர் அன்பர் தர்க்க சாஸ்திரம் படிக்கிறார். எனவே,

மற்ருெரு புறத்தையும் காண நமது உள்ளம் அவாவுகிறது. ''இங்கே அகால மரண விகிதம் என்ன? தண்டனை பெறுவோர் தொகை எவ்வளவு? கோர்ட்டு, வக்கீல் ஐயா வீடு எல்லாம் எங்கே இருக்கின்றன? விபசார விடுதி, கள்ளுக்கடை, சூதாட்டக் கூடம்— இவை எல்லாம் இருக்கும் இடம் எங்கே? இவற்றை எல்லாம் போய்ப் பார்த்தால் அல்லவா அங்கெல்லாம் மக்கள் எப்படிக் கெட்டழிகிருர்கள் என்பதை உணரலாம். அதன் பிறகுதான் இந்த நாட்டின் உண்மையான தரம் எப்படிப்பட்டது என்று முடிவு செய்யலாம்'' என்று மற்ருேர் அன்பர் விரிவுரை நிகழ்த்துகிருர்.

''ஆம்; அதுதான் சரி; இப்படித்தான் செய்ய வேண்டும்'' என்று எல்லோரும் ஏகமனதாய்த் தீர்மானித்துக் கொண்டு புறப்படுகிருேம். அழுகுரல் நமது காதிலே படவில்லை; டவாலிச் சேவகன் நிற்கும் எந்த மண்டபமும் நமது கண்ணில் படவில்லை. வக்கில் ஐயாவின் பெயர் தொங்கும் பலகையையும் காண முடியவில்லை. ஒரு கால் இந்த ஊரில் உள்ள வக்கீல் ஐயாக்கள் எல்லாம் பேர் போன வக்கீல்களாக இருப்பார்களோ என்று சந்தேகங்கூடத் தோன்றுகிறது. சூதாட்டக் கூடம் எதையும் காண முடியவில்லை. 'டவுன் கிளப்' என்ற நாகரிகப் பெயருடன் கூட, ஒரு போர்டும் கண்ணுக்குப் புலப்படவில்லை. 'நம்பர்' போட்ட கள்ளுக் கடைகள்தாம் தென்படவில்லை என்ருல் 'பார் ரூம்' அல்லது அந்த ஹோட்டல் இந்த ஹோட்டல் என்ற பெயருடன் கூடப் போர்டுகளும் காணக் கிடைக்கவில்லை. 'இது என்ன ஐயா ஆச்சரியம்! இந்த நாட்டில் விளம்பரம் இல்லாமலேயே காரியம் நடக்கிறதோ?' என்று எண்ணிக்கொண்டே சந்தியில் நிற்கிருேம்.

எதிரில் ஒரு பெரியவர் வருகிருர். இவரைக் கேட்டாவது தெரிந்து கொள்ளுவோம். என்று எண்ணி அவரை நெருங்கி, ''நமஸ்காரம்'' என்று சொல்லுகிருேம். அவரும் பதில் வணக்கம் செய்துவிட்டு, ''என்ன சங்கதி?'' என்று கேட்கிருர். நாம் நமது சந்தேகத்தை அவரிடம் கூறிக் கேள்வி மாரியைப் பொழிகிருேம். அவர் சொல்லுகிருர்— இல்லை — பாடுகிருர்:

> கூற்றம் இல்லையோர் குற்றம் இலாமையால்;
> சீற்றம் இல்லைதம் சிந்தையின் செம்மையால்;
> ஆற்ற நல்லறம் அல்ல(து)இ லாமையால்;
> ஏற்றம் அல்லது இழிதக (வு) இல்லையே?

[கூற்றம் — எமன்; இங்கே, அகால மரணம்; சீற்றம் — கோபம் அல்லது தண்டனை; ஆற்ற — செய்வதற்கு; நல்லறம் அல்லது — நல்லறம் அல்லாத தீயவழிகள்; ஏற்றம் — உயர்வு; இழிதகவு — பழிபாவம்.]

''அப்படியா? இவ்வளவு சிறப்பான நாட்டில் ஏன் அன்னசத்திரம் போன்ற அற நிலையங்கள் காணப்படவில்லை?''

> வண்மை இல்லையோர் வறுமை இன்மையால்;

''இது மட்டுந்தானு இல்லை? இன்னும் எங்கள் நாட்டில் இல்லாதவற்றையும் கூறுகிறேன் கேளுங்கள்'' என்று மேலும் பாடுகிருர்.

> திண்மை இல்லைநேர் செறுநர் இன்மையால்.
> உண்மை இல்லைபொய் உரையி லாமையால்.

என்று சொல்லிக்கொண்டே வரும்போது, நம்மில் ஒரு கிண்டல்காரப் பேர்வழி, ''அப்படியானுல் உங்கள் நாட்டில் கம்பனைப் போன்ற மகாமேதைகளுக்கும் இடம் இல்லையோ?'' என்று கேட்கிருர்.

''ஆம்; மிகவும் கணக்காய்க் கேட்டுவிட்டீர்கள்; நீங்கள் நினைப்பது முற்றும் சரி; நூற்றுக்கு நூறு உண்மை'' என்று சொல்லிவிட்டுக் கடைசி அடியைப் பாடுகிருர்.

> ஒண்மை இல்லைபல் கேள்வி ஓங்கலால்.

பாட்டை முடித்துவிட்டு மேலும் பேசுகிருர்; ''ஓர் இடத்தில் ஒரு வள்ளல் இருக்கிருன் என்ருல் அதன் அர்த்தம் என்ன? பல்லாயிரக் கணக்கான தரித்திரர்கள் இருக்கிருர்கள் என்பதுதான்; இல்லையா? ஒரு பெரிய பயில்வான் இருக்கிருன் என்ருல் எண்ணற்ற நோஞ்சல்கள், பலவீனர்கள் இருக்கிருர்கள் என்பதுதானே பொருள்? உண்மைக்கு ஓர் அரிச்சந்திரன் என்ருல் மற்றவர்கள் எல்லாம் புரட்டர்கள்தாம் என்பது புலப்படவில்லையா? அறிஞன் ஒருவன் இருக்கிருன் என்று பெருமைப்படுவது, எத்தனையோ அறிவற்ற முண்டங்களைப் பெற்றிருக்கிருர்கள் என்று சிறுமைப்படுத்த வில்லையா?'' என்று சொல்லிவிட்டுப் பாட்டை மறுபடியும் எக்களிப்போடு பாடுகிருர்:

> வண்மை இல்லையோர் வறுமை இன்மையால்
> திண்மை இல்லைநேர் செறுகர் இன்மையால்
> உண்மை இல்லைபொய் உரைஇ லாமையால்
> ஒண்மை இல்லைபல் கேள்வி ஓங்கலால்.

[வண்மை — தாராள ஈகை; திண்மை — பேராற்றல்; செறுநர் — பகைமையால் சண்டை செய்வோர்; ஒண்மை — அறிவுப் பிரகாசம்; கேள்வி — சர்ச்சை அல்லது கேட்பது.]

''இந்த மாதிரியான சிறப்புக்கள் எல்லாம் வஞ்சனை அறியாத மக்கள் வாழும் கிராமங்களில் மட்டுந்தானு? அல்லது நகரங்களிலும் உண்டா?'' என்று கேட்கிருேம் பெரியவரை. பெரியவர் சொல்லுகிருர்.

''கிராமங்களில் மட்டுமல்ல; தம்பிகளே! மேகமும் சமுத்திரமுங் கூட வெட்கப்படும் படி அவ்வளவு பலமாயும் தொடர்ந்தும் ஒலித்துக்கொண்டே இருக்கும் முரசுகளை உடைய நகரங்களில் வாழும் மக்களிடையிலும் இப்படித்தான். பெரிய நகரமாயிற்றே, அங்கெல்லாம் தெருக்காவல் உண்டா அல்லது வீட்டுக்கு வீடு தனிக் காவலாவது உண்டா? திருடன் இருந்தால் அல்லவா காவலுக்கு அவசியம்? திருடனும் இல்லை; காவலும் இல்லை. திருட்டுக்கூட ஏன் ஏற்படுகிறது? இல்லாமையினாலேதான். இரப்பதற்கும் இல்லாமைதானே காரணம்? இங்கே இரப்பவர்களே இல்லையாதலால், கொடுப்பவர்களையும் காண முடியாது.''

தெள்வார் மழையும் ,திரைஆழியும் உட்க நாளும்
வள்வார் முரசம் அதிர்மாநகர் வாழும் மாக்கள்
கள்வார் இலாமைப் பொருள் காவலும் இல்லை; யாதும்
கொள்வார் இலாமைக் கொடுப்பார்களும் இல்லை மாதோ!

[தெள்வார் — தெளிவாய்ச் சரம்போலத் தொங்கும்; திரை —ஆழி—அலைகடல்; உட்க —அச்சம் அடைய; வள்வார் முரசம்—வளவிய வாரால் கட்டப்பட்ட முரசு; அதிர்—சப்திக்கும்; மாக்கள் —மக்கள்; கள்வார் — திருடுபவர்.]

''முற்றப் படித்து முடித்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளும் யாரும் எங்கள் நாட்டில் இல்லை; ஆனால் கல்வியறிவு இல்லாதவர்கள் என்று யாரையும் சொல்லி விட முடியாது. எல்லாரும் மேலும் மேலும் படித்துக் கொண்டே இருக்கிறார்கள். இது தவிர, பொருட் செல்வம், பயிர்ச் செல்வம், முதலிய பல செல்வங்களிலும் எல்லோரும் குறைவற்றவர்களாய் இருக்கிறார்கள். கல்விச் செல்வம் மட்டுமல்ல, பொருட் செல்வங் கூட எங்கள் நாட்டிலே எல்லாருக்கும் பொது உடைமையாய் இருக்கிறது. ஆதலால் இந்த நாட்டிலே, உடையவர்கள் இல்லாதவர்கள், ஏழை, பணக்காரன், உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற பாகுபாடெல்லாம் காண முடியாது.''

கல்லாது நிற்பார் பிறர் இன்மையின், கல்வி முற்ற
வல்லாரும் இல்லை; அவைவல்லர்அல் லாரும் இல்லை
எல்லாரும் எல்லாப்பெரும் செல்வமும் எய்த லாலே
இல்லாரும் இல்லை உடையார்களும் இல்லை மாதோ.

''இவ்வளவு மகோன்னதமான நாட்டை எப்படி ஐயா கம்பன் உண்டாக்கினான்?'' என்று நாம் பெருமூச்சு விடுகிறோம். ''எந்த நாட்டையும் இப்படிச் செய்து விடலாம்; கம்பன் அதற்கும் வழி எழுதி வைத்திருக்கிறான்'' என்று பெரியவர் சொல்லுகிறார்:

''என்ன வழி ஐயா அது?'' என்று ஒரே ஆர்வத்தோடு கேட்கிறோம். பதில் சொல்லுகிறார் பெரியவர்.

''இதைப் போன்ற இன்பம் கனியும் நாட்டை, போக பூமியை, உண்டாக்க வேண்டுமென்றால், தம்பிமார்களே! நீங்கள் செய்ய வேண்டியது ஒரே ஒரு வேலை; அதுதான் கல்வி. ஆம்! கல்வி! கல்வி ஒன்று தான் அது. கல்வி என்ற ஒரே விதையை நீங்கள் விதைத்துவிட்டால், அது முளைக்கும்; வளரும்; வளர்ந்து 'கேள்வி' என்ற கிளைகளை நாலு திசையிலும் பரப்பும். அந்தக் கிளைகளில், 'நல்ல முயற்சி' என்னும் தளிர்கள் தளிர்க்கும். 'அன்பு' என்னும் மொட்டுகள்' அரும்பும். அன்பாய் அரும்பிய மொட்டு அறமாய் மலரும். அற மலர் 'போக'க் கனியை இன்பப் பழத்தை, கொடுக்கும். அந்த இன்பக் கனியின் மணத்தைத்தான் நீங்கள் இவ்வளவு நேரமாக அநுபவித்துக் கொண்டிருந்தீர்கள் தெரிந்ததா? ஒரு நாடு செம்மையடைய, பண்பாட்டை அடைவதற்கு, அடிப்படை கல்வி தான். நாட்டு மக்களுக்கு எல்லாம் கல்வியை, உண்மையான பயனுள்ள கல்வியைப் புகட்டி விட்டால் எல்லா இன்பமும் எளிதாய்க் கிட்டிவிடும்'' என்று கம்பன் சொல்லுகிறான்.

ஏகம் முதற்கல்வி முளைத்(து) எழுந்து, எண்இல் கேள்வி
ஆக முதல்திண் பணைபோக்கி அருந் தவத்தின்
சாகம் தழைத்து அன்(பு) அரும்பித் தருமம் மலர்ந்து
போகம் கனி ஒன்று பழுத்தது போலும் அன்றே!

[ஏகம்—ஒன்றேஒன்று; முதல்—வித்து; எண்இல்—ஏராளமான. கேள்வி—சர்ச்சை அல்லது கேட்பது; பணை—கிளை; அருந்தவம் — நல்ல முயற்சி; சாகம்—இலை; போகம்—இன்பம்; போலும்—போல இருக்கிறது.]

பாட்டை முடிக்கிறார் பெரியவர். ''இது தான் காந்தியடிகள் கனவு கண்டு கொண்டிருக்கிற சர்வோதய நாடா?'' என்று வியக்கிறோம். நன்றியறிதலுடனும் வணக்கத்துடனும் பெரியவரைப் பார்த்து, ''மிகவும் நமஸ்காரம்; நீங்கள் செய்த இந்தப் பேருதவியை நாங்கள் என்றும் மறக்க மாட்டோம்'' என்று சொல்லி விட்டு, 'இனி நாட்டிலே அடிப்படையான கல்வியைப் புகட்டுவதே நமது திருப்பணி என்று மனப்பூர்வமாய்ப் பிரதிக்ஞை செய்து கொண்டு திரும்புகிறோம் நாம். நம்மை அறியாமலே உள்ளம், ''சபாஷ் கம்பன்!'' என்கிறது. வாயோ, ''கம்பன் வாழ்க!'' என்று வாழ்த்துகிறது.